அருணகிரிநாதர் அருளிய

திருப்புகழ் – தமிழ் மகுடம்

பகுதி 1

வெளியீடு

திருப்புகழ் சித்திர சபை
திருச்செந்தூர்

முதற் பதிப்பு : பிப்ரவரி 2025

© உரிமை : ஸ்ரீ முருகானந்த சங்கீத திருப்புகழ் சபை
73, தெப்பக்குள தெரு,
திருச்செந்தூர் – 628 215

Printed by : LKM Computer Printers, Chennai-17
Phone : 9940682929

ஓம் முருகாசரணம்

விநாயகர் காப்பு (கந்தர் அந்தாதி)

வாரணத்தானை அயனை விண்ணோரை மலர்க்கரத்து
வாரணத்தானை மகத்து வென்றோன் மைந்தனை துவச
வாரணத்தானை துணை நயந்தானை வயலருணை
வாரணத்தானை திறை கொண்ட யானையை வாழ்த்துவனே.

அருணகிரி நாதர் வணக்கம்

அந்தாதி இல்லா இறைவனுக்கு அந்தாதி என்றுரைத்தும்
நந்தா வகுப்பலங் காரம் அவற்கே நனி புனைந்தும்
முந்தா தரவில் அவன்புகழ் பூதியும் முற்றும் சொன்ன
என்தாய் அருணகிரி நாத என்னை நீ ஏன்றருளே!

விநாயகக் கடவுள் (மண்ணுலகத்தினிற்)

மண்ணுலகத்தினில் பிறவி மாசு அற
எண்ணிய பொருள் எல்லாம் எளிதில் முற்றுறக்
கண்ணுதல் உடையது ஓர் களிற்று மா முகப்
பண்ணவன் மலரடி பணிந்து போற்றுவாம்.

சுப்பிரமணியக் கடவுள் (இருப்பரங்குறை)

இருப்பு அரம் குறைத்திடும் எஃக வேல் உடைப்
பொருப்பர் அங்கு உணர்வுறப் புதல்வி தன்மிசை
விருப்பு அரங்கு அமர் இடை விளங்கக் காட்டிய
திருப்பரங் குன்று அமர் சேயைப் போற்றுவாம்

(சூரலை வாயிடை)

சூர் அலைவாய் இடைத் தொலைத்து மார்புகீண்டு
ஈரலை வாயிடும் எஃகம் ஏந்தியே
வேரல் ஐவாய் தரு வெள்ளி வெற்பு ஓரீஇச்
சீரலைவாய் வரு சேயைப் போற்றுவாம்.

(காவினன் குடிலுறு)

காவினன் குடில் உறு காமர் பொன்னகர்
மேவினன் குடிவர விளியச் சூர்முதல்
பூவினன் குடிலையம் பொருட்கு மால் உற
ஆவினன்குடி வரும் அமலன் போற்றுவாம்.

(நீரகத் தேதனை)

நீர் அகத்தே தனை நினையும் அன்பினோர்
பேர் அகத்து அலமரும் பிறவி நீத்திடும்
தாரகத்து உருவம் ஆம் தலைமை எய்திய
ஏரகத்து அறுமுகன் அடிகள் ஏத்துவாம்.

(ஒன்றுதொ றாடலை)

ஒன்று தொறு ஆடலை ஒருவி ஆவி மெய்
துன்று தொறு ஆடலைத் தொடங்கி ஐவகை
மன்று தொறு ஆடிய வள்ளல் காமுறக்
குன்று தொறு ஆடிய குமரன் போற்றுவாம்.

(எழமுதிரைப் புனத்)

எழு அம் முதிரைப் புனத்து இறைவி முன்பு தன்
கிழ முதிர் இள நலம் கிடைப்ப முன்னவன்
மழ முதிர் களிறு என வருதல் வேண்டிய
பழ முதிர் சோலையம் பகவன் போற்றுவாம்.

முருகா சரணம்!
வேலும் மயிலும் சேவலும் நமக்கு உற்ற துணை!

முன்னுரை

பெருமைமிகு தமிழின் கிரிடமாக விளங்கும் திருப்புகழ், அருணகிரிநாதரால் அருளப்பெற்றது. முருகப்பெருமானின் மகிமையைப் புகழும் இப் பாடல்கள், பக்தி, தத்துவம், இசை மற்றும் இலக்கிய வளத்தால் நெகிழ்ச்சியைத் தருகின்றன. இவ்வுலகில் அனைத்து சாதகர்களும் தங்கள் ஆன்மீகத் தேடலுக் கான வழிகாட்டியாக இப்பாடல்களை அணுகு கின்றனர்.

முருகனின் பேரருளும் கருணையும் காரணமாக, நமக்கு 1500—க்கும் மேற்பட்ட திருப்புகழ் கிடைத் துள்ளது. அதை எளிதில் வாசிக்கவும், பாராயணம் செய்யவும், மூன்று பகுதிகளாக இந்த புத்தகத்தை வெளியிடுகிறோம். முதல் பகுதியாக, 400—க்கும் மேற்பட்ட திருப்புகழ் பாடல்களை இதில் வெளியிடு கிறோம்.

அனைத்து வயதினருக்கும் எளிதாக அணுகக்கூடிய வகையில், தெளிவாகவும், அழகாகவும் உருவாக்கப் பட்டுள்ளது. மேலும், இந்த நூலை நமது சபை பதம் பிரித்து வெளியிடுகிறது.

மேலும் இந்த நூலில் திருப்புகழை பதம் பிரித்து வெளியிட்டுள்ளோம். சில இடங்களில் மனனம் செய்ய ஏதுவாக இருப்பதற்காகவும் சில இடங்களில் மூலத்தை ஒட்டி அப்படியே கொடுத்திருக்கிறோம். ஏனெனில் பாடுவதற்கு ஏற்றவாறு அதே வார்த்தைகள் சிதையா மலும் பொருளும் மாறாமலும் இருப்பதற்கு ஏற்ப பதம் பிரித்து கொடுத்திருகிறோம்.

இந்த நூல் வெளியீடு எங்கள் குடும்பத்தின் மகிழ்ச்சியான நிகழ்வான, சிரஞ்சீவி M.S. மோஹன முத்துசுப்பிரமணியன், M.B.A., (CA); சௌபாக்கியவதி B. ராஜலக்ஷ்மி (எ) அஸ்வதி, M.Sc., ஆகிய இருவரின் திருமண விழாவோடு ஒட்டி நடைபெறுவது மிகுந்த பெருமிதத்தைக் கொண்டுவருகிறது. திருமணம் என்பது வாழ்க்கையின் முக்கியமான நிலையில், ஆண்டவரால் அருளப்பெற்று அனுபவிக்கப்படும் ஒரு புனித நிகழ்வு. இந்தத் திருநாளில், அருள்மிகு முருகனின் புகழை பகிர்வது, மேலும் சிறப்பு சேர்க்கிறது.

இந்தப் பாடல்களின் வெளியீட்டில் முக்கிய பங்காற்றும் திருப்புகழ் சித்ர சபை (ஸ்ரீ முருகானந்த சங்கீத திருப்புகழ் சபை) மேன்மை பெறும் வகையில், பக்தர்களுக்கு அருணகிரிநாதரின் பாடல்கள் எளிமை யாகவும் நெகிழ்ச்சியாகவும் கிடைக்க செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இவ்வலைவாய் ஆண்டவனின் திருப்பணியில் தங்களை அர்ப்பணித்து, பெயர் சொல்ல விரும்பாத பக்தர்கள், முருகன் அடியார்கள் மற்றும் திருப்புகழ் அர்பணிப்பாளர்கள், இந்தப் புகழ்பெற்ற பணியில் தங்களது நேரம், ஆற்றல், பணம் ஆகியவற்றை செலுத்தி உதவியமைக்கு மனமார்ந்த நன்றி.

இப்புத்தகத்தை இலவசமாக அச்சிட உதவி புரிந்த 'பெயர் சொல்ல விரும்பாத பெருந்தகைகள்' அவர்களின் உற்றமும் சுற்றமும், அலைவாய் ஆண்டவனின் அருளைப் பெற்று பெருவாழ்வு வாழ்ந்திட நான் பரமார்த்தமாக பிரார்த்திக்கிறேன்.

இந்த புனிதப் பணியை செய்யும் அருமையான வாய்ப்பை எனக்குத் தந்து ஆசீர்வதித்த அருள்மிகு முருகப்பெருமானுக்கு எனது ஆழ்ந்த நன்றி.

இந்த பிறவியில் முருகருக்கு சேவை செய்யும் மகத்தான பாக்கியம் எனக்கு கிடைத்துள்ளது என்பதில் பெருமையும் பணிவும் அடங்கிய மகிழ்ச்சியில் திளைக்கிறேன்.

அவர் அருள் எப்போதும் எனக்கு வழிகாட்டியாக இருந்து, என் முயற்சிகளை வெற்றியடையச் செய்க.

வாழ்க பக்தி! வளர்க திருப்புகழ்!

என்றும் இறைபணியில்,

CA. **அ. அஸ்வின்**
Chartered Accountant
www.eauditor.co

அருணகிரிநாதர் அருளிய
திருப்புகழ் – தமிழ் மகுடம்

திருப்புகழ் 1 கைத்தல நிறைகனி (வயலூர்)

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன ... ... தனதான

கைத்தலம் நிறைகனி அப்பமொடு அவல், பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்

கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ!
கற்பகம்! என வினை ... ... கடிது ஏகும்.

மத்தமும் மதியமும் வைத்திடும் அரன்மகன்,
மல்பொரு திரள்புய ... ... மதயானை.

மத்தள வயிறனை, உத்தமி புதல்வனை,
மட்டுஅவிழ் மலர்கொடு ... ... பணிவேனே!

முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய ... ... முதல்வோனே.

முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறை ரதம்
அச்சு அது பொடிசெய்த ... ... அதிதீரா.

அத்துயர் அதுகொடு சுப்பிரமணி படும்
அப்புனம் அதன் இடை ... ... இபம் ஆகி.

அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கணம் மணம்அருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 2 பக்கரை விசித்ரமணி (விநாயகர்)

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்ததன ... ... தனதான

பக்கரை, விசித்ர மணி, பொற்கலணை இட்டநடை,
பட்சி எனும் உக்ரதுர ... ... கமும், நீபப்

பக்குவ மலர்த்தொடையும், அக்குவடு பட்டு ஒழிய,
பட்டு உருவ விட்டு அருள் கை ... ... வடிவேலும்,

திக்கு அது மதிக்கவரு குக்குடமும், ரட்சைதரு
சிற்றடியும், முற்றிய பன் ... ... இருதோளும்,

செய்ப்பதியும் வைத்து, **உயர் திருப்புகழ் விருப்பமொடு**
செப்பு என எனக்கு அருள்கை ... ... மறவேனே.

இக்கு, அவரை, நற்கனிகள், சர்க்கரை, பருப்புடன், நெய்,
எள், பொரி, அவல், துவரை ... ... இளநீர், வண்டு

எச்சில், பயறு, அப்ப வகை, பச்சரிசி, பிட்டு, வெள்ள–
ரிப்பழம், இடிப் பல்வகை, ... தனிமூலம்,

மிக்க அடிசில் கடலை பட்சணம் எனக்கொள், ஒரு
விக்கின சமர்த்தன் எனும் ... ... அருள் ஆழி,

வெற்ப, குடிலச் சடில வில் பரமர் அப்பர் அருள்
வித்தக மருப்பு உடைய..... பெருமாளே.

திருப்புகழ் 3 முத்தைத்தரு (திருவருணை)

தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன
தத்தத்தன தத்தத் தனதன ... ... தனதான

முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக்கு இறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர ... ... எனவோதும்

முக்கட்பரமற்கு சுருதியின்
முற்பட்டது கற்பித்து இருவரும்
முப்பத்து முவர்க்கத்து அமரரும் ... ... அடிபேண

பத்துத்தலை தத்தக் கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப் பொருது
ஒரு பட்டப்பகல் வட்டத் திகிரியில் ... ... இரவாக

பத்தற்கு இரதத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சத் தகுபொருள்
பட்சத்தொடு ரட்சித் தருள்வதும் ... ... ஒருநாளே!

தித்தித்தெய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்க கழுகொடு ... ... கழுதாட

திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவுரிக்கு த்ரிகடக ... ... எனவோத

கொத்துப்பறை கொட்ட களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென ... ... முதுகூகை

கொட்புற்றெழ நட்பற்ற அவுணரை
வெட்டிப்பலியிட்டுக் குலகிரி
குத்துப்பட ஒத்துப் பொரவல ... ... பெருமாளே.

திருப்புகழ் 4 உனைத் தினம் (திருப்பரங்குன்றம்)

தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன
தனத்த தந்தன தனதன தனதன ... ... தனதான

உனைத் தினம் தொழுது இலன், உனது இயல்பினை
உரைத்து இலன், பல மலர்கொடுஉன் அடிஇணை
உறப் பணிந்து இலன், ஒரு தவம் இலன், உனது ... ...
அருள்மாறா

உளத்துள் அன்பினர் உறைவிடம் அறிகிலன்,
விருப்பொடு உன் சிகரமும் வலம் வருகிலன்,
உவப்பொடு உன் புகழ் துதிசெய விழைகிலன் ... ...
மலைபோலே

கனைத்து எழும் பகடு, அது பிடர் மிசைவரு
கறுத்த வெஞ்சின மறலி தன் உழையினர்
கதித்து அடர்ந்து, எறி கயிறு, அடு கதை கொடு ... ...
பொருபோதே

கலக்கு உறும் செயல் ஒழிவற, அழிவுறு
கருத்து நைந்து, அலம் உறு பொழுது அளவைகொள்
கணத்தில், என் பயம் அற, மயில் முதுகினில் ... ... வருவாயே!

வினைத் தலம் தனில் அலகைகள் குதிகொள,
விழுக்கு உடைந்து மெய் உகுதசை கழுகு உண,
விரித்த குஞ்சியர் எனும் அவுணரை அமர் ... ... புரிவேலா!

மிகுந்த பண்பயில் குயில்மொழி, அழகிய
கொடிச்சி. குங்கும முலை முகடு உழு, நறை
விரைத்த சந்தன ம்ருகமத புயவரை ... ... உடையோனே!

தினத்தினம் சதுர் மறைமுநி முறைகொடு
புனல் சொரிந்து, அலர் பொதிய, விணவரொடு
சினத்தை நிந்தனை செயும், முநிவரர் தொழ ... ...
மகிழ்வோனே!

தெனத் தெனந்தன என, வரி அளி, நறை
தெவிட்ட, அன்பொடு பருகு, உயர் பொழில்திகழ்,
திருப்பரங்கிரி தனில் உறை சரவண ... ... பெருமாளே.

திருப்புகழ் 5 கருவடைந்து (திருப்பரங்குன்றம்)

தனனதந்த தத்தத்த தந்த
தனனதந்த தத்தத்த தந்த
தனனதந்த தத்தத்த தந்த ... ... தனதான

கரு அடைந்து, பத்து உற்ற திங்கள்
வயிறு இருந்து, முற்றிப் பயின்று,
கடையில் வந்து உதித்துக் குழந்தை ... ... வடிவாகி,

கழுவி அங்கு எடுத்து, சுரந்த
முலை அருந்துவிக்கக் கிடந்து,
கதறி, அங்கை கொட்டித் தவழ்ந்து ... ... நடமாடி,

அரை வடங்கள் கட்டி, சதங்கை
இடு குதம்பை பொன் சுட்டி தண்டை
அவை அணிந்து முற்றிக் கிளர்ந்து ... ... வயது ஏறி

அரிய பெண்கள் நட்பைப் புணர்ந்து,
பிணி உழன்று, சுற்றித் திரிந்து,
அமையும், உன் க்ருபைச் சித்தம் என்று ... ... பெறுவேனோ?

இரவி இந்த்ரன், வெற்றிக் குரங்கின்
அரசர் என்றும், ஒப்பற்ற உந்தி
இறைவன் எண்கு இனக்கர்த்தன் என்றும், ... நெடுநீலன்

எரியது என்றும், ருத்ரன் சிறந்த
அநுமன் என்றும், ஒப்பற்ற அண்டர்
எவரும் இந்த வர்க்கத்தில் வந்து ... ... புனம் மேவ,

அரிய தன் படைக்கர்த்தர் என்று,
அசுரர்தம் கிளைக் கட்டை வென்ற,
அரிமுகுந்தன் மெச்சு உற்ற பண்பின் ... ... மருகோனே!

அயனையும் புடைத்துச் சினந்து,
உலகமும் படைத்து, பரிந்து
அருள் பரங்கிரிக்குள் சிறந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 6 கனகந்திரள்கின்ற (திருப்பரங்குன்றம்)

தனந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன
தனதந்தன தந்தன தந்தன ... ... தனதான

கனகம் திரள்கின்ற பெருங் கிரி
தனில்வந்து தகன் தகன் என்றிடு
கதிர்மிஞ்சிய செண்டை எறிந்திடு ... ... கதியோனே!

கடமிஞ்சி அநந்த விதம் புணர்
கவளம் தனை உண்டு வளர்ந்திடு
கரியின் துணை என்று பிறந்திடும் ... ... முருகோனே!

பனகம் துயில்கின்ற திறம் புனை,
கடல் முன்பு கடைந்த பரம்பரர்,
படரும் புயல் என்றவர் அன்புகொள் ... ... மருகோனே!

பல துன்பம் உழன்று கலங்கிய
சிறியன், புலையன், கொலையன், புரி
பவம் இன்று கழிந்திட வந்து அருள் ... ... புரிவாயே.

அனகன் பெயர் நின்று உருளும் திரி
புரமும் திரி வென்றிட, இன்புடன்
அழல் உந்த நகும் திறல் கொண்டவர் ... ... புதல்வோனே!

அடல்வந்து முழங்கி இடும் பறை
டுடுடுண்டுடு டுண்டுடு டுண்டு, என
அதிர்கின்றிட அண்டம் நெரிந்திட ... ... வருசூரர்

மனமும் தழல் சென்றிட, அன்று அவர்
உடலும் குடலும் கிழி கொண்டிட
மயில் வென் தனில் வந்து அருளும் கன ... ...
பெரியோனே!

மதியும் கதிரும் தடவும் படி
உயர்கின்ற வனங்கள் பொருந்திய
வளம் ஒன்று பரங்கிரி வந்து அருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 7 சந்ததம் பந்த (திருப்பரங்குன்றம்)

தந்தனந் தத்தத் ... ... தனதான
தந்தனந் தத்தத் ... ... தனதான

சந்ததம் பந்தத் ... ... தொடராலே,
சஞ்சலம் துஞ்சித் ... ... திரியாதே.

கந்தன் என்று என்று உற்று ... ... உனைநாளும்
கண்டுகொண்டு அன்பு உற் ... ... றிடுவேனோ?

தந்தியின் கொம்பைப் ... ... புணர்வோனே!
சங்கரன் பங்கில் ... ... சிவைபாலா!

செந்தில் அம் கண்டிக் ... ... கதிர்வேலா!
தென்பரங் குன்றில் ... ... பெருமாளே.

திருப்புகழ் 8 மன்றலங் கொந்துமிசை (திருப்பரங்குன்றம்)

தந்தனந் தந்ததன தந்தனந் தந்ததன
தந்தனந் தந்ததன ... ... தனதான

மன்றல் அம் கொந்து மிசை தெந்தனத் தெந்தன் என
வண்டு இனம் கண்டு தொடர் ... ... குழல்மாதர்,

மண்டிடும் தொண்டை அமுது உண்டுகொண்டு, அன்பு மிக,
வம்பு இடும் கும்ப கன ... ... தனமார்பில்

ஒன்ற, அம்பு ஒன்று விழி கன்ற, அங்கம் குழைய,
உந்தி என்கின்ற மடு ... ... விழுவேனை,

உன் சிலம்பும், கனக தண்டையும், கிண்கிணியும்,
ஒண் கடம்பும் புனையும் ... ... அடிசேராய்.

பன்றிஅம் கொம்பு, கமடம், புயங்கம், சுரர்கள்
பண்டை என்பு அங்கம் அணி ... ... பவர்சேயே!

பஞ்சரம் கொஞ்சு கிளி வந்து வந்து, ஐந்து கர
பண்டிதன் தம்பி எனும் ... ... வயலூரா!

சென்று முன் குன்றவர்கள் தந்த பெண் கொண்டு, வளர்
செண்பகம் பைம்பொன் மலர் ... ... செறிசோலை.

திங்களும் செங்கதிரும் மங்குலும் தங்கும் உயர்
தென்பரங்குன்றில் உறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 9 அந்தகன் வருந்தினம் (திருச்செந்தூர்)

தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத்
தந்தன தனந்தனந் தனதனத் ... ... தனதான

அந்தகன் வருந்தினம் பிறகிட,
சந்ததமும் வந்து கண்டு, அரிவையர்க்கு
அன்பு உருகு சங்கதம் தவிர, முக் ... ... குணம் மாள,

அந்தி பகல் என்று இரண்டையும் ஒழித்து,
இந்திரிய சஞ்சலங்களை அறுத்து,
அம்புய பதங்களின் பெருமையைக் ... ... கவிபாடி,

செந்திலை உணர்ந்து, உணர்ந்து, உணர்வு உற,
கந்தனை அறிந்து அறிந்து, அறிவினில்
சென்று செருகும் தடம் தெளிதர, ... தணியாத

சிந்தையும் அவிழ்ந்து, அவிழ்ந்து, உரைஒழித்து,
என்செயல் அழிந்து, அழிந்து, அழிய, மெய்ச்
சிந்தை வர, என்று நின் தெரிசனைப் ... ... படுவேனோ?

கொந்து அவிழ் சரண் சரண் சரண் எனக்
கும்பிடு புரந்தரன் பதிபெற,
குஞ்சரி குயம்புயம் பெற, அரக் ... ... கரும் மாளக்

குன்று இடிய, அம்பொனின் திருவரைக்
கிண்கிணி கிணின்கிணின் கிணின் என,
குண்டலம் அசைந்து இளம் குழைகளில் ... ... ப்ரபை வீச,

தந்தன தனந்தனந் தன எனச்
செஞ்சிறு சதங்கை கொஞ்சிட மணித்
தண்டைகள் கலின்கலின் கலின்என, ... **திருவான**

சங்கரி மனம் குழைந்து உருக, முத்–
தம் தர வரும் செழுந் தளர்நடைச்
சந்ததி! சகம் தொழும் சரவணப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 10 அமுத உததி விடம் (திருச்செந்தூர்)

தனதனன தனதனன தந்தத் தந்தத்
தனதனன தனதனன தந்தத் தந்தத்
தனதனன தனதனன தந்தத் தந்தத் ... ... தனதான

அமுது உததி விடம் உமிழும் செங்கண், திங்கள்
பகவின் ஒளிர் வெளிறு எயிறு, துஞ்சல் குஞ்சித்
தலையும் உடையவன், அரவ தண்டச் சண்டச் ... ... சமன்ஓலை

அது வருகும் அளவில் உயிர் அங்கிட்டு, இங்குப்
பறை திமிலை திமிர்த்த மிகு தம்பட்டம் பல்
கரைய, உறவினர் அலற, உந்திச் சந்தித் ... ... தெருஊடே,

எமதுபொருள் எனும் மருளை இன்றி, குன்றிப்
பிளவு அளவு தினைஅளவு பங்கிட்டு உண்கைக்கு
இளையும், முது வசை தவிர இன்றைக்கு அன்றைக்கு
... ... என நாடாது

இடுக கடிது எனும் உணர்வு பொன்றிக் கொண்டிட்டு,
டுடுடுடுடு டுடுடுடுடு டுண்டுட் டுண்டுட்டு
என அகலும் நெறிகருதி, நெஞ்சத்து அஞ்சிப் ... ... பகிராதோ?

குமுத பதி வகிர்அமுது சிந்தச் சிந்த,
சரண பரிபுர சுருதி கொஞ்சக் கொஞ்ச,
குடில சடை பவுரிகொடு தொங்க, பங்கில் ... ... கொடிஆட,

குல தடினி அசைய, இசை பொங்கப் பொங்க,
கழல் அதிர டெகுடெகுட டெங்கட் டெங்கத்
தொகுகுகுகு தொகுகுகுகு தொங்கத் தொங்கத் ... ...
தொகுதீதோ

திமிதம் என முழவு ஒலி முழங்க, செங்கைத்
தமருகம் அது அதிர் சதியொடு, அன்பர்க்கு இன்பத்
திறம் உதவு பரதகுரு வந்திக்கும் சற்– ... ... குருநாதா!

திரளு மணி தரளம் உயர் தெங்கில் தங்கிப்
புரள எறி, திரை மகர சங்கத் துங்கத்
திமிர சலநிதி தழுவு செந்தில் கந்தப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 11 அறிவழிய மயல்பெருக (திருச்செந்தூர்)

தனதனன தனதனன தனதனன தனதனன
தனதனன தனதனன ... ... தனதானா

அறிவு அழிய, மயல்பெருக, உரையும்அற, விழிசுழல,
அனல்அவிய, மலம் ஒழுக, ... அகலாதே

அனையும் மனை அருகில்உற, வெருவி அழ, உறவும்அழ,
அழலின் நிகர் மறலி எனை ... ... அழையாதே,

செறியும் இருவினை, கரணம், மருவு புலன் ஒழிய, உயர்
திருவடியில் அணுக வரம் ... ... அருள்வாயே.

சிவனை நிகர் பொதியவரை முநிவன் அக மகிழ, இரு
செவிகுளிர, இனியதமிழ் ... ... பகர்வோனே!

நெறி தவறி அலரி மதி நடுவன் மகபதி முளரி
நிருதி நிதிபதி கரிய ... ... வனமாலி

நிலவு மறையவன் இவர்கள் அலைய, அரசு உரிமைபுரி
நிருதன் உரம் அற, அயிலை ... ... விடுவோனே!

மறிபரசு கரம் இலகு பரமன் உமை இருவிழியும்
மகிழ மடி மிசை வளரும் ... ... இளையோனே!

மதலை தவழ் உததி இடை வரு தரள மணி புளினம்
மறைய உயர் கரையில் உறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 12 இயலிசையில் உசித (திருச்செந்தூர்)

தனதனன தனன தந்தத் ... ... தனதான
தனதனன தனன தந்தத் ... ... தனதான

இயல் இசையில் உசித வஞ்சிக்கு ... ... அயர்வு ஆகி,
இரவுபகல் மனது சிந்தித்து ... ... உழலாதே,

உயர்கருணை புரியும் இன்பக் ... ... கடல்மூழ்கி,
உனைஎனது உள்அறியும் அன்பைத் தருவாயே.

மயில் தகர்கல் இடையர் அந்தத் ... ... தினைகாவல்
வனசகுற மகளை வந்தித்து ... ... அணைவோனே!

கயிலைமலை அனைய செந்தில் ... ... பதிவாழ்வே!
கரிமுகவன் இளைய! கந்தப் ... ... பெருமாளே!

திருப்புகழ் 13 ஏவினை நேர்விழி (திருச்செந்தூர்)

தானன தானன தானன தானன
தானன தானன ... ... தனதானா

ஏவினை நேர்விழி மாதரை மேவிய
ஏதனை, மூடனை, ... நெறிபேணா

ஈனனை, வீணனை, ஏடுஎழுதா முழு
ஏழையை, மோழையை ... ... அகலாநீள்

மாவினை மூடிய நோய் பிணியாளனை,
வாய்மை இலாதனை, ... இகழாதே

மாமணி நூபுர சீதள தாள்தனி
வாழ்வுற ஈவதும் ... ... ஒருநாளே?

நாவலர் பாடிய நூல்இசையால் வரு
நாரதனார் புகல் ... ... குறமாதை

நாடியெ, கானிடை கூடிய சேவக!
நாயக! மாமயில் ... ... உடையோனே!

தேவி, மநோமணி, ஆயி, பராபரை,
தேன்மொழியாள் தரு ... ... சிறியோனே!

சேண் உயர் சோலையின் நீழலிலே திகழ்
சீரலைவாய் வரு ... ... பெருமாளே.

திருப்புகழ் 14 ஓராது ஒன்றை (திருச்செந்தூர்)

தானா தந்தத் தானா தந்தத்
தானா தந்தத் ... ... தனதானா

ஓராது ஒன்றை, பாராது, அந்தத்
தோடே வந்திட்டு ... ... உயிர்சோர

ஊடா நன்று அற்றார் போல் நின்று, எட்–
டா மால் தந்திட்டு ... ... உழல்மாதர்

கூரா அன்பில் சோரா நின்று, அக்கு
ஓயா நின்று உள் ... ... குலையாதே,

கோடுஆர் செம்பொன் தோளா! நின்சொல்
கோடாது என்கைக்கு ... ... அருள்தாராய்.

தோரா வென்றிப் போரா! மன்றல்
தோளா! குன்றைத் ... ... தொளையாடீ!

சூதாய் எண்திக்கு ஏயா வஞ்சச்
சூர்மா அஞ்சப் ... ... பொரும்வேலா!

சீரார் கொன்றைத் தார் மார்பு ஒன்றச்
சே ஏறு எந்தைக்கு ... ... இனியோனே!

தேனே! அன்பர்க்கே ஆம் இன்சொல்
சேயே! செந்தில் ... ... பெருமாளே.

திருப்புகழ் 15 கண்டுமொழி (திருச்செந்தூர்)

தந்ததன தந்த தந்த தந்ததன தந்த தந்த
தந்ததன தந்த தந்த ... ... தனதான

கண்டுமொழி, கொம்பு கொங்கை, வஞ்சிஇடை, அம்பு நஞ்சு
கண்கள், குழல் கொண்டல், என்று ... ... பலகாலும்

கண்டு உளம் வருந்தி நொந்து, மங்கையர் வசம் புரிந்து,
கங்குல்பகல் என்று நின்று, ... **விதியாலே**

பண்டைவினை கொண்டு உழன்று, வெந்து விழுகின்றல் கண்டு,
பங்கய பதங்கள் தந்து, ... புகழோதும்

பண்புடைய சிந்தை அன்பர் தங்களின் உடன் கலந்து
பண்புபெற, அஞ்சல் அஞ்சல் ... ... என வாராய்.

வண்டு படுகின்ற தொங்கல் கொண்டு அற நெருங்கி, இண்டு
வம்பினை அடைந்து, சந்தின் ... ... மிகமூழ்கி,

வஞ்சியை முனிந்த கொங்கை, மென்குற மடந்தை செங்கை
வந்து அழகுடன் கலந்த ... ... மணிமார்பா!

திண்திறல் புனைந்த அண்டர் தங்கள் அபயங்கள் கண்டு,
செஞ்சமர் புனைந்து, துங்க ... ... மயில்மீதே

சென்று, அசுரர் அஞ்ச வென்று, குன்றிடை மணம் புணர்ந்து,
செந்தில்நகர் வந்து அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 16 கமல மாதுடன் (திருச்செந்தூர்)

தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன
தனன தானன தந்தன தந்தன ... ... தனதான

கமல மாதுடன் இந்திரையும் சரி
சொல ஒணாத மடந்தையர், சந்தன
களப சீதள கொங்கையில் அங்கையில் ... ... இருபோதுஏய்,

களவு நூல் தெரி வஞ்சனை அஞ்சன
விழியின், மோகித கந்த சுகந்தரு
கரிய ஓதியில், இந்துமு கந்தனில் ... ... மருளாதே,

அமலம் ஆகிய சிந்தை அடைந்து, அகல்
தொலைவு இலாத அறம்பொருள் இன்பமும்
அடைய ஓதி உணர்ந்து தணந்த பின், ... அருள்தானே–

அறியுமாறு பெறும்படி அன்பினின்
இனிய நாத சிலம்பு புலம்பிடும்
அருண ஆடக கிண்கிணி தங்கிய ... ... அடிதாராய்.

குமரி, காளி, பயங்கரி, சங்கரி,
கவுரி, நீலி, பரம்பரை, அம்பிகை,
குடிலை, யோகினி, சண்டினி, குண்டலி ... ... எமதுஆயி

குறைவு இலாள், உமை, மந்தரி, அந்தரி,
வெகுவித ஆகம சுந்தரி தந்து அருள்
குமர! மூஷிகம் உந்திய ஐங்கர ... ... கணராயன்,

மம விநாயகன், நஞ்சு உமிழ் கஞ்சுகி
அணி கஜானன விம்பன், ஓர் அம்புலி
மவுலியான் உறு சிந்தை உகந்து அருள் ... ... இளையோனே!

வளரும் வாழையும் மஞ்சளும் இஞ்சியும்
இடை விடாது நெருங்கிய மங்கல
மகிமை மாநகர் செந்திலில் வந்துஉறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 17 காலனார் வெங்கொடும் (திருச்செந்தூர்)

தானனா தந்தனம் தானனா தந்தனம்
தானனா தந்தனம் ... ... தனதான

காலனார் வெம் கொடும் தூதர் பாசம் கொடு, என்
காலின் ஆர் தந்து உடன் ... ... கொடுபோக

காதலார் மைந்தரும் தாயர் ஆரும் சுடும்
கானமே பின் தொடர்ந்து ... ... அலறாமுன்

சூலம்,வாள், தண்டு, செஞ்சேவல், கோதண்டமும்,
சூடுதோளும், தடம் ... ... திருமார்பும்,

தூயதாள் தண்டையும் காண, ஆர்வம் செயும்
தோகைமேல் கொண்டுமுன் ... ... வரவேணும்

ஆலகாலம் பரன் பாலதாக, அஞ்சிடும்
தேவர் வாழ, அன்று உகந்து ... ... அமுதுஈயும்

ஆரவாரம் செயும் வேலைமேல் கண்வளர்ந்த
ஆதி மாயன் தன் நன் ... ... மருகோனே!

சாலிசேர் சங்கினம், வாவிசூழ் பங்கயம்,
சாரல் ஆர் செந்தில்அம் ... ... பதிவாழ்வே!

தாவுசூர் அஞ்சி முன் சாய, வேகம் பெறும்
தாரை வேல் உந்திடும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 18 குடர்நிண மென்பு (திருச்செந்தூர்)

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த ... ... தானாந்தனனா

குடர், நிணம், என்பு, சலம், மலம், மண்டு
குருதி, நரம்பு, ... சீ ஊன் பொதிதோல்

குலவு குரம்பை, முருடு சுமந்து,
குனகி மகிழ்ந்து ... ... நாயேன் தளரா,

அடர்மதன் அம்பை அனைய கருங்கண்
அரிவையர் தங்கள் ... ... தோள்தோய்ந்து அயரா,

அறிவு அழிகின்ற குணம் அற உன்தன்
அடிஇணை தந்து ... ... நீ ஆண்டு அருள்வாய்.

தடஇயல் செந்தில் இறையவ! நண்பு
தரு குற மங்கை ... ... வாழ்வாம் புயனே!

சரவண! கந்த! முருக! கடம்ப!
தனிமயில் கொண்டு ... ... பார் சூழ்ந்தவனே!

சுடர்படர் குன்று தொளைபட அண்டர்
தொழ, ஒரு செங்கை ... ... வேல் வாங்கியவா!

துரித பதங்க இரத ப்ரசண்ட
சொரிகடல் நின்ற ... ... சூர அந்தகனே.

திருப்புகழ் 19 கொம்பனையார் (திருச்செந்தூர்)

தந்தன தானான தானன
தந்தன தானான தானன
தந்தன தானான தானன ... ... தனதான

கொம்பு அனையார் காது மோது இரு
கண்களில், ஆமோத சீதள
குங்கும பாடீர பூஷண ... ... நகமேவு

கொங்கையில், நீர் ஆவி மேல்வளர்
செங்கழு நீர்மாலை சூடிய
கொண்டையில், ஆதார சோபையில் ... ... மருளாதே,

உம்பர்கள் ஸ்வாமி! நமோநம,
எம்பெரு மானே! நமோநம,
ஒண்தொடி மோகா! நமோநம ... ... என, நாளும்

உன் புகழே பாடி நான் இனி
அன்புடன் ஆசார பூசை செய்து
உய்ந்திட, வீண்நாள் படாது, அருள் ... ... புரிவாயே

பம்பரமே போல ஆடிய
சங்கரி வேதாள நாயகி,
பங்கய சீபாத நூபுரி, ... கரசூலி,

பங்கம் இலா நீலி, மோடி,
பயங்கரி, மாகாளி யோகினி,
பண்டு சுரா பான சூரனொடு ... ... எதிர்போர் கண்டு,

எம் புதல்வா! வாழி வாழி,
எனும்படி வீறான வேல்தர,
என்றும் உளானே! மனோகர! ... ... வயலூரா!

இன்சொல் விசாகா! க்ருபாகர!
செந்திலில் வாழ்வு ஆகியே, அடி
யென் தனை ஈடேற வாழ்வுஅருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 20 சங்கைதான் ஒன்று (திருச்செந்தூர்)

தந்தனா தந்தனா தந்தனா தந்தனா
தந்தனா ... ... தந்ததான

சங்கைதான் ஒன்றுதான் இன்றியே நெஞ்சிலே
சஞ்சல ... ... ஆரம்ப மாயன்,

சந்தொடே குங்கும அலங்க்ருத ஆடம்பரா
சம்ப்ரம ... ... ஆநந்தமாயன்,

மங்கைமார் கொங்கைசேர் அங்க மோகங்களால்
வம்பிலே ... ... துன்பு உறாமே.

வண்குகா! நின்சொரூபம் ப்ரகாசம் கொடே
வந்து, நீ ... ... அன்பில் ஆள்வாய்.

கங்கை சூடும் பிரான் மைந்தனே! அந்தனே!
கந்தனே! ... ... விஞ்சையூரா!

கம்பியாது இந்த்ர லோகங்கள் கா என்ற
ஆகண்டல ... ... ஈசன் சொல் வீரா!

செங்கைவேல், வென்றிவேல், கொண்டு, சூர் பொன்றவே
சென்று, மோ– ... ... தும் ப்ரதாபா!

செங்கண்மால் பங்கஜ ஆனன் தொழு ஆநந்தவேள்!
செந்தில்வாழ் ... ... தம்பிரானே!

திருப்புகழ் 21 சேமக் கோமள பாத (திருச்செந்தூர்)

தானத் தானன தானத் தானன
தானத் தானன ... ... தந்ததான

சேமக் கோமள பாதத் தாமரை
சேர்தற்கு ஓதும் ... ... அநந்த வேத

அதீதத்தே, அவிரோதத்தே, குண
சீலத்தே, மிக ... ... அன்பு உறாதே,

காம க்ரோத உலோபப் பூத,
விகாரத்தே அழி– ... ... கின்ற, மாயா

காயத்தே, பசு பாசத்தே, சிலர்
காமுற்று ஏயும்அது ... ... என்கொலோ தான்?

நேமிச் சூரொடு மேருத்தூள் எழ
நீளக் காள பு– ... ... யங்ககால

நீல க்ரீப கலாபத் தேர் விடு
நீபச் சேவக! ... ... செந்தில்வாழ்வே!

ஓமத் தீ வழுவார்கட்கு ஊர் சிவ–
லோகத்தே தரு ... ... மங்கைபாலா!

யோகத்து ஆறு உபதேசத் தேசிக!
ஊமைத் தேவர்கள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 22 தண் தேனுண்டே (திருச்செந்தூர்)

தந்தா தந்தா தந்தா தந்தா
தந்தா தந்தத் ... ... தனதான

தண் தேன் உண்டே வண்டு ஆர்வம் சேர்
தண் தார் மஞ்சுக் ... ... குழல்மானார்

தம்பால் அன்பு ஆர் நெஞ்சே கொண்டே
சம்பாவம் சொற்று ... ... அடிநாயேன்

மண் தோயம் தீ மென்கால் விண் தோய்
வண் காயம், பொய்க் ... ... குடில்வேறாய்,

வன் கானம் போய் அண்டா முன்பே,
வந்தே நின்பொன் ... ... கழல்தாராய்.

கொண்டாடும் பேர் கொண்டாடும் சூர்
கொன்றாய்! வென்றிக் ... ... குமரேசா!

கொங்குஆர் வண்டு ஆர் பண்பாடும் சீர்
குன்றா மன்றல் ... ... கிரியோனே!

கண்டு ஆகும் பால் உண்டாய், அண்டார்
கண்டா! கந்தப் ... ... புயவேளே!

கந்து ஆம் மைந்து ஆர் அம்தோள் மைந்தா!
கந்தா! செந்திற் ... ... பெருமாளே.

திருப்புகழ் 23 தந்த பசிதனை (திருச்செந்தூர்)

தந்த தனதன தந்த தனதன
தந்த தனதன ... ... தனதானா

தந்த பசி தனை அறிந்து, முலை அமுது
தந்து, முதுகு தட– ... ... விய தாயார்,

தம்பி, பணிவிடைசெய் தொண்டர், பிரியம்உள
தங்கை, மருகர், உயிர் ... ... எனவே சார்

மைந்தர், மனைவியர், கடும்பு கடன்உதவும்
அந்த வரிசைமொழி ... ... பகர்கேடா

வந்து, தலைநவிர் அவிழ்ந்து, தரை புக,
மயங்க, ஒரு மகிட ... ... மிசை ஏறி,

அந்தகனும் எனை அடர்ந்து வருகையினில்,
அஞ்சல் என, வலிய ... ... மயில்மேல்நீ

அந்த மறலியொடு, "உகந்த மனிதன், நமது
அன்பன்" எனமொழிய ... ... வருவாயே.

சிந்தை மகிழ, மலை மங்கை நகில்இணைகள்
சிந்து பயம் அயிலும் ... ... அயில்வீரா!

திங்கள் அரவு நதி துன்று சடிலர் அருள்
செந்தி நகரில் உறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 24 தொந்தி சரிய (திருச்செந்தூர்)

தந்த தனன தனனா தனனதன
தந்த தனன தனனா தனனதன
தந்த தனன தனனா தனனதன ... ... தனதான

தொந்தி சரிய, மயிரே வெளிற, நிரை
தந்தம் அசைய, முதுகே வளைய, இதழ்
தொங்க, ஒருகை தடிமேல் வர மகளிர் நகையாடி

தொண்டு கிழவன் இவன் ஆர்என, இருமல்
கிண்கிண் என, முன் உரையே குழற, விழி
துஞ்சு குருடு படவே, செவிடுபடு ... ... செவியாகி,

வந்த பிணியும், அதிலே மிடையும் ஒரு
பண்டிதனும் மெய் உறு வேதனையும், இள
மைந்தர் உடைமை கடன் ஏது என முடுக, ... துயர்மேவி,

மங்கை அழுது விழவே, யம படர்கள்
நின்று சருவ, மலமே ஒழுக உயிர்
மங்கு பொழுது, கடிதே மயிலின்மிசை ... ... வரவேணும்.

எந்தை வருக, ரகுநாயக வருக,
மைந்த வருக, மகனே இனிவருக,
என்கண் வருக, எனது ஆர் உயிர் வருக, ... அபிராம

இங்கு வருக, அரசே வருக, முலை
உண்க வருக, மலர் சூடிட வருக,
என்று பரிவினொடு கோசலை புகல ... ... வருமாயன்

சிந்தை மகிழும் மருகா! குறவர் இள
வஞ்சி மருவும்அழகா! அமரர்சிறை
சிந்த, அசுரர் கிளைவேரொடு மடிய ... ... அடுதீரா!

திங்கள் அரவு நதி சூடிய பரமர்
தந்த குமர! அலையே கரை பொருத
செந்தி நகரில் இனிதே மருவிவளர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 25 தோலொடு மூடிய (திருச்செந்தூர்)

தானன தானன தானன தந்தத்
தானன தானன தானன தந்தத்
தானன தானன தானன தந்தத் ... ... தனதான

தோலொடு மூடிய கூரையை நம்பி,
பாவையர் தோதக லீலை நிரம்பி,
சூழ்பொருள் தேடிட ஓடி வருந்தி, ... புதிதான

தூதொடு நான்மணி மாலை ப்ரபந்தக்
கோவை உலாமடல் கூறி அழுந்தி,
தோம்உறு காளையர் வாசல் தொறும் புக்கு ... ... அலமாரும்

காலனை, வீணனை, நீதி கெடும் பொய்க்
கோளனை, மானம் இலாவழி நெஞ்ச,
காதக லோப வ்ருதாவனை, நிந்தைப் ... ... புலையேனை

காரண காரிய லோக ப்ரபஞ்சச்
சோகம் எலாம் அற, வாழ்வுற நம்பில்
காசுஅறு வாரி மெய்ஞ்ஞான தவம் சற்று ... ... அருளாதோ?

பால் அன மீது மன் நான்முக செம்பொன்
பாலனை, மோது அபராதன! பண்டு அப்
பாரிய மாருதி தோள்மிசை கொண்டுஉற்று ... ... அமராடிப்–

பாவி இராவணனார் தலை சிந்தி,
சீரிய வீடணர் வாழ்வு உற, மன்றல்
பாவையர் தோள்புணர் மாதுலர் சிந்தைக்கு ... ... இனியோனே!

சீலம் உலாவிய நாரதர் வந்து உற்று,
ஈது அவள் வாழ்புனம் ஆம்என, முந்தித்
தேமொழி பாளித கோமள இன்பக் ... ... கிரிதோய்வாய்!

சேலொடு வாளை வரால்கள் கிளம்பி,
தாறுகொள் பூகம் அளாவிய இன்பச்
சீரலை வாய்நகர் மேவிய கந்தப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 26 நாலு மைந்து (திருச்செந்தூர்)

தான தந்த தான தான தான தந்த தான தான
தான தந்த தான தான ... ... தனதான

நாலும் ஐந்து வாசல் கீறு தூறு உடம்பு கால் கை ஆகி
நாரி என்பில் ஆகும் ஆகம் ... ... அதன்ஊடே

நாதம் ஒன்ற ஆதி வாயில் நாடகங்கள் ஆன ஆடி
நாடு அறிந்திடாமல் ஏக ... ... வளராமுன்,

நூல் அநந்த கோடி தேடி, மால் மிகுந்து, பார் உளோரை
நூறு செஞ்சொல் கூறி, மாறி ... ... விளைதீமை,

நோய் கலந்த வாழ்வு உறாமல், நீ கலந்து உள்ஆகு, ஞான
நூல் அடங்க ஓத வாழ்வு ... ... தருவாயே.

காலன் வந்து, பாலன் ஆவி காய என்று, பாசம் வீசு
காலம் வந்து, ஓலம் ஓலம் ... ... எனும்ஆதி

காமன் ஐந்து பாணமோடு வேமின் என்று காணும் மோனர்
காள கண்டரோடு வேதம் ... ... மொழிவோனே!

ஆலம் ஒன்று வேலை ஆகி, ஆனை அஞ்சல் தீரும் மூல
ஆழி அங்கை ஆயன், மாயன் ... ... மருகோனே!

ஆரணங்கள் தாளை நாட, வாரணம் கை மேவும், ஆதி
ஆன செந்தில் வாழ்வு அதுஆன ... ... பெருமாளே.

திருப்புகழ் 27 நிலையாப் பொருளை (திருச்செந்தூர்)

தனனாத் தனன தனனாத் தனன
தனனாத் தனன ... ... தனதான

நிலையாப் பொருளை உடலாக் கருதி,
நெடுநாள் பொழுதும் ... ... அவமே போய்,

நிறை போய், செவிடு குருடாய், பிணிகள்
நிறைவாய், பொறிகள் ... ... தடுமாறி,

மலம் நீர் சயனம் மிசையாப் பெருகி,
மடிவேற்கு உரிய ... ... நெறியாக,

மறைபோற்ற அரிய ஒளியாய்ப் பரவு
மலர்தாள் கமலம் ... ... அருள்வாயே.

கொலைகாட்டு அவுணர் கெட, மாச்சலதி
குளமாய்ச் சுவற, ... முதுசூதம்

குறிபோய்ப் பிளவு பட, மேல் கதுவு
கொதிவேல் படையை ... ... விடுவோனே!

அலைவாய்க் கரையின் மகிழ்சீர்க் குமர!
அழியாப் புனித ... ... வடிவாகும்

அரனார்க்கு அதித பொருள்காட்டு அதிப!
அடியார்க்கு எளிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 28 பரிமள களப (திருச்செந்தூர்)

தனதன தனதன தந்தத் ... ... தனதானா
தனதன தனதன தந்தத் தந்தத் ... ... தனதானா

பரிமள களப சுகந்தச் சந்தத் ... ... தன மானார்
படை, யம படைஎன அந்திக்கும் கண் ... ... கடையாலே.

வரி அளி நிரைமுரல் கொங்குக் கங்குல் ... ... குழலாலே,
மறுகிடும் மருளனை இன்புஉற்று, அன்புஉற்று ... ...
அருள்வாயே.

அரி திருமருக! கடம்பத் தொங்கல் ... ... திருமார்பா!
அலை குமுகுமு என வெம்ப, கண்டித்து ... ... எறிவேலா!

திரிபுர தகனரும் வந்திக்கும் சற்– ... ... குருநாதா!
ஜெயஜெய ஹரஹர செந்தில் கந்தப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 29 மங்கை சிறுவர் (திருச்செந்தூர்)

தந்த தனன தந்த தனன
தந்த தனன ... ... தனதான

மங்கை சிறுவர் தங்கள் கிளைஞர்
வந்து கதற, ... உடல் தீயின்

மண்டி எரிய விண்டு, புனலில்
வஞ்சம் ஒழிய ... ... விழ **ஆவி**

வெங்கண் மறலி தன்கை மருவ,
வெம்பி இடறும் ... ... ஒருபாச

விஞ்சை விளையும் அன்று, உன் அடிமை
வென்றி அடிகள் ... ... தொழ வாராய்.

சிங்கம் உழுவை தங்கும் அடவி
சென்று மறமின் ... ... உடன் வாழ்வாய்!

சிந்தை மகிழ அன்பர் புகழும்
செந்தில் உறையும் ... ... முருகோனே!

எங்கும் இலகு திங்கள் கமலம்
என்று புகலும் ... ... முகமாதர்

இன்பம் விளைய, அன்பின் அணையும்,
என்றும் இளைய ... ... பெருமாளே.

திருப்புகழ் 30 முந்துதமிழ் மாலை (திருச்செந்தூர்)

தந்ததன தான தானத் தான
தந்ததன தான தானத் தான
தந்ததன தான தானத் தான ... ... தனதானா

முந்துதமிழ் மாலை கோடிக் கோடி
சந்தமொடு நீடு பாடிப் பாடி
முஞ்சர்மனை வாசல் தேடித் தேடி ... ... உழலாதே.

முந்தை வினையே வராமல் போக,
மங்கையர்கள் காதல் தூரத்து ஏக,
முந்து அடிமையேனை ஆளத்தானும், ... முனைமீதே,

திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்செணகு சேகு தாளத்தோடு ... ... நடம்ஆடும்

செஞ்சிறிய கால் விசாலத் தோகை
துங்க அநுகூல பார்வைத் தீர,
செம்பொன்மயில் மீதிலே எப்போது ... ... வருவாயே?

அந்தண்மறை வேள்வி காவல் கார!
செந்தமிழ்சொல் பாவின் மாலைக் கார!
அண்டர் உபகார சேவல் கார! முடிமேலே

அஞ்சலி செய்வோர்கள் நேயக் கார!
குன்று உருவ ஏவும் வேலைக் கார!
அந்தம் வெகுவான ரூபக் கார! ... ... எழிலான

சிந்துரமின் மேவு போகக் கார!
விந்தை குறமாது வேளைக் கார!
செஞ்சொல் அடியார்கள் வாரக் கார! ... ... எதிரான

செஞ்சமரை மாயும் மாயக் கார
துங்க ரண சூர சூறைக் கார!
செந்திநகர் வாழும் ஆண்மைக் கார! ... ... பெருமாளே!

திருப்புகழ் 31 மூளும்வினை சேர (திருச்செந்தூர்)

தானதன தான தானந்த தானந்த
தானதன தான தானந்த தானந்த
தானதன தான தானந்த தானந்த ... ... தனதான

மூளும்வினை சேர, மேல்கொண்டிடா, ஐந்து
பூதவெகு வாய மாயங்கள் தான் நெஞ்சில்
மூடி, நெறி நீதி ஏதும் செயா வஞ்சி ... ... அதிபார

மோக நினைவான போகம் செய்வேன், அண்டர்
தேட அரிது ஆய ஞேயங்களாய் நின்ற,
மூல பரயோக மேல் கொண்டிடா நின்றது ... ... உளதாகி

நாளும் அதிவேக கால்கொண்டு தீமண்ட
வாசி அனல்ஊடு போய்ஒன்றி வானின்கண்
நாம மதி மீதில் ஊறும் கலா இன்ப ... ... அமுது ஊறல்

நாடி, அதன் மீது போய் நின்ற ஆநந்த
மேலை வெளி ஏறி, **நீஇன்றி நான்இன்றி,**
நாடிஇனும் வேறு தான்இன்றி வாழ்கின்றது ... ... ஒருநாளே

காளவிடம் ஊணி, மாதங்கி, வேதம்சொல்
பேதை, நெடுநீலி, பாதங்களால் வந்த
காலன் விழ மோது சாமுண்டி, பார்அம்பொடு ... ... அனல்வாயு

காதி முதிர் வானமே தங்கி வாழ்வஞ்சி,
ஆடல்விடை ஏறி பாகம் குலாமங்கை,
காளி நடமாடி, நாள்அன்பர் தாம்வந்து ... ... தொழுமாது,

வாளம் முழுது ஆளும் ஓர்தண் துழாய் தங்கு
சோதிமணி மார்ப மாலின் பினாள், இன்சொல்
வாழும் உமை, மாதராள் மைந்தனே! எந்தை ... ...
இளையோனே!

மாசு இல் அடியார்கள் வாழ்கின்ற ஊர் சென்று
தேடி விளையாடியே, அங்ஙனே நின்று
வாழும் மயில் வீரனே! செந்தில் வாழ்கின்ற ... ... பெருமாளே.

திருப்புகழ் 32 வரியார் கருங்கண் (திருச்செந்தூர்)

தனனா தனந்த ... ... தனதான

வரி ஆர் கருங்கண் ... ... மடமாதர்

மகவு ஆசை தொந்தம் ... ... அது ஆகி,

இருபோது நைந்து ... ... மெலியாதே.

இரு தாளின் அன்பு ... ... தருவாயே.

பரிபாலனம் செய்து ... ... அருள்வோனே!

பரம ஈசுரன் தன் ... ... அருள்பாலா!

அரி கேசவன் தன் ... ... மருகோனே!

அலைவாய் அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 33 விந்ததில் ஊறி (திருச்செந்தார்)

தந்தன தான தந்தன தான
தந்தன தான ... ... தனதான

விந்து அதின் ஊறி வந்தது காயம்,
வெந்தது கோடி ... ... இனிமேலோ

விண்டு விடாமல் உன்பதம் மேவு
விஞ்சையர் போல, ... **அடியேனும்**

வந்து, விநாச முன் கலி தீர,
வண் சிவஞான ... ... வடிவாகி,

வன் பதம் ஏறி, என் களை ஆற
வந்து அருள், பாத ... ... மலர்தாராய்.

எந்தன் உள் ஏக செஞ் சுடர் ஆகி,
என் கணில் ஆடு, ... தழல்வேணி

எந்தையர், தேடும் அன்பர்சகாயர்,
எங்கள் சுவாமி ... ... அருள்பாலா!

சுந்தர ஞான மென்குற மாது
தன் திருமார்பில் ... ... அணைவோனே!

சுந்தரம் ஆன செந்திலில் மேவு
கந்த! சுர ஈசர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 34 விறல்மாரன் ஐந்து (திருச்செந்தூர்)

தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த ... ... தனதான

விறல்மாரன் ஐந்து மலர்வாளி சிந்த,
மிகவானில் இந்து ... ... வெயில்காய,

மிதவாடை வந்து தழல் போல ஒன்ற,
வினைமாதர் தம்தம் ... ... வசைகூற,

குறவாணர் குன்றில் உறைபேதை கொண்ட
கொடிது ஆன துன்ப ... ... மயல்தீர.

குளிர்மாலையின் கண் அணிமாலை தந்து
குறைதீர வந்து ... ... குறுகாயோ?

மறிமான் உகந்த இறையோன் மகிழ்ந்து
வழிபாடு தந்த ... ... மதியாளா!

மலைமாவு சிந்த, அலைவேலை அஞ்ச,
வடிவேல் எறிந்த ... ... அதிதீரா!

அறிவால் அறிந்து உன் இருதாள் இறைஞ்சும்
அடியார் இடைஞ்சல் ... ... களைவோனே!

அழகான செம்பொன் மயில்மேல் அமர்ந்து,
அலைவாய் உகந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 35 அபகார நிந்தை (பழநி)

தனதானதந்தனத் ... ... தனதான
தனதானதந்தனத் ... ... தனதான

அபகார நிந்தைபட்டு ... ... உழலாதே,
அறியாத வஞ்சரைக் ... ... குறியாதே,

உபதேச மந்திரப் ... ... பொருளாலே,
உனைநான் நினைந்து அருள் ... ... பெறுவேனோ?

இப மாமுகன் தனக்கு இளையோனே!
இமவான் மடந்தை உத்– ... ... தமி பாலா!

ஜெபமாலை தந்த சற்– ... ... குருநாதா!
திருவாவினன் குடிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 36 அருத்தி வாழ்வொடு (பழநி)

தனத்த தானன தனதன தனதன ... ... தனதான
தனத்த தானன தனதன தனதன ... ... தனதான

அருத்தி வாழ்வொடு தனகிய மனைவியும், ... உறவோரும்,
அடுத்த பேர்களும், இதம்உறு மகவொடு, ... வளநாடும்.

தரித்த ஊரும் மெய் என மனம் நினைவது ... ... நினையாது, **உன்**
தனைப் பராவியும் வழிபடு தொழில்அது ... ... தருவாயே.

எருத்தில் ஏறிய இறையவர் செவிபுக, ... உபதேசம்
இசைத்த நாவின! இதண்உறு குறமகள் ... ... இருபாதம்

பரித்த சேகர! மகபதி தரவரு ... ... தெய்வயானை
பதிக்கொள் ஆறு இரு புய! **பழநியில் உறை ... ... பெருமாளே.**

திருப்புகழ் 37 அவனிதனிலே (பழநி)

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த ... ... தனதான

அவனி தனிலே பிறந்து, மதலை எனவே தவழ்ந்து,
அழகுபெறவே நடந்து, ... இளைஞோனாய்,

அரு மழலையே மிகுந்து, குதலை மொழியே புகன்று,
அதிவிதம் அதாய் வளர்ந்து, ... பதினாறாய்,

சிவகலைகள் ஆகமங்கள் மிகவும் மறை ஓதும் அன்பர்
திருவடிகளே நினைந்து ... ... துதியாமல்,

தெரிவையர்கள் ஆசை மிஞ்சி, வெகு கவலையாய் உழன்று
திரியும், அடியேனை உன்தன் ... ... அடிசேராய்.

மவுன உபதேச சம்பு, மதி, அறுகு, வேணி, தும்பை,
மணிமுடியின் மீது அணிந்த ... ... மகதேவர்

மனம் மகிழவே அணைந்து, ஒருபுறம் அதாக வந்த
மலைமகள் குமார! துங்க ... ... வடிவேலா!

பவனி வரவே உகந்து, மயிலின் மிசையே திகழ்ந்து,
படி அதிரவே நடந்த ... ... கழல்வீரா!

பரமபதமே செறிந்த முருகன் எனவே உகந்து,
பழநிமலை மேல் அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 38 ஆறுமுகம் ஆறுமுகம் (பழநி)

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன ... ... தந்ததான

ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் ... ... என்று, பூதி

ஆகம் அணி மாதவர்கள் பாதமலர்சூடும், அடி
யார்கள் பதமே துணையது ... ... என்று நாளும்

ஏறுமயில் வாகன! குகா! சரவணா! எனது
ஈச! என மானம் உனது ... ... என்று, மோதும்

ஏழைகள் வியாகுலம் இது ஏது என வினாவில் உனை
ஏவர் புகழ்வார், மறையும் ... ... என்சொலாதோ?

நீறு படு மாழை பொரு மேனியவ! வேல! அணி
நீலமயில் வாக! உமை ... ... தந்தவேளே!

நீசர்கள் தமோடு எனது தீவினை எலாம் மடிய
நீடு தனி வேல் விடும் ... ... மடங்கல்வேலா!

சீறிவரு மாறு அவுணன் ஆவி உணும் ஆனை முக
தேவர் துணைவா! சிகரி ... ... அண்டகூடம்

சேரும் அழகு ஆர் பழநி வாழ் குமரனே! பிரம
தேவர் வரதா! முருக! ... ... தம்பிரானே.

திருப்புகழ் 39 உயிர்க் கூடு (பழநி)

தனத்தான தனதன தனத்தான தனதன
தனத்தான தனதன ... ... தனதான

உயிர்க்கூடு விடும் அளவும் உமைக் கூடி மருவு தொழில்
ஒருக்காலும் நெகிழ்வது இலை ... ... எனவே, சூள்

உரைத்தே, முன் மருவினரை வெறுத்து, ஏம திரவியம்
அது உடைத்தாய் பின் வருகும் அவர் ... ... எதிரே போய்ப்

பயில் பேசி, இரவுபகல் அவர்க்கான பதமை பல
படப்பேசி, உறுபொருள் கொள் ... ... விலைமாதர்,

படப் பார வலைபடுதல் தவிர்த்து ஆள, மணி பொருவு
பதத் தாள மயிலின்மிசை ... ... வரவேணும்.

தயிர்ச்சோரன் எனும் அ உரை வசைக்கோவ வனிதையர்கள்
தரத்து ஆடல் புரியும் அரி ... ... மருகோனே!

தமிழ்க்காழி, மருதவனம், மறைக்காடு, திருமருகல்,
தநுக்கோடி வருகுழகர் ... ... தருவாழ்வே!

செயில் சேல் விண் உடுவினொடு பொரப்போய்விழு அமர்பொருது
செயித்து ஒடி வரு பழநி ... ... அமர்வோனே

தினைக்காவல் புரிய வல குறப்பாவை முலை தழுவு
திருத்தோள! அமரர்பணி ... ... பெருமாளே.

திருப்புகழ் 40 உலகபசு பாச (பழநி)

தனதனன தான தந்த ... ... தனதான
தனதனன தான தந்த ... ... தனதான

உலகபசு பாச தொந்தம் ... ... அதுவான
உறவு கிளை, தாயர், தந்தை, ... மனை, பாலர்,

மலசல சுவாச சஞ்ச– ... ... லம் அதால் என்
மதிநிலை கெடாமல் உன்தன் ... ... அருள்தாராய்.

சலம், அறுகு, பூளை, தும்பை, ... அணி சேயே!
சரவண பவா! முகுந்தன் ... ... மருகோனே!

பலகலை சிவ ஆகமங்கள் ... ... பயில்வோனே!
பழநிமலை வாழ வந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 41 ஒருபொழுதும் இருசரண (பழநி)

தனதனன தனதனன தானத் தானத் ... ... தனதான
தனதனன தனதனன தானத் தானத் ... ... தனதான

ஒருபொழுதும் இருசரண நேசத்தே வைத்து ... ... உணரேனே,
உனது பழநிமலை எனும் ஊரைச் சேவித்து ... ... அறியேனே.

பெருபுவியில் உயர்வரிய வாழ்வைத் தீரக் ... ... குறியேனே,
பிறவிஅற நினைகுவன் என் ஆசைப் பாடைத் ... ... தவிரேனோ?

துரிதம் இடு நிருதர் புர சூறைக் காரப் ... ... பெருமாளே!
தொழுது வழிபடும் அடியர் காவல் காரப் ... ... பெருமாளே!

விருதுகவி விதரண விநோதக் காரப் ... ... பெருமாளே!
விறல் மறவர் சிறுமிதிரு வேளைக் காரப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 42 ஒருவரை ஒருவர் (பழநி)

தனதன தனன தான தனதன தனன தான
தனதன தனன தான ... ... தனதான

ஒருவரை ஒருவர் தேறி அறிகிலர், மத விசாரர்,
ஒருகுண வழி உறாத ... ... பொறியாளர்,

உடல் அது சதம் எனநாடி, களவுபொய் கொலைகள் ஆடி,
உற நமன் நரகில் வீழ்வர், ... அதுபோய், பின்

வரும் ஒரு வடிவ மேவி, இருவினை கடலுள் ஆடி,
மறைவர், இன் அனைய கோலம் ... ... அதுவாக

மருவிய பரம ஞான சிவகதி பெறுக நீறு
வடிவு உற அருளி பாதம் ... ... அருள்வாயே.

திரிபுரம் எரிய, வேழ சிலை மதன் எரிய, மூரல்
திருவிழி அருள் மெய்ஞ் ஞான ... ... குருநாதன்,

திரு, சரஸ் வதி, மயேசுவரி, இவர் தலைவர் ஓத
திருநடம் அருளும் நாதன் ... ... அருள்பாலா!

சுரர் பதி, அயனும், மாலும் முறையிட, அசுரர் கோடி
துகள் எழ விடு மெய்ஞ் ஞான ... ... அயிலோனே!

சுக குறமகள் மணாளன் என மறை பலவும் ஓதி
தொழ, முது பழநி மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 43 கடலை பொரி அவரை (பழநி)

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன ... ... தனதான

கடலை, பொரி, அவரை, பல கனி, கழை நுகர்
கடின குட உதர ... ... விபரீத

கரட தட, முமத, நளின, சிறுநயன,
கரிணி முகவரது ... ... துணைவோனே!

வட வரையின் முகடு அதிர, ஒரு நொடியில்
வலம் வரு மரகத ... ... மயில்வீரா!

மகபதி தரு சுதை குறமினோடு, இருவரும்
மருவு சரசவித ... ... மணவாளா!

அடல் அசுரர்கள் குலம் முழுது மடிய, உயர்
அமரர் சிறையைவிட ... ... எழில்மீறும்

அருண கிரண ஒளி ஒளிரும் அயிலைவிடும்
அரகர! சரவண ... ... பவ லோலா!

படல உடுபதியை இதழி அணி சடில
பசுபதி வரநதி ... ... அழகான,

பழ நிமலை அருள்செய் மழலை, மொழிமதலை,
பழநி மலையில் வரு ... ... பெருமாளே.

திருப்புகழ் 44 கதியை விலக்கு (பழநி)

தனன தனத்த தானன தனன தனத்த தானன
தனன தனத்த தானன ... ... தனதான

கதியை விலக்கு மாதர்கள் புதிய இரத்ன பூஷண
கனதன வெற்பு மேல் மிகு ... ... மயலான

கவலை மனத்தன் ஆகிலும், உனது ப்ரசித்தம் ஆகிய
கனதனம் ஒத்த மேனியும், ... முகம் ஆறும்.

அதி பல வஜ்ர வாகுவும், அயில் நுனைவெற்றி வேல் அதும்,
அரவு பிடித்த தோகையும், ... உலகேழும்

அதிர அரற்று கோழியும், அடியர் வழுத்தி வாழ்வுறும்
அபிநவ பத்ம பாதமும் ... ... மறவேனே.

இரவி குலத்து இராசத மருவி எதிர்த்து வீழ்கடு
ரணமுக சுத்த வீரிய ... ... குணமான

இளையவனுக்கு நீள் முடி அரசது பெற்று வாழ்வுற,
இதமொடு அளித்த ராகவன் ... ... மருகோனே

பதினொரு உருத்திர ஆதிகள் தபனம் விளக்கு மாளிகை
பரிவொடு நிற்கும் ஈசுர ... ... சுரலோக

பரிமள கற்பக அடவி அரி அளி சுற்று பூ உதிர்
பழநி மலைக்குள் மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 45 கரிய பெரிய (பழநி)

தனன தனன தனன தன்ன
தனன தனன ... ... தனதான

கரிய பெரிய எருமை கடவு
கடிய கொடிய ... ... திரிசூலன்

கறுவி இறுகு கயிறொடு உயிர்கள்
கழிய முடுகி ... ... எழுகாலம்,

திரியும் நரியும் எரியும் உரிமை
தெரிய விரவி ... ... அணுகாதே,

செறிவும் அறிவும் உறவும் அனைய
திகழும் அடிகள் ... ... தரவேணும்.

பரிய வரையின் அரிவை மருவு
பரமர் அருளும் ... ... முருகோனே!

பழனம் உழவர் கொழுவில் எழுது
பழைய பழநி ... ... அமர்வோனே!

அரியும் அயனும் வெருவ உருவ
அரிய கிரியை ... ... எறிவோனே!

அயிலும் மயிலும் அறமும் நிறமும்
அழகும் உடைய ... ... பெருமாளே.

திருப்புகழ் 46 கருவின் உருவாகி (பழநி)

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த ... ... தனதான

கருவின் உருவாகி வந்து, வயது அளவிலே வளர்ந்து,
கலைகள் பலவே தெரிந்தும், ... மதனாலே

கரியகுழல் மாதர் தங்கள் அடி சுவடு மார்புதைந்து
கவலைபெரிது ஆகி நொந்து, ... மிகவாடி,

அரகர சிவாய என்று தினமும் நினையாமல் நின்று,
அறுசமய நீதி ஒன்றும் ... ... அறியாமல்,

அசனம் இடுவார்கள் தங்கள் மனைகள் தலைவாசல் நின்று,
அநுதினமும் நாணம் இன்றி ... ... அழிவேனோ?

உரகபட மேல் வளர்ந்த பெரிய பெருமாள், அரங்கர்
உலகு அளவு மால் மகிழ்ந்த ... ... மருகோனே!

உபயகுல தீப! துங்க விருது கவிராஜ! சிங்க!
உறைபுகலி ஊரில் அன்று ... ... வருவோனே!

பரவைமனை மீதில் அன்று ஒருபொழுது தூது சென்ற
பரமன் அருளால் வளர்ந்த ... ... குமரேசா!

பகை அசுரர் சேனை கொன்று, அமரர்சிறை மீள வென்று,
பழநிமலை மீதில் நின்ற ... ... பெருமாளே.

திருப்புகழ் 47 குரம்பை மலசலம் (பழநி)

தனந்த தனதன தனதன தனதன
தனந்த தனதன தனதன தனதன
தனந்த தனதன தனதன தனதன ... ... தனதான

குரம்பை, மலசலம், வழுவளு, நிணமொடு,
எலும்பு, அணி சரி தசை, ஈரல், குடல், நெதி
குலைந்த செயிர்மயிர், குருதியொடு இவை பல ... ... கசுமாலக்

குடில் புகுதும் அவரவர் கடு கொடுமையர்,
இடும்பர், ஒருவழி இணையிலர், கசடர்கள்,
குரங்கர், அறிவிலர், நெறியிலர், மிருக அணை ... ... விறலான

சரம்பர் உறவனை, நரகனை, துரகனை,
இரங்கு கலியனை, பரிவு உறு சடலனை,
சவுந்தரிக முக சரவண பதமொடு ... ... மயில் ஏறித்

தழைந்த சிவசுடர் தனை என மனதினில்
அழுந்த, உரைசெய வருமுக நகை ஒளி
தழைந்த நயனமும், இருமலர் சரணமும் ... ... மறவேனே.

இரும்பை வகுளமொடு இயைபல முகில்பொழில்
உறைந்த குயில் அளி ஒலி பரவிட மயில்
இசைந்து நடம்இடும் இணைஇலி புலிநகர் ... ... வளநாடா!

இருண்ட குவடுஇடி பொடிபட வெகுமுகடு
எரிந்து, மகரமொடு இசைகரி குமுறுக,
இரைந்த அசுரரொடு, இப பரி யமபுரம் ... ... விடும்வேளே!

சிரம்பொன் அயனொடு, முநிவர்கள், அமரர்கள்,
அரம்பை மகளிரொடு, அரகர சிவசிவ
செயம்பு என நடம் இடுபதம் அழகியர் ... ... குருநாதா!

செழும் பவள,ஒளி நகை, முகம் மதி, நகு
சிறந்த குறமகள் இணைமுலை புதைபட
செயங்கொடு அணை குக! சிவமலை மருவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 48 குருதி மலசலம் (பழநி)

தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன
தனன தனதன தனன தனதன ... ... தனதான

குருதி மலசலம் ஒழுகு நர குடல்,
அரிய புழு அது நெளியும் உடல், மத
குருபி நிண சதை விளையும் உளைசளி ... ... உடல்ஊடே

குடிகள் என பல குடிகை வலி கொடு,
குமர வலி, தலை வயிறு வலி என,
கொடுமை எனபிணி கலகம் இடும் இதை ... ... அடல்பேணி

மருவி மதனன் உள் கரிய, புளகிதம்,
மணி அசல பல கவடி மலர்புனை,
மதன கலைகொடு குவடு மலைதனில் ... ... மயல்ஆகா,

மனது துயர் அற, வினைகள் சிதறிட,
மதன பிணியொடு கலைகள் சிதறிட,
மனது பதம் உற, எனது தலை பதம் ... ... அருள்வாயே.

நிருதர் பொடிபட அமரர் பதிபெற,
நிசித அர, வளை முடிகள் சிதறிட,
நெறிய கிரிகடல் எரிய உருவிய ... ... கதிர்வேலா!

நிறைய மலர்பொழி அமரர் முநிவரும்
நிருப குருபர குமர சரணென
நெடிய முகில் உடல் கிழிய வருபரி ... ... மயிலோனே!

பருதி மதி கனல் விழிய சிவன் இடம்
மருவும் ஒரு மலை அரையர் திருமகள்
படிவ முகில் என, அரியின் இளையவள் ... ... அருள்பாலா!

பரம கணபதி அயலின் மதகரி
வடிவு கொடுவர, விரவு குறமகள்
அபயம் என அணை பழநி மருவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 49 சிவனார் மனங்குளிர (பழநி)

தனனா தனந்ததன தனனா தனந்ததன
தனனா தனந்ததன ... ... தனதான

சிவனார் மனம் குளிர உபதேச மந்த்ரம் இரு
செவி மீதிலும் பகர் செய் ... ... குருநாதா!

சிவகாம சுந்தரி தன் வரபால! கந்த! நின
செயலே விரும்பி உளம் ... ... நினையாமல்

அவமாயை கொண்டு, உலகில் விருதா அலைந்து உழலும்
அடியேனை அஞ்சல் என ... ... வரவேணும்.

அறிவு ஆகமும் பெருக, இடர் ஆனதும் தொலைய
அருள்ஞான இன்பம் அது ... ... புரிவாயே.

நவநீதமும் திருடி உரலோடெ ஒன்றும், அரி
ரகுராமர் சிந்தைமகிழ் ... ... மருகோனே!

நவலோகமும் கைதொழு நிசதேவ! அலங்கிருத
நலமான விஞ்சை கரு ... ... விளைகோவே!

தெவயானை அம் குறமின் மணவாள! சம்ப்ரம் உறு
திறல்வீர! மிஞ்சு கதிர் ... ... வடிவேலா!

திருவாவினன் குடியில் வருவேள்! சவுந்தரிக!
செகமேல் மெய் கண்ட விறல் ... ... பெருமாளே.

திருப்புகழ் 50 சீ உதிரம் எங்கும் (பழநி)

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தானதன தந்த தனதான

சீ உதிரம் எங்கும் ஏய் புழு நிரம்பு
மாய மல பிண்டம், நோய் இடு குரம்பை,
தீ நரிகள் கங்கு, காகம் இவை தின்பது ... ... ஒழியாதே,

தீது உள குணங்களே பெருகு, தொந்த
மாயையில் வளர்ந்த தோல், தசை, எலும்பு,
சேர் இடு நரம்பு தான் இவை பொதிந்து ... ... நிலைகாணா

ஆயது, நமன் கை போக உயிர், அந்த
நாழிகையில் விஞ்ச ஊசிடும் இடும்பை
ஆகிய உடம்பு பேணி, நிலை என்று ... ... மடவார்பால்

ஆசையை விரும்பியே, விரக சிங்கி
தானும் மிக வந்து மேவிட மயங்கும்
ஆழ் துயர் விழுந்து மாளும் எனை அன்பு ... ... புரிவாயே.

மாயை வல கஞ்சனால் விட வெகுண்டு
பார்முழுதும் அண்ட கோளமும் நடுங்க
வாய் பிளிறி நின்று, மேக நிகர் தன்கை ... ... அதனாலே

வாரிஉற அண்டி வீறொடு முழங்கு
நீரை நுகர்கின்ற கோபமொடு எதிர்ந்த
வாரண இரண்டு கோடு ஒடிய வென்ற ... ... நெடியோனாம்.

வேயின் இசை கொண்டு கோ நிரை புரந்து,
மேயல் புரி செங்கண் மால் மருக! துங்க
வேல! கிரவுஞ்ச மால்வரை இடிந்து ... ... பொடியாக,

வேலைவிடு கந்த! காவிரி விளங்கு
கார்கலிசை வந்த சேவகன் வணங்க
வீரைநகர் வந்து வாழ், பழநி அண்டர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 51 சீறல் அசடன் (பழநி)

தான தனதனன தான தனதனன
தான தனதனன ... ... தனதான

சீறல் அசடன், வினை காரன், முறைமை இலி,
தீமை புரி கபடி, ... பவநோயே

தேடு பரிசி, கன நீதி நெறிமுறைமை
சீர்மை சிறிதும் இலி, ... எவரோடும்

கூறு மொழி அது பொய் ஆன கொடுமை உள
கோளன், அறிவிலி, ... உன்அடிபேணாக்

கூளன், எனினும் எனை நீ உன் அடியரொடு
கூடும் வகைமை அருள் ... ... புரிவாயே.

மாறு படும் அவுணர் மாள அமர்பொருது
வாகை உள மவுலி ... ... புனைவோனே!

மாக முகடு அதிர வீசு சிறைமயிலை
வாசி என உடைய ... ... முருகோனே!

வீறு கலிசை வரு சேவகனது இதயம்
மேவும் ஒரு பெருமை ... ... உடையோனே!

வீரை உறை குமர! தீர தர! பழநி
வேல! இமையவர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 52 சுருதி முடி மோனம் (பழநி)

தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன ... ... தனதான

சுருதி முடி மோனம் சொல் சிற்பரம ஞானசிவ
சமயவடி வாய்வந்த அத்துவிதம் ஆன பர!
சுடர்ஒளியதாய் நின்ற நிட்கள! சொரூப முதல் ... ...
ஒருவாழ்வே!

துரியநிலையே கண்ட முத்தர் இதயா கமலம்
அதனில் விளையா நின்ற அற்புத, சுபோத, சுக,
சுயபடிக மா இன்ப பத்ம பதமே அடைய ... ... உணராதே,

கருவில் உருவே தங்கு, சுக்கில நிதான வளி
பொருமை, அதிலே கொண்ட முக்குண விபாக நிலை
கருத அரியா வஞ்சகக் கபடம் மூடி உடல் ... ...
வினைதானே

கலகம் இடவே பொங்கு குப்பை மல வாழ்வு, நிஜம்
என உழலும் மாயம், செனித்த குகையே உறுதி
கருது அசுழமாம் இந்த மட்டை தனை ஆள, உனது ... ...
அருள்தாராய்.

ஒரு நியமமே விண்ட சட் சமய வேத, அடி
முடிநடுவுமாய், அண்ட முட்டை வெளி ஆகி, உயிர்
உடல் உணர்வதாய் எங்கும் உற்பனம் அதாக அமர் ... ...
உளவோனே!

உத தரிசமாம் இன்ப புத்தமிர்த போக சுகம்
உதவும் அமலாநந்த சத்தி கரமே உணர்
அ உரு பிரணவா மந்த்ர கர்த்தவியம் ஆக வரு ... ...
குருநாதா!

பருதி கதிரே கொஞ்சும் நல்சரண நூபுரம் அது
அசைய, நிறை பேர்அண்டம் ஒக்க நடம் ஆடு கன
பத கெருவிதா! துங்க வெற்றிமயில் ஏறும் ஒரு ... ...
திறலோனே!

பணியும் அடியார் சிந்தை மெய்ப்பொருள் அதாக நவில்
சரவணபவா! ஒன்று வல் கரமும் ஆகிவளர்
பழநிமலை மேல் நின்ற சுப்ரமணியா! அமரர் ... ...
பெருமாளே.

திருப்புகழ் 53 ஞானங்கொள் (பழநி)

தானந்த தனன தான தானந்த தன்னதான
தானந்த தனன தான ... ... தனதான

ஞானம் கொள் பொறிகள் கூடி வான் இந்து கதிர் இலாத
நாடு அண்டி, நமசி வாய ... ... வரை ஏறி.

நா இன்ப ரசம் அதான ஆநந்த அருவி பாய,
நாதங்களொடு குலாவி ... ... விளையாடி.

ஊனங்கள், உயிர்கள், மோகம், நான் என்பது அறிவு இலாமல்
ஓம்அங்கி உருவம் ஆகி, ... இருவோரும்

ஓர் அந்தம் மருவி, ஞான மாவிஞ்சை முதுகின் ஏறி,
லோகங்கள் வலம் அது ஆட ... ... அருள்தாராய்.

தேன் அம் கொள் இதழி, தாகி, தார் இந்து, சலில வேணி,
சீர் அங்கன், எனது தாதை, ... ஒருமாது

சேர்பஞ்ச வடிவி, மோகி, யோகங்கொள் மவுன சோதி,
சேர்பங்கின் அமல நாதன் ... ... அருள்பாலா!

கானங்கள், வரைகள், தீவு, ஓதங்கள் பொடிய, நீல
காடு அந்த மயிலில் ஏறு ... ... முருகோனே!

காமன் கை மலர்கள் நாண, வேடம் பெண் அமளி சேர்வை
காண், எங்கள் பழநி மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 54 தமரும் அமரும் (பழநி)

தனன தனன தனன தனன
தனன தனன ... ... தனதான

தமரும் அமரும் மனையும் இனிய
தனமும் அரசும் ... ... அயல் ஆகத்

தறுகண் மறலி முறுகு கயிறு
தலையை வளைய ... ... எறியாதே

கமல விமல மரகத மணி
கனக மருவும் ... ... இருபாதம்

கருத அருளி, எனது தனிமை
கழிய, அறிவு ... ... தரவேணும்.

குமர! சமர முருக! பரம!
குலவு பழநி ... ... மலையோனே!

கொடிய பகடு முடிய முடுகு
குறவர் சிறுமி ... ... மணவாளா!

அமரர் இடரும் அவுணர் உடலும்
அழிய அமர் செய்து ... ... அருள்வோனே!

அறமும், நிறமும் மயிலும், அயிலும்,
அழகும் உடைய ... ... பெருமாளே.

திருப்புகழ் 55 தலைவலி மருத்தீடு (பழநி)

தனதன தந்தான தானான தானதன
தனதன தந்தான தானான தானதன
தனதன தந்தான தானான தானதன ... ... தனதான

தலைவலி, மருத்தீடு, காமாலை, சோகை, சுரம்,
விழிவலி, வறள்சூலை, காயா சுவாசம் வெகு
சலமிகு விஷப்பாகம், மாயா விகார பிணி ... ... அணுகாதே,

தலமிசை அதற்கு ஆன பேரோடு கூறி, இது
பரிகரி, எனக் காது கேளாது போலும்,அவர்
சரியும் வயதுக்கு ஏது தாரீர், சொலீர், எனவும் ... ... விதியாதே,

உலைவு அற, விருப்பாக, நீள்காவின் வாசமலர்
வகைவகை எடுத்தே தொடா, மாலிகா ஆபரணம்
உனது அடியினில் சூடவே நாடும் மாதவர்கள் ... ... இருபாதம்

உளம் அது தரித்தே, வினாவோடு பாடி, அருள்
வழிபட எனக்கே, தயாவோடு தாள் உதவ,
உரகம் அது எடுத்து ஆடும் மேகார மீதின்மிசை ... ...
வரவேணும்.

அலைகடல் அடைத்தே, மகா கோர ராவணனை
மணி முடி துணித்து, ஆவியே ஆன ஜானகியை
அடல் உடன் அழைத்தே கொள் மாயோனை மாமன் எனும்
... ... மருகோனே

அறுகினை முடித்தோனை, ஆதாரம் ஆனவனை,
மழு உழை பிடித்தோனை, மாகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மாதாதையே எனவும் ... ...
வருவோனே!

பலகலை படித்து ஒது பாவாணர் நாவில் உறை
இரு சரண வித்தார வேலாயுதா! உயர்செய்
பரண்மிசை குறப்பாவை தோள் மேவ மோகம் உறு ... ...
மணவாளா!

பதும வயலில் பூக மீதே வரால்கள் துயில்
வருபுனல் பெருக்காறு காவேரி சூழவளர்
பழநி வரு கற்பூர கோலாகலா அமரர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 56 திடமிலி சற்குணமிலி (பழநி)

தனதனனத் தனதனனத் தனதனனத் ... ... தனதான
தனதனனத் தனதனனத் தனதனனத் ... ... தனதான

திடம்இலி, சற்குணம் இலி, நல் திறம் இலி, அற்– ... ... புதம் ஆன
செயல் இலி, மெய்த் தவம் இலி, நல் செபம் இலி சொர்க்– ... ...
கமும் ஈதே

இடம் இலி, கைக் கொடைஇலி, சொற்கு இயல்பு இலி, நல் ... ...
தமிழ்பாட,
இருபதம் உற்று இருவினை அற்று, இயல்கதியைப் ... ... பெறவேணும்.

கெடு மதி உற்றிடும் அசுரக் கிளை மடியப் ... ... பொரும்வேலா!
கிரண குறைப் பிறை,அறுகு, அக்கு, இதழ் மலர் கொக்கு ... ...
இறகோடே

படர்சடையில் புனை, நடனப் பரமர் தமக்கு ... ... ஒருபாலா!
பலவயலில் தரள நிறைப் பழநிமலைப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 57 திமிர உததி (பழநி)

தனன தனன தனன தனன
தனன தனன ... ... தனதான

திமிர உததி அனைய நரக
சென‌னம் அதனில் ... ... விடுவாயேல்,

செவிடு, குருடு, வடிவு குறைவு,
சிறிது மிடியும் ... ... அணுகாதே,

அமரர் வடிவும், அதிக குலமும்,
அறிவும் நிறையும் ... ... வரவேநின்,

அருளது அருளி எனையும் மனதொடு
அடிமை கொளவும் ... ... வரவேணும்.

சமர முகவெல் அசுரர் தமது
தலைகள் உருள ... ... மிகவே, நீள்

சலதி அலற, நெடிய பதலை
தகர, அயிலை ... ... விடுவோனே!

வெமர அணையில் இனிது துயிலும்
விழிகள் நளினன் ... ... மருகோனே!

மிடறு கரியர் குமர! பழநி
விரவும் அமரர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 58 நாத விந்து (பழநி)

தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன ... ... தனதான

நாத விந்து கலா ஆதீ! நமோ நம,
வேத மந்த்ர சொரூபா! நமோ நம,
ஞான பண்டித ஸாமீ! நமோ நம, ... வெகுகோடி

நாம சம்பு குமாரா! நமோ நம,
போக அந்தரி பாலா! நமோ நம,
நாக பந்த மயூரா! நமோ நம, ... பரசூரர்

சேத தண்ட விநோதா! நமோ நம,
கீத கிண்கிணி பாதா! நமோ நம
தீர சம்ப்ரம வீரா நமோ நம, ... கிரிராஜ

தீப மங்கள ஜோதீ! நமோ நம,
தூய அம்பல லீலா! நமோ நம,
தேவ குஞ்சரி பாகா! நமோ நம, ... அருள்தாராய்,

ஈதலும், பல கோலால பூஜையும்,
ஓதலும், குண ஆசார நீதியும்,
ஈரமும் குரு சீர்பாத சேவையும் ... ... மறவாத,

ஏழ் தலம் புகழ் காவேரியால் விளை
சோழ மண்டல மீதே, மனோகர!
ராஜ கெம்பிர நாடு ஆளும் நாயக! ... ... வயலூரா!

ஆதரம் பயில் ஆரூரர் தோழமை
சேர்தல் கொண்டு, அவரோடே முன் நாளினில்
ஆடல் வெம்பரி மீது ஏறி, மாகயி ... ... லையில் ஏகி

ஆதி அந்த உலா ஆசு பாடிய
சேரர் கொங்கு, வைகாவூர் நல் நாடு அதில்
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 59 போதகம் தரு (பழநி)

தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன ... ... தனதான

போதகம் தரு கோவே! நமோ நம,
நீதி தங்கிய தேவா! நமோ நம,
பூதலம் தனை ஆள்வாய்! நமோ நம, ... பணியாவும்

பூணுகின்ற பிரானே! நமோ நம,
வேடர்தம் கொடி மாலா! நமோ நம,
போதவன் புகழ் சாமீ! நமோ நம, ... அரிதான

வேத மந்திர ரூபா! நமோ நம,
ஞான பண்டித நாதா! நமோ நம,
வீர கண்டைகொள் தாளா! நமோ நம, ... அழகான

மேனி தங்கிய வேளே! நமோ நம,
வான பைந்தொடி வாழ்வே! நமோ நம,
வீறு கொண்ட விசாகா! நமோ நம, ... அருள்தாராய்.

பாதகம் செறி சூர் ஆதி மாளவெ,
கூர்மை கொண்ட அயிலாலே பொராடியெ,
பார அண்டர்கள் வான்நாடு சேர்தர ... ... அருள்வோனே!

பாதி சந்திரனே சூடும் வேணியர்,
சூல சங்கரனார், கீத நாயகர்,
பார திண் புயமே சேரு சோதியர், ... கயிலாயர்,

ஆதி, சங்கரனார், பாக மாது உமை,
கோல அம்பிகை, மாதா மநோமணி,
ஆயி, சுந்தரி, தாய்ஆன நாரணி, ... அபிராமி,

ஆவல் கொண்டு விறாலே சிராடவெ,
கோமளம் பல சூழ் கோயில் மீறிய
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 60 மனக் கவலை ஏதும் இன்றி (பழநி)

தனத்ததன தான தந்த தனத்ததன தான தந்த
தனத்ததன தான தந்த ... ... தனதான

மனக் கவலை ஏதும் இன்றி, உனக்கு அடிமையே புரிந்து,
வகைக்கும் மநு நூல் விதங்கள் ... ... தவறாதே,

வகைப்படி மனோ ரதங்கள் தொகைப்படியினால் இலங்கி,
மயக்கம் அற, வேதமும் கொள் ... ... பொருள்நாடி,

வினைக்கு உரிய பாதகங்கள் துகைத்து, வகையால் நினைந்து,
மிகுத்த பொருள் ஆகமங்கள் ... ... முறையாலே,

வெகுட்சி தனையே துரந்து, களிப்பின் உடனே நடந்து,
மிகுக்கும் உனையே வணங்க ... ... வரவேணும்

மனத்தில் வருவோனெ என்று, உன் அடைக்கலம் அதாக வந்து
மலர்ப்பதம் அதே பணிந்த ... ... முநிவோர்கள்,

வரர்க்கும், இமையோர்கள் என்பர் தமக்கும், மனமே இரங்கி,
மருட்டி வரு சூரை வென்ற ... ... முனைவேலா!

தினைப்புனம் முனே நடந்து, குறக்கொடியையே மணந்து,
செகத்தை முழுது ஆள வந்த ... ... பெரியோனே!

செழித்த வளமே சிறந்த மலர்ப் பொழில்களே நிறைந்த,
திருப்பழநி வாழ வந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 61 மூல மந்திரம் (பழநி)

தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன
தான தந்தன தான தந்தன ... ... தனதான

மூல மந்திரம் ஓதல் இங்கு இலை,
ஈவது இங்கு இலை, நேயம் இங்கு இலை,
மோனம் இங்கு இலை, ஞானம் இங்கு இலை, ...

மோகம் உண்டு, அதி தாகம் உண்டு, அப–
சாரம் உண்டு, அபராதம் உண்டு, இடு
மூகன் என்று ஒரு பேரும் உண்டு, அருள் ... ... பயிலாத

கோலமும், குண ஈன துன்பர்கள்
வார்மையும், பல ஆகி, வெந்து எழு
கோர கும்பியிலே விழுந்திட ... ... நினைவாகி,

கூடு கொண்டு உழல்வேனை, அன்பொடு
ஞான நெஞ்சினர் பால் இணங்கிடு
கூர்மை தந்து, இனி ஆள வந்து, அருள் ... ... புரிவாயே.

பீலி வெந்து, உயர் ஆலி வெந்து,
அசோகு வெந்து, அமண் மூகர் நெஞ்சிடை
பீதி கொண்டிட, வாது கொண்டு, அருள் ... ... எழுதுஏடு

பேணி அங்கு, எதிர் ஆறு சென்றிட,
மாறனும் பிணி தீர, வஞ்சகர்
பீறு வெங்கழு ஏற, வென்றிடு ... ... முருகோனே!

ஆலம் உண்டவர், சோதி அம் கணர்,
பாகம் ஒன்றிய வாலை, அந்தரி,
ஆதி அந்தமும் ஆன சங்கரி ... ... குமரஈசா!

ஆரணம் பயில் ஞான புங்கவ!
சேவல் அம் கொடி ஆன பைங்கர!
ஆவினன்குடி வாழ்வு கொண்டு அருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 62 வசனமிக ஏற்றி (பழநி)

தனதனன தாத்த ... ... தனதான
தனதனன தாத்த ... ... தனதான

வசனம் மிக ஏற்றி ... ... மறவாதே,
மனது துயர் ஆற்றில் ... ... உழலாதே,

இசைபயில் சடாட்சரம் ... ... அதாலே,
இகபர சௌபாக்யம் ... ... அருள்வாயே.

பசுபதி சிவாக்யம் ... ... உணர்வோனே!
பழநிமலை வீற்று ... ... அருளும்வேலா!

அசுரர்கிளை வாட்டி ... ... மிகவாழ
அமரர்சிறை மீட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 63 வரதா மணி நீ (பழநி)

தனனா தனனா ... ... தனதான
தனனா தனனா ... ... தனதான

வரதா! மணி நீ ... ... என ஓரில்,
வருகாது எதுதான் ... ... அதில்வாராது.

இரத ஆதிகளால் ... ... நவலோகம்
இடவே கரியாம், ... இதில் ஏது?

சரதா! மறை ஓது ... ... அயன்மாலும்
சகல ஆகமநூல் ... ... அறியாத

பர தேவதையாள் ... ... தருசேயே!
பழனாபுரி வாழ் ... ... பெருமாளே.

திருப்புகழ் 64 வாதம் பித்தம் (பழநி)

தானந் தத்தன தானன தானன
தானந் தத்தன தானன தானன
தானந் தத்தன தானன தானன ... ... தனதான

வாதம், பித்தம், மிடாவயிறு, ஈளைகள்,
சீதம், பற்சனி, சூலை, மகோதரம்,
மாசு அம் கண், பெரு மூல வியாதிகள், ... குளிர்காசம்,

மாறும் கக்கலொடே, சில நோய், பிணி–
யோடும், தத்துவ காரர் தொணூறு அறு–
வாரும் சுற்றினில் வாழ் சதிகாரர்கள் ... ... வெகுமோகர்

சூழ் துன் சித்ர கபாயை, மு ஆசைகொடு
ஏதும் சற்று உணராமலெ மாயைசெய்,
சோரம் பொய்க் குடிலே சுகமாம் என, ... இதின்மேவித்

தூசின் பொன் சரமோடு குலாய், உலகு
ஏழும் பிற்பட ஓடிடு மூடனை,
தூ அம் சுத்த அடியார் அடி சேர,நின் ... ... அருள்தாராய்.

தீதந் தித்திமி தீதக தோதிமி
டூடுண் டுட்டுடு டூடுடு டூடுடு
சேசெஞ் செக்கெண தோதக தீகுட ... ... எனபேரி

சேடன் சொக்கிட, வேலை கடாகம்
எலாம் அஞ்சு உற்றிடவே, அசுரார், கிரி
தீவும் பொட்டு எழவே, அனல் வேல்விடு ... ... மயில்வீரா!

வேதன் பொன் சிர மீது கடாவி, நல்
ஈசன் சற்குருவாய், அவர் காதினில்
மேவும் பற்றிலர் பேறு அருள்ஓதிய ... ... முருகோனே!

வேஷங் கட்டி பின் ஏகி மகா வளி
மாலின் பித்து உறவாகி, விணோர் பணி
வீரம் கொள் பழனாபுரி மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 65 அவாமருவு (சுவாமிமலை)

தனாதன தனாதன தனாதன தனாதன
தனாதனன தானந் ... ... தனதானா

அவா மருவு இனா வசுதை காணும் மடவார் எனும்
அவார், கனலில் வாழ்வு என்று ... ... உணராதே,

அரா நுகர வாதை உறு தேரை கதி நாடும்
அறிவாகி, உள மால் கொண்டு, ... அதனாலே

சிவாய எனும் நாமம் ஒருகாலும் நினையாத, தி–
மிர ஆகரனை வாஎன்று ... ... அருள்வாயே.

திரோத மலமாறும் அடியார்கள், அருமாதவர்
தியானம் உறு பாதம் ... ... தருவாயே.

உவா இனிய கானுவில் நிலாவும் மயில்வாகனம்
உலாசமுடன் ஏறும் ... ... கழலோனே!

உலா உதய பாநு சதகோடி உரு ஆன ஒளி,
வாகும் அயில் வேல்அம் ... ... கையிலோனே!

துவாதச புயாசல! ஷடாநந வரா! சிவ
சுதா! எயினர் மான்அன்பு ... ... உடையோனே!

சுர அதிபதி மால் அயனும் மாலொடு சலாம்இடு
சுவாமிமலை வாழும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 66 இருவினை புனைந்து (சுவாமிமலை)

தனதன தனந்த தான தனதன தனந்த தான
தனதன தனந்த தான ... ... தனதான

இருவினை புனைந்து, ஞான விழிமுனை திறந்து, நோயின்
இருவினை இடைந்து போக, ... மலம் மூடு, அவ்–

இருள்அற விளங்கி, ஆறுமுகமொடு கலந்து, பேதம்
இலை என, இரண்டு பேரும் ... ... அழகான

பரிமள சுகந்த வீத மயம்என மகிழ்ந்து, தேவர்
பணிய, விண்மடந்தை பாத ... ... மலர்தூவ,

பரிவுகொடு அநந்த கோடி முநிவர்கள் புகழ்ந்து பாட
பருமயிலுடன் குலாவி ... ... வரவேணும்

அரிஅயன் அறிந்திடாத அடிஇணை சிவந்த பாதம்
அடி என விளங்கி ஆடு ... ... நடராஜன்

அழல்உறும் இரும்பின் மேனி மகிழ் மரகதம் பெண்ஆகம்
அயல்அணி சிவன் புராரி ... ... அருள்சேயே!

மருவலர்கள் திண் பணஆர முடி, உடல் நடுங்க, ஆவி
மறலி உண வென்ற வேலை ... ... உடையோனே!

வளைகுலம் அலங்கு காவிரியின் வடபுறம் சுவாமி–
மலைமிசை விளங்கு தேவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 67 எந்தத் திகையினும் (சுவாமிமலை)

தந்தத் தனதன தனதன தனதன
தந்தத் தனதன தனதன தனதன
தந்தத் தனதன தனதன தனதன ... ... தனதான

எந்தத் திகையினும், மலையினும், உவரியின்
எந்தப் படியினும், முகடினும் உள, பல
எந்தச் சடலமும் உயிர்இயை பிறவியின் ... ... உழலாதே

இந்தச் சடமுடன் உயிர் நிலைபெற, நளி–
னம் பொன்கழல் இணைகளில் மருமலர் கொடு
என் சித்தமும் மனம் உருகி, நல் சுருதியின் ... ...
முறையோடே

சந்தித்து, அரஹர சிவசிவ சரண் என
கும்பிட்டு, இணைஅடி அவை என தலைமிசை
தங்க, புளகிதம் எழ, இருவிழி புனல் ... ... குதிபாய,

சம்பைக் கொடி இடை விபுதையின் அழகுமுன்
அந்தத் திருநடம் இடு சரண் அழகு உற
சந்தச் சபைதனில் எனது உளம் உருகவும் ... ... வருவாயே

தொந்தத் திகுகுட தகுகுட டிமிடிமி
தந்தத் தனதன டுடுடுடு டமடம
துங்கத் திசைமலை உவரியும் மறுக,ச– ... ... லரிபேரி

துன்ற, சிலைமணி கலகல கலின்என
சிந்த, சுரர் மலர் அயன் மறை புகழ்தர
துன்புற்று அவுணர்கள் நமன்உலகு உறவிடும் ... ...
அயில்வேலா

கந்தச் சடைமுடி கனல்வடிவு அடல்அணி
எந்தைக்கு உயிர்எனும் மலைமகள் மரகத
கந்தப் பரிமள தனகிரி உமைஅருள் ... ... இளையோனே!

கஞ்சப் பதம்இவர் திருமகள் குலமகள்
அம்பொன் கொடிஇடை புணர்அரி மருக! நல்
கந்தப் பொழில்திகழ் குருமலை மருவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 68 ஒருவரையும் ஒருவர் (சுவாமிமலை)

தனதனன தனதனன தான தந்தனம்
தனதனன தனதனன தான தந்தனம்
தனதனன தனதனன தான தந்தனம் ... ... தனதான

ஒருவரையும் ஒருவர் அறியாமலும் திரிந்து
இருவினையின் இடர்கலியொடு ஆடி நொந்து நொந்து
உலையில் இடு மெழுகு அது என வாடி முன்செய் வஞ்–
... ... சனையாலே

ஒளிபெறவெ எழுபு மர பாவை துன்றிடும்
கயிறு விதம் என மருவி ஆடி விண்பறிந்து
ஒளிரு மினல் உரு அது, என ஓடி அங்கம் வெந் ... ...
திடுவேனைக்

கருதி, **ஒரு பரமபொருள் ஈது என்று, என்**
செவிஇணையின் அருளி உருவாகி வந்த, என்
கருவினையொடு அருமலமும் நீறு கண்டு, தண் ... ...
தரு மாமென்

கருணைபொழி கமலமுகம் ஆறும் இந்துளம்
தொடை மகுட முடியும் ஒளிர் நூபுரம் சரண்
கலகல என மயிலின்மிசை ஏறி வந்துஉகந்து ... ...
எனை ஆள்வாய்.

திரிபுரமும் மதன்உடலும் நீறு கண்டவன்,
தருணமழ விடையன், நடராஜன், எங்கணும்
திகழ் அருணகிரி சொருபன் ஆதிஅந்தம் அங்கு ... ... அறியாத

சிவயநம, நமசிவய காரணன், சுரந்து
அமுதம் அதை அருளி எமை ஆளும் எந்தை தன்
திருவுருவின் மகிழ் எனது தாய் பயந்திடும் ... ... புதல்வோனே!

குருகு கொடியுடன் மயிலில் ஏறி, மந்தரம்
புவன கிரி சுழல, மறை ஆயிரங்களும்
குமரகுரு என, வலிய சேடன் அஞ்ச வந்– ... ... திடுவோனே!

குறமகளின் இடைதுவள பாத செஞ்சிலம்பு
ஒலிய, ஒரு சசிமகளொடே கலந்து திண்
குருமலையின் மருவு குருநாத! உம்பர்தம் ... ... பெருமாளே.

திருப்புகழ் 69 கடாவினிடை (சுவாமிமலை)

தனாதனன தானம் தனாதனன தானம்
தனாதனன தானம் ... ... தனதான

கடாவின்இடை வீரம் கெடாமல் இனிது ஏறும்
கடாவின் நிகர் ஆகும் ... ... சமனாரும்,

கடாவி விடு தூதன் கெடாத வழி போலும்,
கனாவில் விளையாடும் ... ... கதைபோலும்,

இடாது பல தேடும் கிராதர் பொருள் போல், இங்கு
இராமல், உயிர் கோலிங்கு ... ... இதம் ஆகும்

இது ஆம் என் இரு போதும் சதா இன்மொழியால், இன்று
யானும் உனை ஓதும்– ... ... படி பாராய்.

விடாது நடம் நாளும் பிடாரியுடன் ஆடும்
வியாகரண ஈசன் ... ... பெருவாழ்வே!

விகாரம்உறு சூரன் பகாரம் உயிர் வாழ்வும்
விநாசம்உற வேல்அங்கு ... ... எறிவோனே!

தொடாது நெடு தூரம் தடாது மிக ஓடும்
சுவாசம் அது தான் ஐம் ... ... புலனோடும்

சுபானம் உறு ஞானம் தபோதனர்கள் சேரும்
சுவாமிமலை வாழும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 70 கடிமா மலர்க்குள் (சுவாமிமலை)

தனனா தனத்த தந்த தனனா தனத்த தந்த
தனனா தனத்த தந்த ... ... தனதான

கடிமா மலர்க்குள் இன்பம் உளவேரி கக்கு நண்பு
தருமா கடப்பு அமைந்த ... ... தொடைமாலை.

கன மேரு ஒத்திடும் பனிரு மா புயத்து அணிந்த
கருணாகர ப்ரசண்ட ... ... கதிர்வேலா

வடிவார் குறத்தி தன்பொன் அடிமீது நித்தமும் தண்
முடியானது உற்று உகந்து ... ... பணிவோனே!

வளவாய்மை சொல் ப்ரபந்தம் உள கீரனுக்கு உகந்து,
மலர்வாய் இலக்கணங்கள் ... ... இயல்பு ஓதி

அடிமோனை சொற்கு இணங்க, "உலகாம் உவப்ப" என்று, உன்
அருளால் அளிக்கு கந்த! ... ... பெரியோனே!

அடியேன் உரைத்த புன்சொல் அது மீது நித்தமும் தண்
அருளே தழைத்து உகந்தது ... ... வரவேணும்.

செடிநோய் உடல் குடம்பைதனில் மேவி உற்று, இடிந்த
படிதான் அலக்கண் இங்கண் ... ... உறலாமோ?

திறமாதவர்க் கனிந்து உன் இருபாத பத்மம் உய்ந்த
திருவேரகத்து அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 71 கறைபடும் உடம்பு (சுவாமிமலை)

தனதனன தந்த தானனத்
தனதனன தந்த தானனத்
தனதனன தந்த தானனத் ... ... தனதான

கறைபடும் உடம்பு இராது எனக்
கருதுதல் ஒழிந்து, வாயுவைக்
கரும வசனங்களால் மறித்து, ... அனல்ஊதிக்

கவலை படுகின்ற யோக, கற்–
பனை மருவு சிந்தை போய்விட,
கலகமிடும் அஞ்சும் வேர் அற, ... செயல்மாள,

குறைவுஅற நிறைந்த மோன நிர்க்–
குணம் அது பொருந்தி வீடு உற,
குருமலை விளங்கு ஞான சற்– ... ... குருநாதா!

குமர! சரண் என்று, கூதளப்
புதுமலர் சொரிந்து, கோமளப்
பத யுகள புண்டரீகம்உற்று ... ... உணர்வேனோ

சிறை தளை விளங்கு பேர் முடிப்
புயலுடன் அடங்கவே பிழைத்து
இமையவர்கள் தங்கள் ஊர்புகச் ... ... சமர்ஆடி,

திமிர மிகு சிந்து வாய்விட,
சிகரிகளும் வெந்து நீறு எழத்
திகிரி கொள் அநந்த சூடிகைத் ... ... திருமாலும்

பிறை மவுலி மைந்த! அகோ எனப்
பிரமனை முனிந்து காவல்இட்டு,
ஒருநொடியில் மண்டு சூரனைப் ... ... பொருது ஏறிப்

பெருகு மத கும்ப லாளிதக்
கரி என ப்ரசண்ட வாரணப்
பிடிதனை மணந்த சேவகப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 72 காமியத் தழுந்தி (சுவாமிமலை)

தானனத் தனந்த ... ... தனதான
தானனத் தனந்த ... ... தனதான

காமியத்து அழுந்தி ... ... இளையாதே
காலர்கைப் படிந்து ... ... மடியாதே

ஓம் எழுத்தில் அன்பு ... ... மிகஊறி
ஓவியத்தில் அந்தம் ... ... அருள்வாயே

தூமம் மெய்க்கு அணிந்த ... ... சுகலீலா!
சூரனைக் கடிந்த ... ... கதிர்வேலா!

ஏம வெற்பு உயர்ந்த ... ... மயில்வீரா!
ஏரகத்து அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 73 குமர குருபர முருக சரவண (சுவாமிமலை)

தனன தனதன தனன தனதன
தனன தனதன ... ... தனதான

குமர! குருபர! முருக! சரவண!
குக! சண்முக! கரி ... ... பிறகான

குழக! சிவசுத! சிவயநம என
குரவன் அருள் குரு– ... ... மணியே! என்று

அமுத இமையவர் திமிர்தம் இடுகடல்
அதுஎன அநுதினம் ... ... உனைஓதும்

அமலை அடியவர் கொடிய வினைகொடும்
அபயம் இடுகுரல் ... ... அறியாயோ?

திமிர எழுகடல் உலகம் முறிபட
திசைகள் பொடிபட ... ... வருசூரர்

சிகர முடி உடல் புவியில் விழ, உயிர்
திறைகொடு அமர்பொரு ... ... மயில்வீரா!

நமனை உயிர்கொளும் அழலின் இணைகழல்
நதிகொள் சடையினர் ... ... குருநாதா!

நளின குருமலை மருவி அமர்தரு
நவிலும் மறைபுகழ் ... ... பெருமாளே.

திருப்புகழ் 74 சரண கமலாலயத்தை (சுவாமிமலை)

தனதனன தான தத்த தனதனன தான தத்த
தனதனன தான தத்த ... ... தனதான

சரண கமல ஆலயத்தை அரைநிமிஷ நேரம் மட்டில்
தவமுறை தியானம் வைக்க ... ... அறியாத

சட கசட மூட மட்டி, பவ வினையிலே சனித்த
தமியன், மிடியால் மயக்கம் ... ... உறுவேனோ?

கருணை புரியாது இருப்பது என குறை? இவ்வேளை செப்பு,
கயிலைமலை நாதர் பெற்ற ... ... குமரோனே!

கடக புய மீது இரத்ன மணி அணிபொன் மாலை செச்சை
கமழும் மணம் ஆர் கடப்பம் ... ... அணிவோனே!

தருணம் இது ஐயா! மிகுத்த கனம்அதுஉறு நீள்ச வுக்ய,
சகல செல்வ யோகம் மிக்க ... ... பெருவாழ்வு.

தகைமை சிவஞான முத்தி, பரகதியும் நீ கொடுத்து
உதவி புரிய வேணு நெய்த்த ... ... வடிவேலா!

அருண தள பாத பத்மம் அது நிதமுமே துதிக்க
அரிய தமிழ் தான் அளித்த ... ... மயில்வீரா!

அதிசயம் அநேகம் உற்ற பழநிமலை மீது உதித்த
அழக! திரு ஏரகத்தின் ... ... முருகோனே!

திருப்புகழ் 75 செகமாயை உற்று (சுவாமிமலை)

தனதான தத்த தனதான தத்த
தனதான தத்த ... ... தனதான

செகமாயை உற்று என்அக வாழ்வில் வைத்த
திருமாது கெர்ப்பம் ... ... உடல்ஊறித்

தெசமாதம் முற்றி வடிவாய், நிலத்தில்
திரமாய் அளித்த ... ... பொருள் ஆகி

மக அவாவின் உச்சி விழி ஆநநத்தில்
மலைநேர் புயத்தில் ... ... உறவாடி,

மடிமீது அடுத்து விளையாடி, நித்தம்
மணிவாயின் முத்தி ... ... தரவேணும்.

முகமாயம் இட்ட குற மாதினுக்கு
முலைமேல் அணைக்க ... ... வரு நீதா!

முது மாமறைக்கு உள் ஒரு மா பொருட்குள்
மொழியே உரைத்த ... ... குருநாதா!

தகையாது எனக்கு உன் அடி காண வைத்த
தனி ஏரகத்தின் ... ... முருகோனே!

தரு காவிரிக்கு வட பாரிசத்தில்
சமர் வேல் எடுத்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 76 தெருவினில் நடவா (சுவாமிமலை)

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த ... ... தனதான

தெருவினில் நடவா மடவார்
திரண்டு ஒறுக்கும் ... ... வசையாலே,

தினகரன் என வேலையிலே
சிவந்து உதிக்கும் ... ... மதியாலே,

பொருசிலை வளையா இளையா
மதன் தொடுக்கும் ... ... கணையாலே,

புளகித முலையாள் அலையா
மனம் சலித்தும் ... ... விடலாமோ?

ஒருமலை இரு கூறு எழவே
உரம் புகுத்தும் ... ... வடிவேலா!

ஒளிவளர் திரு ஏரகமே
உகந்து நிற்கும் ... ... முருகோனே!

அருமறை தமிழ்நூல் அடைவே
தெரிந்து உரைக்கும் ... ... புலவோனே!

அரிஅரி பிரம ஆதியர் கால்
விலங்கு அவிழ்க்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 77 நாசர்தம் கடை (சுவாமிமலை)

தானனந் தனதனன தனதனா
தத்த தந்த ... ... தனதான

நாசர் தம் கடை அதனில் விரவி நான்
மெத்த நொந்து தடுமாறி,
ஞானமும் கெட அடைய வழுவி, ஆ–
ழத்து அழுந்தி ... ... மெலியாதே.

மாசகம் தொழும் உனது புகழின் ஓர்
சொல் பகர்ந்து ... ... சுகம் மேவி,
மாமணம் கமழும்இரு கமல பா–
தத்தை நின்று ... ... பணிவேனோ?

வாசகம் புகல ஒரு பரமர் தாம்
மெச்சு கின்ற ... ... குருநாதா!
வாசவன் தரு திருவை ஒரு தெய்வா–
னைக்கு இரங்கு ... ... மணவாளா!

கீசகம் சுரர்தருவு மகிழு மா
அத்தி சந்து ... ... புடைசூழும்
கேசவன் பரவு குருமலையில் யோ–
கத்து அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 78 நாவேறு பா மணத்த (சுவாமிமலை)

தானான தான தத்த தானான தான தத்த
தானான தான தத்த ... ... தனதான

நா ஏறு பா மணத்த பாதாரமே நினைத்து,
நாலாறு நாலு பற்று ... ... வகையான

நால் ஆறும் ஆகமத்தின் நூல்ஆய ஞான முத்தி
நாள்தோறும் நான் உரைத்த ... ... நெறியாக,

நீ வேறு எனாது இருக்க, நான்வேறு எனாது இருக்க
நேராக வாழ்வதற்கு ... ... உன்அருள்கூர,

நீடுஆர்ஷட ஆதரத்தின் மீதே பரா பரத்தை
நீ காண் எனா அனைச் சொல் ... ... அருள்வாயே.

சே ஏறும் ஈசர் சுற்ற, மாஞான போத புத்தி
சீர் ஆகவே உரைத்த ... ... குருநாதா!

தேரார்கள் நாடு சுட்ட சூரார்கள் மாள வெட்டு
தீரா! குகா! குறத்தி ... ... மணவாளா!

காவேரி நேர் வடக்கிலே வாவி பூ மணத்த
கா ஆர் சுவாமி வெற்பின் ... ... முருகோனே!

கார்போலும் மேனி பெற்ற மாகாளி வாலை சத்தி
காமாரி வாமி பெற்ற ... ... பெருமாளே.

திருப்புகழ் 79 நிறைமதி முகமெனும் (சுவாமிமலை)

தனதன தனதன ... ... தனதான
தனதன தனதன ... ... தனதான

நிறைமதி முகம் எனும் ... ... ஒளியாலே
நெறிவிழி கணை எனும் ... ... நிகராலே

உறவுகொள் மடவர்கள் ... ... உறவுஆமோ?
உன திருவடி இனி ... ... அருள்வாயே.

மறைபயில் அரி திரு– ... ... மருகோனே!
மருவலர் அசுரர்கள் ... ... குலகாலா!

குறமகள் தனை மணம் ... ... அருள்வோனே!
குருமலை மருவிய ... ... பெருமாளே!

திருப்புகழ் 80 பாதி மதிநதி (சுவாமிமலை)

தான தனதன தான தனதன
தான தனதன ... ... தனதான

பாதி மதிநதி போதும் அணிசடை
நாதர் அருளிய ... ... குமரேசா!

பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய ... ... மணவாளா!

காதும் ஒருவிழி காகம்உறஅருள்
மாயன் அரி திரு ... ... மருகோனே!

காலன் எனை அணுகாமல் உனது இரு
காலில் வழிபட ... ... அருள்வாயே.

ஆதி அயனொடு தேவர் சுரர் உலகு
ஆளும் வகை உறு ... ... சிறைமீளா

ஆடும் மயிலினில் ஏறி அமரர்கள்
சூழ வர வரும் ... ... இளையோனே!

சூதம் மிகவளர் சோலை மருவு,
சுவாமி மலைதனில் ... ... உறைவோனே!

சூரன் உடல் அற, வாரி சுவறிட,
வேலை விட வல ... ... பெருமாளே.

திருப்புகழ் 81 மருவே செறித்த (சுவாமிமலை)

தனனா தனத்த தனனா தனத்த
தனனா தனத்த ... ... தனதான

மருவே செறித்த குழலார் மயக்கி,
மதன ஆகமத்தின் ... ... விரகாலே,

மயலே எழுப்பி, இதழே அருத்த
மலைபோல் முலைக்குள் ... ... உறவுஆகிப்

பெருகாதல் உற்ற தமியேனை நித்தல்
பிரியாது, பட்சம் ... ... மறவாதே,

பிழையே பொறுத்து, உன் இருதாளில் உற்ற
பெருவாழ்வு பற்ற ... ... அருள்வாயே.

குருவாய் அரற்கும் உபதேசம் வைத்த
குகனே குறத்தி ... ... மணவாளா!

குளிர்கா மிகுத்த வளர்பூகம் எத்து
குட காவிரிக்கு ... ... வடபாலார்

திரு ஏரகத்தில் உறைவாய்! உமைக்கு ஓர்
சிறுவா! கரிக்கும் ... ... இளையோனே!

திருமால் தனக்கு மருகா! அரக்கர்
சிரமே துணித்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 82 வாதமொடு சூலை (சுவாமிமலை)

தானதன தான தந்த தானதன தான தந்த
தானதன தான தந்த ... ... தனதான

வாதமொடு, சூலை, கண்டமாலை, குலை நோவு, சந்து
மாவலி, வியாதி, குன்ம ... ... மொடு, காசம்,

வாயு உடனே பரந்த தாமரைகள், பீனசம், பின்
மாதர்தரு பூஷணங்கள் ... ... என ஆகும்

பாதக வியாதி புண்கள் ஆனது உடனே தொடர்ந்து,
பாயலை விடாது மங்க, ... இவையால், நின்

பாதமலர் ஆனதின் கண் நேயம் அறவே மறந்து,
பாவ மதுபானம் உண்டு, ... வெறிமூடி,

ஏதம் உறு பாச பந்தமான வலையோடு உழன்று,
ஈன மிகு சாதியின்கண் ... ... அதிலே, யான்

ஈடு அழிதல் ஆனதின் பின், மூடன் என ஓதும் முன்பு, உன்
ஈர அருள் கூர வந்து ... ... எனை ஆள்வாய்

சூதம், மகிழ், பாலை கொன்றை, தாதுவளர் சோலை துன்றி
சூழ, மதில் தாவி மஞ்சின் ... ... அளவாகத்

தோரண நல் மாடம் எங்கும் நீடுகொடியே தழைந்த
சுவாமிமலை வாழ வந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 83 அமைவுற்று அடைய (திருத்தணிகை)

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் ... ... தனதான

அமைவு உற்று அடையப் பசி உற்றவருக்கு
அமுதைப் பகிர்தற்கு ... ... இசையாதே,

அடையப் பொருள் கைக்கு, இளமைக்கு என வைத்து,
அருள் தப்பி மதத்து ... ... அயராதே.

தமர் சுற்றி அழ, பறை கொட்டி இட,
சமன் நெட்டு உயிரைக் ... ... கொடுபோகும்

சரிரத்தினை நிற்கும் எனக் கருதித்
தளர்வு உற்று ஒழியக் ... ... கடவேனோ?

இமயத்து மயிற்கு ஒரு பக்கம் அளித்–
தவருக்கு இசையப் ... ... புகல்வோனே!

இரணத்தினில் எற்றுவரை கழுகுக்கு
இரை இட்டிடு விக்– ... ... ரமவேலா!

சமயச் சிலுகு இட்டவரைத் தவறி,
தவம் முற்ற அருள் ... ... புகநாடும்

சடு பத்ம முக! குக! புக்க கனத்
தணியில் குமரப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 84 அரகர சிவன் அரி (திருத்தணிகை)

தனதன தனதன தனதன தனதன
தனதன தனதன ... ... தனதான

அரகர சிவன் அரி அயன் இவர் பரவி, முன்
அறுமுக சரவண ... ... பவனே என்று,

அநுதினம் மொழிதர, அசுரர்கள் கெட,அயில்
அனல் என எழ விடும் ... ... அதிவீரா!

பரிபுர கமலம் அது அடிஇணை அடியவர்
உளம்அதில் உற அருள் ... ... முருகேசா!

பகவதி, வரைமகள், உமை தர வரு குக!
பரமனது இருசெவி ... ... களிகூர,

உரைசெயும் ஒருமொழி பிரணவ முடிவு அதை
உரைதரு குருபர! ... ... உயர்வு ஆய

உலகம் மன் அலகு இல உயிர்களும், இமையவர்
அவர்களும், உறுவர ... ... முநிவோரும்,

பரவி முன் அநுதினம் மனமகிழ்வு உற அணி
பணிதிகழ் தணிகையில் ... ... உறைவோனே!

பகர்தரு குறமகள், தருஅமை வநிதையும்
இருபுடை உறவரு ... ... பெருமாளே.

திருப்புகழ் 85 இருப்பவல் திருப்புகழ் (திருத்தணிகை)

தனத்தன தனத்தன தனத்தன தனத்தன
தனத்தன தனத்தன ... ... தனதான

இருப்பு அவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை அறுத்திடும் ... ... என ஓதும்,

இசைத்தமிழ் நடத்தமிழ் எனத் துறை விருப்புடன்,
இலக்கண இலக்கிய ... ... கவிநாலும்

தரிப்பவர், உரைப்பவர், நினைப்பவர், மிகச் சக–
தலத்தினில் நவிற்றுதல் ... ... அறியாதே,

தனத்தினில் முகத்தினில் மனத்தினில் உருக்கிடு
சமர்த்திகள் மயக்கினில் ... ... விழல் ஆமோ?

கருப்பு வில் வளைத்து அணி மலர்க்கணை தொடுத்து இயல்
களிப்புடன் ஒளித்து எய்த ... ... மதவேளைக்

கருத்தினில் நினைத்து, அவன் நெருப்பு எழ நுதல் படு
கனல் கணில் எரித்தவர், ... கயிலாயப்

பொருப்பினில் இருப்பவர், பருப்பத உமைக்கு ஒரு
புறத்தினை அளித்தவர் ... ... தருசேயே!

புயல் பொழில் வயல்பதி நயப்படு திருத்தணி
பொருப்பினில் விருப்புறு ... ... பெருமாளே.

திருப்புகழ் 86 இருமலு ரோக (திருத்தணிகை)

தனதன தான தனதன தான
தனதன தான ... ... தனதான

இருமல், உரோகம், முயலகன், வாதம்,
எரிகுண, நாசி ... ... விடமே,நீர்

இழிவு, விடாத தலைவலி, சோகை,
எழுகள மாலை, ... இவையோடே,

பெருவயிறு, ஈளை, எரிகுலை, சூலை,
பெருவலி, வேறும் ... ... உள **நோய்கள்,**

பிறவிகள் தோறும் எனை நலியாத–
படி, உன தாள்கள் ... ... அருள்வாயே.

வரும் ஒரு கோடி அசுரர் பதாதி
மடிய, அநேக ... ... இசைபாடி

வரும், ஒரு கால வயிரவர் ஆட,
வடிசுடர் வேலை ... ... விடுவோனே

தரு நிழல் மீதில் உறை முகில் ஊர்தி
தரு திரு மாதின் ... ... மணவாளா!

சலம் இடை பூவின் நடுவினில் வீறு
தணிமலை மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 87 உடலின் ஊடு (திருத்தணிகை)

தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான ... ... தனதான

உடலின் ஊடு போய் மீளும் உயிரின் ஊடு மாயாத
உணர்வின் ஊடு, வான் ஊடு, ... முது தீ ஊடு,

உலவை ஊடு, நீர் ஊடு, புவியின் ஊடு, வாதாடும்
ஒருவரோடும் மேவாத ... ... தனிஞானச்

சுடரின் ஊடு, நால்வேத முடியின் ஊடும், ஊடாடும்
துரிய ஆகுல அதீத ... ... **சிவரூபம்,**

தொலைவு இலாத பேராசை, துரிசு அறாத ஓர்பேதை
தொடும் உபாயம் ஏதோ? சொல் ... ... அருள்வாயே.

மடல் அறாத வாரீச அடவி சாடி, மாறான
வரி வரால் குவால் சாய ... ... அமராடி,

மதகு தாவி மீதுஓடி உழவரால் அடாது ஓடி
மடையை மோதி ஆறுஊடு ... ... தடமாக,

கடல் புகா மகா மீனை முடுகி வாளை தான்மேவு
கமல வாவி மேல்வீழு ... ... மலர்வாவிக்

கடவுள் நீலம் மாறாத, தணிகை காவலா! வீர!
கருணை மேருவே! தேவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 88 உடையவர்கள் ஏவர் (திருத்தணிகை)

தனனதன தான தனனதன தான
தன்னதன தான ... ... தனதான

உடையவர்கள் ஏவர்? எவர்கள் என நாடி,
உளமகிழ ஆசு ... ... கவிபாடி

உமதுபுகழ் மேரு கிரி அளவும் ஆனது
என உரமுமான ... ... மொழிபேசி,

நடைபழகி மீள, வறியவர்கள் நாளை
நடவும் என வாடி, ... முகம்வேறாய்,

நலியும் முனமே உன் அருண ஒளி வீசு
நளின இரு பாதம் ... ... அருள்வாயே.

விடை கொளுவு பாகர், விமலர், திரிசூலர்,
விகிர்தர், பரயோகர், ... நிலவோடே

விளவு சிறு பூளை நகுதலையொடு ஆறு
விட அரவு சூடும் ... ... அதிபாரச்

சடை இறைவர் காண, உமை மகிழ, ஞான
தளர் நடை இடா முன் ... ... வருவோனே!

தவம் மலரும் நீல மலர் சுனை அநாதி
தணிமலை உலாவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 89 எத்தனை கலாதி (திருத்தணிகை)

தத்ததன தான தத்தம் தத்ததன தான தத்தம்
தத்ததன தான தத்தம் ... ... தனதான

எத்தனை கலாதி, சித்து அங்கு எத்தனை, வியாதி பித்துஅங்கு
எத்தனை, சர அசரத்தின் ... ... செடமான

எத்தனை விடா வெருட்டு, அங்கு எத்தனை வலாண்மை, பற்றுஅங்கு
எத்தனை கொல் ஊனை நித்தம் ... ... பசியாறல்,

பித்து அனையன் நான், அகட்டு உண்டு இப்படி கெடாமல், முத்தம்
பெற்றிட நினா சனத்தின் ... ... செயல் ஆன

பெற்றியும் ஓராது நிற்கும் தத்த குரு தார நிற்கும்,
பெத்தமும் ஓராது நிற்கும் ... ... கழல்தாராய்.

தத்தனத னாத னத்தந் தத்தனத னாத னத்தந்
தத்தனத னாத னத்தந் ... ... தகுதீதோ

தக்குகுகு டூடு டுட்டுண் டிக்குகுகு டீகு தத்தந்
தத்தனத னான னுர்த்தும் ... ... சதபேரி

சித்தர்கள், நிடாதர், வெற்பின் கொற்றவர், சுவாமி பத்தர்,
திக்குகள் ஓர் நால் இரட்டின் ... ... கிரிசூழ,

செக்கண் அரிமா கனைக்கும் சித்தணிகை வாழ் சிவப்பின்
செக்கர் நிறமாய் இருக்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 90 எலுப்பு நாடிகள் (திருத்தணிகை)

தனத்த தானன தத்தன தத்தன
தனத்த தானன தத்தன தத்தன
தனத்த தானன தத்தன தத்தன ... ... தனதான

எலுப்பு நாடிகள் அப்பொடு, இரத்தமொடு,
அழுக்கு மூளைகள், மச்சொடு கொள்புழு
இருக்கும் வீடு, அதில் எத்தனை தத்துவம், ... சதிகாரர்,

இறப்பர், சூது அகவர் சுதர், அப் பதி
உழப்பர், பூமி தரிப்பர், பிறப்புடன்
இருப்பர், வீடுகள் கட்டி, **அலட்டுஉறு ... ... சமுசாரம்**

கெலிப்பர், மால்வலை பட்டுஉறு துட்டர்கள்,
அழிப்பர், மாதவம் முற்றும் நினைக்கிலர்,
கெடுப்பர் யாரையும், மித்திர குத்திரர், ... கொலைகாரர்,

கிருத்தர், கோளகர், பெற்று திரிக்களவு
அரிப்பர், சூடகர், எத்தனை வெப்பிணி
கெலிக்கும் வீடு, அதை நத்தி எடுத்து இவண் ... ...
உழல்வேனோ?

ஒலிப் பல் பேரிகை உக்ர அமர்க்களம்
எதிர்த்த சூரரை வெட்டி, இருட்கிரி
உடைத்து, வானவர் சித்தர் துதித்திட ... ... விடும்வேலா!

உலுத்த ராவணனைச் சிரம் இற்றிட
வதைத்து, மாபலியைச் சிறை வைத்தவன்,
உலக்கை ராவி நடுக்கடல் விட்டவன் ... ... மருகோனே!

வலிக்க வேதனை குட்டி, நடித்து ஒரு
செகத்தை ஈனவள் பச்சை நிறத்தியை
மணத்த தாதை, பரப்ரமருக்கு அருள் ... ... குருநாதா!

வனத்தில் வாழும் மயில் குலம் ஒத்திடு
குறத்தியாரை மயக்கி, அணைத்து, உள
மகிழ்ச்சியோடு திருத்தணி பற்றிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 91 எனக்கென யாவும் (திருத்தணிகை)

தனத்தன தானம் தனத்தன தானம்
தனத்தன தானம் ... ... தனதான

எனக்கு என யாவும் படைத்திட நாளும்
இளைப்பொடு, காலம் ... ... தனில் ஓயா

எடுத்திடு, காயம் தனைக் கொடு மாயும்
இலச்சை இலாது, என் ... ... பவம் மாற,

உனைப்பல நாளும் திருப்புகழாலும்
உரைத்திடுவார் தங்கு ... ... உளி மேவி,

உணர்த்திய போதம் தனைப் பிரியாது, ஒண்
பொலச் சரண் நானும் ... ... தொழுவேனோ?

வினைத் திறமோடு அன்று எதிர்த்திடும் வீரன்
விழ, கொடு வேள் கொன்– ... ... றவன், நீயே

விளப்பு என, மேல் என்று இடக்கு அயனாரும்
விருப்பு உற, வேதம் ... ... புகல்வோனே!

சினத்தொடு சூரன் தனைக் கொடு வேலின்
சிரத்தினை மாறும் ... ... முருகோனே!

தினைப்புனம் மேவும் குறக்கொடி யோடும்
திருத்தணி மேவும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 92 எனை அடைந்த (திருத்தணிகை)

தனன தந்த தத்த தனன தந்த தத்த
தனன தந்த தத்த ... ... தனதான

எனை அடைந்த குட்டம், வினை மிகுந்த பித்தம்,
எரி வழங்கு வெப்பு, ... வலிபேசா,

இகலி நின்று அலைக்கும் முயலகன், குலைப்பொடு,
இருமல் என்று உரைக்கும் ... ... இவையோடே,

மனைகள் பெண்டிர் மக்கள் தமை நினைந்து, சுத்த
மதி மயங்கி விட்டு ... ... மடியாதே,

மருவி இன்று எனக்கு, மரகதம் சிறக்கும்
மயிலில் வந்து முத்தி ... ... தரவேணும்.

நினை வணங்கு பத்தர் அனைவரும் தழைக்க
நெறியில் நின்ற வெற்றி ... ... முனைவேலா!

நிலைபெறும் திருத்தணியில் விளங்கு சித்ர
நெடிய குன்றில் நிற்கும் ... ... முருகோனே!

தினை விளங்கல் உற்ற புன இளம் குறத்தி
செயல் அறிந்து அணைக்கும் ... ... மணிமார்பா!

திசைமுகன் திகைக்க அசுரர் அன்று அடைத்த
சிறை திறந்து விட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 93 கலை மடவார்தம் (திருத்தணிகை)

தனதன தானம் தனதன தானம்
தனதன தானம் ... ... தனதான

கலை மடவார் தம் சிலை அதனாலும்,
கன வளையாலும், ... கரைமேலே

கருகிய காளம் பெருகிய தோயம்
கருது அலையாலும், ... சிலையாலும்,

கொலை தரு காமன் பல கணையாலும்
கொடி இடையாள் நின்று ... ... அழியாதே,

குரவு அணி நீடும் புயம் அணி நீபம்
குளிர்தொடை நீ தந்து ... ... அருள்வாயே.

சிலைமகள் நாயன், கலைமகள் நாயன்,
திருமகள் நாயன் ... ... தொழும் வேலா!

தினைவன மானும், கனவன மானும்,
செறிவுடன் மேவும் ... ... திருமார்பா!

தலமகள் மீது எண் புலவர் உலாவும்
தணிகையில் வாழ் செங் ... ... கதிர்வேலா!

தனியவர் கூரும் தனி கெட, நாளும்
தனி மயில் ஏறும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 94 கனைத்து அதிர்க்கும் (திருத்தணிகை)

தனத்த தத்தனத் தந்த தாத்தன ... ... தந்ததான
தனத்த தத்தனத் தந்த தாத்தன ... ... தந்ததான

கனைத்து அதிர்க்கும் இப் பொங்கு கார்க் கடல் ... ... ஒன்றினாலே,
கறுத்து அறச் சிவத்து, அங்கி வாய்த்து எழு ... ... திங்களாலே,

தனிக் கருப்பு வில் கொண்டு வீழ்த்த ... ... சரங்களாலே,
தகைத்து ஒருத்தி எய்த்து இங்கு யாக்கை ... ... சழங்கலாமோ?

தினைப் புனத்தினைப் பண்டு காத்த, ... மடந்தை கேள்வா!
திருத்தணிப் பதிக் குன்றின் மேல்திகழ் ... ... கந்தவேளே!

பனைக் கரக் கயத்து அண்டர் போற்றிய ... ... மங்கைபாகா!
படைத்து அளித்து, அழிக்கும் த்ரிமூர்த்திகள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 95 கொந்துவார் குரவடி (திருத்தணிகை)

தந்து தானன தனதன தனதன
தந்து தானன தனதன தனதன
தந்து தானன தனதன தனதன ... ... தனதான

கொந்து வார் குரவு அடியினும், அடியவர்
சிந்தை வாரிஜ நடுவினும், நெறிபல
கொண்ட வேத நல் முடியினும் மருவிய ... ... குருநாதா!

கொங்கில் ஏர் தரு பழநியில் அறுமுக!
செந்தில் காவல! தணிகையில் இணைஇலி
கொந்து கா என மொழி தர வரு சமய ... ... விரோத

தந்த்ர வாதிகள் பெற அரியது, பிறர்
சந்தியாதது, தனது என வரும் ஒரு
சம்ப்ரதாயமும் இது என உரை செய்து ... ... விரைநீபச்

சஞ்ச ரீகரி கரம் முரல் தமனிய
கிண்கி ணீ முக வித பதயுக மலர்
தந்த பேரருள் கனவிலும் நனவிலும் ... ... மறவேனே.

சிந்து ஆரமும் இதழியும், இள நவ
சந்த்ர ரேகையும் அரவமும் அணிதரு
செஞ்சடாதரர் திருமகவு எனவரு ... ... முருகோனே!

செண்பக அடவியினும் இதணினும் உயர்
சந்தன அடவியினும் உறை குறமகள்
செம்பொன் நூபுர கமலமும், வளைஅணி ... ... புதுவேயும்,

இந்து வாள் முக வனசமும், ம்ருகமத
குங்கும அசல யுகளமும், மதுரித
இந்தள அம்ருத வசனமும், முறுவலும், ... அபிராம

இந்த்ர கோபமும், மரகத வடிவமும்,
இந்த்ர சாபமும் இருகுழையொடு பொரும்
இந்த்ர நீலமும் மடல்இடை எழுதிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 96 சினத்தவர் முடிக்கும் (திருத்தணிகை)

தனத்தன தனத்தம் தனத்தன தனத்தம்
தனத்தன தனத்தம் ... ... தனதான

சினத்தவர் முடிக்கும், பகைத்தவர் குடிக்கும்,
செகுத்தவர் உயிர்க்கும், ... சினமாகச்

சிரிப்பவர் தமக்கும், பழிப்பவர் தமக்கும்,
திருப்புகழ் நெருப்பு என்று ... ... அறிவோம் **யாம்.**

நினைத்ததும் அளிக்கும், மனத்தையும் உருக்கும்,
நிசிக்கரு அறுக்கும் ... ... பிறவாமல்,

நெருப்பையும் எரிக்கும், பொருப்பையும் இடிக்கும்,
நிறைப்புகழ் உரைக்கும் ... ... செயல்தாராய்.

தனத்தன தனத்தந் திமித்திமி திமித்திந்
தகுத்தகு தகுத்தந் ... ... தனபேரி

தடுட்டுடு டுடுட்டுண்டு எனத் துடி முழக்கும்
தளத்துடன் நடக்கும் ... ... கொடு சூரர்

சினத்தையும் உடல் சங்கரித்த மலை முற்றும்
சிரித்து எரி கொளுத்தும் ... ... கதிர்வேலா!

தினைக்கிரி குறப்பெண் தனத்தினில் சுகித்து, எண்
திருத்தணி இருக்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 97 துப்பார் அப்பு (திருத்தணிகை)

தத்தா தத்தா தத்தா தத்தா
தத்தா தனனத் ... ... தனதான

துப்பார், அப்பு, ஆடல் தீ, மொய்க்கால்
சொல் பா வெளி, முக் ... ... குணம், மோகம்

துற்று ஆய, பீறல் தோல் இட்டே
சுற்ற, மதனப் ... ... பிணிதோயும்,

இப் பாவக் காயத்து ஆசைப்பாடு
எற்றே உலகில் ... ... பிறவாதே,

எத்தார் வித்தாரத்தே கிட்டா
எட்டா அருளைத் ... ... தரவேணும்.

தப்பாமல் பாடிச் சேவிப்பார்
தத்தாம் வினையைக் ... ... களைவோனே!

தற்கு ஆழிச்சூர் செற்றாய்! மெய்ப் போ–
தத்தாய் தணிகைத் ... ... தனிவேலா!

அப் பாகைப் பாலைப்போல் சொல் கா–
வல் பாவை தனத்து ... ... அணைவோனே!

அத்தா! நித்தா! முத்தா! சித்தா!
அப்பா! குமரப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 98 நிலையாத சமுத்திர (திருத்தணிகை)

தனதான தனத்தன தான
தனதான தனத்தன தான
தனதான தனத்தன தான ... ... தனதான

நிலையாத சமுத்திரம் ஆன
சமுசார துறைக்கணில் மூழ்கி,
நிசம் ஆனது எனப்பல பேசி, ... அதனூடே

நெடுநாளும் உழைப்பு உளது ஆகி,
பெரியோர்கள் இடைக் கரவு ஆகி
நினைவால் நின் அடித் தொழில் பேணி ... ... துதியாமல்,

தலையான உடல்பிணி ஊறி,
பவநோயின் அலைப்பல ஏகி,
சலமான பயித்தியம் ஆகி, ... தடுமாறி,

தவியாமல் பிறப்பையும் நாடி,
அதுவேரை அறுத்து உனை ஒதி,
தலம் மீதில் பிழைத்திடவே நின் ... ... அருள்தாராய்.

கலியாண சுபுத்திரன் ஆக,
குறமாது தனக்கு விநோத
கவின் ஆரு புயத்தில் உலாவி ... ... விளையாடி,

களிகூரும் உனைத் துணை தேடும்
அடியேனை சுகப்படவே வை,
கடன் ஆகும், இதுக் கனம் ஆகும், ... முருகோனே!

பலகாலும் உனைத் தொழுவோர்கள்
மறவாமல் திருப்புகழ் கூறி,
படிமீது துதித்து உடன் வாழ ... ... அருள்வேளே!

பதியான திருத்தணி மேவு
சிவலோகம் எனப்பரிவு ஏறு
பவரோக வயித்திய நாத! ... ... பெருமாளே.

திருப்புகழ் 99 நினைத்தது எத்தனை (திருத்தணிகை)

தனத்த தத்தனத் ... ... தனதான
தனத்த தத்தனத் ... ... தனதான

நினைத்தது எத்தனையில் ... ... தவறாமல்,
நிலைத்த புத்திதனைப் ... ... பிரியாமல்,

கனத்த தத்துவம் உற்று ... ... அழியாமல்,
கதித்த நித்திய சித்து ... ... அருள்வாயே.

மனித்தர் பத்தர் தமக்கு ... ... எளியோனே!
மதித்த முத்தமிழில் ... ... பெரியோனே!

செனித்த புத்திரரில் ... ... சிறியோனே!
திருத்தணிப் பதியில் ... ... பெருமாளே.

திருப்புகழ் 100 பொற் பதத்தினை (திருத்தணிகை)

தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த தத்த
தத்த தத்த தத்த தத்த ... ... தனதான

பொன் பதத்தினைத் துதித்து, நல் பதத்தில் உற்ற பத்தர்,
பொற்பு உரைத்து, நெக்கு உருக்க ... ... அறியாதே,

புத்தகப் பிதற்றை விட்டு, வித்தகத்து உனைத் துதிக்க,
புத்தியில் கலக்கம் அற்று ... ... நினையாதே,

முற்படத் தலத்து உதித்து, பின் படைத்த அகிர்த்யம் முற்றி,
முன் கடைத் தவித்து நித்தம் ... ... உழல்வேனை,

முட்ட இக் கடைப் பிறப்பின் உள் கிடப்பதைத் தவிர்த்து,
முத்தி சற்று, எனக்கு அளிப்பது ... ... ஒரு நாளே?

வெற்பு அளித்த தற்பரைக்கு, இடப் புறத்தை உற்று அளித்த
வித்தகத்தர் பெற்ற கொற்ற ... ... மயில்வீரா!

வித்தை தத்வ முத்தமிழ்ச் சொல் அத்த சத்தம் வித்தரிக்கும்
மெய்த் திருத்தணிப் பொருப்பில் ... ... உறைவோனே!

கற்பகப் புனக் குறத்தி கச்சு அடர்த்த, சித்ரம் உற்ற
கற்புரத் திருத் தனத்தில் ... ... அணைவோனே!

கைத்து அரக்கர் கொத்து உக சினத்து, வஜ்ரனுக்கு அமைத்த
கைத் தொழுத் தறித்து விட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 101 வெற்றி செயவுற்ற (திருத்தணிகை)

தத்ததன தத்ததன தத்ததன தத்ததன
தத்ததன தத்த ... ... தனதான

வெற்றி செய உற்ற கழை வில் குகை வளைத்து மதன்
விட்ட கணை பட்ட ... ... விசையாலே,

வெட்ட வெளியில் தெருவில் வட்ட பணையில் கனல்
விரித்து ஒளி பரப்பு ... ... மதியாலே,

பற்றி வசை கற்ற பல தத்தையர் தமக்கும் இசை
பட்ட திகிரிக்கும் ... ... அழியாதே,

பத்தியை எனக்கு அருளி, முத்தியை அளித்து, வளர்
பச்சைமயில் உற்று ... ... வரவேணும்.

நெற்றி விழி பட்டு எரிய நட்டம் இடும் உத்தமர்
நினைக்கும் மனம் ஒத்த ... ... கழல்வீரா!

நெய் கமலம் ஒக்கு முலை, மெய்க் குறவி இச்சை உற,
நித்தம் இறுகத் ... ... தழுவும் மார்பா!

எற்றிய திருச்சலதி சுற்றிய திருத்தணியில்
எப்பொழுதும் நிற்கும் ... ... முருகோனே!

எட்டு அசலம் எட்ட, நிலம் முட்ட, முடி நெட்டு அசுரர்
இட்ட சிறை விட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 102 அதிரும் கழல் (குன்றுதோறாடல்)

தனனந் தனன தந்த ... ... தனதான
தனனந் தனன தந்த ... ... தனதான

அதிரும் கழல் பணிந்து, ... உன்அடியேன், உன்
அபயம் புகுவது என்றும், ... நிலைகாண

இதயம் தனில் இருந்து ... ... க்ருபை ஆகி,
இடர் சங்கைகள் கலங்க ... ... அருள்வாயே.

எதிர்அங்கு ஒருவர் இன்றி ... ... நடம்ஆடும்,
இறைவன் தனது பங்கில் ... ... உமைபாலா

பதி எங்கிலும் இருந்து ... ... விளையாடி,
பல குன்றிலும் அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 103 எழுதிகழ் புவன (குன்றுதோறாடல்)

தனதன தனன தனதன தனன
தனதன தனன ... ... தனதான

எழு திகழ் புவனம் நொடி அளவு அதனில்
இயல்பெற மயிலில் ... ... வருவோனே!

இமையவர் பரவி அடிதொழ, அவுணர்
மடிவுற விடுவது ... ... ஒருவேலா!

வழுதியர் தமிழின் ஒருபொருள் அதனை
வழிபட மொழியும் ... ... முருகேசா!

மலர்அடி பணியும் மடமகள் பசலை
மயல்கொடு தளர்வது ... ... அழகோதான்?

முழுகிய புனலில் இனமணி தரளம்,
முறுகிடு பவளம் ... ... மிகவாரி,

முறையொடு குறவர் மடமகள் சொரியும்
முதுமலை அழக! ... ... குருநாதா!

பழகிய வினைகள் பொடிபட, அருளில்
படிபவர் இதயம் ... ... உறுகோவே!

பருவரை துணிய ஒருகணை தெரிவ!
பலமலை உடைய ... ... பெருமாளே.

திருப்புகழ் 104 வஞ்சக லோப மூடர் (குன்றுதோறாடல்)

தந்தன தான தான தந்தன தான தான
தந்தன தான தான ... ... தனதான

வஞ்சக லோப மூடர் தம்பொருள், ஊர்கள் தேடி,
மஞ்சரி, கோவை, தூது, ... பலபாவின்,

வண்புகழ் பாரி காரி என்று இசை வாது கூறி,
வந்தியர் போல வீணில் ... ... அழியாதே,

செஞ்சரண், நாத கீத கிண்கிணி, நீப மாலை,
திண்திறல் வேல், மயூரம், ... முகம் ஆறும்,

செந்தமிழ் நாளும் ஓதி உய்ந்திட, ஞானம் ஊறு
செங்கனி வாயில் ஓர்சொல் ... ... அருள்வாயே.

பஞ்சவன் நீடு கூனும் ஒன்றிடு தாபமோடு
பஞ்சு அற வாது கூறு ... ... சமண்மூகர்

பண்புஅறு பீலியோடு, வெங்கழு ஏற, ஓதும்
பண்டித! ஞான நீறு ... ... தருவோனே!

குஞ்சரம் யாளி மேவு பைம்புன மீது உலாவு
குன்றவர் சாதி கூடி ... ... வெறி ஆடிக்

கும்பிட, நாடி வாழ்வு தந்து, அவரோடு வீறு
குன்றுதோறு ஆடல் மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 105 ஈனமிகுத்துள பிறவி (ஆறு திருப்பதி)

தானதனத் தனதனன ... ... தனதான
தானதனத் தனதனன ... ... தனதான

ஈனம் மிகுத்து உள பிறவி ... ... அணுகாதே,
யானும் உனக்கு அடிமை என ... ... வகையாக,

ஞான அருள் தனைஅருளி ... ... வினைதீர,
நாணம் அகற்றிய கருணை ... ... புரிவாயே

தான தவத்தினில் மிகுதி ... ... பெறுவோனே!
சாரதி உத்தமி துணைவ! ... ... முருகோனே!

ஆன திருப்பதிகம் அருள் ... ... இளையோனே!
ஆறு திருப்பதியில் வளர் ... ... பெருமாளே!

திருப்புகழ் 106 அகரமுமாகி (பழமுதிர்சோலை)

தனதன தான தனதன தான
தனதன தான ... ... தனதான

அகரமும் ஆகி, அதிபனும் ஆகி,
அதிகமும் ஆகி, ... அகம் ஆகி,

அயன் என ஆகி, அரி என ஆகி,
அரன் என ஆகி, ... அவர்மேலாய்.

இகரமும் ஆகி, எவைகளும் ஆகி,
இனிமையும் ஆகி ... ... வருவோனே!

இருநிலம் மீதில் எளியனும் வாழ
எனது முன் ஒடி ... ... வரவேணும்

மகபதி ஆகி மருவும் வலாரி
மகிழ்களி கூரும் ... ... வடிவோனே!

வனம் உறை வேடன் அருளிய பூஜை
மகிழ் கதிர்காமம் ... ... உடையோனே!

செகமண சேகு தகுதிமி தோதி
திமி என ஆடும் ... ... மயிலோனே!

திரு மலிவான பழமுதிர் சோலை
மலைமிசை மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 107 காரணமதாக (பழமுதிர்ச்சோலை)

தானதன தான தந்த ... ... தனதான

காரணம் அதாக வந்து ... ... புவிமீதே

காலன் அணுகாது இசைந்து ... ... கதிகாண,

நாரணனும் வேதன் முன்பு ... ... தெரியாத

ஞான நடமே புரிந்து ... ... வருவாயே.

ஆர் அமுதம் ஆன தந்தி ... ... மணவாளா!

ஆறுமுகம் ஆறு இரண்டு ... ... விழியோனே!

சூரர்கிளை மாள வென்ற ... ... கதிர்வேலா!

சோலைமலை மேவி நின்ற ... ... பெருமாளே.

திருப்புகழ் 108 வாதினை அடர்ந்த (பழமுதிர்ச்சோலை)

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த ... ... தனதான

வாதினை அடர்ந்த வேல் விழியர் தங்கள்
மாயம் அது ஒழிந்து ... ... தெளியேனே,

மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து,
மாபதம் அணிந்து ... ... பணியேனே,

ஆதியொடும் அந்தம் ஆகிய நலங்கள்
ஆறுமுகம் என்று ... ... தெரியேனே

ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்டது
ஆடும் மயில் என்பது ... ... அறியேனே.

நாதமொடு விந்து ஆன உடல் கொண்டு
நானிலம் அலைந்து ... ... திரிவேனே.

ந அகம் அணிகின்ற நாத! நிலை கண்டு
நாடி அதில் நின்று ... ... தொழுகேனே.

சோதி உணர்கின்ற வாழ்வு சிவம் என்ற
சோகம்(சஅகம்) அது தந்து ... ... எனை ஆள்வாய்.

சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற ... ... பெருமாளே.



பஞ்சபூதத் தலங்கள் திருப்புகழ்

விநாயகர் துதி

தனதனன தான தனதனன தான
தனதனன தான ... ... தனதான

விடம் அடைசு வேலை, அமரர் படை, சூலம்,
விசையன் விடு பாணம் ... ... எனவேதான்,

விழியும் அதிபார விதமும் உடை மாதர்
வினையின் விளைவு ஏதும் ... ... அறியாதே,

கடிஉலவு பாயல் பகல் இரவு எனாது
கலவிதனில் மூழ்கி, ... வறிதுஆய,

கயவன், அறிவு ஈனன், இவனும் உயர் நீடு
கழல்இணைகள் சேர ... ... அருள்வாயே,

இடையர் சிறு பாலை திருடி கொடு போக
இறைவன் மகள் வாய்மை ... ... அறியாதே,

இதயம் மிக வாடி உடைய பி(ள்)ளை நாத,
கணபதி என் நாமம் ... ... முறைகூற,

அடையலவர் ஆவி வெருவ, அடி கூர,
அசலும் அறியாமல் ... ... அவர் ஓட,

அகல்வது எனடா சொல் எனவும் முடி சாட
அறிவு அருளும் ஆனை ... ... முகவோனே.

....✳....

1–23 காஞ்சீபுரம் (மண்)

திருப்புகழ் 109 அதி மதம் கக்க

தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம் ... ... தனதான

அதிமதம் கக்கப் பக்கம் உகக் குஞ்–
சரி தனம் தைக்கச் சிக்கென நெக்கு, அங்கு
அணைதரும் செச்சைப் பொற்புயன், அத்தன், ...
குறவாணர்

அடவி அம் தத்தைக்கு எய்த்து உருகிச் சென்று,
அடிபணிந்து, இட்டப் பட்டு, மயல் கொண்டு,
அயர்பவன், சத்திக் கைத்தலன், நித்தன், ... குமரேசன்,

துதிசெயும் சுத்தப் பத்தியர் துக்கம்
களைபவன், பச்சைப் பக்ஷி நடத்தும்
துணைவன் என்று அர்ச்சித்து, இச்சை தணித்து, உன்
... ... புகழ்பாடிச்

சுருதியின் கொத்துப் பத்தியும், முற்றுந்
துரியமும் தப்பித் தத்வம் அனைத்தும்
தொலையும் அந்தத்துக்கு அப்புறம் நிற்கும் ... ... படிபாராய்.

கதி பொருந்தக் கற்பித்து நடத்தும்
கனல்தலம் புக்குச் சக்ரம் எடுக்கும்
கடவுளும், பத்மத் தச்சனும் உட்கும் ... ... படிமோதி,

கதிரவன் பற்குற்றி, குயிலைத் திண்
சிறகு அரிந்து, எட்டுத் திக்கர் வகுக்கும்
கடகமும் தட்டுப் பட்டு ஒழியக்கொன்ற ... ... அபிராமி,

பதிவ்ரதம் பற்றப் பெற்ற மகப்பெண்,
பரிவு ஒழிந்து அக்கிக்கு உட்படு தக்கன்
பரிபவம் பட்டுக் கெட்டு ஒழிய, தன் ... ... செவிபோய், அப்–

பனவி பங்கப் பட்டு, அப்படி வெட்கும்
படி முனிந்து, அற்றைக் கொற்றம் விளைக்கும்
பரமர் வந்திக்கக் கச்சியில் நிற்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 110 புன மடந்தைக்கு

தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம் ... ... தனதான

புன மடந்தைக்குத் தக்க புயத்தன்,
குமரன் என்று எத்தி, பத்தர் துதிக்கும்
பொருளை, நெஞ்சத்துக் கற்பனை முற்றும், ... பிறிது ஏதும்

புகலும் எண்பத்தெட்டு எட்டு இயல் தத்வம்,
சகலமும் பற்றி, பற்று அற நிற்கும்
பொதுவை, என்று ஒக்கத் தக்கது, ஓர் அத்தம் ... ...
தனை, நாளும்

சினமுடன், தர்க்கித்து, சிலுகிக் கொண்டு,
அறுவரும் கைக் குத்து இட்டு, ஒருவர்க்கும்
தெரிவு அரும் சத்யத்தைத் தெரிசித்து, உன் ... ... செயல் பாடி,

திசைதொறும் கற்பிக்கைக்கு, இனி அற்பம்
திருவுளம் பற்றி, செச்சை மணக்கும்
சிறு சதங்கைப் பொன் பத்மம் எனக்கு என்று ... ... அருள்வாயே.

கனபெரும் தொப்பைக்கு எள், பொரி, அப்பம்,
கனி, கிழங்கு, இக்கு, சர்க்கரை, முக்கண்,
கடலை, கண்டு, அப்பி, பிட்டொடு மொக்கும் ... ... திருவாயன்,

கவள துங்கக் கைக் கற்பகம், முக்கண்
திகழும் நம் கொற்றத்து ஒற்றை மருப்பன்,
கரிமுகன், **சித்ரப் பொன்புகர் வெற்பன் ... ... தனை ஈனும்**

பனவி, ஒன்று எட்டுச் சக்ர தலப் பெண்,
கவுரி, செம் பொன் பட்டு உத்தரியப் பெண்,
பழயஅண் டத்தைப் பெற்ற மடப்பெண் ... ... பணிவாரைப்

பவ தரங்கத்தைத் தப்ப நிறுத்தும்
பவதி, கம்பர்க்குப் புக்கவள் பக்கம்
பயில், வரம் பெற்றுக் கச்சியில் நிற்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 111 கறை இலங்கும்

தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம் ... ... தனதான

கறை இலங்கு உக்ரச் சத்தி தரிக்கும்
சரவணன், சித்தத்துக்குள் ஒளிக்கும்
கரவடன், கொற்றக் குக்குட அத்தன், ... தனிவீரக்

கழல் இடும் பத்மக் கட்செவி வெற்பன்,
பழநிமன், கச்சிக் கொற்றவன், மற்றும்
கடக வஞ்சிக்குக் கர்த்தன் என, செந் ... ... தமிழ்பாடி,

குறை இல் அன்பு உற்று, குற்றம் அறுக்கும்
பொறைகள் நந்த, அற்பப் புத்தியை விட்டு, என்
குணம் அடங்கக்கெட்டு, குணம் மற்றுஒன்று ... ... இலது ஆன

குணம் அடைந்து, எப் பற்றுக்களும் அற்றும்,
குறியொடும் சுத்தப் பத்தர் இருக்கும்
குருபதம் சித்திக்கைக்கு அருள் சற்றும் ... ... கிடையாதோ?

பிறை, கரந்தைக் கொத்து, பணி, மத்தம்,
தலை எலும்பு, அப்பு, கொக்கிறகு, அக்கம்,
பிரமன் அன்று எட்டற்கு அற்ற திருக் கொன்– ... ...
றையும், வேணிப்

பிறவும் நின்று ஒக்கத் தொக்கு மணக்கும்
சரணி,அம் பத்மக் கைக்கொடி, முக்கண்
பெறு கரும்பு, அத் தக்கத்து அருள், நல் பங்– ... ...
கய,**வாவி**

திறை கொளும் சித்ரக் குத்து முலைக் கொம்பு,
அறியும் அம் தத்தை கைக்கு அகம் மொய்க்கும்
த்ரிபுரை, செம் பட்டுக் கட்டு நுசுப்பின் ... ... திரு ஆன

தெரிவை, அம் துர்க்கி, சத்தி, எவர்க்குந்
தெரிவரும் சுத்தப் பச்சை நிறப்பெண்
சிறுவ! தொண்டர்க்குச் சித்தி அளிக்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 112 செறிதரும் செப்பத்து

தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம் ... ... தனதான

செறிதரும் செப்பத்து உற்பல வெற்பும்,
பிறிதும் அங்கு அத்தைக்கு உற்ற இருப்பும்,
சிகரி துண்டிக்கக் கற்ற தனிச்செஞ் ... ... சுடர்வேலும்,

திரள்புயம் கொத்துப் பட்ட அனைத்தும்
தெளிய, நெஞ்சத் துப்பு உற்று, மயக்கம்
திகழ் ப்ரபஞ்சத்தை, புற்புதம் ஒக்கும் ... ... படி,நாடும்

அறிவு அறிந்து, அத்தற்கு அற்றது செப்பும்
கடவுளன், பத்தர்க்கு அச்சம் அறுத்து,அன்பு
அருள்பவன், பொற்புக் கச்சியுள் நிற்கும் ... ...
பெருமான் என்று.

அவிழும் அன்பு உற்றுக் கற்று, மனத்தின்
செயல் ஒழிந்து, எட்டப் பட்ட அதனைச் சென்று
அடைதரும் பக்வத்தை, தமியெற்கு, என்று ... ...
அருள்வாயே.

குறியவன், செப்பப்பட்ட எவர்க்கும்
பெரியவன், கற்பிக் கப்படும் சுக்ரன்,
குலைகுலைந்து உட்க, சத்யம் மிழற்றும் ... ... சிறுபாலன்

குதலையின் சொற்கு, தர்க்கம் உரைக்கும்
கனகன் அங்கத்தில் குத்தி, நிணச்செங்
குடர் பிடுங்கி, திக்கு உற்ற முகச் சிங்க, ... முராரி,

பொறிவிடும் துத்திக் கண்செவியின் கண்
துயில்கொளும், சக்ரக் கைக்கிரி, சுத்தம்
புயல் எனும் பொற்புப் பெற்ற நிறத்தன், ... ஜகதாதை,

புனித சங்கத்துக் கைத்தல நிர்த்தன்,
பழைய சந்தத்தைப் பெற்ற மடப்பெண்
புகலு கொண்டற்குச் சித்தி அளிக்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 113 கனி தரும் கொக்கு

தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம் ... ... தனதான

கனிதரும் கொக்குக் கண்செவி வெற்பும்,
பழநியும், தெற்குச் சற்குரு வெற்பும்,
கதிரையும், சொற்கு உட்பட்ட திருச்செந்– ... ...
திலும், வேலும்

கனவிலும் செப்பத் தப்பும் எனை, சங்–
கட உடம்புக்குத் தக்க அனைத்துங்
களவு கொண்டு இட்டு, கற்பனையின் கண் ... ...
சுழல்வேனை,

புனிதன் அம்பைக்குக் கைத்தல ரத்நம்,
பழைய கங்கைக்கு உற்றப் புதுமுத்தம்,
புவியில் அன்றைக்கு அற்று எய்ப்பவர் வைப்பு,என்று
... ... உருகா, எப்–

பொழுதும் வந்திக்கைக்கு அற்ற எனை, பின்,
பிழை உடன்பட்டுப் பத்தருள் வைக்கும்
பொறையை, என் செப்பிச் செப்புவது? ஒப்பு ஒன்று
... ... உளதோதான்

அனனியம் பெற்று, அற்று அற்று ஒரு பற்றும்,
தெளிதரும் சித்தர்க்குத் தெளிசிற் கொந்து
அமலை, தென் கச்சிப் பிச்சி மலர்க் கொந்– ... ...
தள பாரை.

அறவி, நுண் பச்சைப் பொற்கொடி, கற்கண்டு
அமுதினும் தித்திக்கப்படு சொல்கொம்பு,
அகில அண்டத்து உற்பத்தி செய் முத்தின் ... ...
பொலம் மேரு,

தனிவடம் பொற்புப் பெற்ற முலைக் குன்று
இணை சுமந்து எய்க்கப் பட்ட நுசுப்பின்
தருணி, சங்கு உற்றுத் தத்து திரைக் கம்– ... ...
பையின் ஊடே

தவ முயன்று, அப் பொற்ற படி கைக்கொண்டு,
அறம் இரண்டு எட்டு எட்டு எட்டும் வளர்க்கும்
தலைவி, பங்கர்க்குச் சத்யம் உரைக்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 114 புரைபடுஞ் செற்ற

தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம்
தனதனந் தத்தத் தத்தன தத்தம் ... ... தனதான

புரைப்படும் செற்றக் குற்ற மனத்தன்,
தவம்இலன், சுத்தச் சத்ய அசத்யன்,
புகல்இலன், சுற்றச் செத்தையுள் நிற்கும் ... ... துரிசாளன்,

பொறைஇலன், கொத்துத் தத்வ விகற்பம்
சகலமும் பற்றி, பற்று அற நிற்கும்
பொருளுடன் பற்றுச் சற்றும்இல் வெற்றன், ...
கொடியேன், **நின்**

கரை அறும் சித்ரச் சொல் புகழ் கற்கும்
கலை இலன், கட்டைப் புத்தியன், மட்டன்,
கதிஇலன், செச்சைப் பொன்புய வெற்பும் ... ... கதிர்வேலும்,

கதிரையும், சக்ரப் பொற்றையும், மற்றும்
பதிகளும், பொற்புக் கச்சியும், முற்றும்
கனவிலும் சித்தத்தில் கருதிக் கொண்டு ... ...
அடைவேனோ?

குரைதரும் சுற்றுச் சத்த சமுத்ரம்
கதறி, வெந்து உட்க, கண்புர துட்டன்
குலம் அடங்கக் கெட்டு ஒட்டு ஒழியச்சென்று, ...
ஒருநேமிக்

குவடு ஒதுங்க, சொர்க்கத்தர் இடுக்கம்
கெட, நடுங்கத் திக்கில் கிரி வர்க்கம்,
குலிச துங்கக் கைக் கொற்றவன் நத்தம் ... ... குடி ஏற,

தரை விசும்பைச் சிட்டித்த இருக்கன்,
சதுர்முகன் சிட்சைப் பட்டு ஒழிய, சந்–
ததமும் வந்திக்கப் பெற்றவர் தத்தம் ... ... பகை ஓட,

தகைய தண்டைப் பொன் சித்ர விசித்ரம்
தரு சதங்கைக் கொத்து ஒத்து முழக்கும்
சரண கஞ்சத்தில் பொன்கழல் கட்டும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 115 தலை வலையத்து

தனதன தத்தத் தனந்த தந்தன
தனதன தத்தத் தனந்த தந்தன
தனதன தத்தத் தனந்த தந்தன ... ... தனதான

தலை வலையத்துத் தரம் பெறும், பல
புலவர் மதிக்க, சிகண்டி, குன்றுஎறி
தரும் அயில், செச்சைப் புயம், கயம் குற ... ... வஞ்சியோடு,

தமனிய முத்துச் சதங்கை, கிண்கிணி
தழுவிய செக்கச் சிவந்த பங்கய
சரணமும் வைத்து, **பெரும் ப்ரபந்தம் ... ... விளம்பு காளப்**

புலவன் என, தத்துவம் தரம் தெரி
தலைவன் என, தக்க அறம் செயும் குண
புருஷன் என, பொன் பதம் தரும் சன ... ... னம் பெறாதோ?

பொறையன் என, பொய்ப் ப்ரபஞ்சம் அஞ்சிய
துறவன் என, திக்கு இயம்புகின்றது
புதுமை அல, சிற்பரம் பொருந்துகை ... ... தந்திடாதோ?

குல சயிலத்துப் பிறந்த பெண்கொடி,
உலகு அடையப் பெற்ற உந்தி, அந்தணி,
குறைவு அற முப்பத்திரண்டு அறம்புரி ... ... கின்ற பேதை,

குணதரி, சக்ரப் ப்ரசண்ட சங்கரி,
கணபண ரத்நப் புயங்க கங்கணி,
குவடு குனித்துப் புரம் சுடும், சின ... ... வஞ்சி, நீலி,

கலப விசித்ரச் சிகண்டி, சுந்தரி,
கடிய விடத்தைப் பொதிந்த கந்தரி,
கருணைவிழி, கற்பகம், திகம்பரி ... ... எங்கள் ஆயி,

கருதிய பத்தர்க்கு இரங்கும் அம்பிகை,
சுருதி துதிக்கப்படும் த்ரி அம்பகி,
கவுரி, திருக்கொட்டு அமர்ந்த இந்திரர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 116 எனக்குச்சற்று

தனத்தத்தத் தனத்தத்தத்
தனத்தத்தத் தனத்தத்தத்
தனத்தத்தத் தனத்தத்தத் ... ... தனதான

எனக்குச் சற்று, உனக்குச்சற்று
எனக் கத்து அத்தவர்க்கு, இச்சைப்
பொருள் பொன் தட்டு இடு, இக்கைக்குக் ... ...
குடில்,மாயம்

எனக் கட்டைக்கு இடைப்பட்டு இட்டு,
அனல் சுட்டிட்டு அடக்கைக்குப்
பிறக்கைக்கு, தலத்திற்புக்கு ... ... இடியாமுன்,

தினைக்குள் சித்திரக் கொச்சைக்
குறத் தத்தைத் தனத்தை, பொன்
பெறச் செச்சைப் புயத்து ஒப்பித்து ... ... அணிவோனே!

செருக்கிச் சற்று உறுக்கிச் சொல்
பிரட்ட, துட்டரை தப்பி,
திரள் தப்பி, கழல் செப்பத் ... ... திறல் தாராய்.

பனைக் கைக் கொக்கனைத் தட்டுப்
படக் குத்தி பட, சற்றப்
பணத்து உட்கக் கடல்அது உட்கப் ... ... பொரும்வேலா!

பரப்பு அற்று, சுருக்கு அற்று,
பதைப்பு அற்று, திகைப்பு அற்று,
பலிப்ப பத்தருக்கு ஒப்பித்து ... ... அருள்வாழ்வே!

கனிக்கு திக்கு அனைத்துச் சுற்–
றிட, பச்சைக் கனப்பக்ஷிக்கு
இடைப் புக்குக் களிப்புக்குத் ... ... திரிவோனே!

கலிக்கு ஒப்பில் சலிப்பு அற்று,
கதிக்கு ஒத்திட்டு, எழிற்சத்திக்
கடல் கச்சிப் பதிச் சொக்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 117 கடத்தைப் பற்று

தனத்தத்தத் தனத்தத்தத் தனத்தத்தத் தனத்தத்தத்
தனத்தத்தத் தனத்தத்தத் ... ... தனதான

கடத்தைப் பற்று எனப்பற்றி, கருத்து உற்றுக் களித்திட்டு,
கயற்கண் பொற்பு இணைச் சித்ரத் ... ... தனமாதர்

கலைக்குள் பட்டு, அறக்கத்திச் சலித்துக் கட்டளைச் சொல், பொய்த்
திரைக்குள் பட்டு, அறச் செத்திட்டு ... ... உயிர்போனால்,

எடுத்துக்கொட்டி இடக் கட்டைப் படத் தெட்டத் தணல் தட்டக்
கொளுத்தி, சுற்று அவர், பற்று அற்று ... ... அவர்போம் முன்,

இணக்கிப் பத்திமைச் செச்சைப் பதத்தைப் பற்றுகைக்கு, சொல்
தமிழ்க் கொற்றப் புகழ் செப்பித் ... ... திரிவேனோ?

அடைத்திட்டு, புடைத்து, பொன் பதச் சொர்க்கம் தனை சுற்றிட்டு
அலைப்புப் பற்று எனச் சொற்றிட்டு ... ... அறுசூரை

அடித்து, செற்று, இடித்து, பொட்டு எழ, பொர்ப்புப் படக் குத்திட்டு,
அலைத்துச் சுற்று அலைத் தெற்றுக் ... ... கடல்மாய,

புடைத்திட்டு, படிக்குள் செற்று, அடப்புக்குக் கதத் துக்கக்
கயில் கொக்கைப் படக் குத்திப் ... ... பொருவோனே!

புனத்தில் பொன் குறத்திக்குப் புணர்க்கு ஒத்தப் பசப்பு எத்திப்
புணர், கச்சிப் பதிச்சொக்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 118 அற்றைக்கு இரைதேடி

தத்தத் தனதான தத்தத் ... ... தனதான
தத்தத் தனதான தத்தத் ... ... தனதானா

அற்றைக்கு இரைதேடி, அத்தத் ... ... திலும் ஆசை
பற்றித் தவியாத, பற்றைப் ... ... பெறுவேனோ?

வெற்றிக் கதிர்வேலா! வெற்பைத் ... ... தொளைசீலா!
கற்று உற்று உணர்போதா! கச்சிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 119 முட்டுப் பட்டு

தத்தத் தத்தத் ... ... தனதான
தத்தத் தத்தத் ... ... தனதான

முட்டுப் பட்டு, ... கதிதோறும்
முற்றச் சுற்றி, ... பலநாளும்

தட்டுப் பட்டுச் ... ... சுழல்வேனை,
சற்றுப் பற்றக் ... ... கருதாதோ?

வட்டப் புட்பத் ... ... தலம் மீதே
வைக்கத் தக்கத் ... ... திரு பாதா

கட்டத்து அற்றத்து ... ... அருள்வோனே
கச்சிச் சொக்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 120 பொக்குப்பை

தத்தத்தத் தத்தத் தத்தத்தத் தத்தத்
தத்தத்தத் தத்தத் ... ... தனதான

பொக்குப் பை, கத்தம் தொக்குப் பை, குத்து,
பொய்த்து, எத்து, தத்துக் ... ... குடில்பேணி,

பொச்சைப் பிச்சு அற்பக் கொச்சைச் சொல் கற்று,
பொன் சித்ரக் கச்சுக் ... ... கிரியார் தோய்

துக்கத் துக்கத்தில் சிக்குப் பட்டு இட்டு,
துக்கித் துக்க எய்த்துச் ... ... சுழலாதே,

சுத்தச் சித்தத்துப் பத்திப் பத்தர்க்கு ஒத்து
சற்று அர்ச்சிக்கப் ... ... பெறுவேனோ?

திக்கு திக்கு அற்று, பை தத்து அத்திக்குச்
செல், பத்ரக் கொக்கைப் ... ... பொரும்வேலா!

செப்பச் சொர்க்கத்துச் செம்பொன் தத்தைக்குச்
செச்சைக் கொத்து ஒப்பித்து ... ... அணிவோனே!

கக்கு அக்கைத் தக்க அக்கக்கட்கு அக்கு அக்கிக்
கண் கத்த அத்தர்க்குப் ... ... பெரியோனே!

கற்றைப் பொற்று எத்தப் பெற்ற, பொன் சிற்பக்
கச்சிக்கு உள் சொக்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 121 அயில் அப்பு

தனனத்தத் தனனத்தத் தனனத்தத் தனனத்தத்
தனனத்தத் தனனத்தத் ... ... தனதான

அயில்அப்புக் கயல்அப்புத் தலை மெச்சு உற்பல நச்சுக்
கண், உரத்து ஐ கன வெற்பு ... ... தனமேகம்

அளகக் கொத்து எனஒப்பிப் புளுகி, சொல் பலகற்பித்து
இளகிக் கற்பு உளம்நெக்குத் ... ... தடுமாறி,

துயில்விட்டு, செயல்விட்டு, துயர்வுற்று, உக்கு அயர்வுற்று,
தொடியர்க்கு இப்படி எய்த்துச் ... ... சுழலாதே.

சுருதிப்பொற் பொருள் செக்கர்க்கு குரவுஇட்டு, தமர்பற்றித்
தொழு செச்சைக் கழல்பற்றிப் ... ... பணிவேனோ?

புயல்அத்தைக் குயில் தத்தைக் கிளைபுக்குத் தொளைபச்சைப்
புனமுத்தைப் புணர் சித்ரப் ... ... புயவீரா!

புரவிக்கொட்பு இரத அற்றத்து இருள் திக்கிப் படிமட்கப்
புகல் பொன் குக்குட வெற்றிக் கொடியோனே!

கயில் அச்சுத் தர தத்துச் சயிலத்து உத்தர நிற்கக்
கரணிச் சித்தர் உள் கச்சிப் ... ... பதியோனே!

கடலில் கொக்கு அடல்கெட்டு, கரம்உட்க, தரம்உட்கப்
பொரு, சத்திக் கர, சொக்கப் ... ... பெருமாளே.

திருப்பகழ் 122 கருமமான பிறப்பற

தனன தானன தத்தன தனதன
தானா தத்தத் ... ... தனதான

கருமம் ஆன பிறப்பு அற, ஒரு கதி
காணாது, எய்த்துத் ... ... தடுமாறும்,

கலக காரண துற்குண சமயிகள்,
நானா வர்க்கக் ... ... கலைநூலின்

வரும் அநேக விகற்ப விபரித
மனோபா வத்துக்கு ... ... அரிது ஆய

மவுன பூரித சத்திய வடிவினை
மாயா மற்குப் ... ... புகல்வாயே!

தரும வீம அருச்சுன நகுல
சகாதே வர்க்குப் ... ... புகல் ஆகிச்

சமர பூமியில் விக்ரம வளைகொடு
நாள்ஓர் பத்து எட் ... ... டினில் ஆளும்

குரு மகீதலம் உட்பட, உளம் அது
கோடாமல் கூடித் ... ... ரியர் மாள,

குலவு தேர்கடவு அச்சுதன் மருக!
குமாரா! கச்சிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 123 கொத்தார் பற் கால்

தத்தா தத்தா தத்தா தத்தா
தத்தா தத்தா ... ... தனதான

கொத்துஆர் பல்கால் அற்று ஏக, பாழ்
குப்பா யத்தில் ... ... செயல்மாறி,

கொக்கு ஆகி, கூனி, கோல் தொட்டே,
கொட்டாவி குப் ... ... புற, வாசித்து,

இத்தா நிற்றார், செத்தார், கெட்டேன்
அஆ உஊ ... ... எனவே, கேள்

செற்றே சுட்டே, விட்டு ஏறிப்போம்,
அப் பேது துக் ... ... கம் அறாதோ?

நித்தா! வித்தாரத் தோகைக்கே
நிற்பாய்! கச்சிக் ... ... குமரேசா

நிட்டூரச் சூர் கெட்டு ஓட, போர்
நெட்டு ஓதத்தில் ... ... பொருதோனே!

முத்தாரத் தோளில் கோடல் பூ
முட்டாது இட்டத்து ... ... அணிவோனே

முற்றா! நித்தா! அத்தா! சுத்தா!
முத்தா! முத்திப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 124 சீசி முப்புர

தான தத்தனத் தான தத்தனத்
தான தத்தனத் தான தத்தனத்
தான தத்தனத் தான தத்தனத் ... ... தனதான

சீசி முப்புரக் காடு நீறு எழச்
சாடி, நித்திரை, கோசம் வேர்அற,
சீவன் முத்தியிற் கூடவே களித்து, ... அநுபூதி

சேர, அற்புதக் கோலமாம் எனச்
சூரியப் புவிக்கு ஏறி ஆடுக,
சீலம் வைத்து அருள் தேறியே இருக்க ... ... அறியாமல்,

பாசம் விட்டு விட்டு ஓடி போனது
போதும், இப்படிக்கு ஆகிலேன், இனிப்
பாழ் வழிக்கு அடைக்காமலே பிடித்து ... ... அடியேனைப்

பார் அடைக்கலக் கோலம் ஆம் எனத்
தாபரித்து,நித்த ஆரம் ஈது என,
பாத பத்ம நல் போதையே தரித்து ... ... அருள்வாயே.

தேசுஇல் துட்ட நிட்டூர கோது உடைச்
சூரை வெட்டி, எட்டு ஆசை, ஏழ்புவித்
தேவர் முத்தர்கட்கு ஏதமே தவிர்த்து ... ... அருள்வோனே

சீர் படைத்த அழல், சூலம், மான், மழுப்
பாணி, வித்துருப் பாதன், ஓர்புறச்
சீர் திகழ்ப் புகழ்ப் பாவை ஈன பொன் ... ... குருநாதா!

காசி, முத்தமிழ்க் கூடல், ஏழ்மலை,
கோவல், அத்தியின் கானம், நான்மறைக்
காடு, பொன்கிரி, காழி, ஆரூர்,பொன் ... ... புலி,வேளூர்

காள அத்தி, அப்பால் சிராமலை,
தேச முற்று, முப்பூசை மேவி, நல்
காம கச்சியில் சால மேவு பொன் ... ... பெருமாளே.

திருப்புகழ் 125 நச்சு அரவம் என்று

தத்ததன தந்த தத்ததன தந்த
தத்ததன தந்த ... ... தனதான

நச்சு அரவம் மென்று நச்சு அரவம் என்று
நச்சு உமிழ் களங்க ... ... மதியாலும்,

நத்தொடு முழங்கு கனத்தொடு முழங்கு
நத்திரை வழங்கு ... ... கடலாலும்,

இச்சை உணர்வு இன்று இச்சை என வந்த
இச்சிறுமி நொந்து ... ... மெலியாதே,

எத்தனையி நெஞ்சில் எத்தனம் முயங்கி
இத்தனையில் அஞ்சல் ... ... எனவேணும்.

பச்சைமயில் கொண்டு பச்சை மற மங்கை
பச்சை மலை எங்கும் ... ... உறைவோனே!

பத்தியுடன் நின்று பத்தி செயும் அன்பர்
பத்திரம் அணிந்த கழலோனே!

கச்சு இவர் குரும்பை கச்சவர் விரும்பு
கச்சியில் அமர்ந்த ... ... கதிர்வேலா!

கற்பக வனம் கொள் கற்பக விசும்பர்
கைத்தளை களைந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 126 படிறொழுக்கமும்

தனன தத்தன தனன தத்தன
தனன தத்தன ... ... தனதான

படிறு ஒழுக்கமும், மட மனத்து உள
படி பரித்து உடன் ... ... நொடி பேசும்

பகடிகட்கு, உள மகிழ மெய், பொருள்
பல கொடுத்து, அற உயிர் வாடா,

மிடி எனப் பெரு வடவை சுட்டிட,
விதனம் உற்றிட ... ... மிகவாழும்,

விரகு கெட்டு, அரு நரகு விட்டு, இரு
வினை அறப் பதம் ... ... அருள்வாயே.

கொடி இடைக் குற வடிவியைப் புணர்
குமர! கச்சியில் ... ... அமர்வோனே!

குரவு, செச்சை, வெண்முளரி, புத்தலர்
குவளை, முற்று அணி ... ... திருமார்பா!

பொடி படப்பட நெடிய வில்கொடு
புரம் எரித்தவர் ... ... குருநாதா!

பொரு திரைக்கடல் நிருதரைப் படை
பொருது உழக்கிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 127 மக்கட்குக் கூற

தத்தத்தத் தானன தானன
தத்தத்தத் தானன தானன
தத்தத்தத் தானன தானன ... ... தனதான

மக்கட்குக் கூற அரிது ஆனது,
கற்று எட்டத் தான் முடியாதது,
மற்று ஒப்புக்கு யாதும் ஒவாதது, ... மனதாலே

மட்டு இட்டுத் தேட ஒணாதது,
தத்வத்தில் கோவை படாதது,
மத்தப் பொன் போது பகீரதி ... ... மதிசூடும்

முக்கண் பொற்பாளர் உசாவிய
அர்த்தக்குப் போதகம் ஆனது,
முத்திக்குக் காரணம் ஆனது, ... பெறல்ஆகா

முட்டர்க்கு எட்டாதது, நான்மறை
எட்டிற்று எட்டாது எனவே வரு
முற்பட்டு அப்பாலையில் ஆவது ... ... புரிவாயே.

செக்கண் சக்ர ஆயுத மாதுலன்
மெச்சப் புல் போது படாவிய
திக்குப் பொன் பூதரமே முதல் ... ... வெகுரூபம்

சிட்டித்து, பூத பசாசுகள்
கைக்கொட்டு இட்டு ஆட, மகா உததி
செற்று, உக்ரச் சூரனை மார் பக, ... **முதுசோரி**

கக்கக் கைத் தாமரை வேல்விடு
செச்சைக் கர்ப்பூர புய அசல!
கச்சு உற்றப் பார பயோதர ... ... முலையாள் முன்

கற்புத் தப்பாது உலகு ஏழையும்
ஒக்கப் பெற்றாள் விளையாடிய
கச்சிக் கச்சாலையில் மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 128 மயல் ஒதும்

தனதான தந்த தனதான தந்த
தனதான தந்த ... ... தனதான

மயல் ஒதும் அந்த நிலையாலும், வஞ்ச
வசை பேசுகின்ற ... ... மொழியாலும்,

மறி போல் உகின்ற விழிசேரும் அந்தி
மதி நேருகின்ற ... ... நுதலாலும்,

அயிலே நிகர்ந்த விழியாலும், அஞ்ச
நடையாலும், அங்கை ... ... வளையாலும்,

அறிவே அழிந்து, அயர்வு ஆகி நைந்து,
அடியேன் மயங்கி ... ... விடல் ஆமோ?

மயில் ஏறி அன்று நொடி போதில் அண்டம்
வலமாக வந்த ... ... குமர ஈசா!

மறிதாவு செங்கை அரனார் இடம் கொள்
மலைமாது தந்த ... ... முருக ஈசா!

நய வான் உயர்ந்த மணிமாடம் உம்பர்
நடுவே நிறைந்த ... ... மதிசூழ,

நறை வீசு கும்ப குடம் மேவு கம்பை
நகர் மீது அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 129 முத்து ரத்ந சூத்ர

தத்த தத்த தாத்த தத்த தத்த தாத்த
தத்த தத்த தாத்த ... ... தனதான

முத்து ரத்ந சூத்ரம் ஒத்த சித்ர மார்க்கர்,
முன் செ(ன்) மத்து மூர்க்கர், ... வெகுபாவர்,

முத்து உதிர்த்த வார்த்தை, ஒத்த பத்ர வாள்கண்
முச்சர், மெத்த சூட்சர், **... ... நகையாலே**

எத்தர், குத்திர அர்த்தர், துட்ட முட்ட காக்கர்,
இட்டம் உற்ற கூட்டர், ... விலைமாதர்,

எக்கர், துக்கர், வாழ்க்கை உற்ற, சித்த நோய்ப் புண்,
இப்படிக்கு மார்க்கம் ... ... உழல்வேனோ?

தித்தி மித்தி மீத்த னத்த னத்த மூட்டு,
சிற்று உடுக்கை, சேட்டை ... ... தவில்,பேரி,

திக்கு மக்கள் ஆக்கை, துக்க வெற்பு மீக்கொள்
செக் கடற்குள் ஆழ்த்து ... ... விடும்வேலா!

கல் புரத்தை வீட்டி, நட்டம் இட்ட நீற்றர்,
கத்தர், பித்தர், கூத்தர் ... ... குருநாதா!

கல் குறிச்சி வாழ்ப் பெண் ஒக்க வெற்றி வேல்கொள்
கச்சி நத்தி நாள்கொள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 130 வம்பறாச்சில

தந்த தாத்தன தன்ன தனந்தன
தத்தத் தத்தத் ... ... தனதானா

வம்பு அறாச் சில கன்னம் இடும், சம–
யத்துக் கத்துத் ... ... திரையாளர்,

வன் கலாத்திரள் தன்னை அகன்று,
மனத்தில் பற்று அற்று, ... அருளாலே,

தம் பராக்கு அற, நின்னை உணர்ந்து, உரு–
கிப் பொன் பத்மக் ... ... கழல் சேர்வார்

தம் குழாத்தினில், என்னையும் அன்பொடு
வைக்கச் சற்றுக் ... ... கருதாதோ?

வெம் பராக்ரம, மின் அயில் கொண்டு, ஒரு
வெற்புப் பொட்டுப் ... ... பட, மாசூர்

வென்ற பார்த்திப! பன்னிரு திண்புய!
வெட்சிச் சித்ரத் ... ... திருமார்பா!

கம்பராய்ப் பணி மன்னு புயம் பெறு–
கைக்கு, கற்புத் ... ... தவறாதே.

கம்பை ஆற்றினில் அன்னை தவம் புரி
கச்சிச் சொக்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 131 அறிவிலாப் பித்தர்

தனதனாத் தந்த தந்த தனதனாத் தந்த தந்த
தனதனாத் தந்த தந்த ... ... தனதான

அறிவுஇலாப் பித்தர், உன்தன் அடிதொழாக் கெட்ட வஞ்சர்
அசடர், பேய்க் கத்தர், நன்றி ... ... அறியாத

அவலர்மேல் சொற்கள் கொண்டு, கவிகள் ஆக்கிப் புகழ்ந்து,
அவரை வாழ்த்தித் திரிந்து, ... பொருள்தேடி,

சிறிது கூட்டிக் கொணர்ந்து, தெருவு உலாத்தித் திரிந்து,
தெரிவைமார்க்குச் சொரிந்து, ... அவமே, யான்

திரியும் மார்க்கத்து நிந்தை அதனை மாற்றிப், பரிந்து,
தெளிய மோட்சத்தை என்று ... ... அருள்வாயே.

இறைவர் மாற்று அற்ற செம்பொன் வடிவம் வேற்றுப் பிரிந்து
இடபமேல் கச்சி வந்த ... ... உமையாள், தன்

இருளை நீக்கத் தவஞ்செய்து அருள நோக்கிக், குழைந்த
இறைவர் கேட்கத்தகும் சொல் ... ... உடையோனே

குறவர் கூட்டத்தில் வந்து, கிழவனாய்ப் புக்கு நின்று,
குருவி ஒட்டித் திரிந்த ... ... தவமானை,

குணமதாக்கிச், சிறந்த வடிவு காட்டிப் புணர்ந்த
குமர கோட்டத்து அமர்ந்த ... ... பெருமாளே.

132–138 திருவானைக்கா (நீர்)

திருப்புகழ் 132 அஞ்சன வேல்விழி இட்டு

தந்தன தானன தத்ததத்தன
தந்தன தானன தத்ததத்தன
தந்தன தானன தத்ததத்தன ... ... தனதான

அஞ்சன வேல்விழி இட்டு அழைக்கவும்,
இங்கிதம் ஆக நகைத்து உருக்கவும்
அம்புயல் நேர் குழலைக் குலைக்கவும், ... நகரேகை

அம் கையின் மூலம் வெளிப்படுத்தவும்,
மந்தர மாமுலை சற்று அசைக்கவும்,
அம்பரம் வீணில் அவிழ்த்து உடுக்கவும் ... ...
இளைஞோர்கள்

நெஞ்சினில் ஆசை நெருப்பு எழுப்பவும்,
வம்பு உரை கூறி வளைத்து இணக்கவும்,
மன்றிடை ஆடி மருள் கொடுக்கவும் ... ... எவரேனும்

நிந்தை செயாது பொருள் பறிக்கவும்,
இங்கு வலார்கள் கையில் பிணிப்பு அற,
நின் பத சேவை அநுக்ரகிப்பதும் ... ... ஒருநாளே?

குஞ்சர மாமுக விக்கிந ப்ரபு,
அங்குச பாச கர ப்ரசித்தன், ஓர்
கொம்பன், மகோதரன், முக்கண் விக்ரம ... ... கணராஜன்,

கும்பிடுவார் வினை பற்று அறுப்பவன்,
எங்கள் விநாயகன், நக்கர் பெற்று அருள்
குன்றைய ரூபக, கற்பகப் பிளை ... ... இளையோனே!

துஞ்சல் இலாத சடக்ஷரப் பிர–
பந்த, சடானன, துஷ்ட நிக்ரக,
தும்பிகள் சூழ் அவையில் தமிழ்த்ரய ... ... பரிபாலா!

துங்க கஜ ஆரணியத்தில் உத்தம
சம்பு தடாகம் அடுத்த தட்சிண
சுந்தர மாறன் மதிள் புறத்து உறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 133 அனித்தமான ஊன்

தனத்த தான தானான தனத்த தான தானான
தனத்த தான தானான ... ... தனதான

அனித்தம் ஆன ஊன் நாளும் இருப்பது ஆகவே, நாசி
அடைத்து, வாயு ஓடாத ... ... வகை சாதித்து,

அவத்திலே குவால் மூலி புசித்து வாடும், ஆயாச
அசட்டு யோகி ஆகாமல், ... **மலமாயை**

செனித்த காரிய உபாதி ஒழித்து, ஞான ஆசார
சிரத்தை ஆகி, யான்வேறு,என் ... ... உடல்வேறு,

செகத்து யாவும் வேறு ஆக, நிகழ்ச்சியா மநோதீத,
சிவச் சொரூப மாயோகி ... ... எனஆள்வாய்.

தொனித்த நாத வேய் ஊது சகஸ்ர நாம கோபால
சுதற்கு நேசம் மாறாத ... ... மருகோனே!

சுவர்க்க லோக மீகாம! சமஸ்த லோக பூபால!
தொடுத்த நீப! வேல்வீர! ... ... வயலூரா!

மனித்தர் ஆதி சோணாடு தழைக்க மேவு, காவேரி
மக ப்ரவாக பானீயம் ... ... அலை மோதும்

மணத்த சோலை சூழ்காவை, அனைத்து லோகம் ஆள்வாரும்
மதித்த சாமியே! தேவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 134 உரைக் காரிகை

தனத்தா தனத்தா தனத்தா தனத்தா
தனத்தா தனத்தான ... ... தந்ததான

உரைக் காரிகைப் பால் எனக்கே முதல்போர்,
உனக்கோ மடல்கோவை ... ... ஒன்று பாட,

உழப்பாது இபக் கோடு எழுத்தாணியைத் தேடு,
உனைப் பாரில் ஒப்பார்கள் ... ... கண்டிலேன்யான்,

குரைக்கு ஆன வித்யா கவிப் பூபருக்கே
குடிக்காண், முடிப்போடு ... ... கொண்டு வா பொன்.

குலப் பூண் இரத்ந ஆதி பொன் தூசு எடுப்பாய்
எனக் கூறு இடர்ப்பாடின் ... ... மங்குவேனோ?

அரைக்கு ஆடை சுற்றார் தமிழ்க் கூடலில் போய்
அனற்கே புனற்கே ... ... வரைந்த ஏடு இட்டு,

அறத்தாய் எனப்பேர் படைத்தாய்! புனல் சேல்
அறப்பாய் வயல் கீழ் ... ... அமர்ந்தவேளே!

திரைக் காவிரிக்கே கரைக் கானகத்தே
சிவ த்யானமுற்ற ஓர் ... ... சிலந்தி நூல் செய்

திருக்காவணத்தே இருப்பார் அருள் கூர்
திருச் சாலகச் சோதி ... ... தம்பிரானே.

திருப்புகழ் 135 ஓல மறைகள்

தான தனன தனதந்த தந்தன
தான தனன தனதந்த தந்தன
தான தனன தனதந்த தந்தன ... ... தனதான

ஓல மறைகள் அறைகின்ற ஒன்று அது,
மேலை வெளியில் ஒளிரும் பரஞ்சுடர்,
ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவர் ... ... எவராலும்

ஓத அரிய துரியம் கடந்தது,
போத அருவ சுருபம், ப்ரபஞ்சமும்
ஊனும் உயிரும் முழுதும் கலந்தது, **... ... சிவஞானம்**

சால உடைய தவர் கண்டு கொண்டது,
மூல நிறைவு குறைவு இன்றி நின்றது,
சாதி குலமும் இலது, அன்றி அன்பர்சொன ... ... வியோமம்

சாரும் அநுபவர் அமைந்து அமைந்த மெய்
வீடு, பரம சுக சிந்து, இந்த்ரிய
தாப சபலம் அற வந்து, நின்கழல் ... ... பெறுவேனோ?

வால! குமர! குக! கந்த! குன்று எறி
வேல! மயில! எனவந்து கும்பிடு
வான விபுதர் பதி இந்த்ரன் வெந்துயர் ... ... களைவோனே!

வாச களப வர துங்க மங்கல
வீர! கடக புய! சிங்க! சுந்தர!
வாகை புனையும் ரண ரங்க புங்கவ! ... ... வயலூரா!

ஞால முதல்வி, இமயம் பயந்தமின்,
நீலி, கவுரி, பரை, மங்கை, குண்டலி,
நாளும் இனிய கனி, எங்கள் அம்பிகை, ... த்ரிபுரஆயி,

நாத வடிவி, அகிலம் பரந்தவள்,
ஆலின் உதரம் உள பைங் கரும்பு, வெண்
நாவல் அரசு மனை வஞ்சி தந்தருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 136 குருதி புலால் என்பு

தனதன தானந்த தான தந்தன
தனதன தானந்த தான தந்தன
தனதன தானந்த தான தந்தன ... ... தனதான

குருதி புலால் என்பு தோல் நரம்புகள்
கிருமிகள் மால் அம் பிசீதம் மண்டிய
குடர், நிணம், ரோமங்கள், மூளை, என்பன ... ... பொதிகாயக்

குடில் இடை ஓர் ஐந்து வேடர் ஐம்புல
அடவியில் ஓடும் துராசை வஞ்சகர்
கொடியவர் மா பஞ்ச பாதகம் செய, ... அதனாலே

சுருதி புராணங்கள் ஆகமம் பகர்
சரியை க்ரியா அண்டர் பூசை, வந்தனை,
துதியொடு நாடும் தியானம் ஒன்றையும் ... ... முயலாதே

சுமடம் அது ஆய், வம்பு மால் கொளுந்திய
திமிரரொடே பந்தமாய் வருந்திய
துரிசு அற ஆநந்த வீடு கண்டிட ... ... அருள்வாயே.

ஒருதனி வேல்கொண்டு, நீள் க்ர வுஞ்சமும்
நிருதரும், மாவும், கலோல சிந்துவும்,
உடைபட மோதும் குமார! பங்கய ... ... கரவீரா!

உயர் தவர், மா உம்பர் ஆன அண்டர்கள்,
அடிதொழுதே மன் பராவு தொண்டர்கள்,
உளம் அதில் நாளும் குலாவி இன்புற ... ... உறைவோனே!

கருதிய ஆறு அங்க வேள்வி அந்தணர்
அரி அரி கோவிந்த கேசவ என்றுஇரு
கழல்தொழு சீரங்கராசன் நண்புஉறு ... ... மருகோனே!

கமலனும் ஆகண்டல ஆதி அண்டரும்
எமது பிரான் என்று தாள்வ ணங்கிய
கரிவனம் வாழ்சம்பு நாதர் தந்துஅருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 137 நாடித் தேடி

தானத் தானத் ... ... தனதான
தானத் தானத் ... ... தனதான

நாடித் தேடித் ... ... தொழுவார்பால்,
நான் நத்து ஆகத் ... ... திரிவேனோ?

மாடக் கூடல் ... ... பதிஞான
வாழ்வைச் சேரத் ... ... தருவாயே.

பாடல் காதல் ... ... புரிவோனே!
பாலைத் தேன்ஒத்து ... ... அருள்வோனே!

ஆடல் தோகைக்கு ... ... இனியோனே!
ஆனைக் காவில் ... ... பெருமாளே.

திருப்புகழ் 138 பரிமளம் மிக உள

தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன
தனதன தனதன தாந்த தானன ... ... தனதான

பரிமள மிக உள சாந்து, மாமத
முருகு அவிழ் வகைமலர் சேர்ந்து,கூடிய
பலவரி அளி துயில் கூர்ந்து, வான்உறு ... ... முகில் போலே

பரவிய இருள்செறி கூந்தல் மாதர்கள்,
பரிபுர மலர்அடி வேண்டி, ஏவிய
பணிவிடைகளில் இறுமாந்த கூளனை, ... நெறிபேணா

விரகனை, அசடனை, வீம்பு பேசிய
விழலனை, உறுகலை ஆய்ந்திடா முழு
வெகுளியை, அறிவு அது போம் கபாடனை ... ...
மலம் மாறா

வினையனை, உரைமொழி சோர்ந்த பாவியை,
விளிவு உறு நரகு இடை வீழ்ந்த மோடனை,
வினவி முன் அருள்செய்து பாங்கின் ஆள்வதும் ... ...
ஒருநாளே

கருதலர் திரிபுரம் மாண்டு நீறு எழ,
மலைசிலை ஒருகையில் வாங்கு நாரணி,
கழல்அணி மலைமகள், காஞ்சி மாநகர் ... ... உறைபேதை,

களிமயில், சிவனுடன் வாழ்ந்த மோகினி,
கடல் உடை உலகினை ஈன்ற தாய், உமை,
கரிவனம் உறை அகிலாண்ட நாயகி ... ... அருள்பாலா!

முரணிய சமரினில் மூண்ட ராவணன்,
இடி என அலறி முன் ஏங்கி வாய்விட,
முடிபல திருகிய நீண்ட மாயவன் ... ... மருகோனே!

முதல் ஒரு குறமகள் நேர்ந்த நூல் இடை,
இருதன கிரிமிசை தோய்ந்த காமுக!
முதுபழ மறைமொழி ஆய்ந்த தேவர்கள் ... ... பெருமாளே.

139–179 திருவருணை (தீ)

திருப்புகழ் 139 குமர குருபர குணதர

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன ... ... தனதான

குமர! குருபர! குணதர! நிசிசர
திமிர தினகர! சரவணபவ! கிரி
குமரி சுத! பகிரதி சுத! சுரபதி ... ... குலமானும்

குறவர் சிறுமியும் மருவிய திரள் புய!
முருக! சரண் என உருகுதல் சிறிதும் இல்,
கொடிய வினையனை, அவலனை, அசடனை ... ... அதிமோகக்

கமரில் விழவிடும் அழகு உடை அரிவையர்,
களவினொடு பொருள் அளவு அளவு அருளிய
கல்வி அளறு இடை துவள்உறும் வெளிறனை, ... இனிது ஆளக்

கருணை அடியரொடு அருணையில் ஒருவிசை
சுருதி புடை தர வரும், இரு பரிபுர
கமல மலர்அடி கனவிலும் நனவிலும் ... ... மறவேனே.

தமர மிகு திரை எறி வளை கடல் குடல்
மறுகி அலைபட, விட நதி உமிழ்வன,
சமுக முக கண பண பணி பதி நெடு ... ... வடமாகச்

சகல உலகமும் நிலைபெற நிறுவிய,
கனக கிரி திரிதர, வெகு கரமலர்
தளர, இனியது ஓர்அமுதினை ஒருதனி ... ... கடையாநின்று

அமரர் பசிகெட உதவிய க்ருபை முகில்,
அகில புவனமும் அளவிடு குறியவன்,
அளவு நெடியவன், அளவிட அரியவன் ... ... மருகோனே!

அரவு புனைதரு புநிதரும் வழிபட,
மழலை மொழிகொடு தெளிதர ஒளிதிகழ்
அறிவை அறிவது பொருள் என அருளிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 140 கருணை சிறிதும்

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன ... ... தனதான

கருணை சிறிதும் இல் பறிதலை நிசிசரர்,
பிசித அசன மறவர் இவர் முதலிய,
கலக விபரித வெகுபர சமயிகள் ... ... பலர்கூடி,

கலகல என நெறி கெட, முறை முறைமுறை
கதறி, வதறிய, குதறிய கலைகொடு
கருத அரியதை, விழிபுனல் வர, மொழி ... ... குழறா, **அன்பு**

உருகி உனது அருள் பரவு கை வரில், விரகு
ஒழியில், உலகியல் பிணை விடில், உரை செயல்
உணர்வு கெடில், உயிர் புணர் இருவினை அளறு ... ...
அது போக

உதறில், எனது எனும் மலம் அறில், அறிவினில்
எளிது பெறல் என, மறை பறை அறைவதொர்
உதய மரணம் இல் பொருளினை அருளுவது ... ... ஒருநாளே.

தருண சததள பரிமள பரிபுர
சரணி, தமனிய தநுதரி, திரிபுர
தகனி, கவுரி, பவதி, பகவதி, பயி ... ... ரவி, சூலி

சடில தரி, அநுபவை, உமை, திரிபுரை,
சகல புவனமும் உதவிய பதிவ்ருதை,
சமய முதல்வி தனய! பகிரதி சுத! ... ... **சதகோடி**

அருண ரவியினும் அழகிய ப்ரபை விடு
கருணை வருணித! தனுபர! குருபர!
அருணை நகர் உறை சரவண! குரவு அணி ... ... புயவேளே!

அடவி சரர் குல மரகத வனிதையும்,
அமரர் குமரியும் அனவரதமும் அருகு
அழகு பெற, நிலை பெற, வரம் அருளிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 141 துகிலு ம்ருகமத

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன ... ... தனதான

துகிலும், ம்ருகமத பரிமள அளகமும்
நெகிழ, இருதன கிரி அசைதர, இடை
துவள, மனிதரும் அமரரும் முநிவரும் ... ... உடன் ஓடித்

தொடர, வனமணி மகரம் இலகு குழை
அடருவன, விடம் மிளிர்வன, ரதிபதி
சுருதி மொழிவன, கயல்விழி புரள்தர, ... நடுவாக

வகிரும் மதிபுரை தநுநுதல் பனிவர,
வனச பதயுக பரிபுரம் ஒலிபட,
மறுகு தொறும் உலவி, இனிய கலவியை ... ... விலைகூறும்,

வரைவு இல்அரிவையர் தரு சுக சலதியில்
அலையும், எனது உயிர் அநுதினம், நெறிதரு
மவுன சிவசுக சலதியில் முழுகுவது ... ... ஒருநாளே?

முகிலும் மதியமும் ரவி எழு புரவியும்
நெடிய குலை மிடறு இடற, முது ககன
முகடு கிழிபட, வளர்வன கமுகு இனம் ... ... மிசை,வாளை

முடுகு கயல் உகள் வயல்களும், முருகு அவிழ்
தடமும், முளரிய அகழியும், மதிள்களும்,
முழுதும் உடையது ஓர்அருணையில் உறைதரும் ... ...
இளையோனே!

அகிலும் மருதமும் முகுளித வகுளமும்
அமுத கதலியும் அருணமும் வருடையும்
அபரிமித மத கரிகளும் அரிகளும் ... ... உடனேகொண்டு

அருவி இழிதரும் அருவரை தனில், ஒரு
சவர வனிதையை, முனிதரு புனிதையை,
அவசமுடன் மலர் அடிதொழுது உருகிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 142 விடமும் அமுதமும்

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன ... ... தனதான

விடமும் அமுதமும் மிளிர்வன இணைவிழி,
வனசம் அல, தழல் முழுகிய சரம் என,
விரைசெய் ம்ருகமத அளகமும் முகில்அல, ... ஒருஞான

விழியின் வழிகெட இருள்வதொர் இருள் என,
மொழியும் அமுது அல உயிர்கவர் வலை என,
விழையும் இளநகை தளவு அல, களவுஎன, ...
வியன் நாபித்

தடமும் மடு அல, படுகுழி என, இடை
துடியும் அல, மதன் உரு என, வனமுலை
சயிலம் அல, கொலை யமன் என, முலைமிசை ... ...
புரள்கோவை

தரள மணி அல, யமன்விடு கயிறு என,
மகளிர் மகளிரும் அல, பல வினைகொடு
சமையும் உரு என, உணர்வொடு புணர்வதும் ... ...
ஒருநாளே?

அடவி வனிதையர் தனது இரு பரிபுர
சரண மலர்அடி மலர் கொடு வழிபட,
அசலம் மிசை விளை புனம் அதில் இனிது உறை ... ...
தனிமானும்,

அமரர் அரிவையும் இருபுடையினும் வர,
முகர முகபட கவள தவள கர
அசலம் மிசைவரும் அபிநவ கலவியும் ... ... விளையாடும்

கடக புளகித புயகிரி சமுக!
விகட அக கசரத துரகத நிசிசரர்
கடக பயிரவ! கயிரவ மலர்களும் ... ... எரி தீயும்

கருக, ஒளி விடு தனு பர! கவுதம
புநித முனி தொழ அருணையில் அறம் வளர்
கருணை உமை தரு சரவண! சுரபதி ... ... பெருமாளே.

திருப்புகழ் 143 கயல் விழித்தேன்

தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத் ... ... தனதான

கயல் விழித்தேன் எனைச் செயல் அழித்தாய் என,
கணவ கெட்டேன் எனப் ... ... பெறுமாது,

கருது புத்ரா என, புதல்வர் அப்பா எனக்
கதறிட, பாடையில் ... ... தலைமீதே

பயில் குலத்தார் அழ, பழைய நட்பார் அழப்,
பறைகள் கொட்டா வரச், ... சமனாரும்

பரிய கைப் பாசம் விட்டு எறியும் அப்போது, எனைப்
பரிகரித்து ஆவியைத் ... ... தரவேணும்,

அயில், அறச் சேவல், கைக்கு இனிதர, தோகை உற்று,
அருணையில் கோபுரத்து ... ... உறைவோனே.

அமரர் அத்தா! சிறுக் குமரி முத்தா! சிவத்து
அரிய சொல் பாவலர்க்கு ... ... எளியோனே!

புயல் இளைப்பாறு பொன் சயில மொய்ச் சாரலில்
புன மறப் பாவையைப் ... ... புணர்வோனே!

பொடி படப் பூதரத்தொடு கடல் சூரனைப்
பொரு முழுச் சேவகப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 144 பரியகைப் பாசம்

தனதனத் தானனத் தனதனத் தானனத்
தனதனத் தானனத் ... ... தனதான

பரிய கைப் பாசம் விட்டு எறியும் அக் காலனுள்
பயன் உயிர்ப் போய் அகப் ... ... பட, மோகப்

படியில் உற்றார் எனப் பலர்கள் பற்றா, அடல்
படர் எரிக் கூடுவிட்டு, ... **அலைநீரில்**

பிரியும் இப் பாதகப் பிறவி உற்றே, மிகப்
பிணிகளுக்கே இளைத்து ... ... உழல் நாயேன்,

பிழை பொறுத்தாய் என, பழுது அறுத்து ஆள் எனப்
பிரியம் உற்று ஓதிடப் ... ... பெறுவேனோ?

கரிய மெய்க் கோலம் உற்ற, அரியின் நல் தாமரைக்கு
அமைவ பற்று ஆசை அக் ... ... கழலோர்முன்,

கலை வகுத்து ஓதி, வெற்பு அது தொளைத்தோன், இயல்
கடவுள், செச் சேவல் கைக் ... ... கொடியோன் என்று

அரிய நல் பாடலைத் தெரியும் உற்றோர் கிளைக்கு
அருணையில் கோபுரத்து ... ... உறைவோனே!

அடவியில் தோகை பொன் தடமுலைக்கு ஆசை உற்று,
அயரும் அச் சேவகப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 145 தருண மணி

தனதனன தான தத்த தனதனன தான தத்த
தனதனன தான தத்த ... ... தனதான

தருண மணி வான் நிலத்தில், அருணமணி ஆல விட்ட
தழல் அமளி மீது எறிக்கும் ... ... நிலவாலே,

தலைமை தவிரா மனத்தின் நிலைமை அறியாது எதிர்த்த
தறுகண் மதவேள் தொடுத்த ... ... கணையாலே.

வருண மட மாதர் கற்ற வசையின் மிகை பேச, முற்று
மருவும் எனது ஆவி சற்றும் ... ... அழியாதே,

மகுடம் அணி வார் இசைக்கும் விகடம் அது உலாவு சித்ர
மயிலின்மிசை ஏறி நித்தம் ... ... வரவேணும்,

கருணை அகலா விழிச்சி,களபம் அழியா முலைச்சி,
கலவி தொலையா மறத்தி ... ... மணவாளா!

கடு உடை அரா நிரைத்த சடில முடி மீது வைத்த
கடியமலர் ஆதரித்த ... ... கழல்வீரா!

அருண மணியால் அமைத்த கிரண மணி சூழும் வெற்றி
அருணைநகர் கோபுரத்தில் ... ... உறைவோனே!

அசுரர் குலம் வேர் அறுத்து, வட அனலை மீது எழுப்பி,
அமரர்சிறை மீள விட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 146 வடவை அனல் ஊடு

தனதனன தான தத்த தனதனன தான தத்த
தனதனன தான தத்த ... ... தனதான

வடவை அனல் ஊடு புக்கு முழுகி எழு மாமதிக்கும்,
மதுரமொழி யாழ் இசைக்கும், ... இருநாலு

வரைதிசை விடாது சுற்றி, அலறு திரை வாரிதிக்கும்,
மடி அருவ வேள் கணைக்கும், ... **அற வாடி**

நெடு கனக மேரு ஒத்த புளகமுலை மாதருக்கு
நிறையும் மிகு காதல் உற்ற ... ... மயல்தீர.

நினைவினொடு பீலி வெற்றி மரகத கலாப சித்ர
நிலவு மயில் ஏறி உற்று ... ... வரவேணும்.

மடல் அவிழு(ம்) மாலை சுற்று புயம் இருபதோடு, பத்து
மவுலி அற வாளி தொட்ட ... ... அரி ராமன்

மருக! பல வானவர்க்கும் அரிய சிவனார் படிக்க
மவுனமறை ஒதுவித்த ... ... குருநாதா!

இடை அரி உலாவும் உக்ர அருணகிரி மாநகர்க்குள்
இனிய குண கோபுரத்தில் ... ... உறைவோனே!

எழு புவி அளாவு வெற்பும், உடலி நெடு நாகம் எட்டும்
இடை உருவ வேலை விட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 147 ஆலவிழி நீல

தானதன தானத் தானதன தானத்
தானதன தானத் ... ... தந்ததான

ஆலவிழி நீலத்தால், அதர பானத்–
தால், அளக பாரக் ... ... கொண்டலாலே,

ஆர நகையால், வில் போர் நுதலினால், வித்–
தார நடையால், நல் ... ... கொங்கையாலே,

சால மயல் ஆகி, கால திரி சூலத்–
தால் இறுகு பாசத் ... ... துன்பம் மூழ்கி,

தாழ்வில் உயிர் வீழ்பட்டு, ஊழ்வினை விடாமல்
சாவதன் முன், ஏவல் ... ... கொண்டிடாயோ?

சோலைதரு கானில் கோல மற மானைத்
தோளில் உறவு ஆகக் ... ... கொண்ட வாழ்வே!

சோதி முருகா! நித்தா! பழய ஞானச்
சோணகிரி வீதிக் ... ... கந்தவேளே!

பாலக! கலாபக் கோமள மயூரப்
பாக! உமை பாகத் ... ... தன் குமாரா!

பாதமலர் மீதில் போதமலர் தூவிப்
பாடும் அவர் தோழத் ... ... தம்பிரானே!.

திருப்புகழ் 148 பேதக விரோத

தானதன தானத் தானதன தானத்
தானதன தானத் ... ... தந்ததான

பேதக, விரோத, தோதக, விநோதப்
பேதையர் குலாவைக் ... ... கண்டு, மாலின்

பேதைமை உறா மற்று, ஏதம் அகலாமல்
பேத உடல் பேணித் ... ... தென்படாதே,

சாதக விகாரச் சாதல் அவை போகத்
தாழ்வில் உயிராகச் ... ... சிந்தையால் உன்

தாரை வடிவேலை, சேவல்தனை, ஏனல்
சாரல் மறமானைச் ... ... சிந்தியேனோ?

போதக மயூர, போது அக அகடு ஆ மன்
போது, அருணை வீதிக் ... ... கந்தவேளே!

போதக, கலாபக் கோதை முதுவானில்
போன சிறை மீளச் ... ... சென்றவேலா!

பாதக பதாதிச் சூரன் முதல் வீழ,
பார் உலகு வாழக் ... ... கண்டகோவே!

பாதமலர் மீதில் போதமலர் தூவிப்
பாடும் அவர் தோழத் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 149 அமுதம் ஊறு சொல்

தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன
தனன தானன தானன தானன ... ... தனதான

அமுதம் ஊறு சொல் ஆகிய தோகையர்,
பொருள் உளாரை என்ஆணை உன்ஆணை, என்
அருகு வீடு, இது தான், அதில் வாரும் என் ... ...
உரைகூறும்,

அசடு மாதர், குவாது சொல் கேடிகள்,
தெருவின் மீது குலாவி உலாவிகள்,
அவர்கள் மாயை படாமல், கெடாமல் நின் ... ... அருள்தாராய்.

குமரி, காளி, வராகி, மகேசுரி,
கவுரி, மோடி, சுராரி, நிராபரி,
கொடிய சூலி, சுடாரணி, யாமளி, ... மகமாயி.

குறள் உரூப முராரி சகோதரி,
உலக தாரி, உதாரி, பராபரி,
குரு பராரி, விகாரி, நமோ கரி, ... அபிராமி,

சமர நீலி, புராரி தன் நாயகி,
மலை குமாரி, கபாலி, நன் ஆரணி,
சலில மாரி, சிவாய மனோகரி, ... பரையோகி,

சவுரி, வீரி, முநீர் விட போஜனி,
திகிரி மேவு கையாளி, செயாள், ஒரு
சகல வேதமும் ஆயின தாய்உமை ... ... அருள்பாலா!

திமிதம் ஆடு சுராரி, நிசாசரர்
முடிகள் தோறு கடாவி இடே ஒரு
சில பசாசு குணாலி நிணாம் உண ... ... விடும்வேலா!

திரு உலாவு சொணேசர் அணாமலை,
முகில் உலாவு விமான நவோநிலை
சிகர மீது குலாவி உலாவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 150 இரவியும் மதியும்

தனதன தனனம் தனதன தனனம்
தனதன தனனம் ... ... தனதான

இரவியும் மதியும் தெரிவு உற எழும் அம்–
புவி தனில் இனம் ஒன் ... ... றிடு மாதும்,

எழில் புதல்வரும், நின்று அழுது உளம் உருகும்
இடர் கொடு, நடலம் ... ... பலகூற,

கருகிய உருவம் கொடு, கனல் விழி கொண்டு,
உயிரினை நமனும் ... ... கருதா முன்,

கலைகொடு பல துன்பமும் அகலிட, நின்
கழல் இணை கருதும் ... ... படி பாராய்.

திரு மருவிய திண் புயன், அயன், விரி எண்
திசை கிடுகிட வந் ... ... திடுசூ ரன்

திணி புயம் அது சிந்திட, அலை கடல் அஞ்–
சிட, வலியொடு கன் ... ... றிடும் வேலா!

அரு மறையவர், அந்தரம் உறைபவர், அன்பு
உடையவர் உய, அன்று ... ... அறமேவும்

அரிவையும், ஒரு பங்கு இடம் உடையவர் தங்கு
அருணையில் உறையும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 151 விரகொடு வளை

தனதன தனனம் தனதன தனனம்
தனதன தனனம் ... ... தனதான

விரகொடு வளை சங்கடம் அது தரு வெம்
பிணிகொடு, விழி வெங் ... ... கனல்போல,

வெறிகொடு, சமன் நின்று உயிர்கொளும் நெறி, இன்று
என, விதி வழி வந்து ... ... இடுபோதில்,

கரவடம் அது பொங்கிடு மனமொடு, மங்–
கையர், **உறவினர் கண் ... ... புனல்பாயும்**

கலகமும் வருமுன், குலவினை களையும்
கழல் தொழும் இயல் தந்து ... ... அருள்வாயே.

பரவிடும் அவர் சிந்தையர், விடம் உமிழும்
பட அரவு அணை கண் ... ... துயில்மால், அம்

பழமறை மொழி பங்கயன் இமையவர் தம்
பயம் அற,விடம் உண்டு, ... எருது ஏறி.

அரவொடு மதியம் பொதி சடைமிசை கங்–
கையும் உற, அனல் அம் ... ... கையில்மேவ.

அரிவையும் ஒருபங்கு இடம் உடையவர் தங்கு
அருணையில் மருவும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 152 இடம் அடு சுறவை

தனதன தனன தனதன தனன
தனதன தனதன ... ... தந்ததான

இடம் அடு சுறவை முடுகிய மகரம்
எறிகடல் இடை எழு ... ... திங்களாலே,

இருவினை மகளிர் மருவிய தெருவில்
எரி என வரு சிறு ... ... தென்றலாலே,

தடநடு உடைய கடிபடு கொடிய
சரம் விடு தறுகண் ... ... அநங்கனாலே,

சரிவளை கழல, மயல் கொளும் அரிவை
தனிமலர் அணையின் ... ... நலங்கல் ஆமோ?

வடகுல சயிலம், நெடு உடல் அசுரர்
மணிமுடி சிதற ... ... எறிந்த வேலா!

மறமகள் அமுத புளகித களப
வளர் இள முலையை ... ... மணந்த மார்பா!

அடல் அணி விகட மரகத மயிலில்
அழகுடன் அருணையில் ... ... நின்ற கோவே!

அருமறை விததி முறைமுறை பகரும்
அரி அர பிரமர்கள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 153 கெஜ நடை மடவார்

தனதன தனனா தனதன தனனா
தனதன தனனா ... ... தனதான

கெஜநடை மடவார் வசம் அதில் உருகா,
கிலெசம் அது உறு பாழ் ... ... வினையாலே,

கெதிபெற நினையா, துதிதனை அறியா,
கெடுசுகம் அதில் ஆழ் ... ... மதியாலே,

தசை அது மருவீ, வசை உடல் உடனே,
தரணியில் மிகவே ... ... உலைவேனோ?

சததள மலர் வார் புணை நின கழலார்
தருநிழல் புகவே ... ... தருவாயே,

திசை முகவனை நீள் சிறை உற விடுவாய்,
திருநெடு கருமால் ... ... மருகோனே!

திரிபுர தகனார் இடம் அதில் மகிழ்வார்
திரிபுரை அருள் சீர் ... ... முருகோனே!

நிசிசரர் உறை மா கிரி இரு பிளவா
நிறை அயில் முடுகா ... ... விடுவோனே!

நிலமிசை புகழ் ஆர் தலம் எனும் அருணா
நெடுமதில் வடசார் ... ... பெருமாளே.

திருப்புகழ் 154 அருக்கார் நலத்தை

தனத்தா தனத்தத் தனத்தா தனத்தத்
தனத்தா தனத்தத் ... ... தனதான

அருக்கார் நலத்தைத் திரிப்பார், மனத்துக்கு
அடுத்த ஆசை பற்றித் ... ... தளராதே,

அடல் காலனுக்குக் கடைக்கால் மிதித்திட்டு,
அறப் பேதகப்பட்டு ... ... அழியாதே,

கருக்காரர் நட்பைப் பெருக்க ஆசரித்துக்
கலிச் சாகரத்தில் ... ... பிறவாதே.

கருத்தால் எனக்குத் திருத்தாள் அளித்துக்
கலைப் போதகத்தைப் ... ... புகல்வாயே.

ஒருக்கால் நினைத்திட்டு இருக்கால் மிகுத்திட்டு
உரைப்பார்கள் சித்தத்து ... ... உறைவோனே!

உரத்தோள் இடத்தில் குறத்தேனை வைத்திட்டு,
ஒளித்து ஓடும் வெற்றிக் குமரஈசா!

செருக்கா தருக்கிச் சுரச்சூர் நெருக்கச்
செருச்சூர் மரிக்கப் ... ... பொரும்வேலா!

திறப் பூதலத்தில் திரள் சோண வெற்பில்
திருக் கோபுரத்தில் ... ... பெருமாளே.

திருப்புகழ் 155 அருமா மதனை

தனனா தனனத் தனனா தனனத்
தனனதா தனனத் ... ... தனதான

அருமா மதனைப் பிரியாத சர
கயலார், நயனக் ... ... கொடியார், தம்

அழகு ஆர் புளகப் புழுகு ஆர் சயிலத்து,
அணையா, வலி கெட்டு, ... உடல் தாழ.

இருமா நடை புக்கு, உரை போய், உணர்வு அற்று,
இளையா, உளம் உக்கு ... ... உயிர்சோர,

எரிவாய் நரகில் புகுதாத படிக்கு
இருபாதம் எனக்கு ... ... அருள்வாயே.

ஒரு மால் வரையைச் சிறு தூள் படவிட்டு,
உரமோடு எறிபொன் ... ... கதிர்வேலா!

உறை மான் அடவிக் குறமா மகளுக்கு
உருகு ஆறு இருபொன் ... ... புயவீரா!

திருமால் கமலப் பிரமா விழியில்
தெரியா அரனுக்கு ... ... அரியோனே!

செழுநீர் வயல் சுற்று அருணா புரியில்
திரு வீதியினில் ... ... பெருமாளே.

திருப்புகழ் 156 அழுதும் ஆவா

தனதனா தானனைத் தனதனா தானனைத்
தனதனா தானனைத் ... ... தனதான

அழுதும் ஆவா எனத் தொழுதும், ஊடூடு நெக்கு,
அவசமாய் ஆதரக் ... ... கடல் ஊடு உற்று,

அமைவு இல் கோலாகலச் சமய மா பாதகர்க்கு
அறிய ஒணா மோன முத் ... ... திரை நாடி,

பிழைப்படா ஞானமெய்ப் பொருள் பெறாதே, வினைப்
பெரிய ஆதேச புற்– ... ... புதம் ஆய.

பிறவி வாராகரச் சுழியிலே போய் விழப்
பெறுவதோ நான் இனி? ... ... புகல்வாயே.

பழைய பாகீரதிப் படுகைமேல் வாழ்வு எனப்
படியும் ஆறு ஆயின் அத் ... ... தனசாரம்

பருகும், ஆறு ஆனனச் சிறுவ சோண அசலப்
பரம மாயூர! வித் ... ... தக! வேளே!

பொழுதுசூழ் போதுவெற்பு இடிபடா, பார்முதல்
பொடிபடா, ஓட முத்து ... ... எறி மீனப்

புணரி கோகோ என, சுருதி கோகோ என,
பொருத வேலாயுதப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 157 இமராஜன் நிலாவது

தனதாதன தானன தத்தம் ... ... தனதான
தனதாதன தானன தத்தம் ... ... தனதான

இம ராஜன் நிலா அது எறிக்கும் ... ... கனலாலே
இள வாடையும் ஊரும் ஒறுக்கும் ... ... படியாலே,

சமர் ஆகிய மாரன் எடுக்கும் ... ... கணையாலே,
தனிமான் உயிர் சோரும், அதற்கு ஒன்று ... ... அருள்வாயே.

குமரா! முருகா! சடில அத்தன் ... ... குருநாதா!
குறமாமகள் ஆசை தணிக்கும் ... ... திருமார்பா!

அமராவதி வாழ்வு அமரர்க்கு அன்று ... ... அருள்வோனே!
அருணாபுரி வீதியில் நிற்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 158 இரவுபகற் பலகாலும்

தனதனனத் தனதான தனதனனத் ... ... தனதான
தனதனனத் தனதான தனதனனத் ... ... தனதான

இரவுபகல் பலகாலும் இயல் இசை முத் ... ... தமிழ் கூறி,
திரம் அதனைத் தெளிவு ஆகத் திருவருளைத் ... ... தருவாயே.

பரகருணைப் பெருவாழ்வே! பரசிவ தத் ... ... துவ ஞானா!
அரன் அருள் சற் புதல்வோனே! அருணகிரிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 159 இருவர் மயலோ

தனன தனனா தனன தனனா
தனன தனனா ... ... தனதான

இருவர் மயலோ? அமளி விதமோ?
என் என செயலோ? ... ... அணுகாத

இருடி அயன் மால் அமரர் அடியார்
இசையும் ஒலி தான் ... ... இவை கேளாது?

ஒருவன் அடியேன் அலறு மொழிதான்
ஒருவர் பரிவாய் ... ... மொழிவாரோ?

உனது பத தூள் புவன கிரிதான்,
உனது கிருபா ... ... கரம் ஏதோ?

பரம குருவாய், அணுவில் அசைவாய்,
பவனம் முதல் ... ... ஆகிய பூதப்

படையும் உடையாய்! சகல வடிவாய்!
பழைய வடிவு ... ... ஆகிய வேலா!

அரியும் அயனோடு அபயம் எனவே,
அயிலை இருள்மேல் ... ... விடுவோனே!

அடிமை கொடு நோய் பொடிகள் படவே,
அருணகிரி வாழ் ... ... பெருமாளே.

திருப்புகழ் 160 இருவினை அஞ்ச

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த ... ... தனதான

இருவினை அஞ்ச, மல வகை மங்க,
இருள் பிணி மங்க, ... மயில் ஏறி,

இன அருள் அன்பு மொழிய, கடம்பு–
வின் அது அகமுங்கொடு அளிபாட,

கரிமுகன் எம்பி முருகன் என், அண்டர்
களி மலர் சிந்த, ... அடியேன் முன்

கருணை பொழிந்து, முகமும் மலர்ந்து,
கடுகி நடம் கொடு ... ... அருள்வாயே

திரிபுரம் மங்க, மதன் உடல் மங்க,
திகழ்நகை கொண்ட ... ... விடை ஏறிச்

சிவம் வெளி அங்கண் அருள் குடி கொண்டு,
திகழ நடம் செய்து, ... எமை ஈண

அரசி இடம் கொள் மழு உடை எந்தை,
அமலன் மகிழ்ந்த ... ... குருநாதா!

அருணை விலங்கல் மகிழ் குற மங்கை
அமளி நலம் கொள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 161 இருவினை ஊண்

தனதன தாந்த தந்த தனதன தாந்த தந்த
தனதன தாந்த தந்த ... ... தனதான

இருவினை ஊண் பசும்பை, கருவிளை கூன் குடம்பை,
இடர் அடை பாழ்ம் பொதும்பு, ... அகிதவாரி

இடைதிரி சோங்கு, கந்த மது அது தேங்கு கும்பம்,
இரவு இடை தூங்குகின்ற ... ... பிணம், நோவுக்கு

உரு இயல் பாண்டம், அஞ்சு மருவிய கூண்டு, நெஞ்சொடு
உயிர்குடி போம் குரம்பை ... ... அழியாது என்று,

உலகுடன் ஏன்று கொண்ட கரும பிராந்து ஒழிந்து,
உன் உபய பதாம்புயங்கள் ... ... அடைவேனோ?

அருணையில் ஓங்கு துங்க சிகர கராம் புயங்கள்
அமரர் குழாம் குவிந்து ... ... தொழவாழும்

அடியவர் பாங்க, பண்டு புகல் அகிலாண்டம் உண்ட
அபிநவ சார்ங்க கண்டன் ... ... மருகோனே!

கருணை ம்ருகேந்த்ர! அன்பருடன் உரகேந்த்ரர் கண்ட
கடவுள் நடேந்த்ரர் மைந்த! ... ... வரைசாடும்

கலப ககேந்த்ர! தந்த்ர அரச! நிசேந்த்ர! கந்த
கர குலிசேந்த்ரர் தங்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 162 உலையிலனல்

தனதனன தத்த தனதனன தத்த
தனதனன தத்த தனதான

உலையில் அனல் ஒத்த உடலின் அனல் பற்றி,
உடுபதியை முட்டி, ... அமுது ஊறல்

உருகிவர விட்ட பரமசுகம் உற்று,
உனது அடியை நத்தி ... ... நினையாமல்

சிலைநுதலில் இட்ட திலதம்அவிர் பொட்டு
திகழ்முகவர் முத்து ... ... நகையாலே

சிலுகுவலை இட்ட மயல்கவலை பட்டுத்
திருடன்என வெட்கி ... ... அலைவேனோ?

கலைகனக வட்ட திமிலைபறை கொட்ட
கனகமயில் விட்ட ... ... கதிர்வேலா!

கருதலரின் முட்டிக் கருகிவரு துட்ட
கத(ம்)அமணர் உற்ற ... ... குலகாலா!

அலைகடல் உடுத்த தலம்அதனில், வெற்றி
அருணைவளர் வெற்பில் ... ... உறைவோனே!

அசுரர்களை வெட்டி அமரர்சிறை விட்டு
அரசுநிலை இட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 163 கடல்பரவு தரங்க

தனதனன தனந்த தானன ... ... தந்ததான
தனதனன தனந்த தானன ... ... தந்ததான

கடல்பரவு தரங்கம் மீது எழு ... ... திங்களாலே,
கருதி மிக மடந்தைமார் சொல் ... ... வதந்தியாலே,

வடஅனலை முனிந்து வீசிய ... ... தென்றலாலே,
வயல் அருணையில் வஞ்சி போத ... ... நலங்கல்ஆமோ?

இடம் உமையை மணந்த நாதர் ... ... இறைஞ்சும் வீரா!
எழுகிரிகள் பிளந்து வீழ ... ... எறிந்த வேலா!

அடல் அசுரர் கலங்கி ஓட ... ... முனிந்த கோவே!
அரிபிரம புரந்தர ஆதியர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 164 கரிமுகக் கடகளிறு

தனதனத் தனதனத் தனதனத் தனதனத்
தனதனத் தனதனத் ... ... தனதான

கரிமுகக் கட களிற்று அதிக கற்பக மதக்
கஜமுகத்து அவுணனைக் ... ... கடி,யானை,

கடலை எள் பயறு நல் கதலியில் கனி பலக்
கனி வயிற்றினில் அடக் ... ... கிய வேழம்,

அரிமுகத்தினன் எதிர்த்திடு களத்தினில் மிகுத்து
அமர் புரிக் கணபதிக்கு ... ... இளையோனே!

அயில் எடுத்து, அசுரர் வெற்பு அலைவுறப் பொருது, வெற்
றியை மிகுத்த அறுமுகக் ... ... குமர ஈசா!

நரி மிகுக் கிளைகளைப் பரி எனக் கடிவளக்
கையில் பிடித்து எதிர் நடத் ... ... திடும் ஈசன்

நடனம் இப்படி இடத்தினும், இசைத்து, அரையினில்
கரி உரித்து அணிபவற்கு ... ... ஒருசேயே!

துரிபெறச் சரிபொழில் கனவயற்கு அழகு உளத்
துரிய மெய்த் தரளம் மொய்த் ... ... திட வீறிச்

சுரர் துதித்திட, மிகுத்து இயல் தழைத்த அருணையில்
சுடர் அயில் சரவணப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 165 காணாத தூர நீள்

தானான தான தானான தான
தானான தான ... ... தந்ததான

காணாத தூரம் நீள் நாத வாரி
காது ஆரவாரம் ... ... அதன் பினாலே,

கால் ஆளும் வேளும், ஆலால நாதர்
காலால் நிலாவும் ... ... முனிந்து, பூமேல்

நாண்ஆன தோகை, நூல் ஆடை சோர,
நாடோர்கள் ஏச ... ... அழிந்து, தானே

நானா அபவாத மேல் ஆக ஆக,
நாள்தோறும் வாடி ... ... மயங்கல் ஆமோ?

சோண அசல ஈச, பூண் ஆரம் நீடு
தோள் ஆறும் ஆறும் ... ... விளங்கு நாதா!

தோலாத வீர! வேலால் அடாத
சூராளன் மாள ... ... வெகுண்ட கோவே!

சேண் நாடர் லோகம் வாழ்மாது, யானை
தீராத காதல் ... ... சிறந்த மார்பா!

தேவாதி கூடு மூவாதி மூவர்
தேவாதி தேவர்கள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 166 கீத விநோத மெச்சு

தான தனான தத்த ... ... தனதான
தான தனான தத்த ... ... தனதான

கீத விநோத மெச்சு ... ... குரலாலே
கீறு மை ஆர் முடித்த ... ... குழலாலே,

நீதி இலாத அழித்தும் ... ... உழலாதே,
நீ மயில் ஏறி உற்று ... ... வரவேணும்.

சூது அமர் சூரர் உட்க ... ... பொருசூரா!
சோண கிரீயில் உற்ற ... ... குமரஈசா!

ஆதியர் காது ஒருச் சொல் ... ... அருள்வோனே!
ஆனை முகார் கனிட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 167 குழவியுமாய் மோகம்

தனதன தானான தானன தனதன தானான தானன
தனதன தானான தானன ... ... தனதான

குழவியுமாய், மோக மோகித குமரனுமாய், வீடு காதலி
குலவனுமாய், நாடு காடொடு ... ... தடுமாறி,

குனிகொடு கூன்நீடு மா கிடு கிழவனுமாய், ஆவி போய்விட,
விறகு உடனே தூளி ஆவதும் ... ... அறியாதாய்ப்

பழய சடாதாரம் மேல் நிகழ் கழி உடல் காணா நிராதர
பரிவுஇலி வான் நாலை நாள்தொறும் ... ... மடைமாறி,

பல பல ஆம் யோக சாதக உடல்கொடு, மாயாத போதக
பதி, அழியா வீடு போய் இனி ... ... அடைவேனோ?

எழுகடல் தீ மூள, மேருவும் இடிபட, வேதாவும் வேதமும்
இரவியும் வாய்பாறி ஓடிட, ... முதுசேடன்

இருள் அறு பாதாள லோகமும், இமையமும் நீறு ஆக, வாள்கிரி
இரு பிளவாய் வீழ, **மாதிர ... ... மலை சாய,**

அழகிய மாபாக சாதனன் அமரரும் ஊர்பூத, மாறுசெய்
அவுணர் தம் மாசேனை தூள்எழ ... ... விளையாடி,

அமரினை மேவாத சூரரை அமர்செயும் வேலாயுதா! உயர்
அருணையில் வாழ்வாக மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 168 கேதகையபூ முடித்த

தானதன தானதத்த தானதன தானதத்த
தானதன தானதத்த ... ... தனதான

கேதகைய பூ முடித்த மாதர் தம் மயாலில் உற்று,
கேவலம் அது ஆன அற்ப ... ... நினைவாலே.

கேள்வி அது இலாது இருக்கும் ஊழ்வினையினால், மிகுத்த
கேடு உறுகவே நினைக்கும் ... ... வினையாலே.

வேதனையிலே மிகுத்த பாதகனுமாய், அவத்தில்
மேதினி எலாம் உழற்றும் ... ... அடியேனை,

வீடு உதவி ஆள, வெற்றி வேல் கரம் அதே எடுத்து,
வீறுமயில் மீதில் உற்று ... ... வருவாயே.

நீதி நெறியே அழித்த தாருகனை வேர் அறுத்து,
நீடுபுகழ் தேவர் இல்கள் ... ... குடி ஏற,

நீடு அருளினால் விடுத்த பாலகுமரா! செழித்த
நீலநிற மால்தனக்கு ... ... மருகோனே!

சோதி அனலா உதித்த சோணகிரி மாமலைக்குள்
சோபை வட கோபுரத்தில் ... ... உறைவோனே!

சோனை மழை போல் எதிர்த்த தானவர்கள் மாள, வெற்றி
தோளின் மிசை வாள் எடுத்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 169 கோடு ஆன மடவார்கள்

தானான தனதான ... ... தனதான

கோடு ஆன மடவார்கள் ... ... முலைமீதே,

கூர்வேலை இணை ஆன ... ... விழி ஊடே,

ஊடுஆடி அவரோடும் ... ... உழலாதே,

ஊர் ஆகத் திகழ்பாதம் ... ... அருள்வாயே.

நீடு ஆழி சுழல் தேசம் ... ... வலமாக

நீடு ஓடி மயில்மீது ... ... வருவோனே!

சூடானது ஒரு சோதி ... ... மலைமேவு

சோழநாடு புகழ்தேவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 170 சிவமாதுடனே

தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா ... ... தனதான

சிவமாது உடனே அநுபோகம் அதுஆய்,
சிவஞான அமுதே ... ... பசியாறி,

திகழ்வோடு இருவோர் ஒரு ரூபம் அதுஆய்
திசை லோகம் எலாம், ... **அநுபோகி**

இவனே என, மால் அயனோடு, அமரோர்
இளையோன் எனவே ... ... மறை ஓத,

இறையோன் இடமாய் விளையாடுகவே,
இயல் வேலுடன் மா ... ... அருள்வாயே.

தவலோகம் எலாம் முறையோ எனவே,
தழல்வேல் கொடு போய், ... அசுராரைத்

தலைதூள் பட, ஏழ் கடல்தூள் பட, மா–
தவம் வாழ்வு உறவே ... ... விடுவோனே!

கவர் பூ வடிவாள் குறமாதுடன் மால்
கடன் ஆம் எனவே ... ... அணைமார்பா!

கடையேன் மிடிதூள் பட, நோய் விடவே
கனல்மால் வரைசேர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 171 செஞ்சொற் பண்

தந்தத் தந்தத் தனதன தானன
தந்தத் தந்தத் தனதன தானன
தந்தத் தந்தத் தனதன தானன ... ... தனதான

செஞ்சொல் பண் பெற்றிடு குட மாமுலை,
கும்பத் தந்திக் குவடு என, வாலிய
தெந்தப் பந்தித் தரளம் அதுஆம்என, ... இடர்ஆவி

சிந்தி, "கந்தித்திடும் களை ஆம், உனது
அங்கத்து அம் பொற்பு எது என ஓதுவது,
திண் துப்பும் தித்திடு கனி தானும் ... ... உன் இதழ் ஆமோ"?

"மஞ்சு ஒக்கும் கொத்து அளகம்" எனா, "மிடை
கஞ்சத்து இன்பு உற்றிடு திருவே", "இள
வஞ்சிக் கொம்பு ஒப்பு எனும் மயிலே" என ... ... முறை ஏய

வந்தித்து, இந்தப் படி, **மடவாரொடு**
கொஞ்சிக் கெஞ்சி, தினம் அவர் தாள்தொழும்,
மந்தப் புந்திக் கசடன், எந் நாள் உனது ... ... அடி சேர்வேன்?

நஞ்சைக் கண்டத்து இடுபவர், ஆரொடு
திங்கள் பிஞ்சு, அக்கு, அரவு அணி வேணியர்,
நம்பர், செம்பொன் பெயர் அசுர ஈசனை ... ... உகிராலே

நந்தக் கொந்தி, சொரிகுடல் சோர்வர,
நந்திக் கம்பத்து எழு நர கேசரி,
நஞ்சக் குண்டைக்கு ஒரு வழி ஏதுஎன ... ... மிகநாடி.

வெஞ்சச் சிம்புள் சொருபம் அது ஆனவர்,
பங்கில் பெண், கற்புடைய பெண் நாயகி,
விந்தைச் செங்கைப் பொலிசுத! வேடுவர் ... ... புனமீதே

வெண்டித் தங்கித் திரி கிழவா! அதி
துங்கத் துங்கக்கிரி அருணாபுரி
வெங்கண் சிங்கத்து அடி மயில்ஏறிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 172 செயசெய அருணா

தனதன தனனாத் தனதன தனனத்
தனதன தனனாத் தனதன தனனத்
தனதன தனனாத் தனதன தனனத் ... ... தனதான

செயசெய அருண அத்திரி சிவயநம,
செயசெய அருண அத்திரி மசிவயந,
செயசெய அருண அத்திரி நமசிவய, ... திருமூலா

செயசெய அருண அத்திரி யநமசிவ,
செயசெய அருண அத்திரி வயநமசி,
செயசெய அருண அத்திரி சிவயநம அஸ்த்து ... ... எனமாறி

செயசெய அருண அத்திரி தனில் விழி வைத்து,
அரகர சரண அத்திரி என உருகி,
செயசெய குரு பாக்கியம் என மருவி, ... சுடர்தாளைச்

சிவசிவ சரண அத்திரி செயசெய என,
சரண் மிசை தொழுது ஏத்திய சுவை பெருக,
திருவடி சிவ வாக்கிய கடல் அமுதைக் ... ... குடியேனோ?

செயசெய சரண அத்திரி என முநிவர்க்
கணம் இது வினை காத்திடும் என மருவ,
செடமுடி மலை போற்று அவுணர்கள் அவியச் ... ...
சுடும்வேலா !

திருமுடி அடி பார்த்திடும் என இருவர்க்கு,
அடிதலை தெரியாப் படி நிண, அருணச்
சிவசுடர், சிகி நாட்டவன் இரு செவியில் ... ... புகல்வோனே !

செயசெய சரண அத்திரி எனும் அடியெற்கு,
இருவினை பொடி ஆக்கிய சுடர் வெளியில்
திருநடம் இது பார்த்திடும் என மகிழ் பொன் ... ... குருநாதா !

திகழ் கிளிமொழி பால் சுவை இதழ் அமுதக்
குறமகள் முலைமேல், புதுமணம் மருவிச்
சிவகிரி அருண அத்திரி தலம் மகிழ் பொன் ... ...
பெருமாளே.

திருப்புகழ் 173 தமரம் குரங்களும்

தனன தனந்தனந் தான தத்த தந்த
தனன தனந்தனந் தான தத்த தந்த
தனன தனந்தனந் தான தத்த தந்த ... ...
தனதனத் தனதான

தமர குரங்களும், கார் இருள் பிழம்பும்
மெழுகிய அங்கமும், பார்வையில் கொளுந்து
தழல் உமிழ் கண்களும், காளம் ஒத்த கொம்பும் ... ...
உள, கதக் கட மாமேல்

தனிவரும் அந்தகன் பாசம் விட்டு எறிந்து,
அடவரும் என்று சிந்தை ஆகுலத்து இருந்து,
தமர் அழ, மைந்தரும் சோகம் உற்று இரங்க, ...
மரண பக்குவம் ஆ நாள்

கமல முகங்களும், கோமளத்து இலங்கு
நகையும், நெடுங்கணும், காதினில் துலங்கு
கனக குதம்பையும், தோடும் வஜ்ர அங்க ... ...
தமும், அடல் சுடர்வேலும்,

கடிது உலகு எங்கணும் தாடி இட்டு வந்த
மயிலும், இலங்கு அலங்கார பொன் சதங்கை,
கழல்ஒலி, தண்டையம் காலும் ஒக்க வந்து ... ...
வரம்எனக்கு அருள் கூர்வாய்

இமகிரி வந்த பொன், பாவை பச்சை வஞ்சி,
அகில தலம் பெறும் பூவை, சத்தி, அம்பை,
இளமுலையின் செழும் பால் குடித்து, இலங்கும் ... ...
இயல் நிமிர்த்திடுவோனே!

இறைவர் இறைஞ்ச நின்று, ஆகம ப்ரசங்கம்
உரை செய்திடும் ப்ரசண்டா! விசித்து நின்ற
ரணமுக துங்க வெம் சூர் உடல் பிளந்த ... ...
அயில் உடைக் கதிர்வேலா!

அமணர் அடங்கலும் கூடலில் திரண்டு,
கழுவில் உதைந்து உதைந்து ஏற விட்டு நின்ற,
அபிநவ! துங்க! கங்கா நதிக்கு மைந்த! ... ...
அடியவர்க்கு எளியோனே!

அமரர் வணங்கு கந்தா! குறத்தி கொங்கை
தனில் முழுகும் கடம்பா! மிகுத்த செஞ்சொல்
அருணை நெடும்தடம் கோபுரத்து அமர்ந்த ... ...
அறுமுகப் பெருமாளே.

திருப்புகழ் 174 தோதகப் பெரும்

தான தத்த தந்த தான தத்த தந்த
தான தத்த தந்த ... ... தனதான

தோதகப் பெரும் பயோதரத்து, இயங்கு
தோகையர்க்கு நெஞ்சம் ... ... அழியாதே,

சூலை, வெப்பு, அடர்ந்த வாத, பித்தம், என்று
சூழ் பிணிக் கணங்கள் ... ... அணுகாதே,

பாதகச் சமன் தன் மேதியில் புகுந்து,
பாசம் விட்டு எறிந்து ... ... பிடியாதே,

பாவலற்கு இரங்கி, நாவலர்க்கு இசைந்த
பாடல் மிக்க செஞ்சொல் ... ... தரவேணும்.

வேதம் மிக்க விந்து நாத! மெய்க் கடம்ப!
வீர பத்ர கந்த! ... ... முருகோனே!

மேருவைப் பிளந்து, சூரனைக் கடிந்து,
வேலையில் தொளைந்த ... ... கதிர்வேலா!

கோதை, பொன் குறிஞ்சி மாது, கச்சு அணிந்த
கோமளக் குரும்பை ... ... புணர்வோனே!

கோலம் உற்று இலங்கு சோண வெற்பு உயர்ந்த
கோபுரத்து அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 175 பாண மலரது

தான தனதன தத்தம் ... ... தனதான

பாண மலர் அது தைக்கும் ... ... படியாலே,

பாவி இளமதி கக்கும் ... ... கனலாலே,

நாணம் அழிய உரைக்கும் ... ... குயிலாலே,

நானும் மயலில் இளைக்கும் ... ... தரமோ தான்?

சேணில் அரிவை அணைக்கும் ... ... திருமார்பா!

தேவர் மகுடம் மணக்கும் ... ... கழல்வீரா!

காண அருணையில் நிற்கும் ... ... கதிர்வேலா!

காலன் முதுகை விரிக்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 176 புலையனான

தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான ... ... தனதான

புலையன் ஆன மா ஈனன், வினையில் ஏகு மாபாதன்,
பொறை இலாத கோபீகன், ... முழுமூடன்,

புகழ் இலாத தாமீகன், அறிவு இலாத காபோதி,
பொறிகள் ஒடி போய்வீழும் ... ... அதிசூதன்,

நிலை இலாத கோமாளி, கொடை இலாத ஊதாரி,
நெறி இலாத ஏமாளி ... ... குலபாதன்.

நினது தாளை நாள்தோறும் மனதில் ஆசை வீடாமல்
நினையுமாறு நீ மேவி ... ... அருள்வாயே.

சிலையில் வாளி தான்ஏவி எதிர் இராவணார் தோள்கள்
சிதையுமாறு போராடி, ... ஒருசீதை

சிறை இலாமலே கூடி, புவனி மீதிலே வீறு
திறமி ஆன மாமாயன் ... ... மருகோனே!

அலைய மேரு மாசூரர் பொடி அது ஆக வேல் ஏவி
அமர் அது ஆடியே, தோகை ... ... மயில் ஏறி,

அதிக தேவரே சூழ, உலக மீதிலே கூறும்,
அருணை மீதிலே மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 177 வலிவாத பித்தமொடு

தனதான தத்ததன தனதான தத்ததன
தனதான தத்ததன ... ... தனதான

வலிவாத பித்தமொடு, களமாலை, விப்புருதி
வறள், சூலை, குட்டமொடு, ... குளிர், தாகம்,

மலிநீர் இழிச்சல், பெரு வயிறு, ஈளை, கக்கு, களை,
வருநீர் அடைப்பின் உடன், ... **வெகுகோடி**

சிலை நோய் அடைத்த உடல் புவிமீது எடுத்து உழல்கை
தெளியா எனக்கும்இனி ... ... முடியாதே.

சிவம்ஆர் திருப்புகழை எனு நாவினில் புகழ
சிவஞான சித்தி தனை ... ... அருள்வாயே!

தொலையாத பத்தி உள திருமால் களிக்க, ஒரு
சுடர்வீசு சக்ரம் அதை ... ... அருள், ஞான

துவர்வேணி அப்பன், மிகு சிவகாமி கர்த்தன், மிகு
சுகவாரி சித்தன் அருள் ... ... முருகோனே!

அலை, சூரன், வெற்பும், அரிமுகன், ஆனை வத்திரனொடு
அசுரார் இறக்கவிடும் ... ... அழல்வேலா!

அமுத அசனத்தி, குற மடவாள், கரிப்பெணொடும்
அருணாசலத்தில் உறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 178 விதி அதாகவே

தனன தானன தனன தானனா
தனன தானனம் ... ... தனதான

விதி அது ஆகவே, பருவ மாதரார்
விரகிலே மனம் ... ... தடுமாறி,

விவரம் ஆனது ஓர் அறிவு மாறியே,
வினையிலே அலைந் ... ... திடு மூடன்,

முதிய மா தமிழ் இசைய தாகவே
மொழி செய்தே நினைந் ... ... திடுமாறு.

முறைமையாக நின் அடிகள் மேவவே
முனிவு தீர வந்து ... ... அருள்வாயே,

சதி அதுஆகிய அசுரர் மாமுடி
தரணி மீது உகும் ... ... சமர் ஆடிச்

சகல லோகமும் வலம் அது ஆகியே
தழையவே வரும் ... ... குமரஈசா!

அதிக வானவர் கவரி வீசவே,
அரிய கோபுரம் ... ... தனில்மேவி,

அருணை மீதிலெ, மயிலில் ஏறியே
அழகு அது ஆய் வரும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 179 வீறு புழுகான பனி

தானதன தானதன தானதன தானதன
தானதன தானதன ... ... தனதான

வீறு புழுகு, ஆனபனி நீர்கள், மல தோயல்விடு,
மேருகிரி ஆன கொடு ... ... தனபார

மீது புரள் ஆபரண சோதி விதம் ஆன நகை
மேகம் அனுகாடு கடல் ... ... இருள்மேவி,

நாறுமலர் வாசமயிர், நூல் இடையதே துவள,
நாணம் அழிவார்கள் உடன் ... ... உறவாடி,

நாடி அதுவே கதி எனா சுழலும் மோடனை, நின்
ஞான சிவமான பதம் ... ... அருள்வாயே

கூறும் அடியார்கள் வினை நீறு படவே, அரிய
கோல மயில் ஆனபதம் ... ... அருள்வோனே!

கூட அரனோடு நடம் ஆட அரிய காளி அருள்
கூரு சிவகாமி உமை ... ... அருள்பாலா!

ஆறுமுகம் ஆன நதி பால! குற மாது தனம்
ஆர விளையாடி மணம் ... ... அருள்வோனே!

ஆதி ரகுராம ஜய மாலின் மருகா! பெரிய
ஆதி அருணாபுரியில் ... ... பெருமாளே.

180–72 திருக்காளத்தி (வளி)

திருப்புகழ் 180 சரக்கு ஏறி இத்த

தனத்தா தத்தத் தனனா தந்தத்
தனத்தா தத்தத் தனனா தந்தத்
தனத்தா தத்தத் தனனா தந்தத் ... ... தனதான

சரக்கு ஏறு இத்தப் பதிவாழ் தொந்தப்
பரி, காயத்தில் பரிவோடு, ஐந்துச்
சதிக்காரர் புக்கு, உலை மேவு, இந்தச் ... ... செயல்மேவிச்

சலித்தே, மெத்தச் சமுசாரம், பொன்
சுகித்தே, சுற்றத்தவரோடு இன்பத்
தழைத்தே, மெச்சத் தயவோடு இந்தக் ... ... குடிபேணிக்,

குரக் கோணத்தில் கழு நாய் உண்ப,
குழிக்கே வைத்து, சவமாய் நந்து, இக்
குடிற்கே நத்தி, பழுதாய் மங்கப் ... ... படுவேனை.

குறித்தே முத்திக்கு, மறா இன்பத்
தடத்தே பற்றி, சக மாயம் பொய்க்
குலக் கால் வற்ற, சிவஞானம் பொன் ... ... கழல்தாராய்.

புரக் காடு அற்றுப், பொடியாய் மங்க,
கழைச் சாபத்து ஐச் சடலான் நுங்க,
புகைத் தீ பற்று அப் புகலோர் அன்பு உற்று ... ...
அருள்வோனே!

புடைத்தே எட்டுத் திசையோர் அஞ்சத்,
தனிக் கோலத்துப் புகு சூர் மங்கப்,
புகழ்ப் போர் சத்திக்கு இரை ஆனந்தத்து ... ...
அருள்வோனே

திருக் கானத்தில் பரிவோடு அந்தக்
குறக் கோலத்துச் செயலாள் அஞ்சத்,
திகழ்ச் சீர் அத்திக்கு அழல் வா என்பப் ... ... புணர்வோனே!

சிவப் பேறுக்குக் கடையேன் வந்து, உள்
புகச், சீர் வைத்துக் கொளு ஞானம் பொன்
திருக்காளத்திப் பதி வாழ் கந்தப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 181 சிரத்தானத்தி

தனத்தா தத்தத் ... ... தனதான
தனத்தா தத்தத் ... ... தனதான

சிரத் தானத்தில் ... ... பணியாதே,
செகத்தோர் பற்றைக் ... ... குறியாதே,

வருத்தா மற்றுஒப்பு ... ... இலது ஆன,
மலர்த்தாள் வைத்து, எத்– ... ... தனை ஆள்வாய்

நிருத்தா! கர்த்தத்– ... ... துவ நேசா!
நினைத்தார் சித்தத்து ... ... உறைவோனே!

திருத்தாள் முத்தர்க்கு ... ... அருள்வோனே!
திருக்கா ளத்திப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 182 பங்கயனார்

தந்தன தானத் தனந்த தானன
தந்தன தானத் தனந்த தானன
தந்தன தானத் தனந்த தானன ... ... தனதான

பங்கயனார் பெற்றிடும் சராசர
அண்டம் அதுஆய் உற்று இருந்த பார்மிசை
பஞ்சவர் கூடித் திரண்டது ஓர் நர ... ... உருவாயே,

பந்தம் அதாகப் பிணிந்த ஆசையில்,
இங்கிதமாகத் திரிந்து, மாதர்கள்
பண்பு ஒழி சூதைக் கடந்திடாது உழல் ... ... படிறுஆயே,

சங்கடன் ஆகித் தளர்ந்து, நோய் வினை
வந்து, உடல் மூடக், கலங்கிடா மதி
தந்து, அடியேனைப் புரந்திடாய் உனது ... ... அருளாலே

சங்கரர் வாமத்து இருந்த நூபுர
சுந்தரி, ஆதித் தரும் சுதா! பத
தண்டையனே! குக்குடம் பதாகையின் ... ... முருகோனே!

திங்கள் உலா அப்பு அணிந்த வேணியர்,
பொங்கு அரவு ஆடப் புனைந்த மார்பினர்,
திண்சிலை சூலத்து அழுந்து பாணியர், ... நெடிது ஆழ்வார்

சிந்துவிலே உற்று எழுந்த காள வி–
டம் கள மீதில் சிறந்த சோதியர்,
திண்புய மீதில் தவழ்ந்து வீறிய ... ... குருநாதா!

சிங்கம் அதாகத் திரிந்த மால்,கெரு–
வம் பொடி ஆகப் பறந்து, சீறிய
சிம்புள் அதாகச் சிறந்து, அ கா என ... ... வருகோமுன்,

செங் கதிரோனைக் கடிந்த தீவினை
துஞ்சிடவே, நல் தவம் செய்து ஏறிய
தென் கயிலாயத்து அமர்ந்து வாழ்வு அருள் ... ... பெருமாளே.

183–216 சிதம்பரம் (வான்)

திருப்புகழ் 183 கனகசபை மேவும்

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் ... ... தனதானா

கனக சபை மேவும் எனது குருநாத
கருணை முருகேசப் ... ... பெருமாள் காண்

கனக நிற வேதன் அபயம்இட மோது
கர கமல சோதிப் ... ... பெருமாள் காண்

வினவும் அடியாரை மருவி விளையாடு
விரகு ரச மோகப் ... ... பெருமாள் காண்

விதி முநிவர் தேவர் அருணகிரி நாதர்
விமல சர சோதிப் ... ... பெருமாள் காண்

சனகி மணவாளன் மருகன் என, வேத
சத மகிழ் குமாரப் ... ... பெருமாள் காண்

சரண சிவகாமி, இரண குலகாரி
தரு முருக நாமப் ... ... பெருமாள் காண்

இனிது வனம் மேவும் அமிர்த குற மாதொடு
இயல் பரவு காதல் ... ... பெருமாள் காண்

இணை இல் இப தோகை மதியின் மகளோடும்
இயல் புலியுர் வாழ்பொன் ... ... பெருமாளே.

திருப்புகழ் 184 கைத்தருண சோதி

தத்ததன தான தத்ததன தான
தத்ததன தான ... ... தனதான

கைத் தருண சோதி அத்தி முக வேத
கற்பக சகோத்ரப் ... ... பெருமாள்காண்!

கற்பு சிவகாமி நித்ய கலியாணி
கத்தர் குருநாதப் ... ... பெருமாள்காண்!

வித்து ருப ராமருக்கு மருகான
வெற்றி அயில் பாணிப் ... ... பெருமாள்காண்!

வெற்புஉள கடாகம் உட்க, உதிர வீசு
வெற்றிமயில் வாகப் ... ... பெருமாள்காண்!

சித்ரமுகம் ஆறு முத்தும் அணி மார்பு
திக்கினின் இலாதப் ... ... பெருமாள்காண்!

தித்திமிதி தீதென ஒத்தி விளையாடு
சித்திர குமாரப் ... ... பெருமாள்காண்!

சுத்த விர சூரர் பட்டுவிழ, வேலை
தொட்ட கவி ராஜப் ... ... பெருமாள்காண்!

துப்பு வளியோடும் அப் புலியுர் மேவு
சுத்த சிவஞானப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 185 இருவினையின் மதி

தனதனன தனன தந்தத் ... ... தனதானா
தனதனன தனன தந்தத் ... ... தனதானா

இருவினையின் மதி மயங்கித் ... ... திரியாதே,
எழுநரகில் உழலும் நெஞ்சு உற்று ... ... அலையாதே,

பரமகுரு அருள் நினைந்திட்டு ... ... உணர்வாலே
பரவு தரிசனையை என்று எற்கு ... ... அருள்வாயே.

தெரிதமிழை உதவு சங்கப் ... ... புலவோனே!
சிவன்அருளும் முருக! செம்பொன் ... ... கழலோனே!

கருணைநெறி புரியும் அன்பர்க்கு ... ... எளியோனே!
கனகசபை மருவு கந்த! ... ... பெருமாளே!

திருப்புகழ் 186 குகனே குருபரனே

தனன தனதன தானன தந்தத்
தனன தனதன தானன தந்தத்
தனன தனதன தானன தந்தத் ... ... தனதான

குகனே குருபரனே என நெஞ்சில்
புகழ, அருள்கொடு, நாவினில் இன்பக்
குமுளி, சிவ அமுது ஊறுக, உந்திப் ... ... பசிஆறிக்,

கொடிய இருவினை மூலமும், வஞ்சக்
கலிகள், பிணி இவை வேரொடு சிந்திக்
குலைய, **நமசிவய ஓம் என கொஞ்சிக் ... ... களிகூரப்**

பகலும் இரவும் இலா வெளி இன்புக்
குறுகி, இணை இலி நாடக செம்பொன்
பரம கதி இது ஆம் என சிந்தித்து, ... அழகாகப்

பவளம் அன திருமேனியுடன், பொன்
சரண அடியவர்ஆர், ம(ன்)ன அம் பொன்,
தருண சரண் மயில் ஏறி, உன் அம்பொன் ... ... கழல்தாராய்

தகுட தகுதகு தாதக தந்தத்
திகுட திகுதிகு தீதக தொந்தத்
தடுடு டுடுடுடு டாடக டிங்குட்டு ... ... இயல்தாளம்

தபலை திமிலைகள் பூரிகை பம்பைக்
கரடி தமருகம் வீணைகள் பொங்கத்
தடி அழனம் **உக மாருத சண்டச் ... ... சமர்ஏறிக்**

ககன மறைபட ஆடிய செம்புள்
பசிகள் தணிவுற, சூரர்கள் மங்க,
கடல்கள் எறிபட, நாகமும் அஞ்சத் ... ... தொடும்வேலா!

கயிலை மலைதனில் ஆடிய தந்தைக்கு
உருக மனம் முன நாடியெ கொஞ்சிக்
கனக சபைதனில் மேவிய கந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 187 வந்து வந்துவித்தூறி

தந்த தந்தனத் தான தந்ததன
தந்த தந்தனத் தான தந்ததன
தந்த தந்தனத் தான தந்ததன ... ... தந்ததான

வந்து வந்து வித்து ஊறி, என் தன் உடல்
வெந்து வெந்து விட்டு ஓட, நொந்து உயிரும்
வஞ்சினங்களில் காடு கொண்ட வடி ... ... வங்களாலே

மங்கி மங்கி விட்டேனை, உன் தனது
சிந்தை சந்தொஷித்து ஆளு கொண்டு அருள
வந்து, சிந்துரத்து ஏறி, **அண்டரொடு ... ... தொண்டர்சூழ**

எந்தன் வஞ்சனைக் காடு சிந்திவிழ,
சந்தர், அண்டு இசைத் தேவ அரம்பையர்
கனிந்து பந்து அடித்து ஆடல் கொண்டு வர, ...
மந்தி மேவும்

எண் கடம்பு அணித் தோளும் அம்பொன் முடி,
சுந்தரம் திருப் பாத பங்கயமும்,
என்தன் முந்துஉறத் தோணி, உன்தனது ... ...
சிந்தை தாராய்.

அந்தரம் திகைத்து ஓட, விஞ்சையர்கள்
சிந்தை மந்திரத்து ஓட, கெந்தருவர்
அம்புயன் சலித்து ஓட, எண் திசையை ... ...
உண்ட மாயோன்

அஞ்சி, உன்பதச் சேவை தந்திடு என,
வந்த வெம் சினார் காடு எரிந்து விழ,
அங்கியின் குணக் கோலை உந்திவிடு ... ...
செங்கைவேலா!

சிந்துரம் பணைக் கோடு, கொங்கை குற
மங்கை இன்புற, தோள் அணைந்து உருக
சிந்துரந்தனைச் சீர் மணம் புணர் நல் ... ... கந்தவேளே!

சிந்தி முன் புரக் காடு மங்க, நகை
கொண்ட செந்தழல் கோலர், அண்டர்புகழ்
செம்பொன் அம்பலத்து ஆடும் அம்பலவர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 188 சிரித்துச் சங்கொளி

தனத்தத் தந்தன தானன தானன
தனத்தத் தந்தன தானன தானன
தனத்தத் தந்தன தானன தானன ... ... தனதான

சிரித்து, சங்கு ஒளியாம், மினல் ஆம் என
உருக்கி, கொங்கையினால் உற மேல் விழு
செணத்தில் சம்பளமே பறி காரிகள், ... சிலபேரைச்

சிமிட்டிக் கண்களினால் உறவே மயல்
புகட்டி, செந்துகிலால் வெளியாய் இடை
திருத்திப், பண் குழல் ஏய் முகில் ஓவிய ... ... மயில்போலே

அருக்கி, பண்பு உறவே கலையால் முலை
மறைத்து, செந்துவர் வாய்அமுது ஊறல்கள்
அளித்து, பொன் குயிலாம் எனவே குரல் ... ... மிடறு ஓதை

அசைத்துக், **கொந்தள ஒலைகள் ஆர்பணி**
மினுக்கி, சந்தன வாசனை சேறுடன்
அமைத்து, பஞ்சணை மீது அணை மாதர்கள் ... ...
உறவுஆ மோ?

இரைத்துப் பண்டு அமராவதி வானவர்
ஒளித்து, கந்தசுவாமி பராபரம்
எனப்பட்டு, எண்கிரி ஏழ்கடல் தூள்பட, ... அசுரார்கள்

இறக்க, சிங்கம தேர் பரி யானையொடு
உறுப்பில் செங்கழுகு ஓரிகள் கூளியொடு
இரத்தச் சங்கம் அது ஆடிட வேல்விடு ... ... மயில்வீரா!

சிரித்திட்டு அம் புரமே, மதனார்உடல்
எரித்துக் கண்ட கபாலியர் பால்உறை
திகழ்ப்பொன் சுந்தரியாள் சிவகாமி நல்– ... ... கிய சேயே!

திருச் சித்தம் தனிலே குறமான் அதை
இருத்தி, கண் களிகூர் திகழ் ஆடக
திருச்சிற்றம்பல மேவி உலாவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 189 பருவம் பணை

தனனந் தனத்த தந்த தனனந் தனத்த தந்த
தனனந் தனத்த தந்த ... ... தனதான

பருவம் பணைத்து இரண்டு கரி கொம்பு எனத் திரண்டு
பவளம் பதித்த செம்பொன் ... ... நிறமார்பில்

படரும் கனத்த கொங்கை, மினல் கொந்தளித்து சிந்த
பல விஞ்சையைப் புலம்பி, ... அழகான

புருவம் சுழற்றி, இந்த்ர தநு வந்து உதித்தது என்று
புளகம் செலுத்து இரண்டு ... ... கயல்மேவும்

பொறிகண் சுழற்றி, ரம்ப பரிசம் பயிற்றி, மந்த்ர
பொடிகொண்டு அழிக்கும் வஞ்சர் ... ... உறவு ஆமோ?

உருவம் தரித்து உகந்து, கரமும் பிடித்து வந்து,
உறவும் பிடித்து, அணங்கை ... ... வனமீதே

ஒளிர்கொம்பினை, சவுந்தரிய உம்பலைக் கொணர்ந்து
ஒளிர் வஞ்சியைப் புணர்ந்த ... ... மணிமார்பா!

செருவெம் களத்தில் வந்த அவுணன் தெறித்து மங்க,
சிவம் அஞ்செழுத்தை முந்த ... ... விடுவோனே!

தினமும் களித்து செம்பொன் உலகம் துதித்து இறைஞ்சு
திரு அம்பலத்து அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 190 மதவெம் கரி

தன்னந் தனத்த தந்த தனனந் தனத்த தந்த
தன்னந் தனத்த தந்த ... ... தனதான

மதவெம் கரிக்கு இரண்டு வலு கொம்பு எனத் திரண்டு
வளரும் தனத்து அணிந்த ... ... மணிஆரம்,

வளை செங்கையில் சிறந்த ஒளி கண்டு, நித்து இலங்கு
வரரும் திகைத்து இரங்க ... ... வருமானார்,

வித இங்கித ப்ரியங்கள், நகை கொஞ்சுதல், குணங்கள்
மிகை கண்டுஉறக் கலங்கி ... ... மருளாதே.

விடு சங்கை அற்று உணர்ந்து, வலம் வந்து, உனைப் புகழ்ந்து,
மிக விஞ்சு பொற்ப தங்கள்... தருவாயே.

நதியும் திருக் கரந்தை மதியும் சடைக்கு அணிந்த
நட நம்பர் உற்று இருந்த ... ... கயிலாய

நகம் அங்கையில் பிடுங்கும் அசுரன் சிரத்தொடு அங்கம்
நவதுங்க ரத்நம் உந்து ... ... திரள் தோளும்

சிதையும்படிக்கு ஓர்அம்பு தனை முன் தொடுத்த கொண்டல்
திறல் செங்கண் அச்சுதன் தன் ... ... மருகோனே!

தினமும் கருத்து உணர்ந்து, சுரர் வந்து உறப் பணிந்த
திரு அம்பலத்து அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 191 காய மாய வீடு

தான தான தான தானன தான தந்த
தத்த தந்த தத்த தந்த ... ... தந்ததான

காய மாய வீடு மீறிய கூடு, நந்து
புற்புதம் தனில் குரம்பை ... ... கொண்டு, நாளும்

காசில் ஆசை தேடி, வாழ்வினை நாடி, இந்த்ரிய
ப்ரமம் தடித்து அலைந்து, ... **சிந்தை வேறாய்,**

வேயில் ஆய தோள மா மடவார்கள் பங்க–
யத்து கொங்கை உற்று, இணங்கி, ... நொந்திடாதே.

வேத கீத போத மோன மெய்ஞ்ஞானம் நந்த,
முற்றிடு இன்ப முத்தி ஒன்று ... ... தந்திடாயோ?

மாய வீர தீர சூரர்கள் பாற நின்ற
விக்ரமம் கொள் வெற்பு இடந்த ... ... செங்கைவேலா!

வாகை வேடர் பேதை காதல! வேழ மங்கை–
யைப் புணர்ந்த வெற்ப! கந்த! ... ... செந்தில்வேளே!

ஆயும் வேத கீதம் ஏழ்இசை பாட, அஞ்செ–
ழுத் தழங்க, முட்ட நின்று ... ... துன்றுசோதீ!

ஆதி நாதர் ஆடு நாடக சாலை, அம்ப–
லச் சிதம்பரத்து அமர்ந்த ... ... தம்பிரானே.

திருப்புகழ் 192 அவகுண விரகனை

தனதன தனதன தானான தானன
தனதன தனதன தானான தானன
தனதன தனதன தானான தானன ... ... தந்ததான

அவகுண விரகனை, வேதாள ரூபனை,
அசடனை, மசடனை, ஆசார ஈனனை,
அகதியை, மறவனை, ஆதாளி வாயனை, ... அஞ்சுபூதம்

அடைசிய சவடனை, மோட அதி மோடனை,
அழிகரு வழிவரு வீணாதி வீணனை,
அழுகலை, அவிசலை, ஆறான ஊணனை, ... அன்பிலாத

கவடனை, விகடனை, நானா விகாரனை,
வெகுளியை, வெகுவித மூதேவி மூடிய
கலியனை, அலியனை, ஆதேச வாழ்வனை, ... வெம்பிவீழும்

களியனை, அறிவுரை பேணாத மாநுட
கசனியை, அசனியை, மாபாதன் ஆகிய
கதிஇலி தனை, அடி நாயேனை ஆளுவது ... ... எந்த நாளோ?

மவுலியில் அழகிய பாதாள லோகனும்,
மரகத முழுகிய காகோத ராஜனும்,
மநுநெறியுடன் வளர் சோழநாடர் கோன்உடன், ... உம்பர்சேரும்

மகபதி புகழ் புலிஊர் வாழு நாயகர்,
மடமயில் மகிழ்வுற வான்நாடர் கோ என,
மலைமகள்உமைதரு வாழ்வே! மனோகர! ... ... **மன்றுள் ஆடும்**

சிவசிவ ஹரஹர தேவா நமோநம!
தெரிசன பரகதி ஆனாய் நமோநம!
திசையினும் இசையினும் வாழ்வே நமோநம! ... ...
செஞ்சொல்சேரும்

திருதரு கலவி மணாளா நமோநம!
திரிபுரம் எரிசெய்த கோவே நமோநம!
ஜெயஜெய! ஹரஹர! தேவா! சுரஅதிபர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 193 கட்டி முண்டக

தத்த தந்ததன தான தந்ததன
தத்த தந்ததன தான தந்ததன
தத்த தந்ததன தான தந்ததன ... ... தனதான

கட்டி முண்டக அர பாலி அங்கிதனை
முட்டி, அண்டமொடு தாவி, விந்துஒலி
கத்த, மந்திர அவதான வெண்புரவி ... ... மிசைஏறிக்

கற்பகம் தெருவில் வீதி கொண்டு, சுடர்
பட்டி மண்டபம் உடாடி, இந்துவொடு
கட்டி விந்து பிசகாமல், **வெண்பொடிகொடு ... ... அசையாமல்**

சுட்டு வெம்புர நிறாக, விஞ்சை கொடு
தத்துவங்கள் விழ சாடி, எண்குணவர்
சொர்க்கம் வந்து கையுள் ஆக, எந்தை பதம் ... ...
உற மேவித்

துக்கம் வெந்துவிழ, ஞானம் உண்டு, குடில்
வச்சிரங்கள் என, மேனி தங்கம்உற,
சுத்த அகம் புகுத, வேத விந்தையொடு ... ... புகழ்வேனோ?

எட்டு இரண்டும் அறியாத என்செவியில்,
எட்டு இரண்டும் இது ஆம் இலிங்கம்என,
எட்டு இரண்டும் வெளியா மொழிந்த குரு! ... ... முருகோனே!

எட்டு இரண்டு திசை ஓட செங்குருதி,
எட்டு இரண்டும் உருவாகி வஞ்சகர் மெல்
எட்டு இரண்டு திசையோர்கள் பொன்ற,அயில் ... ...
விடுவோனே!

செட்டி என்று சிவகாமி தன் பதியில்
கட்டு செங்கை வளை கூறும் எந்தைஇட
சித்தமும் குளிர அநாதி வண்பொருளை ... ... நவில்வோனே!

செட்டி என்று வன மேவி, இன்ப ரச
சத்தியின் செயலினாளை அன்பு உருக
தெட்டி வந்து, புலியூரின் மன்றுள் வளர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 194 நஞ்சினைப் போலுமன

தந்தனத் தானதன தந்தனத் தானதன
தந்தனத் தானதன ... ... தந்ததான

நஞ்சினைப் போலும் மன வஞ்சகக் கோளர்களை
நம்புதல் தீது என ... ... நினைந்து, நாயேன்

நண்பு உகு அப் பாதம் அதில் அன்பு உறத் தேடி, உனை
நங்கள் அப்பா சரணம் ... ... என்றுகூறல்

உன்செவிக்கு ஏறலைகொல், பெண்கள்மெல் பார்வையைகொல்,
உன்சொலைத் தாழ்வுசெய்து ... ... மிஞ்சுவார் ஆர்.

உன் தனக்கே பரமும், என் தனக்கு ஆர் துணைவர்,
உம்பருக்கு ஆவதினின் ... ... வந்து தோணாய்.

கஞ்சனைத் தாவி முடி முன்பு குட்டு ஏய,மிகு
கண்களிப் பாக விடு ... ... செங்கையோனே!

கண்கயல் பாவை குற மங்கை பொன் தோள் தழுவு
கஞ்சுகப் பான்மை புனை ... ... பொன்செய் தோளாய்!

அஞ்ச வெற்பு ஏழுகடல் மங்க, நிட்டூரர் குலம்
அந்தரத்து ஏற விடு ... ... கந்தவேளே!

அண்டமுன் பார் புகழும் எந்தை பொற்பு ஊர்புலிசை
அம்பலத்து ஆடும் அவர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 195 செம் கலச

தந்ததன ... ... தனதான
தந்ததன ... ... தனதான

செம்கலச ... ... முலையார்பால்
சிந்தைபல ... ... தடுமாறி.

அங்கம் மிக ... ... மெலியாதே,
அன்புஉருக ... ... அருள்வாயே.

செம்கை பிடி ... ... கொடியோனே!
செம்சொல் தெரி ... ... புலவோனே!

மங்கை உமை ... ... தருசேயே!
மன்றுஉள் வளர் ... ... பெருமாளே!

திருப்புகழ் 196 அத்தன் அன்னை

தத்த தன்ன தய்ய தத்த தன்ன தய்ய
தத்த தன்ன தய்ய ... ... தனதான

அத்தன் அன்னை இல்லம் வைத்த சொன்னம் வெள்ளி
அத்தை நண்ணு செல்வர் ... ... உடன்ஆகி,

அத்து பண்ணு கல்வி சுற்றம் என்னும் அல்லல்
அற்று, நின்னை வல்ல ... ... படிபாடி,

முத்தன் என்ன, வல்லை அத்தன் என்ன, வள்ளி
முத்தன்என்ன உள்ளம் ... ... உணராதே,

முட்ட வெண்மை உள்ள பட்டன், எண்மை கொள்ளு
முட்டன் இங்ஙன் நைவது ... ... ஒழியாதோ?

தித்தி மன்னு தில்லை நிர்த்தர் கண்ணின் உள்,
உதித்து மன்னு பிள்ளை ... ... முருகோனே?

சித்தி மன்னு செய்ய சத்தி துன்னு கைய!
சித்ர வண்ண வல்லி ... ... அலர்சூடும்

பத்தர் உண்மை சொல்உள் உற்ற செம்மல்! வெள்
இபத்தர் கன்னி புல்லும் ... ... மணிமார்பா!

பச்சை வன்னி அல்லி செச்சை சென்னி உள்ள
பச்சை மஞ்ஞை வல்ல ... ... பெருமாளே.

திருப்புகழ் 197 இருள் காட்டு

தனதாத்த தய்ய தனதாத்த தய்ய
தனதாத்த தய்ய ... ... தனதான

இருள்காட்டு செவ்வி ததி காட்டி, வில்லின்
நுதல் காட்டி வெல்லும் ... ... இருபாண

இயல் காட்டு, கொல் குவளை காட்டி, முல்லை
நகை காட்டு வல்லி ... ... **இடைமாதர்**

மருள் காட்டி, நல்குரவு காட்டும் இல்ல
இடுகாட்டின் எல்லை ... ... நடவாத

வழி காட்டி, நல் அறிவு காட்டி, மெல்ல
வினை வாட்டி அல்லல் ... ... செயல்ஆமோ?

தெருள் காட்டு தொல்லை மறை காட்டு(ம்) மல்லல்
மொழி காட்டு தில்லை ... ... இளையோனே!

தினை காட்டு கொல்லை வழிகாட்ட வல்ல
குறவாட்டி புல்லு ... ... மணிமார்பா!

அருள் காட்டு கல்வி நெறி காட்டு செல்வ!
அடல் காட்டு வல் ... அசுரர் கோபா!

அடிபோற்றி அல்லி முடிசூட்ட வல்ல
அடியார்க்கு நல்ல ... ... பெருமாளே.

திருப்புகழ் 198 அக்குப் பீளை

தத்தத் தானன தானன தானன
தத்தத் தானன தானன தானன
தத்தத் தானன தானன தானன ... ... தனதான

அக்கு, பீளை முளா இளை மூளையொடு
புக்கு காய்பனி நீர்மயிர் தோல்குடில
புச்சீ புழுவோடு அடை ஆர் தசை ... ... உறமேவி

அத்திப் பால் பல நாடி குழாய், அள்
வழுப்புச் சார் வலமே விளை ஊளை கொள்
அச்சுத் தோல் குடிலாம் அதிலே பொறி ... ... விரகாளர்

சுக்கத்து ஆழ் கடலே சுகமாம் என
புக்கிட்டு ஆசை, பெண் ஆசை மண்ஆசைகள்
தொக்குத் தீவினை ஊழ்வினை காலமொடு ... ... அதனாலே

துக்கத்தே பரவாமல் சதாசிவ
முத்திக்கே சுகமாக பராபர
சொர்க்கப் பூமியில் ஏறிடவே பதம் ... ... அருள்வாயே

தக்கத் தோகிட தாகிட தீகிட
செக்கச் சேகண தாகண தோகண
தத்தத் தானன டீகுட டாடுடு ... ... எனதாளம்

தத்திச் சூரர் குழாமொடு தேர் பரி
கெட்டு, கேவலமாய் கடல் மூழ்கிட,
சத்திக்கே இரையாம் எனவே விடு ... ... கதிர்வேலா!

திக்கத் தோகண தா எனவே பொரு
சொச்சத் தாதையர் தாம் எனவே திரு
செக்கர்ப் பாதம் அதே பதியா சுதி ... ... அவைபாட,

செப்பொன் பீலி உலாமயில் மாமிசை
பக்கத்தே குற மாதொடு, சீர்பெறு
தெற்குக் கோபுர வாசலில் மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 199 தாது மாமலர்

தான தானன தனனா தானன
தான தானன தனனா தானன
தான தானன தனனா தானன ... ... தனதான

தாது மாமலர் முடியாலே, பத–
றாத நூபுர அடியாலே, கர
தாளம் ஆகிய நொடியாலே, மடி ... ... பிடியாலே,

சாடை பேசிய வகையாலே, மிகு
வாடை பூசிய நகையாலே, பல
தாறு மாறு சொல் மிகையாலே, **அன ... ... நடையாலே,**

மோதி மீறிய முலையாலே, முலை
மீதில் ஏறிய கலையாலே, வெகு
மோடி நாணய விலையாலே, மயல் ... ... தருமானார்

மோக வாரிதி தனிலே நாள்தொறும்
மூழ்குவேன், உனது அடியார் ஆகிய
மோன ஞானிகள் உடனே சேரவும் ... ... அருள்வாயே.

காதலாய் அருள் புரிவாய், நான்மறை
மூலமே என,உடனே மா கரி
காண நேர்வரு திருமால் நாரணன் ... ... மருகோனே!

காதல் மாதவர் வலமே சூழ், சபை
நாதனார் தமது இடமே வாழ் சிவ–
காம நாயகி தரு பாலா! புலி ... ... சையில்வாழ்வே!

வேத நூன்முறை வழுவாமே, தினம்
வேள்வியால் எழில் புனை மூவாயிர
மேன்மை வேதியர் மிகவே பூசனை ... ... புரிகோவே!

வீறு சேர் வரை அரசாய் மேவிய
மேரு மால்வரை என நீள் கோபுர
மேலை வாயிலின் மயில் மீது ஏறிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 200 எலுப்புத் தோல்

தனத்தத் தானன தானன தானன
தனத்தத் தானன தானன தானன
தனத்தத் தானன தானன தானன ... ... தந்ததான

எலுப்புத் தோல்மயிர் நாடி குழாம் மிடை
இறுக்குச் சீ புழுவோடு அடை மூளைகள்,
இரத்தச் சாகர, நீர் மலம் மேவிய கும்பிஓடை,

இளைப்பு, சோகைகள், வாதம், விலாவலி,
உளைப்பு, சூலையொடே, வலு ஆகிய
இரைப்பு, கேவல மூல வியாதியொடு ... ... அண்டவாதம்,

குலைப்பு, காய்கனல், நீரிழிவு, ஈளையொடு
அளைப்பு, காது அடை, கூனல், விசூசிகை,
குருட்டு, கால்முடம், ஊமை, உள் ஊடறு ... ... கண்டமாலை

குடிப் புக்கு ஊனம் இதே சதமாம் என
எடுத்து, பாழ்வினையால் உழல் நாயென் உன்
இடத்துத் தாள்பெற, ஞான சதாசிவ ... ... அன்புதாராய்.

கெலிக்கப் போர்பொரு சூரர் குழாம் உமிழ்
இரத்தச் சேறு எழ, தேர்பரி யாளிகள்
கெடுத்திட்டே கடல் சூர்கிரி தூள்பட ... ... கண்டவேலா!

கிளர்ப்பொன் தோளி, சராசர மேவியெ
அசைத்துப் பூசைகொள் ஆயி, பராபரி,
கிழப்பொன் காளைமெல் ஏறும்எம் நாயகி ... ... பங்கின்மேவும்

வலித்துத் தோள்மலை ராவணன் ஆனவன்
எடுத்தப்போது, உடல் கீழ் விழவே செய்து,
மகிழ்ப்பொன் பாத! சிவாயநமோ!அர! ... ... சம்புபாலா!

மலைக்கு ஒப்பா முலையாள் குற மாதினை
அணைத்துச் சீர் புலியூர் பரம் ஆகிய
வடக்குக் கோபுர வாசலில் மேவிய ... ... தம்பிரானே.

திருப்புகழ் 201 வாத பித்தமொடு

தான தத்ததன தான தத்ததன
தான தத்ததன தான தத்ததன
தான தத்ததன தான தத்ததன ... ... தந்ததான

வாத பித்தமொடு சூலை விப்புருதி,
ஏறு கல்படுவன் ஈளை பொக்கு இருமல்
மாலை புற்று எழுதல் ஊசல் பல்சனியொடு ... ... அந்திமாலை

மாசு அடைக் குருடு, காது அடைப்பு, செவிடு,
ஊமை, கெட்டவலி மூலம் முற்றுதரு,
மாலை உற்ற தொணுறுஆறு தத்துவர்கள் ... ... உண்டகாயம்

வேத வித்து பரி கோலம் உற்று, விளை–
யாடுவித்த கடல் ஓடம், மொய்த்த பல
வேடம் இட்டு, **பொருள் ஆசை பற்றிஉழல் ... ... சிங்கியாலே**

வீடு கட்டி, மயல் ஆசை பட்டு, விழ
ஓசை கெட்டு மடியாமல் முத்திபெற,
வீடு அளித்து மயிலாடு சுத்தவெளி ... ... சிந்தியாதோ?

ஓத அத்தி முகிலோடு சர்ப்ப முடி
நீறு பட்டு அலற, சூர வெற்பு அவுண–
ரோடு பட்டு விழ வேலை விட்டபுகழ் ... ... அங்கிவேலா

ஓ நமச்சிவய சாமி, சுத்த அடி–
யார்களுக்கும் உபகாரி, பச்சை, உமை
ஓர் புறத்து அருள் சிகாமணிக் கடவுள் ... ... தந்த சேயே!

ஆதி கற்பக விநாயகர்க்கு பிறகு
ஆன பொன் சரவணா! பரப்பிரமன்
ஆதி உற்றபொருள் ஒதுவித்தமை ... ... அறிந்தகோவே!

ஆசை பெற்ற குறமாதை நித்த வனம்
மேவி சுத்த மணம் ஆடி நற்புலியுர்
ஆடகப் படிக கோபுரத்தின் மகிழ் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 202 சுரும்பு உற்ற

தனந்தத்த தனதான தனந்தத்த தனதான
தனந்தத்த தனதான ... ... தனதான

சுரும்பு உற்ற பொழில் தோறும் விரும்பு உற்ற குயில் கூவ,
துரந்து உற்ற குளிர் வாடை ... ... அதனாலும்,

துலங்கு உற்ற மருவாளி விரைந்து உற்ற படி ஆல
தொடர்ந்து உற்று வருமாதர் ... ... வசையாலும்,

அரும்பு உற்ற மலர்மேவு செழும் கொற்ற அணையாலும்,
அடைந்திட்ட விடைமேவு ... ... மணியாலும்,

அழிந்து உற்ற மடமானை அறிந்து, அற்றம் அது பேணி,
அசைந்து உற்ற மது மாலை ... ... தரவேணும்.

கரும் கொற்ற மதவேழம் முனிந்து உற்ற கலைமேவி
கரந்து உற்ற மடமானின் ... ... உடனேசார்

கரும்பு உற்ற வயல்சூழ பெரும்பற்றப் புலியூரில்
களம்பற்றி நடமாடும் ... ... அரன்வாழ்வே!

இருந்து உற்று மலர் பேணி இடும் பத்தர் துயர் தீர
இதம் பெற்ற மயில்ஏறி ... ... வரு கோவே!

இனம் துற்ற வருசூரன் உருண்டிட்டு விழ, வேல் கொடு
எறிந்திட்டு விளையாடு ... ... பெருமாளே.

திருப்புகழ் 203 விடுங்கைக்கு ஒத்த

தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன
தனந்தத் தத்தன தானன தானன ... ... தனதான

விடுங்கைக்கு ஒத்த கடா உடையான் இடம்
அடங்கி, கைச் சிறையான அநேகமும்
விழுங்கப்பட்டு அறவே, அறல் ஓதியர் ... ... விழியாலே

விரும்பத் தக்கன போகமும் மோகமும்,
விளம்பத் தக்கன ஞானமும் மானமும்,
வெறும் சுத்தச் சலமாய் வெளியாய், **உயிர் ... ... விடுநாளில்**

இடும் கட்டைக்கு இரையாய் அடியேன் உடல்
கிடந்திட்டு, தமர் ஆனவர் கோ என,
இடம் கட்டிச் சுடுகாடு புகாமுனம், ... மனதாலே

இறந்திட்டுப் பெறவே கதி ஆயினும்,
இருந்திட்டுப் பெறவே மதி ஆயினும்,
இரண்டில் தக்கது ஓர் ஊதியம் நீ தர ... ... இசைவாயே.

கொடுங்கைப்பட்ட மராமரம் ஏழ்உடன்
நடுங்க, சுக்ரிவனோடு அமர் ஆடிய
குரங்கைச் செற்று, மகா உததி தூள்எழ, ... நிருதேசன்

குலம்கண் பட்ட நிசாசரர் கோ என,
இலங்கைக்குள் தழலோன் எழ, நீடிய
குமண்டைக் குத்திர ராவணனார் முடி ... ... அடியோடே

பிடுங்கத் தொட்ட, சர அதிபனார் அதி
ப்ரியம் கொள் தக்க நல் மாமருகா! **இயல்**
ப்ரபஞ்சத்துக்கு ஒரு பாவலனார் என ... ... விருதுஊதும்

ப்ரசண்டச் சொல் சிவ வேத சிகாமணி!
ப்ரபந்தத்துக்கு ஒரு நாத! சதாசிவ
பெரும்பற் றப்புலி யூர்தனில் மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 204 எழுகடல் மணலை

தனதன தனன தனதன தனன
தனதன தனன ... ... தனதான

எழுகடல் மணலை அளவு இடின் அதிகம்,
எனது இடர் பிறவி ... ... அவதாரம்,

இனி உனது அபயம், எனதுஉயிர் உடலும்,
இனி உடல் விடுக ... ... முடியாது.

கழுகொடு நரியும் எரிபுவி மறலி
கமலனும் மிகவும் ... ... அயர்வுஆனார்.

கடன் உனது அபயம், அடிமை உன் அடிமை,
கடுகி உன்அடிகள் ... ... தருவாயே,

விழு திகழ் அழகி, மரகத வடிவி,
விமலி முன் அருளும் ... ... முருகோனே!

விரிதலம் எரிய, குலகிரி நெரிய,
விசைபெறு மயிலில் ... ... வருவோனே!

எழுகடல் குமுற, அவுணர்கள் உயிரை
இரைகொளும் அயிலை ... ... உடையோனே!

இமையவர் முநிவர் பரவிய புலியு–
ரினில் நடம் மருவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 205 தறுகணன் மறலி

தனதன தனன தனதன தனன
தனதன தனனாத் ... ... தனதான

தறுகணன் மறலி முறுகிய கயிறு
தலைகொடு விசிறீக் ... ... கொடுபோகும்

சளம் அது தவிர, அளவிடு சுருதி
தலைகொடு பலசாத் ... ... திரம் ஓதி,

அறுவகை சமயம் முறைமுறை சருவி
அலைபடு தலை மூச் ... ... சினை ஆகும்.

அருவரு ஒழிய, வடிவுஉள பொருளை
அலம்வர அடியேற்க்(கு) ... ... அருள்வாயே.

நறுமலர் இறைவி, அரிதிரு மருக,
நகம் உதவிய பார்ப் ... ... பதி வாழ்வே!

நதிமதி இதழி பணி அணி கடவுள்
நடம்இடு புலியூர்க் ... ... குமரேசா!

கறுவிய நிருதர் எறிதிரை பரவு
கடல்இடை பொடியாப் ... ... பொருதோனே!

கழல்இணை பணியும் அவருடன் முனிவு
கனவிலும் அறியாப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 206 இருளும் ஓர்கதிரணு

தனன தானன தனன தானன
தன்ன தானன ... ... தனதான

இருளும் ஓர் கதிர் அணுக ஒணாத, பொன்
இடம் அது ஏறி, என் ... ... இருநோயும்

எரியவே, மலம் ஒழியவே, சுடர்
இலகும் மூலக ... ... ஒளிமேவி,

அருவி பாய, இன் அமுதம் ஊற, உன்
அருள் எலாம் எனது ... ... அளவுஆக

அருளியே, சிவம் மகிழவே பெற
அருளியே, இணை ... ... அடிதாராய்.

பரம தேசிகர், குரு இலாதவர்,
பரவை வான்மதி ... ... தவழ்வேணிப்

பவள மேனியர், எனது தாதையர்,
பரம ராசியர் ... ... அருள்பாலா!

மருவி நாய்எனை அடிமை ஆம் என,
மகிழ்மெய் ஞானமும் ... ... அருள்வோனே!

மறை குலாவிய புலியுர் வாழ், குற–
மகள் மெல் ஆசைகொள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 207 காவி உடுத்தும்

தான தனத்தம் தான தனத்தம்
தான தனத்தம் ... ... தனதான

காவி உடுத்தும், தாழ்சடை வைத்தும்
காடுகள் புக்கும் ... ... தடுமாறி,

காய்கனி துய்த்தும், காயம் ஒறுத்தும்,
காசினி முற்றும் ... ... திரியாதே.

சீவன் ஒடுக்கம், பூத ஒடுக்கம்
தேற உதிக்கும் ... ... பரஞான

தீப விளக்கம் காண, எனக்கு உன்
சீதள பத்மம் ... ... தருவாயே.

பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட, உக்ரம் ... ... தருவீரா!

பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சும் ... ... கதிர்வேலா!

தூவிகள் நிற்கும் சாலி வளைக்கும்
சோலை சிறக்கும் ... ... புலியூரா!

சூரர் மிகக் கொண்டாட நடிக்கும்
தோகை நடத்தும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 208 கோதிக் கோதி

தானத் தானத் தாந்தன தானன
தானத் தானத் தாந்தன தானன
தானத் தானத் தாந்தன தானன ... ... தனதான

கோதிக் கோதிக் கூந்தலிலே மலர்
பாவித்து, ஆகச் சாந்து அணி வார்முலை
கோடுத் தானை, தேன் துவர் வாய்மொழி ... ... குயில்போலக்

கூவிக் கூவி, காண்டுஇசை போலவெ
நாணிக் கூனிப் பாய்ந்திடுவார் சிலர்,
கூடித் தேறிச் சூழ்ந்திடுவார், பொருள் ... ... வருமோ என்று

ஓதித் தோளில் பூந்துகிலால் முலை
மூடி, சூதில் தூங்கம் இலார், தெரு
ஓடித் தேடிச் சோம்பிடுவார், **சில ... ... விலைமாதர்**

ஒருச் சேரச் சேர்ந்திடுவார், கலி
சூளைக் காரச் சாங்கம் இலார்,சில
வோரைச் சாகத் தீம்பிடுவார் செயல் ... ... உறவுஆமோ?

வேதத் தோனைக் காந்தள் கையால் தலை
மேல் குட்டு ஆடி, பாந்தள் சதா முடி
வீரிட்டு ஆடக் காய்ந்து, அசுரார்கள்மெல் ... ... விடும்வேலா!

வேளைச் சீறித் தூங்கலொடே, வய
மாவைத் தோலைச் சேர்ந்து அணிவார்இடம்
மீது உற்றாள் பொன் சாம்பவி மாதுஉமை ... ... தருசேயே!

நாதத்து ஓசைக் காண் துணையே! சுடர்
மூலத் தோனைத் தூண்டிடவே உயிர்
நாடிக் காலில் சேர்ந்திடவே அருள் ... ... சுரமானை,

ஞானப் பால் முத்தேன் சுருபாள் வளி
மாதைக் கானில் சேர்ந்து அணைவாய், சிவ
ஞானப் பூமித் தேன் புலியூர் மகிழ் ... ... பெருமாளே.

திருப்புகழ் 209 சுடரனைய திருமேனி

தனதனன தனதான தனதனன தனதான
தனதனன தனதான ... ... தனதான

சுடர்அனைய திருமேனி உடை, அழகு முது ஞான
சொருப கிரி இடம் மேவு ... ... முகம் ஆறும்,

சுரர் தெரியல் அளி பாட, மழலை கதி நறை பாய,
துகிர் இதழின் மோழி வேத ... ... மணம் வீச,

அடர் பவள ஒளி பாய, அரிய பரிபுரம் ஆட,
அயில் கரமொடு, எழில் தோகை ... ... மயில் ஏறி,

அடியன் இருவினை நீறு பட, அமரர் இது பூரை
அதிசயம் என, அருள் பாட ... ... வரவேணும்,

விடை பரவி அயன் மாலொடு அமரர் முநி கணம் ஒட,
மிடறு அடைய விடம் வாரி ... ... அருள்நாதன்,

மினல் அனைய இடை மாது இடமருவு குருநாதன்
மிக மகிழ, அநுபூதி ... ... அருள்வோனே!

இடர் கலிகள் பிணி ஓட எனையும் அருள் குறமாதின்
இணை இளநிர் முலை மார்பில் ... ... அணைமார்பா!

இனியமுது புலிபாதனுடன் அரவு சதகோடி
இருடியர்கள் புகழ் ஞான ... ... பெருமாளே.

திருப்புகழ் 210 துத்தி பொற்றன

தத்த தத்தன தான தானன
தத்த தத்தன தான தானன
தத்த தத்தன தான தானன ... ... தனதான

துத்தி பொன் தனம் மேரு ஆம் என
ஒத்து, இபத் திரள் வாகுவாய், அவிர்
துப்பு முத்தொடு மார்பின் ஆடிட, ... மயில்போலே

சுக்கை மைக்குழல் ஆட, நூல்இடை
பட்டு விட்டு அவிர் காமனார் அல்குல்
சுற்றுவித்து உறு வாழை சேர் தொடை ... ... விலைமாதர்,

தத்தை புள் குரல் ஓசை, நூபுரம்
ஒத்த நட்டமொடு ஆடி, மார்முலை
சற்று அசைத்து குலாவும் வேசியர், ... அவரோடே

தர்க்கம் இட்டு, உறவாடி, ஈளை நொய்
கக்கல் விக்கல் கொள் ஊளை நாய்என
சிச்சி சிச்சி எ(ன) நால்வர் கூறிட ... ... உழல்வேனோ?

தித்திமித் திமி தீத தோதக
தத்தனத் தன தான தீதிமி
திக்கு முக்கிட மூரி பேரிகை ... ... தவில்போடச்

சித்ர வித்தையர் ஆட, வானவர்
பொற்பு விட்டிடு சேசெ சே என
செக்கு விட்டு அசுரோர்கள் தூள்பட ... ... விடும்வேலா!

செத்திடச் சமனார் கடாபட
அற்று உதைத்த சுவாமியார் இட
சித்திரச் சிவகாமியார் அருள் ... ... முருகோனே!

தெற்கு அரக்கர்கள் தீவு நீறு இட
விட்ட அச்சுதர் ஈன மானொடு
சித்திரப் புலியூரில் மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 211 நாடா பிறப்பு

தானா தனத்தன தானா தனத்தன
தானா தனத்தன ... ... தனதான

நாடா பிறப்பு முடியாதோ எனக் கருதி
நாயேன் அரற்றும் மொழி ... ... வினைஆயின்,

நாதா! திருச்சபையின் ஏறாது சித்தம் என,
நாலா வகைக்கும் உனது ... ... அருள்பேசி

வாடா மலர்ப் பதவி தாதா எனக் குழறி
வாய் பாறி நிற்கும் எனை, ... அருள்கூர

வாராய், மனக்கவலை தீராய், நினைத் தொழுது
வாரேன், எனக்கு எதிர் முன் ... ... வரவேணும்,

சூடாமணிப் பிரபை ரூபா! கனத்த அரி
தோல் ஆசனத்தி உமை ... ... அருள்பாலா!

தூயா! துதித்தவர்கள் நேயா! எமக்கு அமிர்த
தோழா! கடப்பமலர் ... ... அணிவோனே!

ஏடார் குழல் சுருபி! ஞான ஆதனத்தி, மிகும்
ஏராள் குறத்தி, திரு ... ... மணவாளா!

ஈசா! தனிப்புலிசை வாழ்வே! சுரர்த்திரளை
ஈடேற வைத்த புகழ் ... ... பெருமாளே.

திருப்புகழ் 212 நாலு சதுரத்த பஞ்ச

தானதன தத்த தந்தன தானதன தத்த தந்தன
தானதன தத்த தந்தன ... ... தந்ததான

நாலு சதுரத்த பஞ்சறை, மூலகமலத்தில் அங்கியை,
நாடியின் நடத்தி, மந்திர ... ... பந்தியாலே,

நாரண புரத்தில், இந்துவின் ஊடுஉற இணக்கி, நன்சுடர்
நால்திசை நடத்தி, **மண்டல ... ... சந்தி ஆறில்**

கோலமும் உதிப்ப, கண்டு உள நாலினை மறித்து, இதம்பெறு
கோ என முழக்கு சங்கு ஒலி, ... விந்துநாதம்

கூடிய முகப்பில் இந்திர வான அமுதத்தை உண்டு, ஒரு
கோடி நடனப் பத அம் சபை ... ... என்றுசேர்வேன்?

ஆலமலர் உற்ற சம்பவி, வேர் இலி, குலக் கொழுந்து இலி,
ஆரணர் தலைக் கலம் கொளி, ... செம்பொன் வாசி.

ஆணவ மயக்கமும் கலி, காமியம் அகற்றி, என் தனை
ஆள், உமை, பரத்தி, சுந்தரி ... ... தந்த சேயே!

வேல் அதை எடுத்தும், இந்திரர் மால் விதி பிழைக்க, வஞ்சகர்
வீடு எரி கொளுத்தி, எண் கடல் ... ... உண்டவேலா!

வேத சதுரத்தர், தென் புலியூர் உறை ஒருத்தி பங்கினர்,
வீறு நடனர்க்கு இசைந்து அருள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 213 பனி போலத் துளி

தனனா தத்தன தனனா தத்தன
தனனா தத்தன ... ... தனதான

பனி போலத் துளி சலவாய் உள் கரு
பதின் மாதத்திடை ... ... தலைகீழாய்ப்

படி மேவிட்டு உடல் தவழ்வார், தத்துஅடி
பயில்வார், உத்தியில் ... ... சிலநாள்போய்,

தன மாதர்க் குழி விழுவார், தத்துவர்,
சதிகாரச் சமன் ... ... வருநாளில்,

தறியார், இல் சடம் விடுவார், இப்படி
தளர் மாயத் துயர் ... ... ஒழியாதோ?

வினை மாய, கிரி பொடி ஆக, கடல்
விகடார் உக்கிட ... ... விடும்வேலா!

விதியோனைச் சதுமுடி நால் பொட்டு எழ
மிகவே குட்டிய ... ... குருநாதா!

நினைவோர் சித்தமொடு அகலாமல் புகு
நிழலாள், பத்தினி ... ... மணவாளா!

நிதியாம் இப்புவி புலியூருக்கு ஒரு
நிறைவே! பத்தர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 214 மச்ச மெச்சு

தத்த தத்த தாத்த தத்த தத்த தாத்த
தத்த தத்த தாத்த ... ... தனதான

மச்சம் மெச்சு சூத்ரம், ரத்த பித்த மூத்ரம்
வைச்சு இறைச்ச பாத்ரம், ... அநுபோகம்

மட்க விட்ட சேக்கை, உள் புழுத்த வாழ்க்கை,
மண் குலப் பதார்த்தம், ... இடிபாறை,

எய்ச்சு இளைச்ச பேய்க்கும், எய்ச்சு இளைச்ச நாய்க்கும்,
எய்ச்சு இளைச்ச ஈக்கும் ... ... இரை ஆகும்

இக் கடத்தை நீக்கி, அக் கடத்து உள் ஆக்கி,
இப்படிக்கு மோட்சம் ... ... அருள்வாயே.

பொய்ச் சினத்தை மாற்றி, மெய்ச் சினத்தை ஏற்றி
பொன் பதத்து உள்ஆக்கு ... ... புலியூரா!

பொக்கணத்து நீற்றை இட்ட ஒருத்தனார்க்கு
புத்தி மெத்த காட்டு ... ... புனவேடன்

பச்சிலைக்கும், வாய்க்குள் எச்சிலுக்கும், வீக்கு
பைச் சிலைக்கும் ஆட்கொள் ... ... அரன்வாழ்வே!

பத்தி சித்தி காட்டி அத்தர் சித்தம் மீட்ட
பத்தருக்கு வாய்த்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 215 மனமே உனக்குறுதி

தனனா தனத்ததன தனனா தனத்ததன
தனனா தனத்ததன ... ... தனதானா

மனமே! உனக்கு உறுதி புகல்வேன், எனக்கு அருகில்
வருவாய், உரைத்த மொழி ... ... தவறாதே,

மயில் வாகனக் கடவுள், அடியார் தமக்கு அரசு,
மனமாயை அற்ற சுக ... ... மதிபாலன்,

நினைவு ஏது உனக்கு, அமரர் சிவலோகம் இட்டு, மல
நிலைவோர் அறுக்க வல ... ... பிரகாசன்,

நிதி கா நமக்கு, உறுதி அவரே, பரப்பிரம
நிழல் ஆளியைத் தொழுது ... ... வருவாயே.

இனம் ஒது ஒருத்தி ருபி, நலம் ஏர் மறைக்கு அரிய
இளையோள் ஓர் ஒப்பும்இலி, ... நிருவாணி,

எனை ஈண் எடுத்த புகழ் கலியாணி பக்கம்உறை
இதழ்வேணி அப்பன்உடை ... ... குருநாதா!

முனவோர் துதித்து, மலர் மழைபோல் இறைத்து வர
முதுசூரரைத் தலைகொள் ... ... முருகோனே!

மொழிபாகு, முத்துநகை, மயிலாள் தனக்கு உருகு
முருகா! தமிழ்ப்புலியுர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 216 பரமகுரு நாத

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் ... ... தனதானா

பரமகுரு நாத! கருணை உபதேச!
பதவி தரு ஞானப் ... ... பெருமாள்காண்!

பகல் இரவு இலாத ஒளிவெளியில் மேன்மை
பகரும் அதிகாரப் ... ... பெருமாள்காண்!

திருவளரும் நீதி தின மனொகர! ஆதி
செகபதியை ஆள்அப் ... ... பெருமாள்காண்!

செகதலமும் வானும் மருவு ஐ அவை பூத
தெரிசனை சிவாயப் ... ... பெருமாள்காண்!

ஒருபொருள் அதுஆகி, அருவிடையை ஊரும்
உமை தன் மணவாளப் ... ... பெருமாள்காண்!

உகமுடிவு காலம் இறுதிகள் இலாத
உறுதி அநுபூதிப் ... ... பெருமாள்காண்!

கருவு தனில் ஊறும் அருவினைகள் மாய
கலவி புகுதா மெய்ப் ... ... பெருமாள்காண்!

கனகசபை மேவி, அனவரதம் ஆடு
கடவுள், செக சோதிப் ... ... பெருமாளே.



விநாயகர் துதி

திருப்புகழ் 217 உம்பர் தரு (விநாயகர்)

தந்ததனத் தானதனத் ... ... தனதான

உம்பர் தரு தேனுமணி ... ... கசிவாகி

ஒண்கடலிற் தேனமுது ... ... உணர்வூறி

இன்பரசத்தே பருகிப் ... ... பலகாலும்

எந்தனுயிர்க்கு ஆதரவுற்று ... ... அருள்வாயே

தம்பிதனக்காக வனத்(து) ... ... அணைவோனே

தந்தை வலத்தால் அருள்கைக் ... ... கனியோனே

அன்பர்தமக் கான நிலைப் ... ... பொருளோனே

ஐந்து கரத்து ஆனைமுகப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 218 விடமடைசு வேலை (விநாயகர்)

தனதனன தான தனதனன தான
தனதனன தான ... ... தனதான

விடம் அடைசு வேலை அமரர் படை சூலம்
விசையன் விடு பாணம் ... ... எனவே தான்

விழியும் அதி பார விதமும் உடை மாதர்
வினையின் விளைவு ஏதும் ... ... அறியாதே

கடி உலவு பாயல் பகல் இரவு எனாது
கலவி தனில் மூழ்கி ... ... வறிதாய

கயவன் அறிவு ஈனன் இவனும் உயர் நீடு
கழல் இணைகள் சேர ... ... அருள்வாயே

இடையர் சிறு பாலை திருடி கொ(ண்)டு போக
இறைவன் மகள் வாய்மை ... ... அறியாதே

இதயம் மிக வாடி உடைய பி(ள்)ளை நாத
கணபதி எனு நாமம் ... ... முறை கூற

அடையலவர் ஆவி வெருவ அடி கூர
அசலும் அறியாமல் ... ... அவர் ஓட

அகல்வது எனடா சொல் எனவும் முடி சாட
அறிவு அருளும் ஆனை ... ... முகவோனே.

திருப்புகழ் 219 கன்றிலுறு மானை (திருச்செந்தூர்)

தந்ததன தான தந்ததன தான
தந்ததன தான ... ... தனதான

கன்றில் உறு மானை வென்ற விழியாலே
கஞ்ச முகை மேவும் ... ... முலையாலே

கங்குல் செறி கேச மங்குல் குலையாமை
கந்த மலர் சூடும் ... ... அதனாலே

நன்று பொருள் தீர வென்று விலை பேசி
நம்பவிடு மாதருடன் ... ... ஆடி

நஞ்சு புசி தேரை அங்கம் அதுவாக
நைந்து விடுவேனை ... ... அருள் பாராய்

குன்றி மணி போல்வ செங்கண் வரி போகி
கொண்ட படம் வீசு ... ... மணி கூர்வாய்

கொண்ட மயிலேறி அன்று அசுரர் சேனை
கொன்ற குமரேச ... ... குருநாதா

மன்றல் கமழ் பூக(ம்) தெங்கு திரள் சோலை
வண்டு படு வாவி ... ... புடை சூழ

மந்தி நடமாடு(ம்) செந்தி நகர் மேவு
மைந்த அமரேசர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 220 கொலை மதகரி (திருச்செந்தூர்)

தனதன தனதன தனதன தன
தந்தத் ... ... தனதானா

கொலை மத கரி அ(ன்)ன ம்ருமகத தன கிரி
கும்பத் ... ... தன மானார்

குமுத அமுத இதழ் பருகி உருகி மயல்
கொண்டு ... ... உற்றிடு நாயேன்

நிலை அழி கவலைகள் கெட உனது அருள் விழி
நின்று ... ... உற்றிடவே தான்

நின திருவடி மலர் இணை மனதினில் உற
நின் பற்று ... ... அடைவேனோ

சிலை என வட மலை உடையவர் அருளிய
செம் சொல் ... ... சிறு பாலா

திரை கடலிடை வரும் அசுரனை வதை செய்த
செந்தில் ... ... பதி வேலா

வி(ல்)லை நிகர் நுதல் இப மயில் குற மகளும்
விரும்பிப் ... ... புணர்வோனே.

விருது அணி மரகத மயில் வரு குமர
விடங்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 221 துன்பங்கொண்டு அங்கம்

தந்தத்தந் தந்தன தந்தன
தந்தத்தந் தந்தன தந்தன
தந்தத்தந் தந்தன தந்தன ... ... தனதான

துன்பங்கொண்டு அங்கம் மெலிந்து அற
நொந்து அன்பும் பண்பும் மறந்து ஒளி
துஞ்சும் பெண் சஞ்சல மென்பதில் ... ... அணுகாதே

இன்பந்தந்து உம்பர் தொழும்பத
கஞ்சம் தம் தஞ்ச மெனும்படி
என்றென்றுந் தொண்டு செயும்படி ... ... அருள்வாயே

நின்பங்கு ஒன்றும் குற
மின்சரணங்கண்டு உன் தஞ்ச மெனும்படி
நின்று அன்பின் தன்படி கும்பிடு ... ... மிளையோனே

பைம்பொன் சிந்தின் துறை தங்கிய
குன்றெங்குஞ் சங்கு வலம்புரி
பம்பும் தென் செந்திலில் வந்தருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 222 கருகி அகன்று (பழநி)

தனதன தந்த தனதன தந்த
தனதன தந்த ... ... தனதான

கருகி அகன்று வரி செறி கண்கள்
கயல் நிகர் என்று ... ... துதி பேசி

கலை சுருள் ஒன்று(ம்) மிடைபடுகின்ற
கடி விடம் உண்டு ... ... பல நாளும்

விரகு உறு சண்ட வினை உடல் கொண்டு
விதி வழி நின்று ... ... தளராதே

விரை கமழ் தொங்கல் மருவிய துங்க
இத பதம் என்று ... ... பெறுவேனோ

முருக கடம்ப குறமகள் பங்க
முறை என அண்டர் ... ... முறை பேச

முது திரை ஒன்ற வரு திறல் வஞ்ச
முரண் அசுர் வென்ற ... ... வடிவேலா

பரிமள இன்ப மரகத துங்க
பகடு இதம் வென்றி ... ... மயில் வீரா

பறி தலை குண்டர் கழு நிரை கண்டு
பழநி அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 223 குழல் அடவி (பழநி)

தனன தனதன தனன தனதன
தனன தனதன ... ... தனதான

குழல் அடவி முகில் பொழில் விர வில் நுதல்
குமுத அதரம் ... ... முறுவல் ஆரம்

குழை மகரம் வளை மொழி குயில் அமுது
குய(ம்) முளரி முகை ... ... கிரி சூது

விழி கயல் அயில் பகழி வருணி கரு
விளை குவளை விடம் ... ... என நாயேன்

மிக அரிவையரை அவ நெறிகள் சொ(ல்)லி
வெறிது உளம் விதனம் ... ... உறலாமோ

கழல் ப(ண்)ணிய வினை கழல் பணியை
அணி கழல் பணிய அருள் ... ... மயில் வீரா

கமலை திரு மருக மலை நிருதர்
உக மலை தொளை செய்த ... ... கதிர் வேலா

பழநி மலை வரு பழ நிமலை தரு
பழநிமலை முருக ... ... விசாகா

பரவு பரவை கொல் பரவை வண அரி
பரவும் இமையவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 224 இராவினிருள் போலும் (சுவாமிமலை)

தனாதனன தானம் தனாதனன தானம்
தனாதனன தானம் ... ... தனதான

இராவினிருள் போலும் பராவுகுழலாலும்
இராமசர மாகும் ... ... விழியாலும்

இராகமொழியாலும் பொறாதமுலையாலும்
இராதஇடையாலும் இளைஞோர் ... ... நெஞ்சராவி

இரு போதும் பராவிவிழ வேவந்து
அடாதவிலை கூறும் ... ... மடவார்

அன்பு அடாமல் அடியேனுஞ் சுவாமியடி தேடும்
அநாதிமொழி ஞானந் ... ... தருவாயே

குராவின் நிழல் மேவுங் குமாரனென நாளுங்
குலாவியினிது ஓது ... ... அன்பினர்வாழ்வே

குணாலமிடு சூரன் பணாமுடிகள் தோறும்
குடாவியிட வேல் அங்கு ... ... எறிவோனே

துராலும் மிகு தீமுன்பு இராதவகை போலும்
தொடாமல்வினை யோடும் ... ... படிநூறும்

சுபானமுறு ஞானந் தபோதனர்கள் சேரும்
சுவாமிமலை வாழும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 225 காமியத் தழுந்தி (சுவாமிமலை)

தானனத் தனந்த ... ... தனதான
தானனத் தனந்த ... ... தனதான

காமியத் தழுந்தி ... ... யிளையாதே
காலர்கைப் படிந்து ... ... மடியாதே

ஓமெழுத்தி லன்பு ... ... மிகவூறி
ஓவியத்தி லந்தம் ... ... அருள்வாயே

தூமமெய்க் கணிந்த ... ... சுகலீலா
சூரனைக் கடிந்த ... ... கதிர்வேலா

ஏமவெற் புயர்ந்த ... ... மயில்வீரா
ஏரகத் தமர்ந்த ... ... பெருமாளே

திருப்புகழ் 226 முடித்த குழலினர் (திருத்தணிகை)

தனத்த தனதன தனத்த தனதன
தனத்த தனதன ... ... தனதான

முடித்த குழலினர் வடித்த மொழியினர்
முகத்தில் இலகிய ... ... விழியாலும்

முலைக் கிரிகள் மிசை அசைத்த துகிலினும்
இளைத்த இடையினும் ... ... மயலாகி

படுத்த அணை தனில் அணைத்த அவரொடு
படிக்குள் அநுதினம் ... ... உழலாதே

பருத்த மயில் மிசை நினைத்த பொழுது உன
பதத்து மலர் இணை ... ... அருள்வாயே

துடித்து தச முகன் முடித் தலைகள் விழ
தொடுத்த சரம் விடு ... ... ரகுராமன்

துகைத்து இவ்வுலகை ஓர் அடிக்குள் அளவிடு
துலக்க அரி திரு ... ... மருகோனே

தடத்துள் உறை கயல் வயற்குள் எதிர் படு
தழைத்த கதலிகள் ... ... அவை சாய

தருக்கும் எழில் உறு திருத்தணிகையினில்
தழைத்த சரவண ... ... பெருமாளே.

திருப்புகழ் 227 மலை முலைச்சியர் (திருத்தணிகை)

தனன தத்தன தனன தத்தன
தனன தத்தன ... ... தனதான

மலை முலைச்சியர் கயல் விழிச்சியர்
மதி முகத்தியர் ... ... அழகான

மயில் நடைச்சியர் குயில் மொழிச்சியர்
மனது உருக்கிகள் ... ... அணை மீதே

கலை நெகிழ்த்தியே உறவு அணைத்திடு
கலவியில் துவள் ... ... பிணி தீரா

கசடனைக் குண அசடனைப் புகல்
கதியில் வைப்பதும் ... ... ஒரு நாளே

குல கிரிக் குலம் உருவ விட்டமர்
குலவு சித்திர ... ... முனை வேலா

குறவர் பெற்றிடு சிறுமியைப் புணர்
குமர சற்குண ... ... மயில் வீரா

தலம் அதில் புகல் அமரர் உற்ற இடர்
தனை அகற்றிய ... ... அருளாளா

தரு நிரைத்து எழு பொழில் மிகுத்திடு
தணி மலைக்கு உயர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 228 அதிரும் கழல் (குன்றுதோறாடல்)

தனனந் தனன தந்த ... ... தனதான
தனனந் தனன தந்த ... ... தனதான

அதிருங் கழல்ப ணிந்து உன் ... ... அடியேன் உன்
அபயம் புகுவ தென்று ... ... நிலைகாண

இதயந் தனிலி ருந்து ... ... க்ருபையாகி
இடர் சங்கைகள் கலங்க ... ... அருள்வாயே

எதிர் அங்கொருவர் இன்றி ... ... நடமாடும்
இறைவன் தனது பங்கில் ... ... உமை பாலா

பதியெங்கிலுமிருந்து ... ... விளையாடி
பலகுன்றிலும் அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 229 ஈனமிகுத்துள பிறவி (ஆறு திருப்பதி)

தானதனத் தனதனன ... ... தனதான
தானதனத் தனதனன ... ... தனதான

ஈனமிகுத்துள பிறவி ... ... யணுகாதே
யானுமுனக்கு அடிமையென ... ... வகையாக

ஞானஅருள் தனையருளி ... ... வினைதீர
நாணம் அகற்றிய கருணை ... ... புரிவாயே

தானதவத்தினின்மிகுதி ... ... பெறுவோனே
சாரதியுத்தமி துணைவ ... ... முருகோனே

ஆனதிருப் பதிகம் அருள் ... ... இளையோனே
ஆறுதிருப்பதியில் வளர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 230 அற்றைக் கற்றை (காஞ்சீபுரம்)

தத்தத் தத்தத் தத்தத் தத்தத்
தத்தத் தத்தத் ... ... தனதான

அற்றைக்கு அற்றைக்கு ஒப்பித்து ஒப்பித்து
அத்தத்து அத்தம் ... ... தருவோர் தாள்

அர்ச்சித்து இச்சித்து அக்கத்து அக்கம்
தொக்குத் திக்குக் ... ... குடில் பேணி

செற்றைப் புன் சொல் கற்றுக் கற்று
செத்துச் செத்துப் ... ... பிறவாதே

செப்பச் செப்ப பச்சைப் பச்சை
செச்சைச் செச்சைக் ... ... கழல் தாராய்

துற்றுப் பின் புக்கு உற்றக் கொக்கை
துட்கத் திட்கப் ... ... பொரும் வேலா

சுத்தப் பத்திச் சித்ரச் சொர்க்க
சொர்க்கத் தத்தைக்கு ... ... இனியோனே

கற்றைப் பொற்றைப் பற்றக் குத்தி
கத்தக் கத்த ... ... களைவோனே

கற்புச் சத்தி பொற்புச் சத்தி
கச்சிச் சொக்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 231 முட்டுப் பட்டு (காஞ்சீபுரம்)

தத்தத் தத்தத் ... ... தனதான
தத்தத் தத்தத் ... ... தனதான

முட்டுப் பட்டுக் ... ... கதிதோறும்
முற்றச் சுற்றிப் ... ... பலநாளும்

தட்டுப் பட்டுச் ... ... சுழல்வேனை
சற்றுப் பற்றக் ... ... கருதாதோ

வட்டப் புட்பத் ... ... தலமீதே
வைக்கத் தக்கத் ... ... திருபாதா

கட்டத்து அற்றத்து ... ... அருள்வோனே
கச்சிச் சொக்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 232 அற்றைக்கு இரைதேடி (காஞ்சீபுரம்)

தத்தத் தனதான தத்தத் ... ... தனதான
தத்தத் தனதான தத்தத் ... ... தனதானா

அற்றைக்கு இரைதேடி அத்தத்திலும் ஆசை

பற்றித் தவியாத பற்றை பெறுவேனோ

வெற்றிக் கதிர்வேலா வெற்பைத் தொளைசீலா

கற்றுற் றுணர்போதா கச்சிப் பெருமாளே.

திருப்புகழ் 233 நச்சு அரவம் என்று (காஞ்சீபுரம்)

தத்ததன தந்த தத்ததன தந்த
தத்ததன தந்த ... ... தனதான

நச்சு அரவ மென்று நச்சரவ மென்று
நச்சுமிழ்க ளங்க ... ... மதியாலும்

நத்தொடுமுழங்கு கனத்தொடுமுழங்கு
நத்திரைவ ழங்கு ... ... கடலாலும்

இச்சையுணர் வின்றி யிச்சையென வந்த
இச்சிறுமி நொந்து ... ... மெலியாதே

எத்தனையி நெஞ்சில் எத்தன முயங்கி
இத்தனையில் ... ... அஞ்சலெனவேணும்

பச்சைமயில் கொண்டு பச்சைமற மங்கை
பச்சைமலை யெங்கும் ... ... உறைவோனே

பத்தியுட னின்று பத்திசெயும் அன்பர்
பத்திரம ணிந்த ... ... கழலோனே

கச்சிவர் குரும்பை கச்சவர் விரும்பு
கச்சியில மர்ந்த ... ... கதிர்வேலா

கற்பக வனங்கொள் கற்பு அக விசும்பர்
கைத்தளை களைந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 234 வம்பறாச்சில (காஞ்சீபுரம்)

தந்த தாத்தன தன்ன தனந்தன
தத்தத் தத்தத் ... ... தனதானா

வம்பறாச்சில கன்னமிடும் சம
யத்துக் கத்துத் ... ... திரையாளர்

வன்கலாத்திரள் தன்னை யகன்று
மனத்திற் பற்றற்று ... ... அருளாலே

தம் பராக்கு அற நின்னை யுணர்ந்
துருகி பொற் பத்மக் ... ... கழல்சேர்வார்தம்

குழாத்தினில் என்னையும் அன்பொடு
வைக்கச் சற்றுக் ... ... கருதாதோ

வெம்பராக்ரம மின்னயில் கொண்டு ஒரு
வெற்புப் பொட்டுப் ... ... பட மாஞ்ர்

வென்ற பார்த்திப பன்னிரு திண்புய
வெட்சிச் சித்ரத் ... ... திருமார்பா

கம்ப ராய்ப்பணி மன்னு புயம்பெறு
கைக்கு கற்புத் ... ... தவறாதே

கம்பை யாற்றினில் அன்னை தவம்புரி
கச்சிச் சொக்கப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 235 நாடித் தேடி (திருவானைக்கா)

தானத் தானத் ... ... தனதான
தானத் தானத் ... ... தனதான

நாடித் தேடித் ... ... தொழுவார்பால்
நான் நத்தாகத் ... ... திரிவேனோ

மாடக் கூடற் ... ... பதி ஞான
வாழ்வைச் சேர ... ... தருவாயே

பாடற் காதற் ... ... புரிவோனே
பாலைத் தேனொத்து ... ... அருள்வோனே

ஆடற் றோகைக்கு ... ... இனியோனே
ஆனைக் காவிற் ... ... பெருமாளே.

திருப்புகழ் 236 கயல் விழித்தேன் (திருவருணை)

தனதனத் தானனைத் தனதனத் தானனைத்
தனதனத் தானனைத் ... ... தனதான

கயல்விழித்தேன் எனைச் செயலழித் தாயென
கணவகெட்டேனெனப் ... ... பெறுமாது

கருதுபுத்ராஎன புதல்வர் அப்பா எனக்
கதறிட பாடையிற் ... ... றலைமீதே

பயில்குலத்தாரழப் பழையநட்பாரழ
பறைகள்கொட்டாவர ... ... சமனாரும்

பரியகைப் பாசம்விட்டெறியுமப்போது எனைப்
பரிகரித்து ஆவியைத் ... ... தரவேணும்

அயில் அறச் சேவல்கைக்கு இனிதர தோகையுற்று
அருணையிற் கோபுரத் ... ... துறைவோனே

அமரர் அத்தா சிறுக் குமரிமுத்தா சிவத்
தரியசொற் பாவலர்க்கு ... ... எளியோனே

புயல் இளைப்பாறு பொற் சயில மொய்ச் சாரலில்
புனமறப் பாவையைப் ... ... புணர்வோனே

பொடிபடப் பூதரத்தொடு கடற் சூரனை
பொருமுழுச் சேவகப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 237 இரவியும் மதியும்

தனதன தனனம் தனதன தனனம்
தனதன தனனம் ... ... தனதான

இரவியு மதியுந் தெரிவுற எழும்
அம்புவிதனில் இனம் ... ... ஒன்றிடுமாதும்

எழில்புதல்வரும் நின்றழுது உளமுருகும்
இடர்கொடு நடலம் ... ... பலகூற

கருகிய வுருவங் கொடுகனல் விழிகொண்டு
உயிரினை நமனுங் ... ... கருதாமுன்

கலைகொடு பல துன்பமும் அகலிட நின்
கழலிணை கருதும் ... ... படிபாராய்

திருமருவியதிண் புயன் அயன் விரிஎண்
திசை கிடுகிட ... ... வந்திடுசூரன்

திணிபுயமது சிந்திட அலை கடல் அஞ்சிட
வலியொடு ... ... கன்றிடும்வேலா

அருமறையவர் அந்தரம் உறைபவர்
அன்புடையவர் உ(ய்)ய ... ... அன்று அறமேவும்

அரிவையும் ஒருபங்கு இடமுடை யவர்தங்கு
அருணையி லுறையும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 238 இடம் அடு சுறவை

தனதன தனன தனதன தனன
தனதன தனதன ... ... தந்ததான

இடம் அடு சுறவை முடுகிய மகரம்
எறி கடல் இடை எழு ... ... திங்களாலே

இரு வினை மகளிர் மருவிய தெருவில்
எரி என வரு சிறு ... ... தென்றலாலே

தட நடு உடைய கடி படு கொடிய
சரம் விடு தறு கண் ... ... அநங்கனாலே

சரி வளை கழல மயல் கொளும் அரிவை
தனி மலர் அணையில் ... ... நலங்கலாமோ

வட குல சயில நெடு உடல் அசுரர்
மணி முடி சிதற ... ... எறிந்த வேலா

மற மகள் அமுத புளகித களப
வளர் இள முலையை ... ... மணந்த மார்பா

அடல் அணி விகடம் மரகத மயிலில்
அழகுடன் அருணையில் ... ... நின்ற கோவே

அரு மறை விததி முறை முறை பகரும்
அரி அர பிரமர்கள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 239 கடல்பரவு தரங்க

தனதனன தனந்த தானன ... ... தந்ததான
தனதனன தனந்த தானன ... ... தந்ததான

கடல்பரவு தரங்க மீதெழு ... ... திங்களாலே
கருதிமிக மடந்தை மார்சொல் ... ... வதந்தியாலே

வடவனலை முனிந்து வீசிய ... ... தென்றலாலே
வயலருணையில் வஞ்சிபோத ... ... நலங்கலாமோ

இடமுமையை மணந்த நாதர் ... ... இறைஞ்சும்வீரா
எழுகிரிகள் பிளந்து வீழ ... ... எறிந்தவேலா

அடலசுரர் கலங்கி யோட ... ... முனிந்தகோவே
அரிபிரம புரந்த ராதியர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 240 கீத விநோத மெச்சு

தான தனான தத்த ... ... தனதான
தான தனான தத்த ... ... தனதான

கீத விநோத மெச்சு ... ... குரலாலே
கீறு மையார் முடித்த ... ... குழலாலே

நீதி யிலாதழித்தும் ... ... உழலாதே
நீமயி லேறி யுற்று ... ... வரவேணும்

சூதமர் சூரர் உட்க ... ... பொருசூரா
சோண கிரீயி லுற்ற ... ... குமரேசா

ஆதியர்காது ஒருச்சொல் ... ... அருள்வோனே
ஆனைமுகார் கனிட்ட ... ... பெருமாளே

திருப்புகழ் 241 பாண மலரது

தான தனதன தத்தம் ... ... தனதான

பாண மலர் அது தைக்கும் ... ... படியாலே
பாவி இள மதி கக்கும் ... ... கனலாலே

நாணம் அழிய உரைக்கும் ... ... குயிலாலே
நானும் மயலில் இளைக்கும் ... ... தரமோ தான்

சேணில் அரிவை அணைக்கும் ... ... திரு மார்பா
தேவர் மகுடம் மணக்கும் ... ... கழல் வீரா

காண அருணையில் நிற்கும் ... ... கதிர்வேலா
காலன் முதுகை விரிக்கும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 242 விதி அதாகவே

தனன தானன தனன தானனா
தனன தானனம் ... ... தனதான

விதி அதாகவே பருவ மாதரார்
விரகிலே மனம் ... ... தடுமாறி

விவரமானது ஓர் அறிவு மாறியே
வினையிலே அலைந் ... ... திடு மூடன்

முதிய மா தமிழ் இசை அதாகவே
மொழி செய்தே ... ... நினைந்திடுமாறு

முறைமையாக நின் அடிகள் மேவவே
முனிவு தீர வந்து ... ... அருள்வாயே

சதி அதாகிய அசுரர் மா முடி
தரணி மீது உகும் ... ... சமர் ஆடி

சகல லோகமும் வலம் அதாகியே
தழையவே வரும் ... ... குமரேசா

அதிக வானவர் கவரி வீசவே
அரிய கோபுரம் ... ... தனில் மேவி

அருணை மீதிலே மயிலில் ஏறியே
அழகு அதாய் வரும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 243 சிரத்தானத்தி (திருக்காளத்தி)

தனத்தா தத்தத் ... ... தனதான
தனத்தா தத்தத் ... ... தனதான

சிரத்தா னத்திற் ... ... பணியாதே
செகத்தோர் பற்றைக் ... ... குறியாதே

வருத்தா மற்றொப் ... ... பிலதான
மலர்த்தாள் வைத்து ... ... எத்தனை ஆள்வாய்

நிருத்தா கர்த்தத்துவ ... ... நேசா
நினைத்தார் சித்தத்து ... ... உறைவோனே

திருத்தாள் முத்தர்க்கு ... ... அருள்வோனே
திருக்கா ளத்திப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 244 கனகசபை மேவும் (சிதம்பரம்)

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் ... ... தனதானா

கனகசபை மேவும் எனதுகுரு நாத
கருணைமுருகேசப் ... ... பெருமாள்காண்

கனகநிற வேதன் அபயமிட மோது
கரகமல சோதிப் ... ... பெருமாள்காண்

வினவுமடியாரை மருவிவிளையாடு
விரகு ரச மோகப் ... ... பெருமாள்காண்

விதி முநிவர் தேவர் அருணகிரி நாதர்
விமல சர சோதிப் ... ... பெருமாள்காண்

சனகிமணவாளன் மருகனென வேத
சதமகிழ்குமாரப் ... ... பெருமாள்காண்

சரணசிவ காமி இரணகுல காரி
தருமுருக நாமப் ... ... பெருமாள்காண்

இனிதுவன மேவும் அமிர்தகுற மாதொடு
இயல்பரவு காதற் ... ... பெருமாள்காண்

இணையில் இப தோகை மதியின்மகளோடு
இயல்புலியுர் வாழ்பொற் ... ... பெருமாளே.

திருப்புகழ் 245 கைத்தருண சோதி

தத்ததன தான தத்ததன தான
தத்ததன தான ... ... தனதான

கைத்தருண சோதி அத்திமுக வேத
கற்பக சகோத்ரப் ... ... பெருமாள்காண்

கற்பு சிவகாமி நித்யகலியாணி
கத்தர்குரு நாதப் ... ... பெருமாள்காண்

வித்துருப ராமருக்கு மருகான
வெற்றி அயில் பாணிப் ... ... பெருமாள்காண்

வெற்புள கடாகம் உட்குதிர வீசு
வெற்றிமயில் வாகப் ... ... பெருமாள்காண்

சித்ரமுகம் ஆறு முத்துமணி மார்பு
திக்கினில் இலாதப் ... ... பெருமாள்காண்

தித்திமிதி தீதென ... ... ஒத்திவிளையாடு
சித்திரகுமாரப் ... ... பெருமாள்காண்

சுத்தவிர சூரர் பட்டுவிழ வேலை
தொட்ட கவி ராஜப் ... ... பெருமாள்காண்

துப்புவளி யோடும் அப்புலியுர் மேவு
சுத்தசிவ ஞானப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 246 இருவினையின் மதி

தனதனன தனன தந்தத் ... ... தனதானா
தனதனன தனன தந்தத் ... ... தனதானா

இருவினையின் மதிம யங்கி ... ... திரியாதே
எழுநரகில் உழலும் நெஞ்சுற்று ... ... அலையாதே

பரமகுரு அருள்நினைந்திட்டு ... ... உணர்வாலே
பரவுதரி சனையை என்று எற்கு ... ... அருள்வாயே

தெரிதமிழை உதவு சங்கப் ... ... புலவோனே
சிவனருளு முருக செம்பொற் ... ... கழலோனே

கருணைநெறி புரியும் அன்பர்க் ... ... கெளியோனே
கனகசபை மருவு கந்தப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 247 நஞ்சினைப் போலுமன

தந்தனத் தானதன தந்தனத் தானதன
தந்தனத் தானதன ... ... தந்ததான

நஞ்சினைப் போலுமன வஞ்சகக் கோளர்களை
நம்புதல் தீதெனநினைந்து ... ... நாயேன்

நண்பு உகப் பாதமதில் அன்புறத் தேடி யுனை
நங்களப்பா சரண ... ... மென்றுகூறல்

உன்செவிக்கு ஏறலைகொல் பெண்கள்மெற் பார்வையைகொல்
உன்சொலைத் தாழ்வுசெய்து ... ... மிஞ்சுவாரார்

உன்றனக்கே பரமும் என்றனக்கு ஆர்துணைவர்
உம்பருக்கு ஆவதினின் ... ... வந்து தோணாய்

கஞ்சனைத் தாவி முடி முன்பு குட்டு ஏய மிகு
கண்களிப்பாக விடு ... ... செங்கையோனே

கண்கயற் பாவை குற மங்கைபொற்றோள் தழுவு
கஞ்சுகப் பான்மைபுனை பொன் ... ... செய்தோளாய்

அஞ்சவெற்பு ஏழு கடல் மங்க நிட்டூரர்குலம்
அந்தரத்து ஏறவிடு ... ... கந்தவேளே

அண்டமுற் பார்புகழும் எந்தை பொற்பூர்புலிசை
அம்பலத் தாடுமவர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 248 செம் கலச

தந்ததன ... ... தனதான
தந்ததன ... ... தனதான

செம் கலச ... ... முலையார்பால்
சிந்தைபல ... ... தடுமாறி

அங்கம் மிக ... ... மெலியாதே
அன்பு உருக ... ... அருள்வாயே

செம் கை பிடி ... ... கொடியோனே
செம் சொல் தெரி ... ... புலவோனே

மங்கை உமை ... ... தரு சேயே
மன்றுள் வளர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 249 எழுகடல் மணலை

தனதன தனன தனதன தனன
தனதன தனன ... ... தனதான

எழுகடல் மணலை அளவிடி னதிகம்
எனதிடர் பிறவி ... ... அவதாரம்

இனியுன தபய மெனதுயி ருடலும்
இனியுடல் விடுக ... ... முடியாது

கழுகொடு நரியு மெரிபுவி மறலி
கமலனு மிகவும் ... ... அயர்வானார் .

கடனுன தபயம் அடிமையு னடிமை
கடுகியு னடிகள் ... ... தருவாயே

விழுதிக ழழகி மரகத வடிவி
விமலிமு னருளும் ... ... முருகோனே

விரிதல மெரிய குலகிரி நெரிய
விசைபெறு மயிலில் ... ... வருவோனே

எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளும் அயிலை ... ... யுடையோனே

இமையவர் முநிவர் பரவிய புலியுரினில்
நட மருவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 250 இருளும் ஓர்கதிரணு

தனன தானன தனன தானன
தனன தானன ... ... தனதான

இருளும் ஓர்கதிரணுகொணாத பொன்
இடமதேறி என் ... ... இருநோயும்

எரியவே மல மொழியவே சுடரிலகு
மூலக ... ... வொளிமேவி

அருவி பாயஇனமுத மூற உன்
அருளெலாம் எனது ... ... அளவாக

அருளியே சிவ மகிழவேபெற
அருளி யேயிணை ... ... யடிதாராய்

பரம தேசிகர் குருவிலாதவர்
பரவை வான்மதி ... ... தவழ்வேணி

பவள மேனியர் எனது தாதையர்
பரம ராசியர் ... ... அருள்பாலா

மருவி நாயெனை யடிமை யாமென
மகிழ்மெய் ஞானமும் ... ... அருள்வோனே

மறைகுலாவிய புலியுர் வாழ் குற
மகள்மெ லாசைகொள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 251 காவி உடுத்தும்

தான தனத்தம் தான தனத்தம்
தான தனத்தம் ... ... தனதான

காவி யுடுத்தும் தாழ்சடை வைத்தும்
காடுகள் புக்கும் ... ... தடுமாறி

காய்கனி துய்த்தும் காயம் ஒறுத்தும்
காசினி முற்றும் ... ... திரியாதே

சீவன் ஒடுக்கம் பூத வொடுக்கம்
தேற உதிக்கும் ... ... பரஞான

தீப விளக்கம் காண எனக்குன்
சீதள பத்மம் ... ... தருவாயே

பாவ நிறத்தின் தாருக வர்க்கம்
பாழ்பட உக்ரம் ... ... தருவீரா

பாணிகள் கொட்டும் பேய்கள் பிதற்றும்
பாடலை மெச்சும் ... ... கதிர்வேலா

தூவிகள் நிற்குஞ் சாலி வளைக்கும்
சோலை சிறக்கும் ... ... புலியூரா

சூரர் மிகக்கொண்டாட நடிக்கும்
தோகை நடத்தும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 252 நாடா பிறப்பு

தானா தனத்தன தானா தனத்தன
தானா தனத்தன ... ... தனதான

நாடா பிறப்புமுடி யாதோ வெனக்கருதி
நாயேன் அரற்றுமொழி ... ... வினையாயின்

நாதா திருச்சபையி னேறாது சித்தமென
நாலா வகைக்கும் உனது ... ... அருள்பேசி

வாடா மலர்ப்பதவி தாதா எனக்குழறி
வாய்பாறி நிற்குமெனை ... ... அருள்கூர

வாராய் மனக்கவலை தீராய் நினைத்தொழுது
வாரேன் எனக்கு எதிர் ... ... முன்வரவேணும்

சூடா மணிப்பிரபை ரூபா கனத்த அரி
தோல் ஆசனத்தி உமை ... ... அருள்பாலா

தூயா துதித்தவர்கள் நேயா எமக்கமிர்த
தோழா கடப்பமலர் ... ... அணிவோனே

ஏடார் குழற்சுருபி ஞான ஆதனத்தி மிகு
மேராள் குறத்தி திரு ... ... மணவாளா

ஈசா தனிப்புலிசை வாழ்வே சுரர்த்திரளை
ஈடேற வைத்தபுகழ் ... ... பெருமாளே.

திருப்புகழ் 253 மனமே உனக்குறுதி

தனனா தனத்தன தனனா தனத்தன
தனனா தனத்தன ... ... தனதானா

மனமே உனக்கு உறுதி புகல்வேன் எனக்கு அருகில்
வருவாய் உரைத்தமொழி ... ... தவறாதே

மயில் வாகனக்கடவுள் அடியார் தமக்கரசு
மனமாயை யற்ற சுக ... ... மதிபாலன்

நினைவேது உனக்கு அமரர் சிவலோகம் இட்டு மல
நிலை வேர் அறுக்கவல ... ... பிரகாசன்

நிதி கா நமக்கு உறுதி அவரே பரப்பிரம
நிழல் ஆளியைத் தொழுது ... ... வருவாயே

இனம் ஒது ஒருத்தி ருபி நலம் ஏர் மறைக்கு அரிய
இளையோள் ஓர் ஒப்புமிலி ... ... நிருவாணி

எனை ஈணெடுத்த புகழ் கலியாணி பக்கம் உறை
இதழ்வேணியப்பனுடை ... ... குருநாதா

முனவோர் துதித்து மலர் மழைபோல் இறைத்துவர
முது சூரரைத் தலை கொள் ... ... முருகோனே

மொழிபாகு முத்துநகை மயிலாள் தனக்கு உருகு
முருகா தமிழ்ப்புலியுர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 254 பரமகுரு நாத

தனதனன தான தனதனன தான
தனதனன தானத் ... ... தனதானா

பரமகுரு நாத கருணையுப தேச
பதவிதரு ஞானப் ... ... பெருமாள்காண்

பகலிரவிலாத ஒளிவெளியில் மேன்மை
பகரும் அதிகாரப் ... ... பெருமாள்காண்

திருவளரு நீதி தின மனொகர ஆதி
செகபதியை யாளப் ... ... பெருமாள்காண்

செகதலமும் வானு மருவு ஐ அவை பூத
தெரிசனைசிவாயப் ... ... பெருமாள்காண்

ஒருபொருள் அதாகி அருவிடையை யூரும்
உமைதன்மண வாளப் ... ... பெருமாள்காண்

உகமுடிவு காலம் இறுதிகளிலாத
உறுதி அநுபூதிப் ... ... பெருமாள்காண்

கருவுதனில் ஊறும் அருவினைகள் மாய
கலவிபுகு தாமெய்ப் ... ... பெருமாள்காண்

கனகசபை மேவி அனவரதம் ஆடு
கடவுள்செக சோதிப் ... ... பெருமாளே.

திருப்புகழ்தலங்கள்

திருப்புகழ் 255 புமி அதனில் (கயிலைமலை)

தனதனனத் ... ... தனதான
தனதனனத் ... ... தனதான

புமியதனிற் ... ... ப்ரபுவான
புகலியில் ... ... வித்தகர்போல

அமிர்தகவித் ... ... தொடைபாட
அடிமைதனக்கு ... ... அருள்வாயே

சமரிலெதிர்த்த ... ... சுர் மாள
தனியயில்விட்டு ... ... அருள்வோனே

நமசிவயப் ... ... பொருளானே
ரசதகிரிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 256 அல்லி விழியாலும் (வள்ளிமலை)

தய்யதன தான தய்யதன தான
தய்யதன தானத் ... ... தனதான

அல்லிவிழியாலும் முல்லைநகையாலும்
அல்லல்பட ஆசைக் ... ... கடல் ஈயும்

அள்ள இனிதாகி நள்ளிரவு போலும்
உள்ளவினையார் அத் ... ... தனம் ஆரும்

இல்லும் இளையோரு மெல்ல அயலாக
வல்லெருமை மாயச் ... ... சமனாரும்

எள்ளி யெனதாவி கொள்ளைகொளு நாளில்
உய்யவொரு நீபொற் ... ... கழல்தாராய்

தொல்லைமறை தேடி யில்லையெனு நாதர்
சொல்லும் உபதேசக் ... ... குருநாதா

துள்ளிவிளை யாடு புள்ளியுழை நாண
எள்ளிவன மீதுற்று ... ... உறைவோனே

வல் அசுரர் மாள நல்ல சுரர் வாழ
வல்லைவடி வேலைத் ... ... தொடுவோனே

வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 257 ககனமும் அநிலமும்

தனதன தனதன தனதன தனதன
தய்யத்த தாத்த ... ... தனதான

ககனமும் அநிலமும் அனல்புனல் நிலம் அமை
கள்ளப் புலாற் ... ... கிருமிவீடு

கனலெழ மொழிதரு சினமென மதமிகு
கள்வைத்த தோற்பை ... ... சுமவாதே

யுகஇறுதிகளிலும் இறுதியில் ஒருபொருள்
உள்ளக்கண் நோக்கும் ... ... அறிவூறி

ஒளிதிகழ் அருவுருவெனு மறை யிறுதியில்
உள்ளத்தை நோக்க ... ... அருள்வாயே

ம்ருகமத பரிமள விகசித நளினநள்
வெள்ளைப்பிராட்டி ... ... இறைகாணா

விடதர குடில சடிலமிசை வெகுமுக
வெள்ளத்தை யேற்ற ... ... பதிவாழ்வே

வகுளமு முகுளித வழைகளு மலி புன
வள்ளிக் குலாத்தி ... ... கிரிவாழும்

வனசரர் மரபினில் வருமொரு மரகத
வள்ளிக்கு வாய்த்த ... ... பெருமாளே

திருப்புகழ் 258 எழுகு நிறை நாபி (திருக்கழுக்குன்றம்)

தனதனன தான தனதனன தான
தனதனன தான தனதான

எழுகு நிறை நாபி அரி பிரமர் சோதி
யிலகுமரன் மூவர் ... ... முதலானோர்

இறைவியெனு மாதி பரை முலையினூறி
எழும் அமிர்த நாறு ... ... கனிவாயா

புழுகொழுகு காழி கவுணியரில்
ஞான புநிதன்என ... ... ஏடுதமிழாலே

புனலிலெதிர் ஏற சமணர்கழுவேற
பொருதகவி வீர ... ... குருநாதா

மழு உழை கபால டமரக த்ரிசூலம்
அணிகர விநோதர் ... ... அருள்பாலா

மலரயனை நீடு சிறைசெய்து அவன் வேலை
வளமைபெறவே செய் ... ... முருகோனே

கழுகுதொழு வேதகிரி சிகரி வீறு
கதிருலவு வாசல் ... ... நிறைவானோர்

கடலொலிய தான மறைதமிழ்க ளோது
கதலிவனம் மேவு ... ... பெருமாளே

திருப்புகழ் 259 வேத வெற்பிலே (திருக்கழுக்குன்றம்)

தான தத்த தான தத்த தான தத்த தனதான
தான தத்த தான தத்த தான தத்த தனதான

வேத வெற்பிலே புனத்தில் மேவி நிற்கும் ... ... அபிராம
வேடுவச்சி பாத பத்ம மீது செச்சை ... ... முடிதோய

ஆதரித்து வேளை புக்க ஆறிரட்டி ... ... புயநேய
ஆதரத்தோடு ஆதரிக்க ஆன புத்தி ... ... புகல்வாயே

காதும் உக்ர வீர பத்ர காளி வெட்க ... ... மகுடாம்
ஆகாச முட்ட வீசி விட்ட காலர் பத்தி ... ... இமையோரை

ஓது வித்த நாதர் கற்க ஓது வித்த ... ... முநிநாண
ஒரெழுத்தில் ஆறெழுத்தை ஓது வித்த ... ... பெருமாளே

திருப்புகழ் 260 பகலிரவினில் (சென்னிமலை)

தனதனதனத் ... ... தனதான
தனதனதனத் ... ... தனதான

பகலிரவினில் ... ... தடுமாறா
பதிகுருவெனத் ... ... தெளிபோத

ரகசியமுரைத்து ... ... அநுபூதி
ரதநிலைதனைத் ... ... தருவாயே

இகபரமதற்கு ... ... இறையோனே
இயலிசையின் ... ... முத்தமிழோனே

சகசிரகிரிப் ... ... பதிவேளே
சரவணபவப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 261 பத்தியால் யானுனை (இரத்னகிரி)

தத்தனா தானனத் ... ... தனதான
தத்தனா தானனத் ... ... தனதான

பத்தியால் யானுனை ... ... பலகாலும்
பற்றியே மா ... ... திருப்புகழ் பாடி

முத்தனாம் ஆறெனை ... ... பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு ... ... அருள்வாயே

உத்தம அதான சற் ... ... குணர்நேயா
ஒப்பிலா மா ... ... மணிக்கிரிவாசா

வித்தகா ஞானசத்தி ... ... நிபாதா
வெற்றிவே லாயுதப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 262 மாலாசை கோபம் (விராலிமலை)

தானான தான தானான தான
தானான தான ... ... தனதான

மாலாசை கோபம் ஓயாதெ நாளும்
மாயா விகார ... ... வழியேசெல்

மாபாவி காளி தானேனு நாத
மாதா பிதாவு ... ... மினிநீயே

நாலான வேத நூல் ஆக மாதி
நானோதி னேனு ... ... மிலை வீணே

நாள்போய் விடாமல் ஆறாறு மீதில்
ஞானோபதேசம் ... ... அருள்வாயே

பாலா கலார ஆமோத லேப
பாடீர வாக ... ... அணிமீதே

பாதாள பூமி யாதார மீன
பானீய மேலை ... ... வயலூரா

வேலா விராலி வாழ்வே சமூக
வேதாள பூத ... ... பதி சேயே

வீரா கடோர சூராரியே
செவேளே சுரேசர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 263 அன்பாக வந்து (திருச்செங்கோடு)

தந்தான தந்த தந்தான தந்த
தந்தான தந்த ... ... தனதான

அன்பாக வந்து உன்தாள் பணிந்து
ஐம்பூதம் ஒன்ற ... ... நினையாமல்

அன்பால் மிகுந்து நஞ்சாரு கண்கள்
அம்போருகங்கள் ... ... முலைதானும்

கொந்தே மிகுந்து வண்டாடி நின்று
கொண்டாடுகின்ற ... ... குழலாரைக்

கொண்டே நினைந்து மன்பேது மண்டி
குன்றா மலைந்து ... ... அலைவேனோ

மன்றாடி தந்த மைந்தா மிகுந்த
வம்பார் கடம்பை ... ... அணிவோனே

வந்தே பணிந்து நின்றார் பவங்கள்
வம்பே தொலைந்த ... ... வடிவேலா

சென்றே யிடங்கள் கந்தா எனும்பொ
செஞ்சேவல் கொண்டு ... ... வரவேணும்

செஞ்சாலி கஞ்சம் ஒன்றாய் வளர்ந்த
செங்கோடு அமர்ந்த ... ... பெருமாளே

திருப்புகழ் 264 கரை அற உருகுதல் (திருச்செங்கோடு)

தனதன தனதன தனதன தனதன
தந்தான தந்த ... ... தனதான

கரை அற உருகுதல் தரு கயல் விழியினர்
கண்டு ஆன செம் சொல் ... ... மடமாதர்

கலவியில் முழுகிய நெறியினில் அறிவு
கலங்கா மயங்கும் ... ... வினையேனும்

உரையையும் அறிவையும் உயிரையும் உணர்வையும்
உன் பாத கஞ்ச ... ... மலர் மீதே

உரவொடு புனை தர நினைதரும் அடியரொடு
ஒன்றாக என்று ... ... பெறுவேனோ

வரை இரு துணி பட வளை படு சுரர் குடி
வந்து ஏற இந்த்ர ... ... புரி வாழ

மத வித கஜ ரத துரக பததியின்
வன் சேனை மங்க ... ... முது மீன

திரை மலி சல நிதி முறை இட நிசிசரர்
திண்டாட வென்ற ... ... கதிர்வேலா

ஜெகதல மிடி கெட விளைவன வயல் அணி
செங்கோடு அமர்ந்த ... ... பெருமாளே

திருப்புகழ் 265 காலனிடத்து (திருச்செங்கோடு)

தான தனத் ... ... தனதான

காலனிடத்து ... ... அணுகாதே
காசினியிற் ... ... பிறவாதே

சீலஅகத்திய ... ... ஞான
தேனமுதைத் ... ... தருவாயே

மாலயனுக்கு ... ... அரியானே
மாதவரைப் ... ... பிரியானே

நாலுமறைப் ... ... பொருளானே
நாககிரிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 266 தாமா தாம ஆலாபா (திருச்செங்கோடு)

தானா தானா தானா தானா
தானா தானத் ... ... தனதான

தாமா தாம ஆலாபா லோக
ஆதாரா தார(ம்) ... ... தரணி ஈசா

தான ஆசாரோ பாவா பாவோ
நாசா பாசத்து ... ... அபராத

யாமா யாமா தேசார் ஊடு
ஆராயா ஆபத்து ... ... எனது ஆவி

ஆமா காவாய் தீயேன் நீர்
வாயாதே ஈமத்து ... ... உகலாமோ

காமா காம ஆதீனா நீள் நாகா
வாய் காள ... ... கிரியாய்

கங்காளா லீலா பாலா நீபா
காம ஆமோதக் ... ... கன மானின்

தேம் ஆர் தே மா காமீ பாகீ
தேசா தேசத்தவர் ... ... ஓதும்

சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 267 தவள மதியம் (குன்றக்குடி)

தனன தனன தனத்தந் ... ... தனதான

தவள(ம்) மதியம் எறிக்கும் ... ... தணலாலே
சரச மதனன் விடுக்கும் ... ... கணையாலே

கவன(ம்) மிகவும் உரைக்கும் ... ... குயிலாலே
கருதி மிகவு(ம்) மயக்கம் ... ... படவோ நான்

பவள(ம்) நிகரும் இதழ்ப் பைங் ... ... குறமானின்
பரிய வரையை நிகர்க்கும் ... ... தனம் மேவும்

திவளு(ம்) மணிகள் கிடக்கும் ... ... திருமார்பா
திகழு(ம்) மயிலின் மலை கண் ... ... பெருமாளே.

திருப்புகழ் 268 அல்லில் நேரும் (வள்ளியூர்)

தய்ய தானன ... ... தனதான

அல்லில் நேரும் ... ... மின்அதுதானும்
அல்லதாகிய உடல் ... ... மாயை

கல்லி னேர அவ்வழி ... ... தோறும்
கையும் நானும் ... ... உலையலாமோ

சொல்லி நேர்படு ... ... முதுசூரர்
தொய்ய வூர்கெட ... ... விடும்வேலா

வல்லிமார் இரு ... ... புறமாக
வள்ளியூர் உறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 269 எதிரிலாத பத்தி (கதிர்காமம்)

தனன தான தத்த ... ... தனதான
தனன தான தத்த ... ... தனதான

எதிரிலாத பத்தி ... ... தனைமேவி
இனிய தாள்நினைப்பை ... ... இருபோதும்

இதய வாரிதிக்குள் ... ... உறவாகி
எனதுளே சிறக்க ... ... அருள்வாயே

கதிர காம வெற்பில் ... ... உறைவோனே
கனக மேரு வொத்த ... ... புயவீரா

மதுர வாணி யுற்ற ... ... கழலோனே
வழுதி கூன் நிமிர்த்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 270 மாதர் கொங்கையில் (உத்தரமேரூர்)

தான தந்தன தத்தா தத்தன
தான தந்தன தத்தா தத்தன
தான தந்தன தத்தா தத்தன ... ... தனதான

மாதர் கொங்கையில் வித்தாரத் திரு
மார்பில் இலங்கு இயல் முத்து ஆரத்தினில்
வாச மென் குழலில் சேலைப் பொரும் ... ... விழி வேலில்

மாமை ஒன்று(ம்) மலர்த் தாள் வைப்பினில்
வாகு வஞ்சியில் மெய்த் தாமத்தினில்
வான் இளம் பிறையைப் போல் நெற்றியில் ... ... மயலாகி

ஆதரம் கொ(ண்)டு கெட்டே இப்படி
ஆசையின் கடலுக்கே மெத்தவும்
ஆகி நின்று தவித்தே நித்தலும் ... ... அலைவேனோ

ஆறு இரண்டு பணை தோள் அற்புத
ஆயிரம் கலை க(ர்)த்தா மத்திபனாய்
உழன்று அலைகிற்பேனுக்கு அருள் ... ... புரிவாயே

சாதனம் கொ(ண்)டு தத்தா மெத்தெனவே
நடந்து பொய் பித்தா உத்தரம்
ஏது எனும் படி தன் காய் நிற்பவர் ... ... சபை ஊடே

தாழ்வு இல் சுந்தரனைத் தான் ஒற்றி கொள்
நீதி தந்திர நல் சார்பு உற்று அருள்
சால நின்று சமர்த்தா வெற்றி கொள் ... ... அரன் வாழ்வே

வேதமும் கிரியைச் சூழ் நித்தமும்
வேள்வியும் புவியில் தாபித்து அருள்
வேர் விழும்படி செய்த ஏர் மெய்த் தமிழ் ... ... மறையோர் வாழ்

மேரு மங்கையில் அத்தா வித்தக
வேலொடும் படை குத்தா ஒற்றிய
வேடர் மங்கை கொள் சித்தா பத்தர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 271 வேழம் உண்ட (காசி)

தான தத்தன தானன ... ... தனதான
தான தத்தன தானன ... ... தனதான

வேழ முண்ட விளாகனி ... ... யதுபோல
மேனி கொண்டு வியாபக ... ... மயலூறி

நாளு மிண்டர்கள் போல்மிக ... ... அயர்வாகி
நானு நைந்து விடாதருள் ... ... புரிவாயே

மாள அன்று அமணீசர்கள் ... ... கழுவேற
வாதில் வென்ற சிகாமணி ... ... மயில்வீரா

காள கண்ட னுமாபதி ... ... தருபாலா
காசி கங்கையில் மேவிய ... ... பெருமாளே

திருப்புகழ் 272 சிகரம் அருந்த (மாயாபுரி)

தனன தனந்த தானன ... ... தனதான
தனன தனந்த தானன ... ... தனதான

சிகரம் அருந்த வாழ்வது ... ... சிவஞானம்
சிதறி யலைந்து போவது ... ... செயலாசை

மகர நெருங்க வீழ்வது ... ... மகமாய
மருவி நினைந்திடா ... ... அருள்புரிவாயே

அகர நெருங்கின் ஆமயம் ... ... உறவாகி
அவசமொடுங்கு கையாறொடும் ... ... முனம் ஏகி

ககனம் இசைந்த சூரியர் ... ... புக மாயை
கருணை பொழிந்து மேவிய ... ... பெருமாளே

திருப்புகழ் 273 மருமல்லி யார் (திருவலிதாயம்)

தனதய்ய தானதன ... ... தனதான

மருமல்லி யார்குழலின் ... ... மடமாதர்
மருளுள்ளி நாயடியன் ... ... அலையாமல்

இரு நல்லவாகும் ... ... உனதடிபேண
இனவல்ல மான மனது ... ... அருளாயோ

கருநெல்லி மேனி அரி ... ... மருகோனே
கனவள்ளியார்கணவ ... ... முருகேசா

திருவல்லிதாயம் அதில் ... ... உறைவோனே
திகழ்வல்ல மாதவர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 274 அயில் ஒத்து எழும் (திருமயிலை)

தனனத் தனதன ... ... தனதான

அயில் ஒத்து எழும் இரு ... ... விழியாலே
அமுது ஒத்திடும் அரு ... ... மொழியாலே

சயிலத்து எழு துணை ... ... முலையாலே
தடையுற்று அடியனு(ம்) ... ... மடிவேனோ

கயிலைப் பதி அரன் ... ... முருகோனே
கடல் அக் கரை ... ... திரையருகே சூழ்

மயிலைப் பதிதனில் ... ... உறைவோனே
மகிமைக்கு அடியவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 275 அறமிலா அதி (திருமயிலை)

தனன தானன தானன தந்தத் ... ... தனதான

அறமிலா அதி பாதக வஞ்சத் ... ... தொழிலாலே
அடியனேன்மெலிவாக மனஞ்சற்று ... ... இளையாதே

திறல் குலாவிய சேவடி வந்தித்து ... ... அருள்கூட
தினமுமே மிக வாழ்வுறும் இன்பைத் ... ... தருவாயே

விறல் நிசாசரர் சேனைகள் அஞ்சப் ... ... பொரும்வேலா
விமல, மாது அபிராமி தருஞ்செய்ப் ... ... புதல்வோனே

மறவர் வாணுதல் வேடைகொளும் ... ... பொற்புயவீரா
மயிலை மாநகர் மேவிய கந்தப் ... ... பெருமாளே

திருப்புகழ் 276 ஞால மெங்கும் (கோடைநகர்)

தான தந்த தனத்த தத்த ... ... தனதானா

ஞாலமெங்கும் வளைத்து அரற்று ... ... கடலாலே
நாளும் வஞ்சியர் உற்று உரைக்கும் ... ... வசையாலே

ஆலம் உந்து மதித் தழற்கும் ... ... அழியாதே
ஆறிரண்டு புயத்தணைக்க ... ... வருவாயே

கோலம் ஒன்று குறத்தியைத் ... ... தழுவுமார்பா
கோடையம்பதி யுற்று நிற்கு ... ... மயில்வீரா

காலனஞ்ச வரைத்தொளைத்த ... ... முதல் வானோர்
கால் விலங்குகளைத் தறித்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 277 அண்டர்பதி குடியேற (சிறுவை)

தந்ததன தனதான தந்ததன தனதான
தந்ததன தனதான ... ... தனதான

அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ்மீற ... ... அருளாலே

அந்தரியொடு உடனாடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனும் உமையாளு ... ... மகிழ்வாக

மண்டலமு முநிவோரும் எண்டிசையி லுளபேரு
மஞ்சினனும் அயனாரும் ... ... எதிர்காண

மங்கையுடன் அரிதானும் இன்பமுற மகிழ்கூற
மைந்து மயிலுடன் ஆடி ... ... வரவேணும்

புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாளா
புந்திநிறை யறிவாள ... ... வுயர்தோளா

பொங்குகடலுடன் நாகம் விண்டு வரை யிகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு ... ... வடிவேலா

தண் தரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய ... ... முருகேசா

சந்ததமும் அடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 278 சீத மதியம் (திருவாமூர்)

தான தனன தனத்தந் ... ... தனதான

சீத மதிய மெறிக்குந் ... ... தழலாலே
சீறி மதனன் வளைக்குஞ் ... ... சிலையாலே

ஓத மருவி யலைக்குங் ... ... கடலாலே
ஊழி யிரவு தொலைக்கும் ... ... படியோதான்

மாது புகழை வளர்க்குந் ... ... திருவாமூர்
வாழு மயிலி லிருக்குங் ... ... குமரேசா

காத லடியர் கருத்தின் ... ... பெருவாழ்வே
காலன் முதுகை விரிக்கும் ... ... பெருமாளே

திருப்புகழ் 279 நாட்டம் தங்கி (வேப்பஞ்சந்தி)

தாத்தந் தந்தத் தந்தத் தனனத் ... ... தனதான

நாட்டம் தங்கிக் கொங்கைக் குவடில் ... ... படியாதே
நாட்டும் தொண்டர்க்கு அண்டக் கமலப் ... ... பதம் ஈவாய்

வாட்டம் கண்டு உற்று அண்டத்து அமரப் ... ... படை மீதே
மாற்றம் தந்து பந்திச் சமருக்கு ... ... எதிரானோர்

கூட்டம் கந்திச் சிந்திச் சிதறப் ... ... பொருவோனே
கூற்றன் பந்திச் சிந்தைக் குணம் ஒத்து ... ... ஒளிர் வேலா

வேட்டம் தொந்தித் தந்திப் பரனுக்கு ... ... இளையோனே
வேப்பம் சந்திக் கந்தக் குமரப் ... ... பெருமாளே

திருப்புகழ் 280 கழைமுத்து மாலை (ஸ்ரீ முஷ்டம்)

தனனத்த தான தனனத்த தான
தனனத்த தான ... ... தனதான

கழைமுத்து மாலை புயல்முத்து மாலை
கரிமுத்து மாலை ... ... மலைமேவுங்

கடிமுத்து மாலை வளைமுத்து மாலை
கடல்முத்து மாலை ... ... அரவீனும்

அழல்முத்து மாலை இவைமுற்று மார்பின்
அடைவொத்து உலாவ ... ... அடியேன்முன்

அடர்பச்சை மாவில் அருளிற்பெணோடும்
அடிமைக்கு ழாமொடு ... ... அருள்வாயே

மழையொத்த சோதி குயில்தத்தை போலு
மழலைச்சொல் ஆயி ... ... யெமையீனு

மதமத்த நீல களநித்த நாதர்
மகிழ்சத்தி யீனு ... ... முருகோனே

செழுமுத்து மார்பின் அமுதத்தெய்வானை
திருமுத்தி மாதின் ... ... மணவாளா

சிறையிட்ட சூரர் தளைவெட்டி ஞான
திருமுட்ட மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 281 சிந்து உற்று எழு (சீகாழி)

தந்தத்தன தானன தந்தத் ... ... தனதான

சிந்து உற்று எழு மா மதி அங்கித் ... ... திரளாலே
தென்றல் தரு வாசம் மிகுந்து உற்று ... ... எழலாலே

அந்திப் பொழுதாகிய கங்குல் ... ... திரளாலே
அன்புற்று எழு பேதை மயங்கித் ... ... தனி ஆனாள்

நந்து உற்றிடு வாரியை மங்கத் திகழாயே
நஞ்சு ஒத்து ஒளிர் வேலினை உந்திப் ... ... பொரு வேளே

சந்தக் கவி நூலினர் தம் சொற்கு ... ... இனியோனே
சண்பைப் பதி மேவிய கந்தப் ... ... பெருமாளே

திருப்புகழ் 282 உரத்துறை போத (வைத்தீசுரன் கோயில்)

தனத்தன தானத் ... ... தனதான

உரத்துறை போதத் ... ... தனியான
உனைச்சிறிதோதத் ... ... தெரியாது

மரத்துறை போலுற்று ... ... அடியேனும்
மலத்திருள் மூடிக் ... ... கெடலாமோ

பரத்துறை சீலத்தவர் ... ... வாழ்வே
பணித்தடி வாழ்வுற்று ... ... அருள்வோனே

வரத்துறை நீதர்க்கு ... ... ஒருசேயே
வயித்திய நாதப் ... ... பெருமாளே

திருப்புகழ் 283 ஈளை சுரங்குளிர் (பாகை)

தான தனந்தன தான தனந்தன
தான தனந்தன ... ... தனதான

ஈளை சுரங்குளிர் வாத மெனும்பல
நோய்கள் வளைந்தற ... ... இளையாதே

ஈடுபடும் சிறு கூடு புகுந்து இடு
காடு பயின்று உயிர் ... ... இழவாதே

மூளை யெலும்புகள் நாடி நரம்புகள்
வேறு படுந்தழல் ... ... முழுகாதே

மூல மெனுஞ் சிவ யோக பதந்தனில்
வாழ்வு பெறும்படி ... ... மொழிவாயே

வாளை நெருங்கிய வாவியிலும் கயல்
சேல்கள் மறிந்திட ... ... வலைபீறா

வாகை துதைந்து அணி கேதகை மங்கிட
மோதி வெகுண்டு இள ... ... மதிதோயும்

பாளை நறுங்கமழ் பூக வனம் தலைசாடி
நெடுங்கடல் ... ... கழிபாயும்

பாகை வளம்பதி மேவி வளம் செறி
தோகை விரும்பிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 284 மருக்குலாவிய (திருவிடைக்கழி)

தனத்த தானன தனதன ... ... தனதான

மருக்கு லாவிய மலரணை ... ... கொதியாதே
வளர்த்த தாய்தமர் வசையது ... ... மொழியாதே

கருக்கு லாவிய அயலவர் ... ... பழியாதே
கடப்ப மாலையை யினி ... ... வரவிடவேணும்

தருக்கு லாவிய கொடியிடை ... ... மணவாளா
சமர்த்த னேமணி மரகத ... ... மயில்வீரா

திருக்கு ராவடி நிழல்தனில் ... ... உறைவோனே
திருக்கை வேல்வடி வழகிய ... ... பெருமாளே

திருப்புகழ் 285 இறையத்தனையோ (திலதைப்பதி)

தனனத் தனனா ... ... தனதான

இறையத்தனையோ ... ... அதுதானும்
இலை இட்டுணல் ... ... ஏய்தருகாலம்

அறையிற் பெரிதாம் ... ... மலமாயை
அலையப் படுமாறு ... ... இனியாமோ

மறை அத்தனை மா ... ... சிறைசாலை
வழியுய்த்து உயர்வானுறு ... ... தேவர்

சிறையைத் தவிரா ... ... விடும்வேலா
திலதைப் பதிவாழ் ... ... பெருமாளே

திருப்புகழ் 286 கூர்வாய் நாராய் (திருவாரூர்)

தானா தானா தானா தானா
தானா தானத் ... ... தனதான

கூர்வாய் நாராய் வாராய் போனார்
கூடாரே(ரோ) சற்று ... .அல ஆவி

கோது ஆனேன் மாதா மாறு ஆனாள்
கோளே கேள் மற்று ... ... இள வாடை

ஈர் வாள் போலே மேலே வீசா
ஏறா வேறிட்டு ... ... அது தீயின்

ஈயா வாழ்வோர் பேரே பாடா
ஈடு ஏறாரில் ... ... கெடலாமோ

சூர் வாழாதே மாறாதே வாழ்
சூழ் வானோர்கட்கு ... ... அருள் கூரும்

தோலா வேலா வீறு ஆரூர் வாழ்
சோதீ பாகத்து ... ... உமை ஊடே

சேர்வாய் நீதி வானோர் வீரா
சேரார் ஊரை ... ... சுடுவார் தம்

சேயே வேளே பூவே கோவே
தேவே தேவ ... ... பெருமாளே.

திருப்புகழ் 287 நீதானெத்தனை (திருவாரூர்)

தானானத் தனதான தானானத் ... ... தனதான

நீதானெத் தனையாலும் நீடூழிக் ... ... க்ருபையாகி

மாதானத் தனமாக மாஞானக் ... ... கழல்தாராய்

வேதாமைத்துனவேளே வீரா ... ... சற்குணசீலா

ஆதாரத்து ஒளியானே ஆரூரிற் ... ... பெருமாளே

திருப்புகழ் 288 ஓங்கும் ஐம்புல (எட்டிகுடி)

தாந்த தந்தன தான தனத்தம் ... ... தனதான
தாந்த தந்தன தான தனத்தம் ... ... தனதான

ஓங்கும் ஐம்புலன் ஓட நினைத்து இன் ... ... பயர்வேனை
ஓம்பெ றும்ப்ரண வாதி யுரைத்து ... ... எந்தனையாள்வாய்

வாங்கி வெங்கணை சூரர் குலக்கொம்புகள் ... ... தாவி
வாங்கி நின்றன ஏவில் உகைக்கும் ... ... குமரேசா

மூங்கில் அம் புய வாசமணக் ... ... குஞ்சரிமானும்
மூண்ட பைங்குற மாது மணக்குந் ... ... திருமார்பா

காங்கை யங்கறு பாசில் மனத்து அன்பர்கள் ... ... வாழ்வே
காஞ்சி ரங்குடி ஆறு முகத்தெம் ... ... பெருமாளே

திருப்புகழ் 289 விழுதாதெனவே (நாகப்பட்டினம்)

தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா ... ... தனதான

விழுதா தெனவே கருதா துடலை
வினைசேர் வதுவே ... ... புரிதாக

விருதா வினிலே உலகா யதமே
லிடவே மடவார் ... ... மயலாலே

அழுது ஆகெடவே அவமாகிட
நாளடைவே கழியாது ... ... உனையோதி

அலர்தா ளடியே னுறவாய்
மருவஓர் அழியா வரமே ... ... தருவாயே

தொழுதார் வினைவேர் அடியோடு அறவே
துகள்தீர் பரமே ... ... தருதேவா

சுரர்பூபதியே கருணா லயனே
சுகிர்தா அடியார் ... ... பெருவாழ்வே

எழுதா மறைமா முடிவே வடிவேலிறைவா
எனையா ... ... ளுடையோனே

இறைவா எதுதா அதுதா தனையே
இணைநா கையில் வாழ் ... ... பெருமாளே

திருப்புகழ் 290 அயிலார் மைக்கடு (திருக்குடவாயில்)

தனனா தத்தன தனனா தத்தன
தனனா தத்தன ... ... தனதான

அயில் ஆர் மைக் கடு விழியார் மட்டைகள்
அயலார் நத்திடு ... ... விலைமாதர்

அணை மீதில் துயில் பொழுதே தெட்டிகள்
அவர் ஏவல் செய்து ... ... தமியேனும்

மயலாகித் திரிவது தான் அற்றிட
மல மாயைக் குணம் ... ... அது மாற

மறையால் மிக்க அருள் பெறவே அற்புத
மது மாலைப் பதம் ... ... அருள்வாயே

கயிலாயப் பதி உடையாருக்கு ஒரு
பொருளே கட்டளை ... ... இடுவோனே

கடல் ஓடிப் புகு முது சூர் பொட்டு எழ
கதிர் வேல் விட்டிடு ... ... திறலோனே

குயில் ஆலித்திடு பொழிலே சுற்றிய
குடவாயில் பதி ... ... உறைவோனே

குற மாதைப் புணர் சதுரா வித்தக
குறையா மெய்த்தவர் ... ... பெருமாளே

திருப்புகழ் 291 சூழும்வினை (வேதாரணியம்)

தானன தத்தத் தந்தன தந்தன ... ... தனதான

சூழும்வினைக் கட்டுன்ப நெடும்பிணி ... ... கழிகாமஞ்
சோரம் இதற்கு சிந்தை நினைந்து ... ... உறுதுணை யாதே

ஏழையென் இத்துக்கங்களுடன் தினம் ... ... உழல்வேனோ
ஏதம் அகற்றிச் செம்பத சிந்தனை ... ... தருவாயே

ஆழிஅடைத்து தன் கை இலங்கையை ... ... யெழுநாளே
ஆண்மைசெலுத்திக் கொண்ட கரும்புயல் ... ... மருகோனே

வேழமுகற்கு தம்பியெனுந் திரு ... ... முருகோனே
வேதவனத்திற் சங்கரர் தந்தருள் ... ... பெருமாளே

திருப்புகழ் 292 எருவாய் கருவாய் (திருவீழிமிழலை)

தனனா தனனா தனனா தனனா
தனனா தனனா ... ... தனதான

எருவாய் கருவாய் தனிலே யுருவாய்
இதுவே பயிராய் ... ... விளைவாகி

இவர்போ யவராய் அவர்போ யிவராய்
இதுவே தொடர்பாய் ... ... வெறிபோல

ஒருதா யிருதாய் பலகோ டியதாய்
உடனே அவமா ... ... யழியாதே

ஒருகால் முருகா பரமா குமரா
உயிர்கா வெனவோத ... ... அருள்தாராய்

முருகா வென ஓர் தரம் ஓதடியார்
முடிமேல் இணைதாள் ... ... அருள்வோனே

முநிவோர் அமரோர் முறையோ வெனவே
முதுசூ ருரமேல் ... ... விடும்வேலா

திருமால் பிரமா அறியா தவர் சீர்ச்
சிறுவா திருமால் ... ... மருகோனே

செழுமா மதில்சேர் அழகார் பொழில்சூழ்
திருவீ ழியில்வாழ் ... ... பெருமாளே.

திருப்புகழ் 293 இருவினை ஊண் (திருவருணை)

தனதன தாந்த தந்த தனதன தாந்த தந்த
தனதன தாந்த தந்த ... ... தனதான

இருவினை ஊண் பசும் பை, கரு விளை கூன் குடம்பை
இடர் அடை பாழ் பொதும்பு ... ... அகித வாரி

இடை திரி சோங்கு கந்தம் மது அது தேங்கு கும்பம்
இரவு இடை தூங்குகின்ற ... ... பிண நோவுக்கு

உருவு இயல் பாண்டம் அஞ்சும் மருவிய கூண்டு நெஞ்சொடு
உயிர் குடி போம் குரம்பை ... ... அழியாது என்று

உலகுடன் ஏன்று கொண்ட கரும பிராந்து ஒழிந்து
உன் உபய பதாம் புயங்கள் ... ... அடைவேனோ

அருணையில் ஓங்கு துங்க சிகரம் கராம் புயங்கள்
அமரர் குழாம் குவிந்து ... ... தொழ வாழும்

அடியவர் பாங்க பண்டு புகல் அகிலாண்டம் உண்ட
அபிநவ சார்ங்க கண்டன் ... ... மருகோனே

கருணை ம்ருகேந்த்ர அன்பருடன் உரகேந்த்ரர் கண்ட
கடவுள் நடேந்த்ரர் மைந்த ... ... வரை சாடும்

கர குலி சேந்த்ரர் தங்கள் அரச நிசேந்த்ர கந்த
கர குலிச கர இந்த்ரர் தங்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 294 கொந்தார் மைக்குழல் (திருப்பனந்தாள்)

தந்தா தத்தன தந்தா தத்தன
தந்தா தத்தன ... ... தனதான

கொந்து ஆர் மைக் குழல் இந்து ஆர் சர்க்கரை
என்றே செப்பிய ... ... மொழி மாதர்

கொங்கு ஆர் முத்து வடம் தான் இட்ட
தனம் தான் இத்தரை ... ... மலை போலே

வந்தே சுற்றி வளைந்தால் அற்ப மனம்
தான் இப்படி ... ... உழலாமல்

மங்கா நற்பொருள் இந்தா அற்புதம்
என்றே இப்படி ... ... அருள்வாயே

இந்து ஓடக் கதிர் கண்டு ஓடக் கடம்
மண்டா நல் தவர் ... ... குடி ஓட

எங்கே அக்கிரி எங்கே இக்கிரி
என்றே திக்கென ... ... வரு சூரை

பந்தாடித் தலை விண்டு ஓட களம்
வந்தோரைச் சில ... ... ரண காளி

பங்காகத் தரு கந்தா மிக்க
பனந்தாள் உற்று அருள் ... ... பெருமாளே

திருப்புகழ் 295 பஞ்சுசேர் நிர்த்த (கும்பகோணம்)

தந்தனா தத்தத் ... ... தனதான

பஞ்சுசேர் நிர்த்தப் ... ... பதமாதர்
பங்கமார் தொக்கிற் ... ... படியாமல்

செஞ்சொல்சேர் சித்ரத் ... ... தமிழால்
உன்செம்பொன் ஆர்வத்தைப் ... ... பெறுவேனோ

பஞ்சபாணத்தற் ... ... பொருதேவர்
பங்கில்வாழ் சத்திக் ... ... குமரேசா

குஞ்சரீ வெற்புத் ... ... தனநேயா
கும்பகோ ணத்திற் ... ... பெருமாளே.

திருப்புகழ் 296 மாலையில் வந்து (இலஞ்சி)

தான தனந்த தான தனந்த
தனா தனந்த ... ... தனதான

மாலையில் வந்து மாலை வழங்கு
மாலை அனங்கன் ... ... மலராலும்

வாடை எழுந்து வாடை செறிந்து
வாடை எறிந்த ... ... அனலாலும்

கோலம் அழிந்து சால மெலிந்து
கோமள வஞ்சி ... ... தளரா முன்

கூடிய கொங்கை நீடிய அன்பு
கூரவும் இன்று ... ... வரவேணும்

காலன் நடுங்க வேல் அது கொண்டு
கானில் நடந்த ... ... முருகோனே

கான மடந்தை நாண மொழிந்து
காதல் இரங்கு ... ... குமரேசா

சோலை வளைந்து சாலி விளைந்து
சூழும் இலஞ்சி ... ... மகிழ்வோனே

சூரியன் அஞ்ச வாரியில் வந்த
சூரனை வென்ற ... ... பெருமாளே

திருப்புகழ் 297 அஞ்சன வேல்விழி மடமாதர் (தஞ்சை)

தந்தன தானன ... ... தனதான

அஞ்சனம் வேல் விழி ... ... மட மாதர்
அங்கு அவர் மாயையில் ... ... அலைவேனோ

விஞ்சுறுமா(று) உனது ... ... அடி சேர
விம்பம் அதாய் அருள் ... ... அருளாதோ

நஞ்சு அமுதாய் உ(ண்)ணும் ... ... அரனார் தம்
நல் குமரா உமை ... ... அருள் பாலா

தஞ்ச(ம்) எனவாம் ... ... அடியவர் வாழ
தஞ்சையில் மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 298 இருகனக மாமேரு (பழநி)

தனதனன தானான தானதன தந்த
தனதனன தானான தானதன தந்த
தனதனன தானான தானதன தந்த ... ... தனதான

இருகனக மாமேரு வோகளப துங்க
கடகடின பாடீர வாரமுத கும்ப
மிணைசொலிள நீரோக ராசலஇ ரண்டு ... ... குவடேயோ

இலகுமல ரேவாளி யாகியஅ நங்க
னணிமகுட மோதானெ னாமிகவ ளர்ந்த
இளமுலைமி னார்மோக மாயையில்வி ழுந்து ... ... தணியாமல்

பெருகியொரு காசேகொ டாதவரை யைந்து
தருவைநிக ரேயாக வேயெதிர்பு கழ்ந்து
பெரியதமி ழேபாடி நாடொறுமி ரந்து ... ... நிலைகாணாப்

பிணியினக மேயான பாழுடலை நம்பி
உயிரையவ மாய்நாடி யேபவநி ரம்பு
பிறவிதனி லேபோக மீளவுமு ழன்று ... ... திரிவேனோ

கருணையுமை மாதேவி காரணிய நந்த
சயனகளி கூராரி சோதரிபு ரந்த
கடவுளுடன் வாதாடு காளிமலை மங்கை ... ... யருள்பாலா

கருடனுடன் வீறான கேதனம்வி ளங்கு
மதிலினொடு மாமாட மேடைகள்து லங்கு
கலிசைவரு காவேரி சேவகனொ டன்பு ... ... புரிவோனே

பரவையிடை யேபாத காசுரர்வி ழுந்து
கதறியிட வேபாக சாதனனு நெஞ்சு
பலிதமென வேயேக வேமயிலில் வந்த ... ... குமரேசா

பலமலர்க ளேதூவி யாரணந வின்று
பரவியிமை யோர்சூழ நாடொறுமி சைந்து
பழநிமலை மீதோர்ப ராபரனி றைஞ்சு ... ... பெருமாளே.

திருப்புகழ் 299 அணிபட்டு அணுகி (பழநி)

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் ... ... தனதான

அணிபட் டணுகித் திணிபட் டமனத்
தவர்விட் டவிழிக் ... ... கணையாலும்

அரிசுற் றுகழைத் தவர்பெற் றவளத்
தவன்விட் டமலர்க் ... ... கணையாலும்

பிணிபட் டுணர்வற் றவமுற் றியமற்
பெறுமக் குணமுற் ... ... றுயிர்மாளும்

பிறவிக் கடல்விட் டுயர்நற் கதியைப்
பெறுதற் கருளைத் ... ... தரவேணும்

கணிநற் சொருபத் தையெடுத் துமலைக்
கனியைக் கணியுற் ... ... றிடுவோனே

கமலத் தயனைப் ப்ரணவத் துரையைக்
கருதிச் சிறைவைத் ... ... திடுவோனே

பணியப் பணியப் பரமர்ப் பரவப்
பரிவுற் றொருசொற் ... ... பகர்வோனே

பவளத் தவளக் கனகப் புரிசைப்
பழநிக் குமரப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 300 ஆரம் முலை காட்டி (வயலூர்)

தானதன தாத்த தானதன தாத்த
தானதன தாத்த ... ... தனதான

ஆரம் முலை காட்டி மார நிலை காட்ட
ஆடை அணி காட்டி ... ... அநுராக

ஆல விழி காட்டி ஓசை மொழி காட்டி
ஆதரவு காட்டி ... ... எவரோடும்

ஈர நகை காட்டி நேர மிகை காட்டியே
வினைகள் காட்டி ... ... உறவாடி

ஏதம் மயல் காட்டும் மாதர் வலை காட்டி
ஈடு அழிதல் காட்டல் ... ... அமையாதோ

வீர அபர ஆட்டு சூரர் படை காட்டில்
வீழ அனலை ஊட்டி ... ... மயில் ஊர்தி

வேலை உறை நீட்டி வேலை தனில் ஓட்டு
வேலை விளையாட்டு ... ... வயலூரா

சேர மலை நாட்டில் வாரமுடன் வேட்ட
சீலி குறவாட்டி ... ... மணவாளா

தேசு புகழ் தீட்டி ஆசை வரு கோட்டி
தேவர் சிறை மீட்ட ... ... பெருமாளே

திருப்புகழ் 301 என்னால் பிறக்கவும் (வயலூர்)

தன்னா தனத்தன தன்னா தனத்தன
தன்னா தனத்தன ... ... தந்ததான

என்னால் பிறக்கவும் என்னால் இறக்கவும்
என்னால் துதிக்கவும் ... ... கண்களாலே

என்னால் அழைக்கவும் என்னால் நடக்கவும்
என்னால் இருக்கவும் ... ... பெண்டிர்வீடு

என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்
என்னால் சலிக்கவும் ... ... தொந்தநோயை

என்னால் எரிக்கவும் என்னால் நினைக்கவும்
என்னால் தரிக்கவும் இங்கு ... ... நான் ஆர்

கன்னார் உரித்த என் மன்னா எனக்குநல்
கர்ணாமிர்தப்பதம் ... ... தந்தகோவே

கல்லார் மனத்துடன் நில்லா மனத்தவ
கண்ணாடியில் தடம் ... ... கண்டவேலா

மன்னான தக்கனை முன்னாள் முடித்தலை
வன்வாளியிற் கொளும் ... ... தங்கரூபன்

மன்னா குறத்தியின் மன்னா வயற்பதி
மன்னா முவர்க்கொரு ... ... தம்பிரானே

திருப்புகழ் 302 தாமரையின் மட்டு (வயலூர்)

தானன தனத்த தானன தனத்த
தானன தனத்த ... ... தனதான

தாமரையின் மட்டு வாசமல ரொத்த
தாளிணை நினைப்பில் ... ... அடியேனை

தாதவிழ் கடுக்கை நாகமகிழ் கற்ப
தாருவென மெத்திய ... ... விராலி

மாமலையில் நிற்ப நீகருதி யுற்று
வாவென அழைத்து ... ... என்மனதாசை

மாசினை அறுத்து ஞானமுது அளித்த
வாரம் இனி நித்த ... ... மறவேனே

காமனை யெரித்த தீநயன நெற்றி
காதிய சுவர்க்க ... ... நதி வேணி

கானிலுறை புற்றில் ஆடுபணி யிட்ட
காது உடைய அப்பர் ... ... குருநாதா

சோமனொடு அருக்கன் மீனுலவு
மிக்க சோலை புடைசுற்று ... ... வயலூரா

சூடிய தடக்கை வேல்கொடு விடுத்து
சூர்தலை துணித்த ... ... பெருமாளே

திருப்புகழ் 303 மதியால் வித்தகன் (கருவூர்)

தனதானத் தனதான தனதானத் ... ... தனதான

மதியால் வித்தகனாகி மனதால் ... ... உத்தமனாகி

பதிவாகிச் சிவஞான பரயோகத்து ... ... அருள்வாயே

நிதியே நித்தியமே யென் நினைவே நற் ... ... பொருளாயோய்

கதியே சொற் பரவேளே கருவூரிற் ... ... பெருமாளே.

திருப்புகழ் 304 வண்டுபோற் சார (திருவெஞ்சமாக்கூடல்)

தந்தனாத் தானத் ... ... தனதான

வண்டுபோற் சாரத்து ... ... அருள்தேடி
மந்திபோற் காலப் ... ... பிணிசாடி

செண்டுபோற் ... ... பாசத்துடனாடி
சிந்தை மாய்த்தே சித்து ... ... அருள்வாயே

தொண்டராற் காணப் ... ... பெறுவோனே
துங்க வேற் கானத்து ... ... உறைவோனே

மிண்டராற் காணக் ... ... கிடையானே
வெஞ்சமாக் கூடற் ... ... பெருமாளே.

திருப்புகழ் 305 இருவினைப் பிறவி (திருப்பாண்டிக்கொடுமுடி)

தனதனத் தனனத் ... ... தனதான

இருவினைப் பிறவிக் ... ... கடல்மூழ்கி
இடர்கள்பட்டு அலையப் ... ... புகுதாதே

திருவருட் கருணைப் ... ... ப்ரபையாலே
திரமெனக் கதியைப் ... ... பெறுவேனோ

அரியயற்கு அறிதற்கு ... ... அரியானே
அடியவர்க்கு எளிய ... ... அற்புதநேயா

குருவெனச் சிவனுக்கு ... ... அருள்போதா
கொடுமுடிக் குமரப் ... ... பெருமாளே

திருப்புகழ் 306 பரிவுறு நாரற்று (சேலம்)

தனதன தானத் தனதன தானத்
தனதன தானத் ... ... தனதான

பரிவுறு நார் அற்று அழல்மதி வீச
சிலைபொரு காலுற்று ... ... அதனாலே

பனிபடு சோலைக் குயிலது கூவ
குழல்தனி யோசைத் ... ... தரலாலே

மருவியல் மாதுக்கு இருகயல் சோர
தனிமிக வாடித் ... ... தளராதே

மனமுற வாழத் திருமணி மார்பத்து
அருள்முருகா உற்று ... ... அணைவாயே

கிரிதனில் வேல்விட்டு இருதொளை யாகத்
தொடுகுமரா முத் ... ... தமிழோனே

கிளரொளி நாதர்க்கு ஒருமகனாகி
திருவளர் சேலத்து ... ... அமர்வோனே

பொருகிரி சூரக் கிளையது மாள
தனிமயி லேறித் ... ... திரிவோனே

புகர்முக வேழக் கணபதி யாருக்கு
இளைய விநோதப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 307 அவசியமுன் வேண்டி (திருமுருகன்பூண்டி)

தனதனனந் தாந்தத் ... ... தனதான

அவசியமுன் வேண்டிப் ... ... பலகாலும்
அறிவினுணர்ந்து ஆண்டுக்கொரு ... ... நாளில்

தவசெபமுந் தீண்டிக் ... ... கனிவாகி
சரணமதும் பூண்டற்கு ... ... அருள்வாயே

சவதமொடுந் தாண்டித் தகர் ... ... ஊர்வாய்
சடுசமயங் காண்டற்கு ... ... அரியானே

சிவகுமர அன்பு ஈண்டிற் ... ... பெயரானே
திருமுருகன் பூண்டிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 308 இறவாமற் பிறவாமல் (அவிநாசி)

தனதானத் தனதான தனதானத் ... ... தனதான

இறவாமற் பிறவாமல் எனையாள்சற்குரு ... ... வாகி

பிறவாகி திரமான பெருவாழ்வைத் ... ... தருவாயே

குறமாதைப் புணர்வோனே குகனேசொற் ... ... குமரேசா

அறநாலைப் புகல்வோனே அவிநாசிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 309 தீராப் பிணிதீர (பேரூர்)

தானாத் தனதான தானாத் ... ... தனதான

தீராப் பிணிதீர சீவ ... ... ஆத்தும ஞான

ஊராட்சியதான ஓர்வாக்கு ... ... அருள்வாயே

பாரோர்க் கிறைசேயே பாலாக் ... ... கிரிராசே

பேராற் பெரியோனே பேரூர்ப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 310 தரங்க வார்குழல் (குளந்தைநகர்)

தனந்த தானனைத் தனதன ... ... தனதான

தரங்க(ம்) வார் குழல் தநு நுதல் ... ... விழி ஆலம்
தகைந்த மா முலைத் துடி இடை ... ... மட மாதர்

பரந்த மால் இருள் படு குழி ... ... வசமாகிப்
பயந்து காலனுக்கு உயிர் கொடு ... ... தவியாமல்

வரம் தராவிடில் பிறர் எவர் ... ... தருவாரே
மகிழ்ந்து தோகையில் புவி வலம் ... ... வருவோனே

குரும்பை மா முலைக் குற மகள் ... ... மணவாளா
குளந்தை மா நகர் தளி உறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 311 ஆனைமுகவற்கு (மதுரை)

தானதன தத்த தானதன தத்த
தானதன தத்த ... ... தனதான

ஆனைமுக வற்கு நேரிளைய பத்த
ஆறுமுக வித்தக ... ... அமரேசா

ஆதியரனுக்கும் வேதமுதல்வற்கும்
ஆரணமுரைத்த ... ... குருநாதா

தானவர் குலத்தை வாள்கொடு துணித்த
சால்சதுர் மிகுத்த ... ... திறல்வீரா

தாளிணைகள் உற்று மேவிய பதத்தில்
வாழ்வொடு சிறக்க ... ... அருள்வாயே

வானெழு புவிக்கு மாலும் அயனுக்கும்
யாவரொருவர்க்கும் ... ... அறியாத

மாமதுரை சொக்கர் மாதுமை களிக்க
மாமயில் நடத்து ... ... முருகோனே

தேனெழு புனத்தில் மான்விழி குறத்தி
சேர மருவுற்ற ... ... திரள்தோளா

தேவர்கள் கருத்தில் மேவிய பயத்தை
வேல்கொடு தணித்த ... ... பெருமாளே

திருப்புகழ் 312 கலைமேவு ஞான (பவானி)

தனதான தானத் தனதான
தனதான தானத் ... ... தனதான

கலைமேவு ஞானப் ... ... பிரகாசக்
கடலாடி ஆசைக் ... ... கடலேறி

பலமாய வாதிற் பிறழாதே
பதிஞான வாழ்வைத் ... ... தருவாயே

மலைமேவு மாயக் ... ... குறமாதின்
மனமேவு வாலக் ... ... குமரேசா

சிலைவேட சேவற் ... ... கொடியோனே
திருவாணி கூடற் ... ... பெருமாளே

திருப்புகழ் 313 நீதத்துவமாகி (மதுரை)

தானத் தனதான தானத் ... ... தனதான

நீதத் துவமாகி நேமத் ... ... துணையாகி

பூதத் தயவான போதைத் ... ... தருவாயே

நாதத் தொனியோனே ஞானக் ... ... கடலோனே

கோதற்ற அமுதானே கூடற் ... ... பெருமாளே

திருப்புகழ் 314 கரம் கமலம் மின் (இலஞ்சி)

தனந்த தனதன தனந்த தனதன
தனந்த தனதன ... ... தனதான

கரம் கமலம் மின் அதரம் பவளம் வளை
களம் பகழி விழி ... ... மொழி பாகு

கரும்பு அமுது முலை குரும்பை குருகு
பகரும் பிடியின் நடை ... ... எயின் மாதோடு

அரங்க நக கன தனம் குதலை இசை
அலங்க நிய(ம)ம் உற ... ... மயில் மீதே

அமர்ந்து பவ வினை களைந்து வரு கொடிய
அந்தகன் அகல ... ... வருவாயே

தரங்கம் முதிய மகரம் பொருத திரை
சலந்தி நதி குமரன் ... ... என வான

தலம் பரவ மறை புலம்ப வரு சிறு
சதங்கை அடி ... ... தொழுபவர் ஆழி

இரங்கு தொ(ல்)லை திரு அரங்கர் மருக
பனிரண்டு புய மலை ... ... கிழவோனே

இலங்கு தர தமிழ் விளங்க வரு திரு
இலஞ்சி மருவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 315 வானோர் வழுத்துனது (இராமேசுரம்)

தானா தனத்ததன தானா தனத்ததன
தானா தனத்ததன ... ... தனதான

வானோர் வழுத்து உனது பாதார பத்ம மலர்
மீதே பணிக்கும் வகை ... ... அறியாதே

மானார் வலைக் கண் அதிலே தூளி மெத்தையினில்
ஊடே அணைத்து உதவும் ... ... அதனாலே

தேனோ கருப்பில் எழு பாகோ இதற்கு இணைகள்
ஏதோ எனக் கலவி ... ... பல கோடி

தீரா மயக்கினொடு நாகா படத்தில் எழு
சேறு ஆடல் பெற்ற துயர் ... ... ஒழியேனோ

மேல்நாடு பெற்று வளர் சூர அதிபற்கு எதிரின்
ஊடு ஏகி நிற்கும் இரு ... ... கழலோனே

மேகார உக்ர பரி தான் ஏறி வெற்றி புனை
வீரா குறச் சிறுமி ... ... மணவாளா

ஞானா பரற்கு இனிய வேத ஆகமப் பொருளை
நாணாது உரைக்கும் ஒரு ... ... பெரியோனே

நாராயணற்கு மருகா வீறு பெற்று இலகு
ராமேசுரத்தில் உறை ... ... பெருமாளே

திருப்புகழ் 316 விரகற நோக்கியும் (எழுகரைநாடு)

தனதன தாத்தன தனதன தாத்தன
தனதன தாத்தன ... ... தந்ததான

விரகற நோக்கியும் உருகியும் வாழ்த்தியும்
விழிபுனல் தேக்கிட ... ... அன்புமேன்மேல்

மிகவும் இராப்பகல் பிறிது பராக்கற
விழைவு குராப் ... ... புனையுங் குமார

முருக ஷடாக்ஷர சரவண கார்த்திகை
முலைநுகர் பார்த்திப ... ... என்றுபாடி

மொழிகுழறாத் தொழுது அழுதழுது ஆட்பட
முழுதும் அலாப்பொருள் ... ... தந்திடாயோ

பரகதி காட்டிய விரக சிலோச்சய
பரம பராக்ரம ... ... சம்பராரி

படவிழியாற்பொரு பசுபதி போற்றிய
பகவதி பார்ப்பதி ... ... தந்தவாழ்வே

இரைகடல் தீப்பட நிசிசரர் கூப்பிட
எழுகிரி யார்ப்பெழ ... ... வென்றவேலா

இமையவர் நாட்டினில் நிறைகுடி யேற்றிய
எழுகரை நாட்டவர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 317 ஆகத்தே தப்பாமல் (காமத்தூர்)

தானத் தானத் தானத் தானத்
தானத் தானத் ... ... தனதானா

ஆகத்தே தப்பாமல் சேர் இக்கு
ஆர்கை தேறல் ... ... கணையாலே

ஆலப் பாலைப் போலக் கோலத்து
ஆயக் காயப் ... ... பிறையாலே

போகத்து ஏசற்றே தன் பாயல்
பூவில் தீயில் ... ... கருகாதே

போதக் காதல் போகத் தாளைப்
பூரித்து ஆரப் ... ... புணராயே

தோகைக்கே உற்று ஏறித் தோயம்
சூர் கெட்டு ஓடப் ... ... பொரும் வேலா

சோதிக் காலைப் போதக் கூவு அத்
தூவல் சேவல் ... ... கொடியோனே

பாகு ஒத்தே சொல் பாகத்தாளைப்
பாரித்து ஆர் நல் ... ... குமரேசா

பாரில் காமத்தூரில் சீலப்
பாலத் தேவப் ... ... பெருமாளே

பொதுப்பாடல்கள்

திருப்புகழ் 318 சீதமலம் வெப்பு

தானதன தத்த தானதன தத்த
தானதன தத்த ... ... தனதான

சீதமலம் வெப்பு வாதமிகு பித்த
மானபிணி சுற்றி ... ... உடலூடே

சேருமுயிர் தப்பி யேகும்வணம் மிக்க
தீதுவிளை விக்க ... ... வருபோதில்

தாதையொடு மக்கள் நீதியொடு துக்க
சாகரமதற்குள் ... ... அழியாமுன்

தாரணி தனக்கு ளாரண முரைத்த
தாள்தர நினைத்து ... ... வரவேணும்

மாதர்மய லுற்று வாடவடி வுற்று
மாமயிலில் நித்தம் ... ... வருவோனே

மாலும் அயன் ஒப்பி லாதபடி பற்றி
மாலுழலு மற்ற ... ... மறையோர்முன்

வேதமொழி வித்தை யோதியறிவித்த
நாத விறல் மிக்க ... ... இகல்வேலா

மேல்அசுரர் இட்ட தேவர்சிறை வெட்டி
மீளவிடு வித்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 319 காதி மோதி

தான தான தானான தானத் ... ... தனதான

காதி மோதி வாதாடு நூல்கற்றிடுவோரும்
காசு தேடி யீயாமல் வாழப் ... ... பெறுவோரும்.

மாதுபாகர் வாழ்வே யெனா நெக்குருகாரும்
மாறிலாத மாகாலனூர் ... ... புக்கலைவாரே

நாத ரூப மாநாதர் ஆகத்து ... ... உறைவோனே
நாகலோக மீரேழு பாருக்கு ... ... உரியோனே

தீதி லாத வேல்வீர ... ... சேவற்கொடியோனே
தேவ தேவ தேவாதி தேவப் ... ... பெருமாளே

திருப்புகழ் 320 கூறும் மார வேள்

தான தான தானான தானத் ... ... தனதான

கூறும் மார வேள் ஆரவாரக் ... ... கடலாலே
கோப மீது மாறாத கானக் ... ... குயிலாலே

மாறு போலும் மாதாவின் வார்மைப் ... ... பகையாலே
மாது போத மால் ஆகி வாடத் ... ... தகுமோதான்

ஏறு தோகை மீது ஏறி ஆலித்திடும் வீரா
ஏழு லோகம் வாழ்வான சேவல் ... ... கொடியோனே

சீறு சூரர் நீறு ஆக மோதிப் ... ... பொரும் வேலா
தேவ தேவ தேவாதி தேவப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 321 பேரவா அறா

தான தான தானான தானத் ... ... தனதான

பேரவா அறாவாய்மை ... ... பேசற்கறியாமே
பேதை மாதராரோடு கூடிப் ... ... பிணிமேவா

ஆர வார மாறாத நூல்கற்று ... ... அடிநாயேன்
ஆவி சாவி யாகாமல் நீசற்ற ... ... அருள்வாயே

சூர சூர சூராதி ... ... சூரர்க்கெளிவாயா
தோகையா குமாரா கிராதக் ... ... கொடிகேள்வா

தீர தீர தீராதி தீரப் ... ... பெரியோனே
தேவ தேவ தேவாதி தேவப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 322 ஊனே தானாய் (குன்றக்குடி)

தானா தானா தானா தானா
தானா தானத் ... ... தனதான

ஊனே தானாய் ஓயா நோயால்
ஊசாடு ஊசற் ... ... குடில்பேணா

ஓதா மோதா வாது ஆகாதே லோக
ஆசாரத்து உளம் ... ... வேறாய்

நானே நீயாய் நீயே நானாய்
நானா வேதப் ... ... பொருளாலும்

நாடா வீடாய் ஈடேறாதே
நாயேன் மாயக் ... ... கடவேனோ

வானே காலே தீயே நீரே
பாரே பாருக்கு ... ... உரியோனே

மாயா மானே கோனே மானார்
வாழ்வே கோழிக் ... ... கொடியோனே

தேனே தேன் நீள் கான் ஆறாய்வீழ்
தேசு ஆர் சாரற் ... ... கிரியோனே

சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 323 அதல சேடனாராட

தனன தான தானான தனன தான தானான
தனன தான தானான ... ... தனதான

அதல சேடனார் ஆட அகில மேரு மீதாட
அபின காளி தானாட ... ... அவளோ(டு) அன்(று)

அதிர வீசி வாதாடும் விடையில் ஏறுவார் ஆட
அருகு பூத வேதாளம் ... ... அவையாட

மதுர வாணி தானாட மலரில் வேதனார் ஆட
மருவு வானு ளோராட ... ... மதியாட

வனஜ மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலும் ஆடி நீ ஆடி ... ... வரவேணும்

கதை விடாத தோள் வீமன் எதிர்கொள் வாளியால் நீடு
கருதலார்கள் மாசேனை ... ... பொடியாக

கதறு காலி போய்மீள விஜயன் ஏறு தேர்மீது
கனக வேத கோடுதி ... ... அலைமோதும்

உததி மீதிலே சாயும் உலக மூடு சீர்பாத
உவணம் ஊர்தி மாமாயன் ... ... மருகோனே

உதய தாம மார்பான ப்ரபுடதேவ மாராஜன்
உளமும் ஆட வாழ் தேவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 324 இருந்த வீடும்

தனந்த தானந் தந்தன தனதன ... ... தனதான

இருந்த வீடுங் கொஞ்சிய சிறுவரும் ... ... உறுகேளும்
இசைந்த வூரும் பெண்டிரும் இளமையும் ... ... வளமேவும்

விரிந்த நாடுங் குன்றமு நிலையென ... ... மகிழாதே
விளங்கு தீபங் கொண்டுனை வழிபட ... ... அருள்வாயே

குருந்தி லேறுங் கொண்டலின் வடிவினன் ... ... மருகோனே
குரங்குலாவுங் குன்றுறை குறமகள் ... ... மணவாளா

திருந்த வேதந் தண்டமிழ் தெரிதரு ... ... புலவோனே
சிவந்த காலுந் தண்டையும் அழகிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 325 கலந்த மாதும்

தனந்த தானந் தந்தன தனதன ... ... தனதான

கலந்த மாதும் கண் களி உற வரு(ம்) ... ... புதல்வோரும்
கலங்கிடார் என்று இன்பம் உறு உலகிடை ... ... கலி மேவி

உலந்த காயம் கொண்டு உளம் உறு ... ... துயருடன் மேவா
உகந்த பாதம் தந்து உனை உரை செய ... ... அருள்வாயே

மலர்ந்த பூவின் மங்கையை மருவு அரி ... ... மருகோனே
மறம் செய்வார் தம் வஞ்சியை மருவிய ... ... மணவாளா

சிலம்பினோடும் கிண்கிணி திசை தொறும் ... ... ஒலி வீச
சிவந்த காலும் தண்டையும் அழகிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 326 இசைந்த ஏறும்

தனந்த தானந் தனதன தானன ... ... தனதான

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் ... ... எழில்நீறும்
இலங்கு நூலும் புலியத ளாடையும் ... ... மழுமானும்

அசைந்த தோடும் சிரமணி மாலையும் ... ... முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய ... ... குருநாதா

உசந்த சூரன் கிளையுடன் வேரற ... ... முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் ... ... நலியாதே

அசந்த போதென் துயர்கெட மாமயில் ... ... வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 327 திரிபுரம் அதனை

தனதன தனன தனதன தனன
தனதன தனன ... ... தனதான

திரிபுரம் அதனை யொருநொடி யதனில்
எரிசெய்து அருளிய ... ... சிவன்வாழ்வே

சினமுடை அசுரர் மனமது வெருவ
மயிலது முடுகி ... ... விடுவோனே

பருவரை யதனை யுருவிட எறியும்
அறுமுக முடைய ... ... வடிவேலா

பசலையொடு அணையும் இளமுலை மகளை
மதன்விடு பகழி ... ... தொடலாமோ

கரிதிரு முகமும் இடமுடை வயிறும்
உடையவர் பிறகு ... ... வருவோனே

கனதனம் உடைய குறவர்த்தம் மகளை
கருணையொடு அணையும் ... ... மணிமார்பா

அரவணை துயிலும் அரிதிரு மருக
அவனியும் முழுதும் ... ... உடையோனே

அடியவர் வினையும் அமரர்கள் துயரும்
அற அருளுதவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 328 குடம் என ஒத்த

தனதன தத்த தந்த தனதன தத்த தந்த
தனதன தத்த தந்த ... ... தனதான

குடம் என ஒத்த கொங்கை குயில் மொழி ஒத்த இன் சொல்
குற மகள் வைத்த நண்பை ... ... நினைவோனே

வட வரை உற்று உறைந்த மக தெவர் பெற்ற கந்த
மத சலம் உற்ற தந்தி ... ... இளையோனே

இடமுடன் வைத்த சிந்தை இனைவு அற முத்தி தந்து
இசை அறிவித்து வந்து ... ... எனை ஆள்வாய்

தட வரை வெற்பில் நின்று சரவணம் உற்று எழுந்து
சமர் கள(ம்) வெற்றி கொண்ட ... ... பெருமாளே

திருப்புகழ் 329 மடவியர் எச்சில்

தனதன தத்த தந்த தனதன தத்த தந்த
தனதன தத்த தந்த ... ... தனதான

மடவியர் எச்சில் உண்டு கையில் முதலைக் களைந்து
மறுமை தனில் சுழன்று ... ... வடிவான

சட(ம்) மிக வற்றி நொந்து கலவி செயத் துணிந்து
தளர் உறுதற்கு முந்தி ... ... எனை ஆள்வாய்

பட அரவில் சிறந்த இடம் இது எனத் துயின்ற
பசு முகிலுக்கு உகந்த ... ... மருகோனே

குட முனி கற்க அன்று தமிழ் செவியில் பகர்ந்த
குமர குறத்தி நம்பு(ம்) ... ... பெருமாளே.

திருப்புகழ் 330 கொலையிலே மெத்த

தனதனா தத்த தனதனா தத்த
தனதனா தத்த ... ... தனதான

கொலையிலே மெத்த விரகிலே கற்ற
குவளை ஏர் மைக் கண் ... ... விழி மானார்

குழையிலே எய்த்த நடையிலே நெய்த்த
குழலிலே பற்கள் ... ... தனிலே மா

முலையிலே அற்ப இடையிலே பத்ம
முக நிலா வட்டம் ... ... அதின் மீதே

முதுகிலே பொட்டு நுதலிலே தத்தை
மொழியிலே சித்தம் ... ... விடலாமோ

கலையனே உக்ர முருகனே துட்டர்
கலகனே மெத்த ... ... இளையோனே

கனகனே பித்தர் புதல்வனே மெச்சு
கடவுளே பச்சை ... ... மயிலோனே

உலகனே முத்தி முதல்வனே சித்தி
உடையனே விஷ்ணு ... ... மருகோனே

ஒருவனே செச்சை மருவு நேர் சித்ர
உருவனே மிக்க ... ... பெருமாளே.

திருப்புகழ் 331 நகரம் இரு பாதமாகி

தனனதன தான தான தனனதன தான தான
தனனதன தான தான ... ... தனதான

நகரம் இரு பாதமாகி மகர(ம்) வயிறாகி மார்பு
நடு சிகரம் ஆகி வாய் ... ... வகரமாகி

நதி முடி ய சாரம் ஆகி உதய திரு மேனி ஆகி
நமசிவய மாமை ஆகி ... ... எழு(த்) தான

அகர உகர ஏதர் ஓம சகர உணர்வான சூரன்
அறிவில் அறிவான ... ... பூரணமும் ஆகும்

அதனை அடியேனும் ஓதி இதய கமல ஆலையாகி
மருவும் அவதான போதம் ... ... அருள்வாயே

குகனும் அருள் ஆண்மை கூர மகரம் என்னும் சாபதாரி
குறை அகல வேலை மீது ... ... தனி ஊரும்

குழவி வடிவாகவே நம் பரதர் தவம் ஆக மீறு
குலவு திரை சேரும் மாது ... ... தனை நாடி

அகில உலகோர்கள் காண அதிசயம் அதாக மேவி
அரிய மணமே செய்து ஏகு ... ... அவ்வலை தேடி

அறுமுக வன்மீகரான பிறவி யம ராசை வீசும்
அசபை செகர் சோதி நாத ... ... பெருமாளே.

திருப்புகழ் 332 புவிக்குன் பாதம்

தனத்தந் தான தனதன தனத்தந் தான தனதன
தனத்தந் தான தனதன ... ... தனதான

புவிக்கு உன் பாதம் அதைநினைபவர்க்கும் கால தரிசனை
புலக்கண் கூடும் அதுதனை ... ... அறியாதே

புரட்டும் பாத சமயிகள் நெறிக்கண் பூது படிறரை
புழுக்கண் பாவம் அதுகொளல் ... ... பிழையாதே

கவிக்கொண்டாடு புகழினை படிக்கும் பாடு திறமிலி
களைக்கும் பாவ சுழல்படும் ... ... அடிநாயேன்

கலக்குண் டாகு புவிதனில் எனக்கு உண்டாகு பணிவிடை
கணக்குண் டாதல் திருவுளம் ... ... அறியாதோ

சிவத்தின் சாமி மயில்மிசை நடிக்குஞ் சாமி எமதுளெ
சிறக்குஞ் சாமி சொருபமி ... ... தொளிகாணச்

செழிக்குஞ் சாமி பிறவியை யொழிக்குஞ் சாமி பவமதை
தெறிக்குஞ் சாமி முனிவர்களிட ... ... மேவுந்

தவத்தின் சாமி புரிபிழை பொறுக்குஞ் சாமி குடிநிலை
தரிக்குஞ் சாமி அசுரர்கள் ... ... பொடியாகச்

சதைக்குஞ் சாமி எமைபணி விதிக்குஞ் சாமி சரவண
தகப்பன் சாமி யெனவரு ... ... பெருமாளே.

திருப்புகழ் 333 மாறுபொரு காலன்

தானதன தான தத்த தானதன தான தத்த
தானதன தான தத்த ... ... தனதான

மாறு பொரு காலன் ஒக்கும் வானில் எழு மா மதிக்கும்
வாரி துயிலா அதற்கும் ... ... வசையே சொல்

மாய மடவார் தமக்கும் ஆயர் குழல் ஊது இசைக்கும்
வாயும் இள வாடையிற்கும் ... ... அதனாலே

வேறுபடி பாயலுக்குமே எனது பேதை எய்த்து
வேறு படு மேனி சற்றும் ... ... அழியாதே

வேடர் குல மாதினுக்கும் வேடை கெடவே நடித்து
மேவும் இரு பாதம் உற்று ... ... வரவேணும்

ஆறும் மிடை வாள் அரக்கர் நீறு பட வேல் எடுத்த
ஆறு முகனே குறத்தி ... ... மணவாளா

ஆழி உலகு ஏழு அடக்கி வாசுகியை வாய் அடக்கி
ஆலும் மயில் ஏறி நிற்கும் ... ... இளையோனே

சீறு பட மேரு வெற்பை நீறு படவே சினத்த
சேவலவ நீபம் மொய்த்த ... ... திரள் தோளா

சேரும் அடலால் மிகுத்த சூரர் கொடு போய் அடைத்த
தேவர் சிறை மீள விட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 334 அடியார் மனம்

தனதான தந்த தந்த தனதான தந்த தந்த
தனதான தந்த தந்த ... ... தனதான

அடியார்மனஞ்சலிக்க எவராகிலும் பழிக்க
அபராதம் வந்து கெட்ட ... ... பிணிமூடி

அனைவோரும் வந்து சிச்சி யென நால்வருஞ்சிரிக்க
அனலோடு அழன்று செத்து ... ... விடுமாபோல்

கடையேன்மலங்கள் முற்றும் இருநோயுடன் பிடித்த
கலியோடு இறந்து சுத்த ... ... வெளியாகி

களிகூர என்றனுக்கு மயிலேறி வந்து முத்தி
கதியேற அன்பு வைத்து உன் ... ... அருள்தாராய்

சடைமீது கங்கை வைத்து விடையேறு மெந்தை சுத்த
தழல்மேனியன்சிரித்து ஓர் ... ... புரமூணும்

தவிடாக வந்தெதிர்த்த மதன் ஆகமுஞ் சிதைத்த
தழல்பார்வை அன்றளித்த ... ... குருநாதா

மிடிதீர அண்டருக்கு மயிலேறி வஞ்சர் கொட்டம்
வெளியாக வந்து நிர்த்தம் ... ... அருள்வோனே

மினநூல் மருங்குல் பொற்பு முலைமாது இளங்குறத்தி
மிகுமாலொடு அன்பு வைத்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 335 அயில் விலோசனம்

தனன தானனம் தனன தானனம்
தனன தானனம் ... ... தனதான

அயில் விலோசனம் குவிய வாசகம்
பதற ஆனனம் ... ... குறு வேர்வுற

அளக பாரமும் குலைய மேல் விழுந்து
அதர பானம் உண்டு ... ... இயல் மாதர்

சயில பார(ம்) குங்கும பயோதரம்
தழுவும் ஆதரம் ... ... தமியேனால்

தவிர ஒணாது நின் கருணை கூர் தரும்
தருண பாதமும் ... ... தரவேணும்

கயிலை யாளியும் குலிச பாணியும்
கமல யோனியும் ... ... புயகேசன்

கண பணா முகம் கிழிய மோது வெம்
கருட வாகனம் ... ... தனில் ஏறும்

புயல் இலேகரும் பரவ வானிலும்
புணரி மீதினும் ... ... கிரி மீதும்

பொரு நிசாசரன் தனது மார்பினும்
புதைய வேல் விடும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 336 ஆசைகூர் பத்தன்

தானனா தத்த தானனா தத்த
தானனா தத்த ... ... தனதான

ஆசைகூர் பத்தனேன் மனோ பத்மமான
பூ வைத்து நடுவேயன்பான

நூலிட்டு நாவிலே சித்ரமாகவே
கட்டி ... ... ஒருஞான

வாசம்வீசி ப்ரகாசியா நிற்ப
மாசிலோர் புத்தி ... ... யளிபாட

மாத்ருகா புஷ்ப மாலை கோல ப்ரவாள
பாதத்தில் ... ... அணிவேனோ

மூசுகானத்து மீதுவாழ் முத்த
மூரல்வே டிச்சி ... ... தனபார

மூழ்கு நீபப்ரதாப மார்பத்த
மூரிவே ழத்தின் ... ... மயில்வாழ்வே

வீசுமீன் அப் பயோதிவாய் விட்டு
வேக வேதித்து ... ... வருமாசூர்

வீழ மோதிப் பராரை நாகத்து
வீரவேல் தொட்ட ... ... பெருமாளே

திருப்புகழ் 337 இடை இத்தனை

தனனத்தன தனனத்தன தனனத்தன ... ... தனதான

இடை இத்தனை உள தத்தையர் இதழ் துய்த்து அவர் ... ...
அநுபோகம்

இளகிக் கரை புரள புளகித கற்புர ... ... தன பாரம்

உடன் மல் கடைபடு(ம்) துற் குணம் அற நிற் ... ...
குண உணர்வாலே

ஒரு நிஷ்கள வடிவில் புக ஒரு சற்று அருள் ... ... புரிவாயே

திடம் அற்று ஒளிர் நளின ப்ரம சிறை புக்கனன் ... ... என ஏகும்

தெதி பட்சண க்ருத பட்சண செக பட்சண ... ... என ஓதும்

விட பட்சணர் திரு மைத்துனன் வெருவச் சுரர் ... ... பகை மேல் வேல்

விடு விக்ரம கிரி எட்டையும் விழ வெட்டிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 338. ஊனே தானாய்

தானா தானா தானா தானா
தானா தானத் ... ... தனதான

ஊனே தானாய் ஓயா நோயால்
ஊசாடு ஊசற் ... ... குடில்பேணா

ஓதா மோதா வாது ஆகாதே லோக
ஆசாரத்து உளம் ... ... வேறாய்

நானே நீயாய் நீயே நானாய்
நானா வேதப் ... ... பொருளாலும்

நாடா வீடாய் ஈடேறாதே
நாயேன் மாயக் ... ... கடவேனோ

வானே காலே தீயே நீரே
பாரே பாருக்கு ... ... உரியோனே

மாயா மானே கோனே மானார்
வாழ்வே கோழிக் ... ... கொடியோனே

தேனே தேன் நீள் கான் ஆறாய்வீழ்
தேசு ஆர் சாரற் ... ... கிரியோனே

சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 339 ஏட்டிலே வரை

தாத்த தானன தாத்த தானன
தாத்த தானன ... ... தந்ததான

ஏட்டிலே வரை பாட்டிலே சில
நீட்டிலே இனிதென்று ... ... தேடி

ஈட்டு மாபொருள் பாத்துணாது இகல்
ஏற்றமான ... ... குலங்கள்பேசி

காட்டிலே யியல் நாட்டிலே பயில்
வீட்டிலே ... ... உலகங்கள் ஏச

காக்கை நாய்நரி பேய்க் குழாம் உண
யாக்கை மாய்வது ... ... ஒழிந்திடாதோ

கோட்டும் ஆயிர நாட்டன் நாடுறை
கோட்டு வால் இப ... ... மங்கை கோவே

கோத்த வேலையில் ஆர்த்த சூர் பொரு
வேற் சிகாவள ... ... கொங்கில்வேளே

பூட்டு வார்சிலை கோட்டு வேடுவர்
பூட்கை சேர்குற ... ... மங்கைபாகா

பூத்த மாமலர் சாத்தியே கழல்
போற்று தேவர்கள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 340 கண்டு போல்மொழி

தந்த தானன தந்த தானன
தந்த தானன ... ... தனதான

கண்டு போல் மொழி வண்டு சேர் குழல்
கண்கள் சேல் மதி ... ... முகம் வேய் தோள்

கண்டு பாவனை கொண்டு தோள்களில்
ஒண்டு காதலில் ... ... இரு கோடு

மண்டி மார்பினில் விண்டதாம் என
வந்த கூர் முலை ... ... மடவார் தம்

வஞ்ச மால் அதில் நெஞ்சு போய் மடிகின்ற
மாயம் அது ... ... ஒழியாதோ

கொண்டல் ஆர் குழல் கெண்டை போல் விழி
கொண்டு கோகில ... ... மொழி கூறும்

கொங்கையாள் குற மங்கை வாழ் தரு
குன்றில் மால் கொடு ... ... செலும் வேலா

வெண்டி மா மனம் மண்டு சூர் கடல்
வெம்ப மேதினி ... ... தனில் மீளா

வென்று யாவையும் அன்றி வேளையும்
வென்று மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 341 சிவஞான புண்டரிக

தனதான தந்ததன தனதான தந்ததன
தனதான தந்ததன ... ... தனதான

சிவஞான புண்டரிக மலர்மாதுடன் கலவி
சிவபோக மன்பருக ... ... அறியாமல்

செகமீது உழன்று மல வடிவாயிருந்து பொது
திகழ்மாதர் பின்செருமி ... ... அழிவேனோ

தவ மாதவங்கள்பயில் அடியார் கணங்களொடு
தயவாய் மகிழ்ந்துதினம் ... ... விளையாட

தமியேன்மலங்கள் இரு வினைநோய் இடிந்து அலற
ததிநாளும் வந்ததென்முன் ... ... வரவேணும

உவகாரி யன்பர்பணி கலியாணி எந்தை இடம்
உறை நாயகங் கவுரி ... ... சிவகாமி

ஒளிர் ஆனையின்கரமில் மகிழ்மாதுளங்கனியை
ஒருநாள் பகிர்ந்த ... ... உமை யருள்பாலா

அவமேபி றந்தஎனை யிறவாமல் அன்பர்புகும்
அமுதாலயம் பதவி ... ... அருள்வோனே

அழகாநகம்பொலியு மயிலா குறிஞ்சிமகிழ்
அயிலா புகழ்ந்தவர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 342 தத் தனமும்

தத்த தனதனன தத்த தனதனன
தத்த தனதனன ... ... தனதான

தத் தனமும் அடிமை சுற்றமொடு புதல்வர்
தக்க மனை இனமும் ... ... மனை வாழ்வும்

தப்பு நிலைமை அணுகைக்கு வர விரகு
உதைக்கும் மயல் நினைவு ... ... குறுகா முன்

பத்தி உடன் உருகி நித்தம் உனது அடிகள்
பற்றும் அருள் நினைவு ... ... தருவாயே

பத்து முடி உருளுவித்த பகழியினர்
பச்சை நிற முகிலின் ... ... மருகோனே

அத்தி முகவன் அழகு உற்ற பெழை வயிறன்
அப்பம் அவரை பொரி ... ... அவல் தேனும்

அப்பி அமுது செயும் மொய்ப்பன் உதவ
அடவிக்குள் மற மகளை ... ... அணைவோனே

முத்தி தரு முதல்வர் முக்கண் இறைவரோடு
முற்று(ம்) மறை மொழியை ... ... மொழிவோனே

முட்ட அசுரர் கிளை கெட்டு முறிய முதல்
வெட்டி அமர் பொருத ... ... பெருமாளே

திருப்புகழ் 343 தவநெறி

தனதன தனதன தனதன தனதன தனதன ... ... தனதான

தவநெறி தவறிய குருடுகள் தலைபறி கதறிய ... ... பரபாதத்

தருமிகள் கருமிகள் வெகுவித சமயிகள் அவரொடு ... ...
சருவாநின்று

அவன் இவன்உவன் உடன் அவள் இவள் உவள் அது இது உது
... ... எனுமாறற்று

அரு உரு ஒழிதரு உருவுடை அதுபதி தமியனும் ... ...
உணர்வேனோ

குவலய முழுவதும் மதிர்பட வடகுவடு இடிபட ... ... உரகேசன்

கொடுமுடி பலநெரிதர நெடு முதுகுரை கடல்புனல் ... ... வறிதாக

துவல்கொடு முறையிடு சுரர்பதி துயரது கெட நிசி ... ... சரர்சேனை

துகளெழ நடநவில் மரகத துரகதம் வரவல ... ... பெருமாளே.

திருப்புகழ் 344 தீ ஊதை தாத்ரி

தானான தாத்த தானான தாத்த
தானான தாத்த ... ... தனதான

தீ ஊதை தாத்ரி பானீயம் ஏற்ற
வான் ஈதியால் ... ... திகழும் ஆசைச்

சேறு ஊறு தோல் பை யானாக நோக்கு(ம்)
மா மாயை தீர்க்க ... ... அறியாதே

பேய் பூதம் மூத்த பாறு ஓரி காக்கை
பீறா இழாத் தி(ன்)னு(ம்) ... ... உடல் பேணி

பேயோன் நடாத்து கோமாளி வாழ்க்கை
போம் ஆறு பேர்த்து உன் ... ... அடி தாராய்

வேய் ஊறு சீரக் கை வேல் வேடர் காட்டில்
ஏய்வாளை வேட்க ... ... உரு மாறி

மீளாது வேட்கை மீது ஊர வாய்த்த
வேலோடு வேய்த்த ... ... இளையோனே

மாயூர ஏற்றின் மீதே புகாப் பொன்
மா மேரு வேர்ப் ... ... பறிய மோதி

மாறு ஆன மாக்கள் நீறாக ஓட்டி
வான் நாடு காத்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 345 தோரண கனக

தானன தனன தானன தனன
தானன தனன ... ... தனதான

தோரண கனக வாசலில் முழவு
தோல்முரசு அதிர ... ... முதிராத

தோகையர் கவரி வீச வயிரியர்
தோள்வலி புகழ ... ... மதகோப

வாரண ரத பதாகினி துரக
மாதிர நிறைய ... ... அரசாகி

வாழினும் வறுமை கூரினு நினது
வார்கழ லொழிய ... ... மொழியேனே

பூரண புவன காரண சவரி
பூதர புளக ... ... தனபார

பூஷண நிருதர் தூஷண விபுதர்
பூபதி நகரி ... ... குடியேற

ஆரண வனச ஈரிரு குடுமி
ஆரியன் வெருவ ... ... மயிலேறும்

ஆரிய பரம ஞானமும் அழகும்
ஆண்மையும் உடைய ... ... பெருமாளே.

திருப்புகழ் 346 பார நறுங்குழல்

தான தனந்தன தான தனந்தன
தான தனந்தன ... ... தனதான

பார நறும் குழல் சோர நெகிழ்ந்து
படீர தனம் ... ... புளகிதமாகப்

பாவையர் உந்தியில் மூழ்கி நெடும்
பரிதாபம் உடன் ... ... பரிமள வாயின்

ஆர் அமுது உண்டு அணை மீதில் இருந்து
அநுராகம் விளைந்திட ... ... விளையாடி

ஆக நகம் பட ஆரம் முயங்கிய
ஆசை மறந்து உனை ... ... உணர்வேனோ

நாரதன் அன்று சகாய(ம்) மொழிந்திட
நாயகி பைம்புனம் ... ... அது தேடி

நாணம் அழிந்து உரு மாறிய வஞ்சக
நாடியெ பங்கய ... ... பத(ம்) நோவ

மார(ன்) சரம் பட மோகமுடன் குற
வாணர் குறிஞ்சியின் ... ... மிசையே போய்

மா முநிவன் புணர் மான் உதவும்
தனிமானை மணம் செய்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 347 பூத கலாதிகள்

தானன தானன தந்த தானன தானன தந்த
தானன தானன தந்த ... ... தனதான

பூத கலாதிகள் கொண்டு யோகமும் ஆக மகிழ்ந்து
பூசைகள் யாது நிகழ்ந்து ... ... பிழை கோடி

போம் வழி ஏது தெரிந்து ஆதி அநாதி இரண்டு
பூரணி காரணி விந்து ... ... வெளியான

நாத பராபரம் என்ற யோகி உ(ல்)லாசம் அறிந்து
ஞான சுவாசம் உணர்ந்து ... ... ஒளி காண

நாடி ஒரு ஆயிரம் வந்த தாமரை மீதில் அமர்ந்த
நாயகர் பாதம் இரண்டும் ... ... அடைவேனோ

மாது சர்வேஸ்வரி வஞ்சி காளி பிடாரி விபஞ்சி
வாணி வராகி மடந்தை ... ... அபிராமி

வாழ் சிவகாம சவுந்த்ரி ஆலம் மெ(மே) லாம் முக பஞ்ச
வாலை புராரி இடந்தகு ... ... உமையாயி

வேத புராணம் விளம்பி நீல முராரியர் தங்கை
மேலொடு கீழ் உலகங்கள் ... ... தரு(ம்) பேதை

வேடம் எ(ல்)லாம் உக சங்க பாடலொடு ஆடல் பயின்ற
வேணியர் நாயகி தந்த ... ... பெருமாளே

திருப்புகழ் 348 மதன் இக்கு அது

தனனத் தனதன தனனத் தனதன
தனனத் தனதன ... ... தனதான

மதன் இக்கு அது கொடு பதுமப் புது மலர்
மலையப் பட விடு ... ... வலியாலே

வனம் முற்றின வளை இன(ம்) நித்தில மலை
வலையத்து உகள் வளை ... ... கடலாலே

விதனப் படு(ம்) மதி வதனக் கொடி அற
வெருவிப் பரிமள ... ... அணை மீதே

மெலியக் கலை தலை குலையத் தகும் இனி
விரையக் குர அலர் ... ... தர வேணும்

புதன் ஐச் சது முக விதி அச்சுதன் எதிர்
புனைவித்தவர் தொழு ... ... கழல் வீரா

பொரு கைச் சரி வரி பெருகச் செறிவுறு
புனம் மெய்க் குற மகள் ... ... மணவாளா

முது நல் சரவணம் அதனில் சத தள
முளரிப் பதி தனில் ... ... உறைவோனே

முதுமைக் கடல் அடர் அசுரப் படை கெட
முடுகிப் பொர வ(ல்)ல ... ... பெருமாளே.

திருப்புகழ் 349 மூலா நிலமதின்

தானா தனதன தானா தனதன
தானா தனதன ... ... தனதான

மூலா நிலமதின் மேலே மனதுறு
மோக அடவி சுடர் ... ... தனைநாடி

மோனா நிலைதனை நானா வகையிலும்
ஓதா நெறிமுறை ... ... முதல்கூறும்

லீலா விதம் உனதாலே கதிபெற
நேமா ரகசிய ... ... வுபதேசம்

நீடுழிதனிலை வாடா மணியொளி
நீதா பலமது ... ... தருவாயே

நாலா ருசியமுதாலே திருமறை
நாலாயது செப ... ... மணிமாலை

நாடாய் தவரிடர் கேடா அரிகரி
நாரா யணர்த்திரு ... ... மருகோனே

சூலா திபர்சிவ ஞானார் யமனுதை
காலார் தரவரு ... ... குருநாதா

தோதீ திகுதிகு தீதீ செக
செக சோதீ நடமிடு ... ... பெருமாளே

திருப்புகழ் 350 வீணை இசை

தானதன தாத்த தானதன தாத்த
தானதன தாத்த ... ... தனதான

வீணை இசை கோட்டி ஆலம் இடறு ஊட்டு
வீரம்) முனை ஈட்டி ... ... விழியார் தம்

வேதனையில் நாட்டம் ஆகி இடர் பாட்டில்
வீழும் மயல் தீட்டி ... ... உழலாதே

ஆணி உள வீட்டை மேவி உளம் மாட்டை
ஆவலுடன் ஈட்டி ... ... அழியாதே

ஆவி உறை கூட்டில் ஞான மறை ஊட்டி
ஆன நிலை காட்டி ... ... அருள்வாயே

கேணி உற வேட்ட ஞான நெறி வேட்டர்
கேள் சுருதி நாட்டில் ... ... உறைவோனே

கீத இசை கூட்டி வேத மொழி சூட்டு
கீரர் இயல் கேட்ட ... ... க்ருபை வேளே

சேணின் உயர் காட்டில் வாழும் மறவாட்டி
சீத இரு கோட்டில் ... ... அணைவோனே

சீறு அவுணர் நாட்டில் ஆர அழல் மூட்டி
தேவர் சிறை மீட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 351 இத்தரணி மீதில்

தத்ததன தானத் ... ... தனதான

இத்தரணி மீதிற் ... ... பிறவாதே,
எத்தரொடு கூடிக் ... ... கலவாதே

முத்தமிழை யோதித் ... ... தளராதே
முத்தி அடியேனுக்கு ... ... அருள்வாயே

தத்துவமெய்ஞ் ... ... ஞானக்குருநாதா
சத்தசொரூபா ... ... புத்தமுதோனே

நித்தியக்ருதா நற் ... ... பெருவாழ்வே
நிர்த்தஜெக ஜோதிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 352 என்பந்த வினை

தந்தந்த தனத்தன தாத்தன ... ... தனதான

என்பந்த வினைத்தொடர் போக்கி ... ... விசையமாகி
இன்பந்தனை யுற்று மகாப்ரியம் ... ... அதுவாகி

அன்பு உந்திய பொற்கிணி பாற்கடல் ... ... அமுதான.
அந்தந்தனில் இச்சைகொள் ஆற்பதம் ... ... அருள்வாயே

முன் புந்தி நினைத்து உருவாற் சிறு ... ... வடிவாகி
முன்திந்தியெனப் பரதாத்துடன் ... ... நடமாடி

தம்பந்தம் அறத் தவ நோற்பவர் ... ... குறைதீர
சம்பந்தன் எனத்தமிழ் தேக்கிய ... ... பெருமாளே

திருப்புகழ் 353 கருப்பற்று ஊறி

தனத்தத் தானத் ... ... தனதான

கருப்பற்று ஊறிப் ... ... பிறவாதே
கனக்கப் பாடுற்று ... ... உழலாதே

திருப்பொற் பாதத்து ... ... அநுபூதி
சிறக்கப் பாலித்து ... ... அருள்வாயே

பரப்பற்றாருக்கு ... ... உரியோனே
பரத்து அப்பாலுக்கு ... ... அணியோனே

திருக்கைச் சேவற் ... ... கொடியோனே
செகத்திற் சோதிப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 354 கருப்பையில்

தனத்த தத்தத் தனத்த தத்தத் தனத்த ... ... தனதான

கருப்பையிற் சுக்கிலத்து உலைத்து உற்பவித்து ... ... மறுகாதே.

கபட்டு அசட்டர்க்கு இதத்த சித்ரத் தமிழ்க்கள் ... ... உரையாதே

விருப்பமுற்றுத் துதித்து எனைப்பற்று ... ... எனக்கருதுநீயே

வெளிப்படப் பற்றிடப் படுத்தத் தருக்கி ... ... மகிழ்வோனே

பருப்பதத்தைத் தொளைத்த சத்திப் படைச் ... ... சமரவேளே

பணிக்குலத்தைக் கவர்ப்பதத்துக்கு அளித்த ... ... மயிலோனே

செருப்புறத்துச் சினத்தை முற்றப் பரப்பும் ... ... இசையோனே

தினைப்புனத்துக் குறத்தியைக்கைப் பிடித்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 355 கொடிய மதவேள்

தனதனன தானத் ... ... தனதான

கொடியமத வேள்கைக் ... ... கணையாலே
குரைகண் நெடு நீலக் ... ... கடலாலே

நெடியபுகழ் சோலைக் ... ... குயிலாலே
நிலைமைகெடு மானைத் ... ... தழுவாயே

கடியரவு பூணர்க்கு ... ... இனியோனே
கலைகள்தெரி மாமெய்ப் ... ... புலவோனே

அடியவர்கள் நேசத்து ... ... உறைவேலா
அறுமுக விநோதப் ... ... பெருமாளே

திருப்புகழ் 356 கோடான மேருமலை

தானான தானதனத் ... ... தனதான

கோடு ஆன மேரு மலைத் ... ... தனம் மானார்
கோமாளம் ஆன வலைக்கு ... ... உழலாதே

நாள் தோறும் மேன்மை ... ... படைத்திடவே தான்
நாயேனை ஆள நினைத்திட ... ... ஒணாதோ

ஈடேற ஞானம் உரைத்து ... ... அருள்வோனே
ஈராறு தோள்கள் ... ... படைத்திடுவோனே

மாடு ஏறும் ஈசர் தமக்கு ... ... இனியோனே
மா தானை ஆறு முகப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 357 சமய பத்தி

தனன தத்தன தாத்தன ... ... தனதான

சமய பத்தி வ்ருதாத்தனை ... ... நினையாதே
சரண பத்ம சிவார்ச்சனை ... ... தனைநாடி

அமைய சற்குரு சாத்திர ... ... மொழிநூலால்
அருளெனக்கினிமேல் துணை ... ... தருவாயே

உமைமுலைத்தரு பாற்கொடு ... ... அருள்கூறி
உரிய மெய்த்தவ மாக்கி நல் ... ... உபதேசத்

தமிழ்தனை கரை காட்டிய ... ... திறலோனே
சமணரைக்கழுவேற்றிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 358 சருவிய சாத்திர

தனதன தாத்தனத் ... ... தனதான

சருவிய சாத்திரத் ... ... திரளான
சடுதிகழ் ஆஸ்பதத்து ... ... அமையாத

அருமறையாற் பெறற்கு ... ... அரிதாய
அனிதய வார்த்தையைப் ... ... பெறுவேனோ

நிருதரை மூக்கறுத்து ... ... எழுபார
நெடுதிரை யார்ப்பெழப் ... ... பொருதோனே

பொருள் அடியாற் பெறக் ... ... கவிபாடும்
புலவர் உசாத்துணைப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 359 தீது உற்றே எழு

தானத் தானன ... ... தந்ததான

தீது உற்றே எழு(ம்) ... ... திங்களாலே
தீயைத் தூவிய ... ... தென்றலாலே

போது உற்று ஆடும் ... ... அனங்கனாலே
போதப் பேதை ... ... நலங்கலாமோ

வேதத்தோனை முனிந்த ... ... கோவே
வேடப் பாவை விரும்பும் ... ... மார்பா

ஓதச் சூதம் எறிந்த ... ... வேலா
ஊமைத் தேவர்கள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 360 துள்ளு மதவேள்

தய்யதன தானத் ... ... தனதான

துள்ளுமத வேள் கைக் ... ... கணையாலே
தொல்லைநெடு நீலக் ... ... கடலாலே

மெள்ளவரு சோலைக் ... ... குயிலாலே
மெய்யுருகு மானை ... ... தழுவாயே

தெள்ளுதமிழ் பாடத் ... ... தெளிவோனே
செய்யகும ரேச ... ... திறலோனே

வள்ளல்தொழு ஞானக் ... ... கழலோனே
வள்ளிமண வாளப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 361 தேன் இயல் சொற்

தானதனத் ... ... தனதான

தேன் இயல் சொற்கு ... ... அணி மாதர்
சேவை தனைக் ... ... கருதாதே

யான் எனது ... ... அற்றிடு போதம்
யான் அறிதற்கு ... ... அருள்வாயே

வானவருக்கு ... ... அரசான
வாசவனுக்கு ... ... இனியோனே

ஆனை முகற்கு ... ... இளையோனே
ஆறு முகப் ... ... பெருமாளே

திருப்புகழ் 362 நாரியர்கள் ஆசை

தானதன தானனத் ... ... தனதான

நாரியர்கள் ஆசையைக் ... ... கருதாதே
நான் உன் இரு பாத ... ... பத்மமும் நாட

ஆர அமுதமான சர்க்கரை ... ... தேனே
ஆன அநுபூதியைத் ... ... தருவாயே

காரணம் அதான ... ... உத்தம சீலா
கான குற மாதினைப் ... ... புணர்வோனே

சூரர் கிளை தூள் எழப் ... ... பொரும் வேலா
தோகை மயில் வாகனப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 363 நாளு மிகுத்த

தான தனத்த ... ... தனதான

நாளு மிகுத்த ... ... கசிவாகி
ஞான நிருத்தம் ... ... அதைநாடும்

ஏழை தனக்கும் ... ... அநுபூதி
ராசி தழைக்க ... ... அருள்வாயே

பூளை யெருக்கு ... ... மதிநாக
பூண ரளித்த ... ... சிறியோனே

வேளை தனக்கு ... ... உசிதமாக
வேழ மழைத்த ... ... பெருமாளே

திருப்புகழ் 364 நித்தம் உற்றுனை

தத்தனத் தனனதத்த ... ... தனதான

நித்தம் உற்றுனைநினைத்து ... ... மிகநாடி
நிட்டைபெற்றியல்கருத்தர் ... ... துணையாக
நத்தி உ(த்)தம தவத்தின் ... ... நெறியாலே
லக்ய லக்கண நிருத்தம் ... ... அருள்வாயே

வெற்றி விக்ரமவரக்கர் ... ... கிளைமாள
விட்ட நத்துகரனுக்கு ... ... மருகோனே
குற்றமற்றவர் உளத்தில் ... ... உறைவோனே
குக்குடக் கொடிதரித்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 365 நீலங்கொள்

தானந்த தானத்தம் ... ... தனதான

நீலங்கொள் மேகத்தின் ... ... மயில்மீதே
நீவந்த வாழ்வைக்கண்டதனாலே
மால்கொண்ட பேதைக்கு உன் ... ... மணநாறும்
மார்தங்கு தாரைத் ... ... தந்தருள்வாயே

வேல்கொண்டு வேலைப்பண்டெறிவோனே
வீரங்கொள் சூரர்க்குங் ... ... குலகாலா
நாலந்த வேதத்தின் ... ... பொருளோனே
நானென்று மார்தட்டும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 366 பட்டுப் படாத

தத்தத் தனான ... ... தனதான

பட்டுப் படாத ... ... மதனாலும்
பக்கத்து மாதர் ... ... வசையாலும்

சுட்டுச் சுடாத ... ... நிலவாலும்
துக்கத்தில் ஆழ்வது ... ... இயல்போதான்

தட்டுப் படாத ... ... திறல்வீரா
தர்க்கித்த சூரர் ... ... குலகாலா

மட்டுப் படாத ... ... மயிலோனே
மற்றொப்பி லாத ... ... பெருமாளே.

திருப்புகழ் 367 பரவைக்கு எத்தனை

தத்தத் தனான ... ... தனதான

பரவைக்கு எத்தனை ... ... விசைதூது
பகரற்கு உற்றவர் ... ... என மாண்

உன் மரபுக்கு உச்சித ... ... ப்ரபுவாக
வரம் மெத்தத் தர ... ... வருவாயே

கரடக் கற்பகன் ... ... இளையோனே
கலைவிற் கட்குற ... ... மகள்கேள்வா

அரனுக்கு உற்றது ... ... புகல்வோனே
அயனைக் குட்டிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 368 பிறவியலை

தனதனன தாத்தனத் ... ... தனதான

பிறவியலை யாற்றினிற் ... ... புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற்று ... ... அலையாதே
உறுதிகுரு வாக்கியப் ... ... பொருளாலே
உனதுபத காட்சியைத் ... ... தருவாயே

அறுசமய சாத்திரப் ... ... பொருளோனே
அறிவுளறி வார்க்குணக் ... ... கடலோனே

குறுமுனிவன் ஏத்துமுத் ... ... தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 369 புத்தகத்து ஏட்டில்

தத்தனத் தாத்தத் தாத்த ... ... தனதான

புத்தகத்து ஏட்டில் தீட்டி ... ... முடியாது
பொற்புறக் கூட்டிக் காட்டி ... ... அருள்ஞான
வித்தகப் பேற்றைத் தேற்றி ... ... அருளாலே
மெத்தெனக் கூட்டிக் காக்க ... ... நினைவாயே

தத்தை புக்கு ஒட்டிக் காட்டில் ... ... உறைவாளை
சற்கரித்து ஏத்திக் கீர்த்தி ... ... பெறுவோனே
கைத்தலத்து ஈக் குப்பு ஆர்த்து ... ... நுழையாத
கற்பகத் தோப்புக் காத்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 370 பொன்னை விரும்பிய

தன்ன தனந்தன ... ... தனதான

பொன்னை விரும்பிய ... ... பொதுமாதர்
புன்மை விரும்பியெ ... ... தடுமாறும்

என்னை விரும்பி நி ... ... யொருகால் நின்(னை)
எண்ணி விரும்பவும் ... ... அருள்வாயே

மின்னை விரும்பிய ... ... சடையாளர்
மெய்யின் விரும்பிய ... ... குருநாதா

அன்னை விரும்பிய ... ... குறமானை
அண்மி விரும்பிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 371 மனைமக்கள் சுற்றம்

தனனத்த தத்த ... ... தனதான

மனைமக்கள் சுற்றம் ... ... எனுமாயா
வலையைக் கடக்க ... ... அறியாதே

வினையிற்செ ருக்கி ... ... யடிநாயேன்
விழலுக்கு இறைத்து ... ... விடலாமோ

சுனையைக்கலக்கி ... ... விளையாடு
சொருபக்கு றத்தி ... ... மணவாளா

தினநற்ச ரித்ர ... ... முளதேவர்
சிறைவெட்டி விட்ட ... ... பெருமாளே.

திருப்புகழ் 372 வாரி மீதே

தானனா தானன ... ... தந்ததான

வாரிமீதேயெழு ... ... திங்களாலே
மாரவே ளேவிய ... ... அம்பினாலே

பாரெலாம் ஏசிய ... ... பண்பினாலே
பாவியேன் ஆவி ... ... மயங்கலாமோ

சூரனீள் மார்பு தொளைந்த ... ... வேலா
சோதியே தோகையமர்ந்த ... ... கோவே

மூரிமால் யானைமணந்த ... ... மார்பா
மூவர்தேவாதிகள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 373 வார்குழையை (பழமுதிர்ச்சோலை)

வார் குழையை எட்டி வேளினை மருட்டி
மாய நமனுக்கும் ... ... உறவாகி

மா தவம் அழித்து லீலைகள் மிகுத்து
மா வடுவை ஒத்த ... ... விழி மாதர்

சீருடன் அழைத்து வாய் கனிவு வைத்து
தேன் இதழ் அளித்து ... ... அநுபோக

சேர்வை தனை உற்று மோசம் விளைவித்து
சீர்மை கெட வைப்பர் ... ... உறவாமோ

வாரினை அறுத்து மேருவை மறித்து
மா கனகம் ஒத்த ... ... குடமாகி

வார(ம்) அணைவித்து மா லளிதம் உற்று
மாலைகளும் மொய்த்த ... ... தன மாது

தோர் அணி புயத்தி யோகினி சமர்த்தி
தோகை உமை பெற்ற ... ... புதல்வோனே

சூர் கிளை மடித்து வேல் கரம் எடுத்து
சோலை மலை உற்ற ... ... பெருமாளே.

திருப்புகழ் 374 சீர் சிறக்கும் மேனி (பழமுதிர்ச்சோலை)

சீர் சிறக்கும் மேனி பசேல் பசேல் என
நூபுரத்தின் ஓசை கலீர் கலீர் என
சேர விட்ட தாள்கள் சிவேல் சிவேல் என ... ... வரு மானார்

சேகரத்தின் வாலை சிலோர் சிலோர்களும்)
நூறு லக்ஷ கோடி மயால் மயால் கொடு
தேடி ஒக்க வாடி ஐயோ ஐயோ ... ... என மடமாதர்

மார்பு அடைத்த கோடு பளீர் பளீர் என
ஏமலித்து என் ஆவி பகீர் பகீர் என
மா மசக்கில் ஆசை உளோம் உளோம் என ... ... நினைவு ஒடி

வாடை பற்று வேளை அடா அடா என
நீ மயக்கம் ஏது சொலாய் சொலாய் என
வாரம் வைத்த பாதம் இதோ இதோ என ... ... அருள்வாயே

பாரதத்தை மேரு வெளீ வெளீ திகழ்
கோடு ஒடித்த நாளில் வரை (இ)வரை (இ)பவர்
பா(னு) நிறக் கணேசர் கு ஆகு வாகனர் ... ... இளையோனே

பாடல் முக்ய மாது தமீழ் தமீழ் இறை
மா முநிக்கு காதில் உணார் உணார் விடு
பாசம் அற்ற வேத குரூ குரூபர ... ... குமரேசா

போர் மிகுத்த சூரன் விடோம் விடோம் என
நேர் எதிர்க்க வேலை படீர் படீர் என
போய் அறுத்த போது குபீர் குபீர் என ... ... வெகு சோரி

பூமி உக்க வீசு குகா குகா திகழ்
சோலை வெற்பின் மேவு தெய்வா தெய்வானை
தோள் பூணி இச்சை ஆறு புயா புயா ஆறு உள ... ... பெருமாளே.

திருப்புகழ் 375 தலைமயிர் கொக்கு (பழமுதிர்ச்சோலை)

தலைமயிர் கொக்குக் கொக்கநரைத்து
கலகலெ னப்பற் கட்டது விட்டு
தளர்நடை பட்டுத் தத்தடி யிட்டு ... ... தடுமாறித்

தடிகொடு தத்தி கக்கல்பெ ருத்திட்டு
அசனமும் விக்கி சத்தியெடுத்துச்
சளியுமி குத்து பித்தமு முற்றிப் ... ... பலகாலும்

திலதயி லத்திட் டொக்கவெ ரிக்க
திரிபலை சுக்குத் திப்பிலி யிட்டு
தெளியவ டித்துற் றுய்த்து உடல் ... ... செத்திட்டுயிர்போமுன்

திகழ்புகழ் கற்று சொற்கள்ப யிற்றி
திருவடியைப் பற்றித் தொழுதுற்று
செனனம் அறுக்கைக்கு பரமுத்திக் ... ... கருள்தாராய்

கலணைவிசித்துப் பக்கரை யிட்டு
புரவிசெலுத்திக் கைக்கொடு வெற்பைக்
கடுகநடத்தி திட்டென எட்டிப் ... ... பொருசூரன்

கனபடை கெட்டுத் தட்டற விட்டு
திரைகட லுக்குட் புக்கிட எற்றிக்
களிமயிலைச் சித்ரத்தில் நடத்தி ... ... பொருகோவே

குலிசன்மகட்குத் தப்பியு மற்றக்
குறவர்மகட்குச் சித்தமும் வைத்து
குளிர்தினை மெத்தத் தத்து புனத்திற் ... ... றிரிவோனே

கொடியபொருப்பைக் குத்திமு றித்து
சமரம்விளைத்துத் தற்பர முற்று
குலகிரி யிற்புக் குற்று உறை யுக்ரப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 376 பாசத்தால் விலை (பழமுதிர்ச்சோலை)

பாசத்தால் விலை கட்டிய பொட்டிகள்
நேசித்தார் அவர் சித்த(ம்) மருட்டிகள்
பாரப் பூதரம் ஒத்த தனத்திகள் ... ... மிகவே தான்

பாவத்தால் மெய் எடுத்திடு பட்டிகள்
சீவிக் கோதி முடித்த அளகத்திகள்
பார்வைக்கே மயலைத் தரு துட்டிகள் ... ... ஒழியாத

மாசு உற்று ஏறிய பித்தளையில் பணி
நீறு இட்டே ஒளி பற்ற விளக்கிகள்
மார்பில் காதினில் இட்ட பிலுக்கிகள் ... ... அதி மோக

வாய் வித்தாரம் உரைக்கும் அபத்திகள்
நேசித்து யாரையும் எத்தி வடிப்பவர்
மாயைக்கே மனம் வைத்து அதனுள் தினம் ... ... அலைவேனோ

தேசிக் கானகம் உற்ற தினைப் புனம்
மேவிக் காவல் கவண் கல் சுழற்றுவள்
சீதப் பாத குறப் பெண் மகிழ்ச்சி கொள் ... ... மணவாளா

தேடிப் பாடிய சொல் புலவர்க்கு இதமாகத்
தூது செல் அத்தர் இல் கற்பக
தேவர்க்கு ஆதி திருப் புகலிப் பதி ... ... வருவோனே

ஆசித்தார் மனதில் புகும் உத்தம
கூடற்கே வைகையில் கரை கட்டிட
ஆள் ஒப்பாய் உதிர் பிட்டு அமுதுக்கு அடி ... ... படுவோன் ஒடு

ஆரத்தோடு அகில் உற்ற தருக் குல
மேகத்தோடு ஒருமித்து நெருக்கிய
ஆதிச் சோலை மலைப் பதியில் திகழ் ... ... பெருமாளே.

திருப்புகழ் 377 துடிகொள் நோய் (பழமுதிர்ச்சோலை)

துடிகொள் நோய்களோடு வற்றி
தருண மேனி கோழை துற்ற
இருமல் ஈளை வாத பித்தம் ... ... அணுகாமல்

துறைகளோடு வாழ்வு விட்டு
உலக நூல்கள் வாதை யற்று
சுகமுள அநுபூதி பெற்று ... ... மகிழாமே

உடல்செய் கோர பாழ்வயிற்றை
நிதமும் ஊணினால் உயர்த்தி
உயிரி னீடு யோக சித்தி ... ... பெறலாமே

உருவிலாத பாழில் வெட்ட
வெளியிலாடு நாத நிர்த்த
உனது ஞான பாத பத்மம் ... ... உறுவேனோ

கடிது உலாவு வாயு பெற்ற
மகனும் வாலி சேயு மிக்க
மலைகள் போட ஆழி கட்டி ... ... இகலூர்போய்க்

களமுற ஆனை தேர்நுறுக்கி
தலைகள் ஆறு நாலு பெற்ற
அவனை வாளியால் அடு ... ... அத்தன்மருகோனே

முடுகு வீர சூர பத்மர்
தலையின் மூளை நீறு பட்டு
முடிவதாக ஆடு நிர்த்த ... ... மயில்வீரா

முநிவர் தேவர் ஞான முற்ற
புநித சோலை மாமலைக்குள்
முருக வேல த்யாகர் பெற்ற ... ... பெருமாளே.

திருப்புகழ் 378 வாதினை அடர்ந்த (பழமுதிர்ச்சோலை)

வாதினை யடர்ந்த வேல்விழியர் தங்கள்
மாயமது ஒழிந்து ... ... தெளியேனே

மாமலர்கள் கொண்டு மாலைகள் புனைந்து
மாபதம் அணிந்து ... ... பணியேனே

ஆதியொடு மந்த மாகிய நலங்கள்
ஆறுமுக மென்று ... ... தெரியேனே

ஆனதனி மந்த்ர ரூபநிலை கொண்டது
ஆடுமயி லென்பது ... ... அறியேனே

நாதமொடு விந்து வானவுடல் கொண்டு
நானிலம் அலைந்து ... ... திரிவேனே

நாகம் அணிகின்ற நாதநிலை கண்டு
நாடியதில் நின்று ... ... தொழுகேனே

சோதியுணர் கின்ற வாழ்வுசிவ மென்ற
சோகமது தந்து ... ... எனையாள்வாய்

சூரர்குலம் வென்று வாகையொடு சென்று
சோலைமலை நின்ற ... ... பெருமாளே.

திருப்புகழ் 379 கருவெனு மாயை (புதிய பாடல்கள்)

கருவெனு மாயை உருவினில் மூழ்கி
வயதளவாக ... ... நிலமீதில்

கலைதெரி வாணர் கலைபல நூல்கள்
வெகுவிதமாக ... ... கவிபாடித்

தெருவழி போகி பொருளெனும் ஆசை
திரவியம் நாடி ... ... நெடிது ஓடி

சிலைநுதல் மாதர் மயலினில் மூழ்கி
சிறுவிதமாக ... ... திரிவேனோ

அருள் அநுபோக குருபரனே உன்
அடியவர் வாழ ... ... அருள்வோனே

அரன் இரு காதில் அருள்பர ஞாந
அடைவினை ஓதி ... ... அருள்பாலா

வெருவிடு சூரர் குலஅடி வேரை
விழவிடு ... ... சாசுவதி பாலா

மிடல் உடலாளர் அடர் அசுர் மாள
விடும் அயில் வேல ... ... பெருமாளே

திருப்புகழ் 380 வம்புங் கோபமும் (செங்குன்றாபுரம்)

வம்பும் கோபமும் மேவு அசுராதிகள்
வந்து அஞ்சாமல் உம் வானவர் பாலினில்
மண்டும் போர்செயும் வேளை அன்னோரை வெல் ... ... வடிவேலா

தம்பம்போல் உறு மூடர்கள்மீது
கரும்பும் தேன் நிகர் பா உரையாது
"உன தஞ்சம் பார்" என ஓதுவன் ... ... நீ அருள்புரிவாயே

அம்பு ஒன்றே விழிசேர் குறமாது தன்
இன்பம் தேடி முன் ஓர் கணி ஆகவும்
அன்று உன்பால் வர மோகமதா உற ... ... அணைவோனே

செம்பொன் மாமதில் வான் உற
வாவிகள் எங்கும் தாமரை மாமலர் சூழ்தரு
செங்குன்றாபுரம் வாழ் குமரா எனும் ... ... முருகோனே

திருப்புகழ் 381 காதின்மணி ஓலை

காதின்மணி ஓலையிட்டு ... ... வருமானார்

காமவலை யூடுபுக்கு ... ... மதிமாழ்கி

நீதி நெறியேவிடுத்து ... ... அலையாதே

நீயுன் இரு தாள் அளிக்க ... ... வரவேணும்

ஆதி மகமாயி பெற்ற ... ... குமரேசா

ஆறு முகமே படைத்த ... ... குருநாதா

தீது இல் அடியார் மனத்தில் ... ... உறைவோனே

தேவர் குடி வாழவைத்த ... ... பெருமாளே.

நமோ நம ... ... துதிப்பாடல்கள்

திருப்புகழ் 382 போத நிர்க்குண

தான தத்தன தானா தனாதன
தான தத்தன தானா தனாதன
தான தத்தன தானா தனாதன ... ... தந்ததான

போத நிர்க்குண போதா நமோநம
நாத நிஷ்கள நாதா நமோநம
பூரணக்கலை சாரா நமோநம ... ... பஞ்சபாண

பூபன் மைத்துன பூபா நமோநம
நீப புஷ்பக தாளா நமோநம
போக சொர்க்க புபாலா நமோநம ... ... சங்கமேறும்

மா தமிழ்த்ரய சேயே நமோநம
வேதனத்ரய வேளே நமோநம
வாழ் ஜகத்ரய வாழ்வே நமோநம ... ... என்றுபாத

வாரிஜத்தில் விழாதே மகோததி
யேழ்பி றப்பினில் மூழ்கா மனோபவ
மாயையிற்சுழி யூடே விடாது ... ... கலங்கலாமோ

கீத நிர்த்த வெதாள அடவீநட
நாத புத்திர பாகீரதீ கிருபா
சமுத்திர ஜீமூத வாகனர் ... ... தந்திபாகா

கேகயப்பிரதாபா முலாதிப
மாலிகைக்குமரேசா விசாக
க்ருபாலு வித்ருமகாரா ஷடானன ... ... புண்டரீகா

வேத வித்தக வேதா விநோத கிராத
லக்ஷ்மி கிரீடா மகாசல
வீர விக்ரம பார அவதான ... ... அகண்டசூரா

வீர நிட்டுர வீர ஆதி காரண
தீர நிர்ப்பய தீர அபிராம
விநாயகப்ரிய வேலாயுதா சுரர் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 383 வேத வித்தகா

தான தத்தனா தானா தனாதன
தான தத்தனா தானா தனாதன
தான தத்தனா தானா தனாதன ... ... தந்ததான

வேத வித்தகா சாமீ நமோநம
வேல் மிகுத்த மாசூரா நமோநம
வீம சக்ரயூ காளா நமோநம ... ... விந்துநாத

வீர பத்மசீர் பாதா நமோநம
நீல மிக்ககூ தாளா நமோநம
மேகம் ஒத்த மாயூரா நமோநம ... ... விண்டிடாத

போதம் ஒத்தபேர் போதா நமோநம
பூத மற்றுமே யானாய் நமோநம
பூர ணத்துளே வாழ்வாய் நமோநம ... ... துங்கமேவும்

பூதரத்தெலாம் வாழ்வாய் நமோநம
ஆறி ரட்டிநீள் தோளா நமோநம
பூஷணத்துமா மார்பா நமோநம ... ... புண்டரீக

மீதிருக்கு நா மாதோடு சேயிதழ்
மீதிருக்கும் ஏரார் மா புலோமசை
வீர மிக்கஏழ் பேர்மாதர் நீடினம் ... ... நின்றுநாளும்

வேத வித்தகீ வீமா விராகிணி
வீறுமிக்க மா வீணா கரே மக
மேரு வுற்றுவாழ் சீரே சிவாதரெ ... ... அங்கராகீ

ஆதி சத்தி சாமாதேவி பார்வதி
நீலி துத்தியார் நீள் நாக பூஷணி
ஆயி நித்தியே கோடீர மாதவி ... ... என்றுதாழும்

ஆர்யை பெற்ற சீராளா நமோநம
சூரை யட்டுநீள் பேரா நமோநம
ஆரணத்தினார் வாழ்வே நமோநம ... ... தம்பிரானே

திருப்புகழ் 384 போதகம் தரு (பழநி)

தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன
தான தந்தன தானா தனாதன ... ... தனதான

போத கந்தரு கோவே நமோநம
நீதி தங்கிய தேவா நமோநம
பூத லந்தனை யாள்வாய் நமோநம ... ... பணியாவும்

பூணு கின்றபி ரானே நமோநம
வேடர் தங்கொடி மாலா நமோநம
போதவன்புகழ் சாமீ நமோநம ... ... அரிதான

வேத மந்திர ரூபா நமோநம
ஞான பண்டித நாதா நமோநம
வீர கண்டைகொள் தாளா நமோநம ... ... அழகான

மேனி தங்கிய வேளே நமோநம
வான பைந்தொடி வாழ்வே நமோநம
வீறு கொண்டவிசாகா நமோநம ... ... அருள்தாராய்

பாத கஞ்செறி சூராதி மாளவெ
கூர்மை கொண்டயி லாலே பொராடியெ
பார அண்டர்கள் வானாடு சேர்தர ... ... அருள்வோனே

பாதி சந்திரனேசூடும் வேணியர்
சூல சங்கரனார் கீத நாயகர்
பார திண்புயமேசேரு சோதியர் ... ... கயிலாயர்

ஆதி சங்கரனார்பாக மாதுமை
கோல அம்பிகை மாதா மநோமணி
ஆயி சுந்தரி தாயான நாரணி ... ... அபிராமி

ஆவல் கொண்டு விறாலே சிராடவெ
கோமளம்பல சூழ்கோயில்மீறிய
ஆவினன்குடி வாழ்வான தேவர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 385 சரவண ஜாதா
(விநாயகமலை ... பிள்ளையார்பட்டி)

தனதன தானா தனாதன
தனதன தானா தனாதன
தனதன தானா தனாதன ... ... தனதான

சரவண ஜாதா நமோநம
கருணை அதீதா நமோநம
சததள பாதா நமோநம ... ... அபிராம

தருணக தீரா நமோநம
நிருப அமர் வீரா நமோநம
சமதள வூரா நமோநம ... ... ஜகதீச

பரம சொரூபா நமோநம
சுரர்பதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம ... ... உமைகாளி

பகவதி பாலா நமோநம
இகபர மூலா நமோநம
பவுருஷ சீலா நமோநம ... ... அருள்தாராய்

இரவியும் ஆகாச பூமியும்
விரவிய தூளேற வானவர்
எவர்களும் ஈடேற ஏழ்கடல் ... ... முறையோவென்று

இடர்பட மாமேரு பூதர
மிடிபடவேதான் நிசாசரர்
இகல்கெட மாவேக நீ(டு) அயில் ... ... விடுவோனே

மரகத ஆகார ஆயனும்
இரணிய ஆகார வேதனும்
வசுவெனும் ஆகார ஈசனும் ... ... அடிபேண

மயிலுறை வாழ்வே விநாயக
மலையுறை வேலா மகீதர
வனசரர் ஆதாரமாகிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 386 சத்தி பாணீ (திருசிராப்பள்ளி)

தத்த தானா தனாதன தத்த தானா தனாதன
தத்த தானா தனாதன தந்ததான

சத்தி பாணீ நமோநம முத்தி ஞானீ நமோநம
தத்வ ஆதீ நமோநம ... ... விந்துநாத

சத்து ரூபா நமோநம ரத்ந தீபா நமோநம
தற்ப்ரதாபா நமோநம ... ... என்றுபாடும்

பத்தி பூணாமலே உலகத்தின் மானார் சவாது அகில்
பச்சை பாடீர பூஷித ... ... கொங்கைமேல்வீழ்

பட்டி மாடான நான் உனை விட்டிராமே உலோக இத
பத்ம சீர்பாத நீயினி ... ... வந்துதாராய்

அத்ர தேவ ஆயுதா சுரர் உக்ர சேனாபதீ சுசி
அர்க்ய சோமாசியா குரு ... ... சம்ப்ரதாயா

அர்ச்சன ஆவாகனா வயலிக்குள் வாழ்நாயகா
புய அக்ஷ மாலா தரா குற ... ... மங்கை கோவே

சித்ர கோலாகலா விர லக்ஷ்மி சாதா ரதா பல
திக்கு பாலா சிவாகம ... ... தந்த்ரபோதா

சிட்ட நாதா சிராமலை யப்பர் ஸ்வாமீ மகாவ்ருத
தெர்ப்பை யாசார வேதியர் ... ... தம்பிரானே.,

திருப்புகழ் 387 சீதள வாரிஜ (சிறுவை)

தானன தானன தானான தானன
தானன தானன தானான தானன
தானன தானன தானான தானன ... ... தனதான

சீதள வாரிஜ பாதா நமோநம
நாரத கீத விநோதா நமோநம
சேவல மாமயில் ப்ரீதா நமோநம ... ... மறைதேடுஞ்

சேகரமானப்ர தாபா நமோநம
ஆகம சார சொரூபா நமோநம
தேவர்கள் சேனை மகீபா நமோநம ... ... கதிதோயப்

பாதக நீவு குடாரா நமோநம
மா அசுரேச கடோரா நமோநம
பாரினிலே ஜய வீரா நமோநம ... ... மலைமாது

பார்வதியாள் தரு பாலா நமோநம
நாவல ஞான மனேலா நமோ நம
பாலகுமாரசுவாமீ நமோநம ... ... அருள்தாராய்

போதக மாமுக நேரான சோதர
நீறணி வேணியர் நேயா ப்ரபாகர
பூமகளார் மருகேசா மகோததி ... ... யிகல்சூரா

போதக மாமறை ஞானா தயாகர
தேனவிழ் நீப நறாவாரு மார்பக
பூரண மாமதி போலாறு மாமுக ... ... முருகேசா

மாதவர் தேவர்களோடே முராரியும்
மாமலர் மீதுறை வேதாவுமே புகழ்
மாநிலம் ஏழினு மேலான நாயக ... ... வடிவேலா

வானவ ரூரினும் வீறாகி வீறள
காபுரி வாழ்வினு மேலாகவே
திருவாழ் சிறுவாபுரி வாழ்வே சுராதிபர் ... ... பெருமாளே

திருப்புகழ் 380 ஒது முத்தமிழ்

தான தத்தன தானா தனாதன
தான தத்தன தானா தனாதன
தான தத்தன தானா தனாதன ... ... தந்ததான

ஒது முத்தமிழ் தேரா வ்ருதாவனை
வேதனைப் படு காமா விகாரனை
ஊனம் உற்று உழல் ஆபாச ஈனனை ... ... அந்தர்யாமி

யோகம் அற்று உழல் ஆசா பசாசனை
மோகம் முற்றிய மோடாதி மோடனை
ஊதியத் தவம் நாடாத கேடனை ... ... அன்றில் ஆதி

பாதகக் கொலையே சூழ் கபாடனை
நீதி சற்றும் இலா கீத நாடனை
பாவியர்க்குள் எலாம் மா துரோகனை ... ... மண்ணின் மீதில்

பாடு பட்டு அலை மா கோப லோபனை
வீடு பட்டு அழி கோமாள வீணனை
பாச சிக்கினில் வாழ்வேனை ஆளுவது ... ... எந்த நாளோ

ஆதி சற்குண சீலா நமோநம
ஆடகத் திரி சூலா நமோநம
ஆதரித்து அருள் பாலா நமோநம ... ... உந்தி ஆமை

ஆனவர்க்கு இனியானே நமோநம
ஞான முத்தமிழ் தேனே நமோநம
ஆரணற்கு அரியானே நமோநம ... ... மன்றுள் ஆடும்

தோதி தித்திமி தீதா நமோநம
வேத சித்திர ரூபா நமோநம
சோபம் அற்றவர் சாமீ நமோநம ... ... தன்ம ராச

தூதனை துகை பாதா நமோநம
நாத சற் குரு நாதா நமோநம
ஜோதியில் ஜக ஜோதி மஹா தெவர் ... ... தம்பிரானே

திருப்புகழ் 381 அங்கை மென்குழல் (திருச்செந்தூர்)

தந்த தந்தன தானா தானா
தந்த தந்தன தானா தானா
தந்த தந்தன தானா தானா ... ... தனதான

அம் கை மென் குழல் ஆய்வார் போலே
சந்தி நின்று அயலோடே போவார்
அன்பு கொண்டிட நீரோ போறீர் ... ... அறியீரோ

அன்று வந்து ஒரு நாள் நீர் போனீர்
பின்பு கண்டு அறியோ(ம்) நாம் ஈதே
அன்றும் இன்றும் ஓர் போதோ போகா ... ... துயில் வாரா

எங்கள் அந்தரம் வேறு ஆர் ஓர்வார்
பண்டு தந்தது போதாதோ மேல்
இன்று தந்து உறவோ தான் ஈது ஏன் ... ... இது போதாது

இங்கு நின்றது என் வீடே வாரீர்
என்று இணங்கிகள் மாயா லீலா
இன்ப சிங்கியில் வீணே வீழாது ... ... அருள்வாயே

மங்குல் இன்புறு வானாய் வானூடு
அன்று அரும்பிய கால் ஆய் நீள் கால்
மண்டுறும் பகை நீறா வீறா ... ... எரி தீயாய்

வந்து இரைந்து எழு நீராய் நீர் சூழ்
அம்பரம் புனை பாராய் பார் ஏழ்
மண்டலம் புகழ் நீயாய் நானாய் ... ... மலரோன் ஆய்

உங்கள் சங்கரர் தாம் ஆய் நாம் ஆர்
அண்ட பந்திகள் தாம் ஆய் வான் ஆய்
ஒன்றினும் கடை தோயா மாயோன் ... ... மருகோனே

ஒண் தடம் பொழில் நீடு ஊர் கோடு ஊர்
செந்திலம் பதி வாழ்வே வாழ்வோர்
உண்ட நெஞ்சு அறி தேனே வானோர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 382 அம்பொத்த விழி

தந்தத் தனனத் தந்தத் தனனத்
தந்தத் தனனத் ... ... தனதானா

அம்பு ஒத்த விழித் தந்தக் கலகத்து
அஞ்சிக் கமலக் ... ... கணையாலே

அன்றிற்கும் அனல் தென்றற்கும் இளைத்து
அந்திப் பொழுதில் ... ... பிறையாலே

எம் பொன் கொடி மன் துன்பக் கலன் அற்று
இன்பக் கலவித் ... ... துயர் ஆனாள்

என் பெற்று உலகில் பெண் பெற்றவருக்கு
இன்பப் பு(ல்)லி ... ... உற்றிடலாமோ

கொம்புக் கரி பட்டு அஞ்சப் பதுமக்
கொங்கைக் குறவிக்கு ... ... இனியோனே

கொன்றைச் சடையற்கு ஒன்றைத் தெரியக்
கொஞ்சித் தமிழைப் ... ... பகர்வோனே

செம் பொன் சிகரப் பைம்பொன் கிரியைச்
சிந்தக் கறுவிப் பொரும் ... ... வேலா

செம் சொல் புலவர்க்கு அன்புற்ற
திருச்செந்திற் குமரப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 383 முலை முகம்

தனன தந்த தந்த தனன தந்த தந்த
தனன தந்த தந்த ... ... தனதான

முலை முகம் திமிர்ந்த கலவையும் துலங்கு
முறுவலும் சிவந்த ... ... கனி வாயும்

முருகு அவிழ்ந்து உதிர்ந்த மலர்களும் சரிந்த
முகிலும் இன்ப சிங்கி ... ... விழி வேலும்

சிலை முகம் கலந்த திலதமும் குளிர்ந்த
திரு முகம் ததும்பு(ம்) ... ... குறு வேர்வும்

தெரிய வந்து நின்ற மகளிர் பின் சுழன்று
செயல் அழிந்து உழன்று ... ... திரிவேனோ

மலை முகம் சுமந்த புலவர் செம் சொல் கொண்டு
வழி திறந்த செம் கை ... ... வடிவேலா

வளர் புனம் பயின்ற குற மடந்தை கொங்கை
மணி வடம் புதைந்த ... ... புய வேளே

அலை முகம் தவழ்ந்து சினை முதிர்ந்த சங்கம்
அலறி வந்து கஞ்ச ... ... மலர் மீதே

அளி கலந்து இரங்க இசையுடன் துயின்ற
அரிய செந்தில் வந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 384 சாந்தமில் மோகவெரி (திருவேங்கடம்)

தாந்தன தானதன தாந்தன தானதன
தாந்தன தானதன ... ... தனதான

சாந்தமில் மோக எரி காந்தி அவாவனில
மூண்டு அவியாத ... ... சமயவிரோத

சாங்கலை வாரிதியை நீந்தவொணாது உலகர்
தாந்துணை யாவரென ... ... மடவார் மேல்

ஏந்திள வார்முளரி சாந்தணி மார்பினொடு
தோய்ந்து உருகா அறிவு ... ... தடுமாறி

ஏங்கிட ஆருயிரை வாங்கிய காலன்வசம்
யான்தனி போய்விடுவது ... ... இயல்போதான்

காந்தளின் ஆனகர மான்தரு கானமயில்
காந்த விசாக ... ... சரவணவேளே

காண்டகு தேவர்பதி யாண்டவனே சுருதி
யாண்டகையே இபமின் ... ... மணவாளா

வேந்த குமார குக சேந்த மயூர வட
வேங்கட மாமலையில் ... ... உறைவோனே

வேண்டிய போதடியர் வேண்டிய போகமது
வேண்ட வெறாது உதவு ... ... பெருமாளே

திருப்புகழ் 385 சங்குபோல் மென் (திருச்செந்தூர்)

தந்தனா தந்தனத் தந்தனா தந்தனத்
தந்தனா தந்தனத் ... ... தனதான

சங்கு போல் மென் கழுத்து அந்த வாய் தந்த பல்
சந்த மோக இன்ப முத்து ... ... என வானில்

தங்கு கார் பைங்குழல் கொங்கை நீள் தண் பொருப்பு
என்று தாழ்வு ஒன்று அறுத்து ... ... உலகோரை

துங்க வேள் செம் கை பொன் கொண்டல் நீ என்று சொல்
கொண்டு தாய் நின்று உரைத்து ... ... உழலாதே

துன்ப நோய் சிந்த நல் கந்த வேள் என்று உனை
தொண்டினால் ஒன்று உரைக்க ... ... அருள்வாயே

வெம் கண் வ்யாளம் கொதித்து எங்கும் வே(கு)ம் என்று
எடுத்து உண்டு மேல் அண்டருக்கு ... ... அமுதாக

விண்ட நாதன் திருக் கொண்டல் பாகன் செருக்கு
உண்டு போர் ... ... அம்பலத்தினில் ஆடி

செம் கண் மால் பங்கயக் கண் பெறாது
அந்தரத்தின் கண் ஆடும் திறல் ... ... கதிர் ஆழித்

திங்கள் வாழும் சடைத் தம்பிரான் அன்புறச்
செந்தில் வாழ் செம் தமிழ்ப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 386 சொரியும் முகிலை (திருத்தணிகை)

தனன தனனத் தனன தனனத்
தனன தனனத் ... ... தனதான

சொரியும் முகிலைப் பதும நிதியைச்
சுரபி தருவைச் ... ... சமமாகச்

சொ(ல்)லியும் மனம் எள் (அத்)தனையும் நெகிழ்வு
இல் சுமடர் அருகு உற்று ... ... இயல் வாணர்

தெரியும் அருமைப் பழைய மொழியைத்
திருடி நெருடிக் ... ... கவி பாடி

திரியு மருள் விட்டு உனது குவளைச்
சிகரி பகரப் ... ... பெறுவேனோ

கரிய புருவச் சிலையும் வளைய
கடையில் விடம் ... ... மெத்திய நீலக்

கடிய கணை பட்டு உருவ வெருவிக்
கலைகள் பல பட்டன ... ... கானிற்கு

உரிய குமரிக்கு அபயம் என நெக்கு
உபய சரணத்தினில் ... ... வீழா

உழையின் மகளைத் தழுவ மயல் உற்று
உருகு(ம்) முருகப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 387 அருணமணி மேவு (திருச்செந்தூர்)

தனதனன தான தானன தனதனன தான தானன
தனதனன தான தானன
தனதனன தான தானன தந்தத் தந்தத் ... ... தனதான

அருணமணி மேவு பூஷித ம்ருகமத படீர லேபன
அபிநவ விசால பூரண
அம்பொற் கும்பத் ... ... தனமோதி

அளிகுலவு மாதர் லீலையின் முழுகி அபிஷேக மீதென
அறவுமுறவாடி நீடிய
அங்கைக் கொங்கைக்கு ... ... இதமாகி

இருள் நிறை அம் ஓதி மாலிகை சருவி யுறவான வேளையில்
இழைகலைய மாத ரார்வழி
யின்புற் றன்புற்றழியா ... ... நீள்

இரவுபகல் மோக னாகியெ படியில்மடி யாமல் யானுமுன்
இணையடிகள் பாடி வாழ
எனெஞ்சிற் செஞ்சொற் ... ... றருவாயே

தருணமணி ஆடு அராவணி குடிலசடில ஆதி ஓதிய
சதுர்மறையி னாதி ஆகிய
சங்கத் துங்கக் ... ... குழையாளர்

தருமுருக மேக சாயலர் தமர மகர ஆழி சூழ்புவிதனை
முழுதும் வாரி யேயமு
துண்டிட்டு அண்டர்க்கு ... ... அருள்கூரும்

செருமுதலி மேவு மாவலி யதிமத கபோல மாமலை
தெளிவினுடன் மூல மேயென
முந்தச் சிந்தித் ... ... தருள்மாயன்

திருமருக சூரன் மார்பொடு சிலையுருவ வேலை யேவிய
ஜெயசரவ ணாம னோகர
செந்திற் கந்தப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 388 துன்பங்கொண்டு அங்கம்

தந்தந்தந் தந்தன தந்தன
தந்தந்தந் தந்தன தந்தன
தந்தந்தந் தந்தன தந்தன ... ... தனதான

துன்பங்கொண்டு அங்கம் மெலிந்து அற
நொந்து அன்பும் பண்பும் மறந்து ஒளி
துஞ்சும் பெண் சஞ்சல மென்பதில் ... ... அணுகாதே

இன்பந்தந்து உம்பர் தொழும்பத
கஞ்சம் தம் தஞ்ச மெனும்படி
என்றென்றுந் தொண்டு செயும்படி ... ... அருள்வாயே

நின்பங்கு ஒன்றும் குற
மின்சரணங்கண்டு உன் தஞ்ச மெனும்படி
நின்று அன்பின் தன்படி கும்பிடு ... ... மிளையோனே

பைம்பொன் சிந்தின் துறை தங்கிய
குன்றெங்குஞ் சங்கு வலம்புரி
பம்பும் தென் செந்திலில் வந்தருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 389 இருகுழை யெறிந்த

தனதன தனந்த தந்தன தனதன தனந்த தந்தன
தனதன தனந்த தந்தன ... ... தனதான

இரு குழை எறிந்த கெண்டைகள் ஒரு குமிழ் அடர்ந்து வந்திட
இணை சிலை நெரிந்து எழுந்திட ... ... அணை மீதே

இருள் அளக பந்தி வஞ்சியில் இரு கலை உடன் குலைந்திட
இதழ் அமுது அருந்து சிங்கியின் ... ... மன(ம்) மாய

முருகொடு கலந்த சந்தன அளறு படு குங்குமம் கமழ்
முலை முகடு கொண்டு எழுந்தொறும் ... ... முருகு ஆர

முழு மதி புரந்த சிந்துர அரிவையர் உடன் கலந்திடு
முகடியு(ம்) நலம் பிறந்திட ... ... அருள்வாயே

எரி விட(ம்) நிமிர்ந்த குஞ்சியி(ல்) நிலவொடும் எழுந்த கங்கையும்
இதழி ஒடு அணிந்த சங்கரர் ... ... களி கூரும்

இம வரை தரும் கரும் குயில் மரகத நிறம் தரும் கிளி
எனது உயிர் எனும் த்ரி அம்பகி ... ... பெரு வாழ்வே

அரை வடம் அலம்பு கிண்கிணி பரிபுர(ம்) நெருங்கு தண்டைகள்
அணி மணி சதங்கை கொஞ்சிட ... ... மயில் மேலே

அகம் மகிழ்வு கொண்டு சந்ததம் வரு குமர முன்றிலின் புறம்
அலை பொருத செந்தில் தங்கிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 390 தந்த பசிதனை

தந்த தனதனன தந்த தனதனன
தந்த தனதனன ... ... தனதானா

தந்த பசிதனையறிந்து முலையமுது
தந்து முதுகு ... ... தடவிய தாயார்

தம்பி பணிவிடைசெய் தொண்டர் பிரியமுள
தங்கை மருகர் உயிரெனவே ... ... சார்

மைந்தர் மனைவியர்கடும்பு கடனுதவும்
அந்த வரிசைமொழி ... ... பகர்கேடா

வந்து தலைநவிர் அவிழ்ந்து தரைபுக
மயங்க ஒருமகிட ... ... மிசையேறி

அந்தகனும் எனைய டர்ந்து வருகையினில்
அஞ்ச லெனவலிய ... ... மயில்மேல்நீ

அந்த மறலியொடு உகந்த மனிதன் நம
தன்பன் எனமொழிய ... ... வருவாயே

சிந்தை மகிழ மலை மங்கை நகிலிணைகள்
சிந்து பயமயிலும் ... ... அயில்வீரா

திங்கள் அரவுநதி துன்று சடிலர் அருள்
செந்தி னகரிலுறை ... ... பெருமாளே.

திருப்புகழ் 391 நிலையாப் பொருளை

தனனாத் தனன தனனாத் தனன
தனனாத் தனன ... ... தனதான

நிலையாப் பொருளை உடலாக் கருதி
நெடுநாட் பொழுதும் ... ... அவமேபோய்

நிறைபோய் செவிடு குருடாய் பிணிகள்
நிறைவாய்ப் பொறிகள் ... ... தடுமாறி

மலநீர் சயன மிசையாப் பெருகி
மடிவேற்கு உரிய ... ... நெறியாக

மறைபோற் றரிய ஒளியாய்ப் பரவு
மலர்தாட் கமலம் ... ... அருள்வாயே

கொலைகாட்டு அவுணர் கெட மா சலதி
குளமாய்ச் சுவற ... ... முதுசூதம்

குறிபோய்ப் பிளவு பட மேற் கதுவு
கொதிவேற் படையை ... ... விடுவோனே

அலைவாய்க் கரையின் மகிழ்சீர்க் குமர
அழியாப் புநித ... ... வடிவாகும்

அரனார்க்கு அதித பொருள்காட் டதிப
அடியார்க் கெளிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 392 பங்கம் மேவும் பிறப்பு

தந்தனா தந்தனத் தந்தனா தந்தனத்
தந்தனா தந்தனத் ... ... தனதான

பங்கம் மேவும் பிறப்பு அந்தகாரம்
தனில்பந்த பாசம் தனில் ... ... தடுமாறி

பஞ்ச பாணம் பட புண்படா வஞ்சகப்
பண்பு இலா ஆடம்பரப் ... ... பொதுமாதர்

தங்கள் ஆலிங்கனக் கொங்கை ஆகம் பட
சங்கை மால் கொண்டு இளைத்து ... ... அயராதே

தண்டை சூழ் கிண்கிணி புண்டரீகம் தனை
தந்து நீ அன்பு வைத்து ... ... அருள்வாயே

அம் கை வேல் கொண்டு அரக்கன் ப்ரதாபம் கெடுத்து
அண்ட வேதண்டம் உட்படவே ... ... தான்

அஞ்சவே திண் திறல் கொண்டல் ஆகண்டலற்கு
அண்ட லோகம் கொடுத்து ... ... அருள்வோனே

திங்கள் ஆர் கொன்றை மத்தம் துழாய் துன்று பொன்
செம் சடா பஞ்சரத்து ... ... உறு தோகை

சிந்தையே தென் திசை தென்றல் வீசும் பொழில்
செந்தில் வாழ் செந்தமிழ்ப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 393 மூப்புற்றுச் செவி

தாத்தத் தத்தன தாத்தத் தத்தன
தாத்தத் தத்தன ... ... தனதான

மூப்புற்றுச் செவி கேட்பற்று பெரு
மூச்சுற்றுச் செயல் ... ... தடுமாறி

மூர்க்கச் சொற்குரல் காட்டி கக்கிட
மூக்குக்கு உள்சளி ... ... இளையோடும்

கோப்புக் கட்டி இ(ன்)னாப் பிச்சு எற்றிடு
கூட்டிற் புக்கு உயிர் ... ... அலையாமுன்

கூற்றத் தத்துவ நீக்கி பொற்கழல்
கூட்டிச் சற்றருள் ... ... புரிவாயே

காப்புப் பொற்கிரி கோட்டி பற்றலர்
காப்பைக் கட்டவர் ... ... குருநாதா

காட்டுக்குட் குறவாட்டிக்கு பல
காப்புக் குத்திர ... ... மொழிவோனே

வாய்ப்புற்றத் தமிழ் மார்க்கத் திட்பொருள்
வாய்க்குச் சித்திர ... ... முருகோனே

வார்த்தைச் சிற்பர தீர்த்தச் சுற்றலை
வாய்க்குள் பொற்பமர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 394 வஞ்சத்துடன் ஒரு

தந்தத் தனதன தந்தத் தனதன
தந்தத் தனதன ... ... தனதான

வஞ்சத்துடனொரு நெஞ்சிற் பலநினை
வஞ்சிக் கொடியிடை ... ... மடவாரும்

வந்திப் புதல்வரும் அந்திக் கிளைஞரு
மண்டிக் கதறிடு ... ... வகைகூர

அஞ்சக் கலைபடு பஞ்சிப் புழுவுடல்
அங்கிக் கிரையென ... ... வுடன்மேவ

அண்டிப் பயமுற வென்றிச் சமன்வரும்
அன்றைக்கு அடியிணை ... ... தரவேணும்

கஞ்சப் பிரமனை அஞ்சத் துயர்செய்து
கன்றச் சிறையிடும் ... ... அயில்வீரா

கண்டொத் தனமொழி அண்டத் திருமயில்
கண் தத்து அழகிய ... ... திருமார்பா

செஞ்சொற் புலவர்கள் சங்கத் தமிழ்தெரி
செந்திற்பதி ... ... நகருறைவோனே

செம்பொற் குலவட குன்றைக் கடலிடை
சிந்தப் பொரவல ... ... பெருமாளே.

திருப்புகழ் 395 மங்கை சிறுவர் (திருச்செந்தூர்)

தந்த தனன தந்த தனன
தந்த தனன ... ... தனதான

மங்கை சிறுவர் தங்கள் கிளைஞர்
வந்து கதற ... ... உடல்தீயின்

மண்டி யெரிய விண்டு புனலில்
வஞ்ச மொழிய ... ... விழ ஆவி

வெங்கண் மறலி தன்கை மருவ
வெம்பி யிடறும் ... ... ஒருபாச

விஞ்சை விளையு மன்று உனடிமை
வென்றி யடிகள் ... ... தொழவாராய்

சிங்கம் உழுவை தங்கும் அடவி
சென்று மறமினுடன்வாழ்வாய்

சிந்தை மகிழ அன்பர் புகழு
செந்தி லுறையு ... ... முருகோனே

எங்கு மிலகு திங்கள் கமலம்
என்று புகலு ... ... முகமாதர்

இன்பம் விளைய அன்பி னணையும்
என்றும் இளைய ... ... பெருமாளே.

திருப்புகழ் 396 மருக்குல மேவும் (திருத்தணிகை)

தனத்தன தானம் தனத்தன தானம்
தனத்தன தானம் ... ... தனதான

மருக் குல(ம்) மேவும் குழல் கனி வாய் வெண்
மதிப் பிளவு ஆகும் ... ... நுதலார் தம்

மயக்கினிலே நண்பு உறப் படுவேன் உன்
மலர்க் கழல் பாடும் ... ... திற(ன்) நாடாத்

தருக்கன் உதாரம் துணுக்கு இலி லோபன்
சமத்து அறியா அன்பு ... ... இலி மூகன்

தலத்தினிலே வந்து உறப் பணியாத(வ)ன்
தனக்கு இனியார் தம் ... ... சபை தாராய்

குருக் குல ராஜன் தனக்கு ஒரு தூதன்
குறள் பெல மாயன் ... ... நவ நீதம்

குறித்து அயில் நேயன் திருப் பயில் மார்பன்
குண த்ரய நாதன் ... ... மருகோனே

திருக் குளம்) நாளும் பலத் திசை மூசும்
சிறப்பு அது உறா எண் ... ... திசையோடும்

திரைக் கடல் சூழும் புவிக்கு உயிராகும்
திருத்தணி மேவும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 397 முத்துத் தெறிக்க (திருத்தணிகை)

தத்தத் தனத்ததன தத்தத் தனத்ததன
தத்தத் தனத்ததன ... ... தனதான

முத்துத்தெறிக்க வளர் இக்குச் சிலைக்கைமதன்
முட்டத்தொ டுத்த ... ... மலராலே

முத்தத்திருச்சலதி முற்றத்து உதித் தியென
முற்பட்டெறிக்கு ... ... நிலவாலே

எத் தத்தையர்க்கும் இதமிக்குப் பெருக்கம் அணி
இப்பொற்கொடிச்சி ... ... தளராதே

எத்திக்கும் உற்றபுகழ் வெற்றித்திருத்தணியில்
இற்றைத்தி னத்தில் ... ... வரவேணும்

மெத்தச் சினத்துவட திக்குக் குலச்சிகர
வெற்பை தொளைத்த ... ... கதிர்வேலா

மெச்சிக் குறத்திதனம் இச்சித்து அணைத்துருகி
மிக்குப்பணைத்த ... ... மணிமார்பா

மத்தப்ரமத்தர் அணி மத்தச்சடைப்பரமர்
சித்தத்தில் வைத்த ... ... கழலோனே

வட்டத்திரைக்கடலில் மட்டித்து எதிர்த்தவரை
வெட்டித்துணித்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 398 வினைக்கு இனமாகும் (திருத்தணிகை)

தனத்தன தானம் தனத்தன தானம்
தனத்தன தானம் ... ... தனதான

வினைக்கு இனமாகும் தனத்தினர் வேள்
அம்பினுக்கு எதிர் ஆகும் ... ... விழி மாதர்

மிகப் பல மானம் தனில் புகுதா வெம்
சமத்திடை போய் வெம் ... ... துயர் மூழ்கி

கனத்த விசாரம் பிறப்பு அடி தோயும்
கருக் குழி தோறும் ... ... கவிழாதே

கலைப் புலவோர் பண் படைத்திட ஓதும்
கழல் புகழ் ஓதும் ... ... கலை தாராய்

புனத்து இடை போய் வெம் சிலை குறவோர்
வஞ்சியைப் புணர் வாகம் ... ... புய வேளே

பொருப்பு இரு கூறும் பட கடல் தானும்
பொருக்கு எழ வானும் ... ... புகை மூள

சினத்தோடு சூரன் கனத்(த) தி(ண்)ணி(ய) மார்பம்
திறக்க அமர் ஆடும் ... ... திறல் வேலா

திருப்புகழ் ஓதும் கருத்தினர் சேரும்
திருத்தணி மேவும் ... ... பெருமாளே.

திருப்புகழ் 399 அமரும் அமரர் (திருமயிலை)

தனன தனதனன தனன தனதனன
தனன தனதனன ... ... தனதான

அமரும் அமரரினில் அதிகன் அயனும்
அரியவரும் வெருவ வரும் ... ... அதிகாளம்

அதனை அதகரண விதன பரிபுரணமமை
அ(ன்)னவர்கரண ... ... அகிலேச

நிமிர வருள்சரண நிபிடம் அது என
உன நிமிர சமிரமய ... ... நியமாய

நிமிடமதனில் உணவல சிவசுதவர
நினது பதவிதர ... ... வருவாயே

சமரச அமர சுர விதரபர அசுர
சரத விரதஅயில் ... ... விடுவோனே

தகுர்த தகுர்ததிகு திகுர்த திகுர்ததிகு
தரர ரரரரிரி ... ... தகுர்தாத

எமர நடனவித மயிலின் முதுகில்வரும்
இமைய மகள்குமர ... ... எமதீச

இயலி னியல் மயிலை நகரில் இனிதுறையும்
எமது பரகுரவ ... ... பெருமாளே.

திருப்புகழ் 400 சிவணிதா வியமனது (பழநி)

சிவணி தாவிய மனதும் அழகு மாண் நடை மதன
சிலை உலாவிய புருவம் விழிசேல்கள்

திகழும் மா மதி முகமும் இருள் உலாவிய குழல்கள்
திருவின் ஓவிய கனக தனபாரம்

தவள வாள் நகையும் மினின் இடையுலா விய நடையர்
சரசமா மயில்கள்என இளையோர்கள்

தமிழின் மோகினி எனவே சொலியுமே பணியும் ஒரு
சரசமோ? இனி உதற அருள்வாயே

புவனி காடு அடைய துயில் பரமர்நாடு அடைய சடை
புகழெலாம் அடைய நகை ஒளிமீதே

பொடிகளால் மருவ இள வெயில் உலாவிய கழல்கள்
பொலியவே மழுவு உழையும் உடனாட

பவுரி நாடகம் அருளும் என தாயிடம் மருவு
பரம ராசியன் அருளும் முருகோனே

பழநி மாமலை மருவு எனது மோகினி அமளி
பழகி நாயெனை மருவு பெருமாளே

திருப்புகழ் 401 சீ உதிரம் எங்கும்

தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தானதன தந்த
தானதன தந்த தானதன தந்த ... ... தனதான

சீழ்) உதிரம் எங்கும் ஏய் புழு நிரம்பு
மாய மல பிண்டம் நோய் இடு குரம்பை
தீ நரிகள் கங்கு காகம் இவை தின்பது ... ... ஒழியாதே

தீது உள குணங்களே பெருகு தொந்த
மாயையில் வளர்ந்த தோல் தசை எலும்பு
சேரிடு நரம்பு தான் இவை பொதிந்து ... ... நிலை காணா

ஆயது நமன் கை போக உயிர் அந்த
நாழிகையில் விஞ்ச ஊசிடும் இடும்பை
ஆகிய உடம்பு பேணி நிலை என்று ... ... மடவார் பால்

ஆசையை விரும்பியே விரக சிங்கி
தானும் மிக வந்து மேவிட மயங்கும்
ஆழ் துயர் விழுந்து மாளும் எனை ... ... அன்பு புரிவாயே

மாயை வல கஞ்சனால் விட வெகுண்டு
பார் முழுதும் அண்ட கோளமும் நடுங்க
வாய் பிளறி நின்று மேக நிகர் தன் கை ... ... அதனாலே

வாரி உற அண்டி வீறொடு முழங்கு
நீரை நுகர்கின்ற கோபமொடு எதிர்ந்த
வாரண இரண்டு கோடு ஒடிய வென்ற ... ... நெடியோனாம்

வேயின் இசை கொண்டு கோ நிரை புரந்து
மேயல் புரி செம் கண் மால் மருக துங்கவேல
கிரவுஞ்ச மால் வரை இடிந்து ... ... பொடியாக

வேலை விடு கந்த காவிரி விளங்கு
கார் கலிசை வந்த சேவகன் வணங்க
வீரை நகர் வந்து வாழ் பழநி அண்டர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 402 சுருதி முடி மோனம்

தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன
தனதனன தானந்த தத்ததன தானதன ... ... தனதான

சுருதி முடி மோனம் சொல் சித் பரம ஞான சிவ
சமய வடிவாய் வந்த அத்துவிதமான பர
சுடர் ஒளியதாய் நின்ற நிட்கள சொரூப முதல் ... ... ஒரு வாழ்வே

துரிய நிலையே கண்ட முத்தர் இதய கமலம்
அதனில் விளையா நின்ற அற்புத சுபோத சுக
சுய படிகமாய் இன்ப பத்ம பதமே அடைய ... ... உணராதே

கருவில் உருவே தங்கு சுக்கில நிதான வளி
பொரும அதிலே கொண்ட முக்குண விபாக நிலை
கருத அரியா வஞ்சகக் கபடம் மூடி உடல் ... ... வினை தானே

கலகம் இடவே பொங்கு குப்பை மல வாழ்வு நிஜம்
என உழலும் மாயம் செனித்த குகையே உறுதி
கருது அசுழம் ஆம் இந்த மட்டை தனை ஆள உனது ... ...
அருள் தாராய்

ஒரு நியமமே விண்ட சட் சமய வேத அடி
முடி நடுவுமாய் அண்ட முட்டை வெளி ஆகி உயிர்
உடல் உணர்வு அது ஆய் எங்கும் உற்பனமது ஆக அமர்
... ... உளவோனே

உத தரிசமாம் இன்பப் புத்து அமிர்த போக சுகம்
உதவும் அமல ஆனந்த சத்தி கர மேவு உணர்
அ உரு பிரணவா மந்த்ர கர்த்தவியம் ஆக வரு ... ... குரு நாதா

பருதி கதிரே கொஞ்சு நல் சரண நூபுரம்
அது அசைய நிறை பேர் அண்டம் ஒக்க நடமாடும்
கன பத கெருவிதா துங்க வெற்றி மயில் ஏறும் ஒரு ... ...
திறலோனே

பணியும் அடியார் சிந்தை மெய் பொருள் அது ஆக நவில்
சரவணபவா ஒன்றும் வல் கரமும் ஆகி வளர்
பழநி மலை மேல் நின்ற சுப்ரமணியா அமரர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 403 சுருளளக பார

தனதனன தான தந்த தனதனன தான தந்த
தனதனன தான தந்த ... ... தனதான

சுருள் அளக பார கொங்கை மகளிர் வசமாய் இசைந்து
சுரத க்ரியையால் விளங்கும் ... ... மதன் நூலே

சுருதி எனவே நினைந்து அறிவிலிகளோடு இணங்கு
தொழிலுடைய யானும் இங்கு உன் ... ... அடியார் போல்

அரு மறைகள் ஓதி நினைந்து மநு நெறியிலே நடந்து
அறிவை அறிவால் அறிந்து ... ... நிறைவாகி

அகில புவன(ம்) ஆதி எங்கும் வெளி உற மெய் ஞான இன்ப
அமுதை ஒழியாது அருந்த ... ... அருள்வாயே

பருதி மகன் வாசல் மந்த்ரி அனுமனொடு நேர் பணிந்து
பரி(வு) தக அழையா முன் வந்து ... ... பரிவாலே

பரவிய விபீஷணன் பொன் மகுட முடி சூட நின்று
படைஞரொடு இராவணன் தன் ... ... உறவோடே

எரி புகுத மாறு இல் அண்டர் குடி புகுத மாறு கொண்ட
ரகுபதி இராம சந்த்ரன் ... ... மருகோனே

இளைய குற மாது பங்க பழநி மலை நாத கந்த
இமையவள் த(ன்)னால் மகிழ்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 404 ஞானங்கொள்

தானந்த தனன தான தானந்த தனன தான
தானந்த தனன தான ... ... தனதான

ஞானங்கொள் பொறிகள் கூடி வானிந்து கதிரிலாத
நாடு அண்டி நமசி வாய ... ... வரையேறி

நாவின்ப ரசமதான ஆநந்த அருவி பாய
நாதங்களொடு குலாவி ... ... விளையாடி

ஊனங்க ளுயிர்கள் மோக நானென்பது அறிவி லாமல்
ஓம் அங்கி யுருவ மாகி ... ... இருவோரும்

ஓரந்த மருவி ஞான மா விஞ்சை முதுகினேறி
லோகங்கள் வலம தாட ... ... அருள்தாராய்

தேனங்கொள் இதழி தாகி தார் இந்து சலில வேணி
சீர் அங்கன் எனது தாதை ... ... ஒருமாது

சேர்பஞ்ச வடிவி மோகி யோகங்கொள் மவுன ஜோதி
சேர்பங்கின் அமல நாதன் ... ... அருள்பாலா

கானங்கள் வரைகள் தீவு ஓதங்கள் பொடிய நீல
காடு அந்த மயிலிலேறு ... ... முருகோனே

காமன்கை மலர்கள் நாண வேடம்பெண் அமளி
சேர்வைகாண் எங்கள் பழநி மேவு ... ... பெருமாளே.

திருப்புகழ் 405 தகர நறுமலர்

தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன
தனன தனதன தனதன தனதன ... ... தனதான

தகர நறு மலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழி வலை பட விதி
தலையில் எழுதியும் மனைவி இல் உறவிடு ... ... அதனாலே

தனயர் அ(ன்)னை தமர் மனைவியர் சினெகிதர்
சுரபி விரவிய வகை என நினைவு உறு
தவனம் சலதியில் முழுகியே இடர் படு ... ... துயர் தீர

அகர முதல் உள பொருளினை அருளிட
இரு கை குவி செய்து உள் உருகிட உருகியெ
அரகர என வலன் இடம் உற எழில் உனது ... ... இரு பாதம்

அருள அருளுடன் மருள் அற இருள் அற
கிரண அயில் கொடு குருகு அணி கொடியொடு
அழகு பெற மரகத மயில் மிசை வர ... ... இசைவாயே

சிகர குடையினில் நிரை வர இசை தெரி
சதுரன் விதுரன் இல் வருபவன் அளை அது
திருடி அடி படு சிறியவன் நெடியவன் ... ... மது சூதன்

திகிரி வளை கதை வசி தநு உடையவன்
எழிலி வடிவினன் அரவு பொன் முடி மிசை
திமித திமி திமி என நடம் இடும் அரி ... ... மருகோனே

பகர புகர் முக மத கரி உழை தரு
வனிதை வெருவ முன் வர அருள் புரி குக
பரம குரு பர இமகிரி தரு மயில் ... ... புதல்வோனே

பலவின் முது பழம் விழைவு செய்து ஒழுகிய
நறவு நிறை வயல் கமுகு அடர் பொழில் திகழ்
பழநி மலை வரும் புரவல அமரர்கள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 406 தகைமைத் தனியில்

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் ... ... தனதான

தகைமைத் தனியில் பகை கற்று உறு கைத்
தநு முட்ட ... ... வளைப்பவனாலே

தரளத் திரளில் புரளக் கரளத்
தமரத் திமிரக் ... ... கடலாலே

உற்)கை முத்தம் மிகுத்தது எனப் பகல்
புக்கு ஒளி மட்கு மிகைப் ... ... பொழுதாலே

உரை அற்று உணர்வு அற்று உயிர் எய்த்த கொடிக்கு
உன நல் பிணையல் ... ... தர வேணும்

திகை பத்தும் உகக் கமலத்தனை முன்
சிறை இட்ட பகைத் ... ... திறல் வீரா

திகழ் கற்பகம் மிட்ட வனக் கனகத்
திருவுக்கு உருகிக் குழை– மார்பா

பகலக் கிரணப் பரணச் சடிலப்
பரமற்கு ஒரு சொல் ... ... பகர்வோனே

பவனப் புவனச் செறிவுற்று உயர் மெய்ப்
பழநிக் குமரப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 407 தலைவலி மருத்தீடு

தனதன தந்தான தானான தானதன
தனதன தந்தான தானான தானதன
தனதன தந்தான தானான தானதன ... ... தனதான

தலைவலி மருத்தீடு காமாலை சோகைசுரம்
விழிவலி வறட்சூலை காயாசு வாசம் வெகுசலமிகு
விஷப்பாக மாயாவி காரபிணி ... ... யணுகாதே

தலமிசை யதற்கான பேரோடு கூறியிது
பரிகரி யெனக்காது கேளாது போலுமவர்
சரியும் வயதுக்கேது தாரீர்சொலீரெனவும் ... ... விதியாதே

உலைவற விருப்பாக நீள்காவின் வாசமலர்
வகைவகை யெடுத்தே தொடா மாலிகாபரணம்
உனதடியி னிற்சூடவேநாடு மாதவர்கள் ... ... இருபாதம்

உளமது தரித்தே வினாவோடு பாடியருள்
வழிபட எனக்கே தயாவோடு தாளுதவ
உரகமது எடுத்தாடு மேகார மீதின்மிசை ... ... வரவேணும்

அலைகடல் அடைத்தே மகாகோர ராவணனை
மணிமுடி துணித்து ஆவியேயான ஜானகியை
அடலுடன் அழைத்தேகொள் மாயோனை மாமனெனு ... ...
மருகோனே

அறுகினை முடித்தோனை யாதார மானவனை
மழுவுழை பிடித்தோனை மாகாளி நாணமுனம்
அவைதனில் நடித்தோனை மாதாதை யேஎனவும் ... ...
வருவோனே

பலகலை படித்தோது பாவாணர் நாவிலுறை
இருசரண வித்தார வேலாயுதா உயர்செய்
பரண்மிசை குறப்பாவை தோள்மேவ மோகமுறு ... ... மணவாளா

பதுமவயலிற் பூகமீதே வரால்கள் துயில்
வருபுனல் பெருக்காறு காவேரி சூழவளர்
பழநிவரு கற்பூர கோலாகலா அமரர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 408 பாரியான கொடை

தான தானதனத் தந்த தானன
தான தானதனத் தந்த தானன
தான தானதனத் தந்த தானன ... ... தனதான

பாரியானகொடைக் கொண்டலே திரு
வாழ் விசாலதொடைத் திண்புயா எழு
பாரும் ஏறுபுகழ்க் கொண்ட நாயக ... ... அபிராம

பாவ லோர்கள்கிளைக் கென்றும் வாழ்வருள்
சீல ஞாலவிளக் கின்ப சீவக
பாக சாதன உத்துங்க மானத ... ... எனவோதி

சீரதாக எடுத்தொன்று மாகவி
பாடி னாலும் இரக்கஞ் செயாதுரை
சீறுவார் கடையிற் சென்று தாமயர்வுற ... ... வீணே

சேய பாவகையைக் கொண்டு போய்
அறியாம லேகமரிற் சிந்து வார்சிலர்
சேய னார்மனதிற் சிந்தியார் ... ... அருகுறலாமோ

ஆரு நீர்மைமடுக் கண்கரா நெடுவாயில்
நேர்படவுற் றன்று மூலமென
ஆர வாரமதத் தந்திதான் உ(ய்)ய ... ... அருள்மாயன்

ஆதி நாராணனற் சங்க பாணியன்
ஒது வார்களுளத் தன்பன் மாதவனான
நான்முகன் நற் றந்தை சீதரன் ... ... மருகோனே

வீர சேவகவுத் தண்ட தேவகுமார
ஆறிருபொற் செங்கை நாயக
வீசு தோகைமயிற் றுங்க வாகன ... ... முடையோனே

வீறு காவிரியுட் கொண்ட சேகரனான
சேவகன் நற் சிந்தை மேவிய
வீரை வாழ்பழநி துங்க வானவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 409 தோகைமயிலே கமல

தானதன தானதன தானான தானதன
தானதன தானதன தானான தானதன
தானதன தானதன தானான தானதன ... ... தனதான

தோகை மயிலே கமல மானே உ(ல்)லாசம் மிகு
காம துரையான மத வேள் பூவையே இனிமை
தோயும் அநுபோக சுக லீலா விநோதம் முழுது ... ...
உணர் தேனே

சூது அனைய சீதள இள நீர் ஆன பார முலை
மீது அணைய வாரும் இதழ் தாரீர் என் ஆணை மொழி
சோர்வது இ(ல்)லை யான் அடிமை ஆவேன் உம் ஆணை மிக
... ... மயலானேன்

ஆகம் உறவே நகம் அதாலே விடாத அடையாளம்
இட வாரும் எனவே மாதர்களுடன்
ஆசை சொ(ல்)லியே உழலும் மா பாதன் நீதியிலி ... ...
உனை ஓதேன்

ஆம் உனது நேய அடியாரோடு கூடுகிலன்
நீறு நுதல் மீது இடல் இலா மூடன் ஏதுமிலி
ஆயினும் யான் அடிமை ஈடேறவே கழல்கள் ... ... தருவாயே

மாகம் முகடோடு அகில பாதாள மேருவுடனே
சுழல வாரி அதுவே தாழியா(க) அமரர்
வாலி முதலானவர்கள் ஏனோர்களால் அமுது ... ... கடை நாளில்

வாரும் எனவே ஒருவர் நோகாமல் ஆல விடம்
ஈசர் பெறுமாறு உதவியே தேவர் யாவர்களும்
வாழ அமுதே பகிரும் மா மாயனார் இனிய ... ... மருகோனே

மேக நிகரான கொடைமான் நாயக அதிபதி
வாரி கலி மாருத கரோ பாரி மா மதன
வேள் கலிசை வாழ வரு காவேரி சேவகனது ... ... உளம் மேவும்

வீர அதி சூரர் கிளை வேர் மாளவே பொருத
தீர குமரா குவளை சேர் ஓடை சூழ் கழனி
வீரை நகர் வாழ் பழநி வேலாயுதா அமரர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 410 நிகமம் எனில்

தனதனன தந்த தத்த தானன
தனதனன தந்த தத்த தானன
தனதனன தந்த தத்த தானன ... ... தனதான

நிகமம் எனில் ஒன்றும் அற்று நாள்தொறு(ம்)
நெருடு கவி கொண்டு வித்தை பேசிய
நிழலர் சிறு புன் சொல் கற்று வீறு உள ... ... பெயர் கூறா

நெளிய முது தண்டு சத்ர(ம்) சாமர(ம்)
நிபிடம் இட வந்து கைக்கு மோதிர
நெடுகி அதி குண்டல ப்ரதாபமும் ... ... உடையோராய்

முகம் ஒரு சம்பு மிக்க நூல்களும்
முது மொழியும் வந்து இருக்குமோ எனில்
முடிவில் அவை ஒன்றும் அற்று வேறொரு ... ... நிறமாகி

முறியும் அவர் தங்கள் வித்தை தான் இது
முடியவு(ம்) உனை நின்று பத்தியால் மிக
மொழியும் வளர் செம் சொல் வர்க்கமே வர ... ... அருள்வாயே

திகுதிகு என மண்ட விட்ட தீ ஒரு
செழியன் உடல் சென்று பற்றி ஆருகர்
திகையின் அமண் வந்து விட்ட போதினும் ... ... அமையாது

சிறிய கர பங்கயத்து நீறு ஒரு
தினை அளவு சென்று பட்ட போதினில்
தெளிய இனி வென்றி விட்ட மோழைகள் ... ... கழு ஏற

மகிதலம் அணைந்த அத்த யோனியை
வரைவு அற மணந்து நித்த நீடு அருள்
வகை தனை அகன்றி இருக்கும் மூடனை ... ... மல ரூபம்

வர வர மனம் திகைத்த பாவியை
வழி அடிமை கொண்டு மிக்க மாதவர்
வளர் பழநி வந்த கொற்ற வேலவ ... ... பெருமாளே.

திருப்புகழ் 411 நெற்றி வெயர்த்துளி

தத்தன தத்தன தனத்த தானன
தத்தன தத்தன தனத்த தானன
தத்தன தத்தன தனத்த தானன ... ... தனதான

நெற்றி வெயர்த் துளி துளிக்கவே இரு
குத்து முலைக் குடம் அசைத்து வீதியில்
நிற்பவர் மைப் படர் விழிக் கலாபியர் ... ... மொழியாலே

நித்த(ம்) மயக்கிகள் மணத்த பூ மலர்
மெத்தையில் வைத்து அதி விதத்திலே உடல்
நெட்டு வரத் தொழில் கொடுத்து மேவியும் ... ... உறவாடி

உற்ற வகைப்படி பொருட்கள் யாவையும்
மெத்தவு(ம்) நட்பொடு பறித்து நாள் தொறும்
உற்பன வித்தைகள் தொடுக்கு மாதர்கள் ... ... உறவாமோ

உச்சித மெய்ப்பு உற அ(ன்)னை தயாவுடன்
மெய்ப்படு பத்தியின் இணக்கமே பெற
உள் குளிர் புத்தியை எனக்கு நீ தர ... ... வருவாயே

கற்ற தமிழ்ப் புலவனுக்குமே மகிழ்வுற்று
ஒரு பொற் கொடி களிக்கவே பொரு
கற்பனை நெல் பல அளித்த காரணன் ... ... அருள்பாலா

கற்ப நகர்க் களிறு அளித்த மாது அணை
பொன் புய மைப் புயல் நிறத்த வானவர்கட்கு
இறை உட்கிட அருள் க்ருபாகர ... ... என நாளும்

நல் தவர் அர்ச்சனை இட தயாபர
வஸ்து எனப் புவியிடத்திலே வளர்
நத்து அணி செக்கரன் மகிழ்ச்சி கூர் தரு ... ... மருகோனே

நட்டுவர் மத்தள முழக்கமாம் என
மைக் குலம் மெத்தவும் முழக்கமே தரு
நல் பழநிப் பதி செழிக்க மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 412 பகர்தற்கு அரிதான

தனனத்தன தான தந்தன தனனத்தன தான தந்தன
தனனத்தன தான தந்தன ... ... தனதான

பகர்தற்கு அரிதான செந்தமிழ் இசையில் சில பாடல் அன்பொடு
பயில பல காவியங்களை ... ... உணராதே

பவளத்தினை வீழியின்கனி யதனைப்பொரு வாய் மடந்தையர்
பசலைத்தனமே பெறும் ... ... விரகாலே

சகரக்கடல் சூழும் அம்புவி மிசை இப்படியே திரிந்து உழல்
சருகொத்து உளமே அயர்ந்து உடல் ... ... மெலியாமுன்

தகதித்திமி தாகி ணங்கிண என உற்றெழு தோகை யம்பரி
தனில் அற்புத மாக வந்தருள் ... ... புரிவாயே

நுகர்வித்தகமாகும் என்று உமை மொழியிற் பொழி பாலை யுண்டிடு
நுவல்மெய்ப்புள பாலன் என்றிடும் ... ... இளையோனே

நுதிவைத்த கரா மலைந்திடு களிறுக்கு அருளே புரிந்திட
நொடியிற் பரிவாக வந்தவன் ... ... மருகோனே

அகரப்பொருள் ஆதி யொன்றிடு முதல் அக்கரமானதின் பொருள்
அரனுக்கு இனிதா மொழிந்திடு ... ... குருநாதா

அமரர்க்கு இறையே வணங்கிய பழநித் திருவாவினன்குடி
அதனில் குடியாய் இருந்தருள் ... ... பெருமாளே.

திருப்புகழ் 413 பஞ்ச பாதகன்

தந்த தானனந் தானதன தானதன
தந்த தானனந் தானதன தானதன
தந்த தானனந் தானதன தானதன ... ... தனதான

பஞ்ச பாதகன் பாவிமுழு மூடன் வெகு
வஞ்ச லோபியன் சூதுகொலை காரன் மதி
பண்கொளாதவன் பாவகட லூடுநுழை ... ... பவுஷாசை

பங்கன் மோதியம் பாழ்நரகில் வீணின்விழ
பெண்டிர் வீடுபொன் தேடி நொடி மீதில்மறை
பஞ்ச மாமலம் பாசமொடு கூடி வெகு ... ... சதிகாரர்

அஞ்சு பூதமுண்டா கடிய காரர் இவர்
தங்கள் வாணிபங் காரியம லாமல்
அருளன்பர் பாலுடன் கூடியறி யாதபுகழ் ... ... அடியேனை

அண்டர் மாலயன் தேடியறி யாதவொளி
சந்த்ர சேகரன் பாவைவிளையாடு படிக
அந்த நாடுடன் கூடிவிளை யாடஅருள் ... ... புரிவாயே

வஞ்ச மாசுரன் சேனைகடலோடு குவடுங்கவே
இனன் போலவொளிர் வேலைவிடு
வண்கையா கடம் பேடுதொடை யாடுமுடி ... ... முருகோனே

மங்கை மோகசிங்கார ரகு ராமரிட
தங்கை சூலியங் காளியெமை யீணபுகழ்
மங்களாயி சந்தான சிவகாமியுமை ... ... யருள்பாலா

கொஞ்சு மாசுகம் போலமொழி நீலகடை
பெண்கள் நாயகந் தோகைமயில் போல் இரச
கொங்கை மால்குறம் பாவை அவல் தீரவர ... ... அணைவோனே

கொண்டல் சூழுமஞ்சோலை மலர் வாவி கயல்
கந்து பாய நின்றாடு துவர் பாகை யுதிர்
கந்தி யோடகஞ் சேர் பழநி வாழ்குமர ... ... பெருமாளே.

திருப்புகழ் 414 புடவிக்கு அணி

தனனத் தனதன தனதன தந்தத்
தனனத் தனதன தனதன தந்தத்
தனனத் தனதன தனதன தந்தத் ... ... தனதான

புடவிக்கு அணி துகில் என வளர் அந்தக்
கடல் எட்டையும் அற குடி முநி எண் கண்
புநிதச் சத தள நிலை கொள் சயம்புச் ... ... சதுர் வேதன்

புரம் அட்டு எரி எழ விழி கனல் சிந்தி
கடினத்தொடு சில சிறுநகை கொண்ட
அற்புத கர்த்தர் அரகர பரசிவன் இந்தத் ... ... தனி மூவர்இட(ம்)

சித்தமும் நிறை தெளிவு உறவும் பொன்
செவியுள் பிரணவ ரகசியம் அன்பு உற்றிட
உற்பன மொழி உரை செய் குழந்தைக் ... ... குருநாதா

எதிர் உற்ற அசுரர்கள் படை கொடு சண்டைக்கு
இடம் வைத்திட அவர் குலம் முழுதும் பட்டிட
உக்கிரமொடு வெகுளிகள் பொங்கக் ... ... கிரி யாவும்

பொடி பட்டு ... உதிரவும் விரிவுறும் அண்டச்
சுவர் விட்டு அதிரவும் முகடு கிழிந்து
அப்புறம் அப் பர வெளி கிடு கிடு எனும் ... ... சத்தமும் ஆக

பொருதுக் கையில் உள அயில் நிணம் உண்க
குருதிப் புனல் எழு கடலினும் மிஞ்ச
புரவிக் கன மயில் நட விடும் விந்தைக் ... ... குமரேசா

படியில் பெருமித தக உயர் செம் பொன்
கிரியைத் தனி வலம் வர அரன் அந்தப்
பலனைக் கரி முகன் வசம் அருளும் பொற்பு ... ... அதனாலே

பரன் வெட்கிட உளம் மிகவும் வெகுண்டு அக்
கனியைத் தர விலை என அருள் செந்தில்
பழநிச் சிவகிரி தனில் உறை கந்தப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 415 புடைசெப் பென

தனனத் தனனத் தனனத் தனனத்
தனனத் தனனத் ... ... தனதான

புடை செப்பு என முத்து அணி கச்சு அற உள்
பொருமிக் கலசத்து ... ... இணையாய

புளகக் களபக் கெருவத் தன மெய்ப்
புணரத் தலை இட்டு ... ... அமரே செய்

அடைவில் தினம் உற்று அவசப்படும் எற்கு
அறிவில் பதடிக்கு ... ... அவமான

அசடற்கு உயர் ஒப்பது இல் நல் க்ருபை உற்று
அடிமைக்கு ஒரு சொல் ... ... புகல்வாயே

குடம் ஒத்த கடக் கரடக் கலுழிக்
குணம் மெய்க் களிறுக்கு ... ... இளையோனே

குடி புக்கிட மி(மீ)ட்டு அசுரப் படையைக்
குறுகித் தகரப் ... ... பொரும் வேலா

படலைச் செறி நல் கதலிக் குலையில்
பழம் முற்(றி) ஒழுகப் ... ... புனல் சேர் நீள்

பழனக் கரையில் கழை முத்து உகு நல்
பழநிக் குமரப் ... ... பெருமாளே.

திருப்புகழ் 416 பெரியதோர் கரி

தனதனா தனதன தந்த தானன
தனதனா தனதன தந்த தானன
தனதனா தனதன தந்த தானன ... ... தனதான

பெரியது ஓர் கரி இரு கொம்பு போலவெ
வடிவம் ஆர் புளகித கும்ப மா முலை
பெருகியே ஒளி செறி தங்க ஆரமும் ... ... அணியான

பிறையதோ எ(ன்)னு(ம்) நுதல் துங்க மீறு வை
அயில் அதோ எ(ன்)னும் இரு கண்கள் ஆரவெ
பிறகு எலாம் விழு குழல் கங்குல் ஆரவெ ... ... வரும் மானார்

உரியது ஓர் பொருள் கொடு வந்த பேர்களை
மனையிலே வினவியெ கொண்டு போகிய
உளவிலே மருவிய வஞ்ச மாதர்கள் ... ... மயலாலே

உருகியே உடல் அற வெம்பி வாடியெ
வினையிலே மறுகியெ நொந்த பாதகன்
உனது தாள் தொழுதிட இன்ப ஞானம் ... ... அது அருள்வாயே

அரியது ஓர் அமரர்கள் அண்டம் ஏறவெ
கொடியதோர் அசுரர்கள் அங்கம் மாளவெ
அடல் அதோடு அமர் புரிகின்ற கூரிய ... ... வடி வேலா

அரகரா என மிக அன்பர் சூழவெ
கடியது ஓர் மயில் மிசை அன்றை ஏறியெ
அவனி ஓர் நொடி வருகின்ற காரண ... ... முருகோனே

பரியது ஓர் கயிறு அ(ன்)னை கொண்டு வீசவெ
உறி அது தோய் தயிர் தனை உண்டு நாடியெ
பசியதோ கெட அருள் கொண்ட மாயவன் ... ... மருகோனே

பரம மா நதி புடை கொண்டு அணாவவெ
வனச மா மலரினில் வண்டு உலாவவெ
பழநி மா மலை தனில் என்று(ம்) மேவிய ... ... பெருமாளே.

திருப்புகழ் 417 மந்தரமதெனவே

தந்ததன தனனா தனந்த
தந்ததன தனனா தனந்த
தந்ததன தனனா தனந்த ... ... தனதான

மந்தரம் அது எனவே சிறந்த
கும்ப முலை தனிலே புனைந்த
மஞ்சள் மணம் அதுவே துலங்க ... ... வகை பேசி

மன்று கமழ் தெரு வீதி வந்து
நின்றவரை விழியால் வளைந்து
வந்தவரை அருகே அணைந்து ... ... தொழில் கூறி

எந்த அளவும் இனிதாக நம்பு
தந்து பொருள் தனையே பிடுங்கி
இன்பம் அருள் விலைமாதர் தங்கள் ... ... மனை தேடி

எஞ்சி மனம் உழலாமல் உன்றன்
அன்பு உடைமை மிகவே வழங்கி
என் தனையும் இனிது ஆள இன்று ... ... வர வேணும்

விந்தை எனும் உமை மாது தந்த
கந்த குரு பர தேவ வங்கம்
என்ற வரை தனில் மேவும் எந்தை ... ... புதல்வோனே

மிஞ்சும் அழகினிலே சிறந்த
மங்கை குற மட மாது கொங்கை
மென் கிரியில் இதமாய் அணைந்த ... ... முருகோனே

சிந்தை மகிழ் புலவோர்கள் வந்து
வந்தனை செய் சரண அரவிந்த
செம் தமிழில் உனையே வணங்கு ... ... குரு நாதர்

தென்றல் வரை முநி நாதர் அன்று
கும்பிட நல் அருளே பொழிந்த
தென் பழநி மலை மேல் உகந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 418 மனக்கவலை ஏதும்

தனத்ததன தான தந்த தனத்ததன தான தந்த
தனத்ததன தான தந்த ... ... தனதான

மனக்கவலை யேது மின்றி உனக்கடிமை யேபு ரிந்து
வகைக்கு மநு நூல் விதங்கள் ... ... தவறாதே

வகைப்படி மனோரதங்கள் தொகைப்படியினால் இலங்கி
மயக்கமற வேதமுங்கொள் ... ... பொருள்நாடி

வினைக்குரிய பாதகங்கள் துகைத்(து) உவகை யால் நினைந்து
மிகுத்தபொருள் ஆகமங்கள் ... ... முறையாலே

வெகுட்சிதனையே துரந்து களிப்பினுடனே நடந்து
மிகுக்கும் உனையே வணங்க ... ... வரவேணும்

மனத்தில்வருவோனெ என்(று) உன் அடைக்கலம் அதாக வந்து
மலர்ப்பதமதே பணிந்த ... ... முநிவோர்கள்

வரார்க்கும் இமையோர்க ளென்பர் தமக்கும் மனமேயிரங்கி
மருட்டிவரு சூரை வென்ற ... ... முனைவேலா

தினைப்புனமுனே நடந்து குறக்கொடியையே மணந்து
செகத்தை முழுதாள வந்த ... ... பெரியோனே

செழித்தவளமே சிறந்த மலர்ப்பொழில்களே நிறைந்த
திருப்பழநி வாழவந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 419 மருமலரினன்

தனதனன தந்த தந்த தனதனன தந்த தந்த
தனதனன தந்த தந்த ... ... தனதான.

மரு மலரினன் துரந்து விட வினை அருந்த அந்தி
மதியொடு பிறந்து முன்பு எய் ... ... வதையாலே

வகை தனை மறந்து எழுந்து முலை தனை அருந்தி
அந்த மதலை என வந்து குன்றின் ... ... வடிவாகி

இரு மயல் கொடுந் துவண்டு பொதுவையர் அகம் புகுந்து
இரவு பகல் கொண்டு ஒடுங்கி ... ... அசடாகும்

இரு வினை பொதிந்த இந்த ஜனன மரணம் துறந்து
இணை அடி வணங்க என்று ... ... பெறுவேனோ

திருவொடு பெயர்ந்து இருண்ட வனமிசை நடந்து இலங்கை
திகழ் எரி இடும் குரங்கை ... ... நெகிழாத

திடம் உள முகுந்தர் கஞ்சன் வர விடும் எல் வஞ்சகங்கள்
செறிவுடன் அறிந்து வென்ற ... ... பொறியாளர்

பரிவொடு மகிழ்ந்து இறைஞ்சு மருதிடை தவழ்ந்து நின்ற
பரம பத நண்பர் அன்பின் ... ... மருகோனே

பதுமம் மிசை வண்டு அலம்பு சுனை பல விளங்கும் துங்க
பழநி மலை வந்து அமர்ந்த ... ... பெருமாளே.

திருப்புகழ் 420 மலரணி கொண்டை

தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன
தனதன தந்தத் தனத்த தானன ... ... தனதான

மலர் அணி கொண்டைச் சொருக்கிலே அவள்
சொ(ல்)லும் மொழி இன்பச் செருக்கிலே
கொடுமையும் அடர் நெஞ்சத் திருக்கிலே முக ... ... மதியாலே

மருவு நிதம்பத் தடத்திலே நிறை
பரிமள கொங்கைக் குடத்திலே மிக
வலியவும் வந்து ஒத்து இடத்திலே விழி ... ... வலையாலே

நிலவு எறி அங்கக் குலுக்கிலே எழில்
வளை புனை செம் கைக் கிலுக்கிலே கன
நிதி பறி அந்தப் பிலுக்கிலே செயும் ... ... ஓயிலாலே

நிதம் இயலும் துர்க் குணத்திலே பர
வசமுடன் அன்புற்று இணக்கிலே ஒரு
நிமிஷம் இணங்கிக் கணத்திலே வெகு ... ... மதி கேடாய்

அலைய நினைந்து உற்பநத்திலே அநு
தினம் மிகு என் சொப்பனத்திலே வர
அறிவும் அழிந்து அற்பன் அ(க்)திலே நி(த்)தம் ... ... உலைவேனோ

அசடனை வஞ்சச் சமர்த்தனாகிய
கசடனை உன் சில் கடைக்கண் நாடிய
மலர் கொடு நின் பொன் பதத்தையே தொழ ... ... அருள் தாராய்

பலபல பைம்பொன் பதக்கம் ஆரமும்
அடிமை சொலும் சொல் தமிழ் பன்னீரொடு
பரிமள மிஞ்சக் கடப்ப மாலையும் ... ... அணிவோனே

பதியினில் மங்கைக் கதித்த மா மலையொடு
சில குன்றில் தரித்து வாழ் உயர்
பழநியில் அன்புற்று இருக்கும் வானவர் ... ... பெருமாளே.

திருப்புகழ் 421 முகிலளகத்தில்

தனதன தத்தத் தனந்த தந்தன
தனதன தத்தத் தனந்த தந்தன
தனதன தத்தத் தனந்த தந்தன ... ... தந்ததான

முகில் அளகத்தில் கமழ்ந்த வண் பரிமள
அலர் துற்றக் கலந்து இடம் தரு
முகிழ் நுதி தைத்துத் துயர்ந்த மங்கையர் ... ... அங்கம் மீதே

முகம் வியர்வு உற்றுப் பரந்து செம் கயல்
விழி இணை செக்கச் சிவந்து குங்கும
ம்ருமத மத்தத் தனங்களின் மிசை ... ... எங்கும் மேவி

உக உயிர் ஒத்துப் புயங்கள் இன்புற
உறவினை உற்றுத் திரண்டு கொங்கு
அளவுறும் அணை உற்றுத் திரங்கும் மஞ்சமில் ... ... ஒன்றி மேவி

ஒளி திகழ் பத்மக் கரங்களின் புறம்
உறு வளை ஒக்கக் கலின் கல் என்கவும்
உயர் மயல் உற்று இரங்கும் அன்பு அது ... ... ஒழிந்திடாதோ

செக முழுது ஒக்கப் பயந்த சங்கரி
அடியவர் சித்தத்து உறைந்த சம்ப்ரம
சிவன் ஒரு பக்கத்து உறைந்த மங்கை ... ... சுமங்கை நீடு

திகழ்வன பச்சைப் பசங்கி அம்பண(ம்)
கரதலி கச்சு உற்று இலங்கு கொங்கையள்
திரு அருள் நல் பொன் பரந்திடும் பரை ... ... அண்டம் மீதே

பகல் இரவு அற்றிட்டு உயர்ந்த அம்பிகை
திரி புரை முற்றிட்டு இரண்டொடு ஒன்று அ(ல்)லர்
பரிவுற ஒக்கச் செய்யும் பரம்ப்ரமி ... ... அன்பு கூரும்

பதிவ்ரதை மிக்கச் சிரம் தெரிந்து அருள்
பகிரதி வெற்பில் பிறந்த பெண் தரு
பழநியில் வெற்பில் திகழ்ந்து நின்று அருள் ... ... தம்பிரானே.

திருப்புகழ் 422 முகை முளரி

தனதனன தனதான தனதனன தனதான
தனதனன தனதான ... ... தனதான

முகை முளரி ப்ரபை வீசும் எழில் கனக மலை போலும்
முதிர்வு இல் இள தன பார ... ... மடவார் தோள்முழுகி

அமிழ் அநுபோக விழலன் என உலகோர்கள்
மொழியும் அது மதியாமல் ... ... தலை கீழ் வீழ்ந்து

அகம் மகிழ விதமான நகை அமுதம் என ஊறல்
அசடர் அகம் எழ ஆகி ... ... மிகவே உண்டு

அழியும் ஒரு தமியேனும் மொழியும் உனது இரு தாளின்
அமுது பருகிட ஞானம் ... ... அருளாயோ

மகரம் எறி திரை மோது பகர கடல் தட வாரி
மறுகு புனல் கெட வேலை ... ... விடுவோனே

வரிசை அவுண் மக சேனை உக முடிய மயில் ஏறி
வரு ப(ன்)னிரு கர தீர ... ... முருகோனே

பகர் அரியர் எனலாகும் உமை கொழுநர் உளம் மேவும்
பரம குரு என நாடும் ... ... இளையோனே

பணில(ம்) மணி வெயில் வீசும் அணி சிகர மதி சூடு
பழநி மலை தனில் மேவு(ம்) ... ... பெருமாளே.



ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!

கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!

மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!

ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!

ஆறிரு தடந்தோள் வாழ்க; அறுமுகம் வாழ்க;
வெற்பைக் கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க;
செவ்வேள் ஏறிய மஞ்ஞை வாழ்க; யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்க சீர் அடியாரெல்லாம்!

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.

வெற்றிவேல் முருகனுக்கு அரஹரோகரா!!

திருப்புகழும் பக்கமும்

திருப்புகழ் 1 கைத்தல நிறைகனி (வயலூர்) 9
திருப்புகழ் 2 பக்கரை விசித்ரமணி (விநாயகர்) 9
திருப்புகழ் 3 முத்தைத்தரு (திருவருணை) 10
திருப்புகழ் 4 உனைத் தினம் (திருப்பரங்குன்றம்) 11
திருப்புகழ் 5 கருவடைந்து (திருப்பரங்குன்றம்) 12
திருப்புகழ் 6 கனகந்திரள்கின்ற (திருப்பரங்குன்றம்) 13
திருப்புகழ் 7 சந்ததம் பந்த (திருப்பரங்குன்றம்) 14
திருப்புகழ் 8 மன்றலங் கொந்துமிசை (திருப்பரங்குன்றம்) 14
திருப்புகழ் 9 அந்தகன் வருந்தினம் (திருச்செந்தூர்) 15
திருப்புகழ் 10 அமுத உததி விடம் (திருச்செந்தூர்) 16
திருப்புகழ் 11 அறிவழிய மயல்பெருக (திருச்செந்தூர்) 17
திருப்புகழ் 12 இயலிசையில் உசித (திருச்செந்தூர்) 18
திருப்புகழ் 13 ஏவினை நேர்விழி (திருச்செந்தூர்) 18
திருப்புகழ் 14 ஓராது ஒன்றை (திருச்செந்ததூர்) 19
திருப்புகழ் 15 கண்டுமொழி (திருச்செந்தூர்) 19
திருப்புகழ் 16 கமல மாதுடன் (திருச்செந்தூர்) 20
திருப்புகழ் 17 காலனார் வெங்கொடும் (திருச்செந்தூர்) 21
திருப்புகழ் 18 குடர்நிண மென்பு (திருச்செந்தூர்) 22
திருப்புகழ் 19 கொம்பனையார் (திருச்செந்தூர்) 22
திருப்புகழ் 20 சங்கைதான் ஒன்று (திருச்செந்தூர்) 23
திருப்புகழ் 21 சேமக் கோமள பாத (திருச்செந்தூர்) 24
திருப்புகழ் 22 தண் தேனுண்டே (திருச்செந்தூர்) 25
திருப்புகழ் 23 தந்த பசிதனை (திருச்செந்தூர்) 25
திருப்புகழ் 24 தொந்தி சரிய (திருச்செந்தூர்) 26
திருப்புகழ் 25 தோலொடு மூடிய (திருச்செந்தூர்) 27
திருப்புகழ் 26 நாலு மைந்து (திருச்செந்தூர்) 28
திருப்புகழ் 27 நிலையாப் பொருளை (திருச்செந்தூர்) 29
திருப்புகழ் 28 பரிமள களப (திருச்செந்தூர்) 29
திருப்புகழ் 29 மங்கை சிறுவர் (திருச்செந்ததூர்) 30
திருப்புகழ் 30 முந்துதமிழ் மாலை (திருச்செந்தூர்) 30
திருப்புகழ் 31 மூளும்வினை சேர (திருச்செந்தூர்) 31
திருப்புகழ் 32 வரியார் கருங்கண் (திருச்செந்தூர்) 32
திருப்புகழ் 33 விந்ததில் ஊறி (திருச்செந்தார்) 33
திருப்புகழ் 34 விறல்மாரன் ஐந்து (திருச்செந்தூர்) 33
திருப்புகழ் 35 அபகார நிந்தை (பழநி) 34
திருப்புகழ் 36 அருத்தி வாழ்வொடு (பழநி) 34
திருப்புகழ் 37 அவனிதனிலே (பழநி) 35
திருப்புகழ் 38 ஆறுமுகம் ஆறுமுகம் (பழநி) 35
திருப்புகழ் 39 உயிர்க் கூடு (பழநி) 36
திருப்புகழ் 40 உலகபசு பாச (பழநி) 37
திருப்புகழ் 41 ஒருபொழுதும் இருசரண (பழநி) 37

திருப்புகழ் 42 ஒருவரை ஒருவர் (பழநி) 38
திருப்புகழ் 43 கடலை பொரி அவரை (பழநி) 38
திருப்புகழ் 44 கதியை விலக்கு (பழநி). 39
திருப்புகழ் 45 கரிய பெரிய (பழநி) 40
திருப்புகழ் 46 கருவின் உருவாகி (பழநி) 40
திருப்புகழ் 47 குரம்பை மலசலம் (பழநி) 41
திருப்புகழ் 48 குருதி மலசலம் (பழநி) 42
திருப்புகழ் 49 சிவனார் மனங்குளிர (பழநி) 43
திருப்புகழ் 50 சீ உதிரம் எங்கும் (பழநி) 44
திருப்புகழ் 51 சீறல் அசடன் (பழநி). 45
திருப்புகழ் 52 சுருதி முடி மோனம் (பழநி) 45
திருப்புகழ் 53 ஞானங்கொள் (பழநி) 46
திருப்புகழ் 54 தமரும் அமரும் (பழநி) 47
திருப்புகழ் 55 தலைவலி மருத்தீடு (பழநி) 48
திருப்புகழ் 56 திடமிலி சற்குணமிலி (பழநி) 49
திருப்புகழ் 57 திமிர உததி (பழநி) 49
திருப்புகழ் 58 நாத விந்து (பழநி). 50
திருப்புகழ் 59 போதகம் தரு (பழநி) 51
திருப்புகழ் 60 மனக் கவலை ஏதும் இன்றி (பழநி) 52
திருப்புகழ் 61 மூல மந்திரம் (பழநி). 52
திருப்புகழ் 62 வசனமிக ஏற்றி (பழநி) 53
திருப்புகழ் 63 வரதா மணி நீ (பழநி). 54
திருப்புகழ் 64 வாதம் பித்தம் (பழநி) 54
திருப்புகழ் 65 அவாமருவு (சுவாமிமலை) 55
திருப்புகழ் 66 இருவினை புனைந்து (சுவாமிமலை) 56
திருப்புகழ் 67 எந்தத் திகையினும் (சுவாமிமலை) 56
திருப்புகழ் 68 ஒருவரையும் ஒருவர் (சுவாமிமலை). 57
திருப்புகழ் 69 கடாவினிடை (சுவாமிமலை). 58
திருப்புகழ் 70 கடிமா மலர்க்குள் (சுவாமிமலை) 59
திருப்புகழ் 71 கறைபடும் உடம்பு (சுவாமிமலை) 60
திருப்புகழ் 72 காமியத் தழுந்தி (சுவாமிமலை) 61
திருப்புகழ் 73 குமர குருபர முருக சரவண (சுவாமிமலை) 61
திருப்புகழ் 74 சரண கமலாலயத்தை (சுவாமிமலை) 62
திருப்புகழ் 75 செகமாயை உற்று (சுவாமிமலை) 62
திருப்புகழ் 76 தெருவினில் நடவா (சுவாமிமலை) 63
திருப்புகழ் 77 நாசர்தம் கடை (சுவாமிமலை). 64
திருப்புகழ் 78 நாவேறு பா மணத்த (சுவாமிமலை). 64
திருப்புகழ் 79 நிறைமதி முகமெனும் (சுவாமிமலை) 65
திருப்புகழ் 80 பாதி மதிநதி (சுவாமிமலை). 65
திருப்புகழ் 81 மருவே செறித்த (சுவாமிமலை) 66
திருப்புகழ் 82 வாதமொடு சூலை (சுவாமிமலை). 67
திருப்புகழ் 83 அமைவுற்று அடைய (திருத்தணிகை) 67
திருப்புகழ் 84 அரகர சிவன் அரி (திருத்தணிகை) 68
திருப்புகழ் 85 இருப்பவல் திருப்புகழ் (திருத்தணிகை). 69

திருப்புகழ் 86 இருமலு ரோக (திருத்தணிகை) 69
திருப்புகழ் 87 உடலின் ஊடு (திருத்தணிகை). 70
திருப்புகழ் 88 உடையவர்கள் ஏவர் (திருத்தணிகை). 71
திருப்புகழ் 89 எத்தனை கலாதி (திருத்தணிகை) 71
திருப்புகழ் 90 எலுப்பு நாடிகள் (திருத்தணிகை) 72
திருப்புகழ் 91 எனக்கென யாவும் (திருத்தணிகை) 73
திருப்புகழ் 92 எனை அடைந்த (திருத்தணிகை). 74
திருப்புகழ் 93 கலை மடவார்தம் (திருத்தணிகை) 74
திருப்புகழ் 94 கனைத்து அதிர்க்கும் (திருத்தணிகை) 75
திருப்புகழ் 95 கொந்துவார் குரவடி (திருத்தணிகை) 75
திருப்புகழ் 96 சினத்தவர் முடிக்கும் (திருத்தணிகை) 76
திருப்புகழ் 97 துப்பார் அப்பு (திருத்தணிகை) 77
திருப்புகழ் 98 நிலையாத சமுத்திர (திருத்தணிகை). 78
திருப்புகழ் 99 நினைத்தது எத்தனை (திருத்தணிகை) 79
திருப்புகழ் 100 பொற் பதத்தினை (திருத்தணிகை) 79
திருப்புகழ் 101 வெற்றி செயவுற்ற (திருத்தணிகை) 80
திருப்புகழ் 102 அதிரும் கழல் (குன்றுதோறாடல்) 80
திருப்புகழ் 103 எழுதிகழ் புவன (குன்றுதோறாடல்) 81
திருப்புகழ் 104 வஞ்சக லோப மூடர் (குன்றுதோறாடல்). 81
திருப்புகழ் 105 ஈனமிகுத்துள பிறவி (ஆறு திருப்பதி). 82
திருப்புகழ் 106 அகரமுமாகி (பழமுதிர்சோலை). 83
திருப்புகழ் 107 காரணமதாக (பழமுதிர்ச்சோலை) 83
திருப்புகழ் 108 வாதினை அடர்ந்த (பழமுதிர்ச்சோலை) 84

பஞ்சபூதத் தலங்கள் திருப்புகழ்

விநாயகர் துதி 85
திருப்புகழ் 109 அதி மதம் கக்க 86
திருப்புகழ் 110 புன மடந்தைக்கு 87
திருப்புகழ் 111 கறை இலங்கும். 88
திருப்புகழ் 112 செறிதரும் செப்பத்து 89
திருப்புகழ் 113 கனி தரும் கொக்கு 90
திருப்புகழ் 114 புரைபடுஞ் செற்ற. 91
திருப்புகழ் 115 தலை வலையத்து 92
திருப்புகழ் 116 எனக்குச்சற்று. 93
திருப்புகழ் 117 கடத்தைப் பற்று. 94
திருப்புகழ் 118 அற்றைக்கு இரைதேடி 94
திருப்புகழ் 119 முட்டுப் பட்டு 95
திருப்புகழ் 120 பொக்குப்பை 95
திருப்புகழ் 121 அயில் அப்பு 96
திருப்பகழ் 122 கருமமான பிறப்பற. 96
திருப்புகழ் 123 கொத்தார் பற் கால் 97
திருப்புகழ் 124 சீசி முப்புர 98
திருப்புகழ் 125 நச்சு அரவம் என்று 99
திருப்புகழ் 126 படிறொழுக்கமும் 99

திருப்புகழ் 127 மக்கட்குக் கூற 100
திருப்புகழ் 128 மயல் ஒதும். 101
திருப்புகழ் 129 முத்து ரத்ந சூத்ர 102
திருப்புகழ் 130 வம்பறாச்சில 102
திருப்புகழ் 131 அறிவிலாப் பித்தர் 103
திருப்புகழ் 132 அஞ்சன வேல்விழி இட்டு 104
திருப்புகழ் 133 அனித்தமான ஊன் 105
திருப்புகழ் 134 உரைக் காரிகை 105
திருப்புகழ் 135 ஓல மறைகள். 106
திருப்புகழ் 136 குருதி புலால் என்பு 107
திருப்புகழ் 137 நாடித் தேடி. 108
திருப்புகழ் 138 பரிமளம் மிக உள 108
திருப்புகழ் 139 குமர குருபர குணதர 109
திருப்புகழ் 140 கருணை சிறிதும் 110
திருப்புகழ் 141 துகிலு ம்ருகமத 111
திருப்புகழ் 142 விடமும் அமுதமும். 112
திருப்புகழ் 143 கயல் விழித்தேன் 113
திருப்புகழ் 144 பரியகைப் பாசம் 114
திருப்புகழ் 145 தருண மணி. 114
திருப்புகழ் 146 வடவை அனல் ஊடு 115
திருப்புகழ் 147 ஆலவிழி நீல. 116
திருப்புகழ் 148 பேதக விரோத. 116
திருப்புகழ் 149 அமுதம் ஊறு சொல். 117
திருப்புகழ் 150 இரவியும் மதியும். 118
திருப்புகழ் 151 விரகொடு வளை. 119
திருப்புகழ் 152 இடம் அடு சுறவை. 119
திருப்புகழ் 153 கெஜ நடை மடவார் 120
திருப்புகழ் 154 அருக்கார் நலத்தை 121
திருப்புகழ் 155 அருமா மதனை 121
திருப்புகழ் 156 அழுதும் ஆவா. 122
திருப்புகழ் 157 இமராஜன் நிலாவது 123
திருப்புகழ் 158 இரவுபகற் பலகாலும் 123
திருப்புகழ் 159 இருவர் மயலோ 123
திருப்புகழ் 160 இருவினை அஞ்ச 124
திருப்புகழ் 161 இருவினை ஊண் 125
திருப்புகழ் 162 உலையிலனல் 125
திருப்புகழ் 163 கடல்பரவு தரங்க. 126
திருப்புகழ் 164 கரிமுகக் கடகளிறு 126
திருப்புகழ் 165 காணாத தூர நீள் 127
திருப்புகழ் 166 கீத விநோத மெச்சு 128
திருப்புகழ் 167 குழவியுமாய் மோகம். 128
திருப்புகழ் 168 கேதகையபூ முடித்த 129
திருப்புகழ் 169 கோடு ஆன மடவார்கள். 129
திருப்புகழ் 170 சிவமாதுடனே 130

திருப்புகழ் 171 செஞ்சொற் பண் 131
திருப்புகழ் 172 செயசெய அருணா 132
திருப்புகழ் 173 தமரம் குரங்களும் 133
திருப்புகழ் 174 தோதகப் பெரும் 134
திருப்புகழ் 175 பாண மலரது 134
திருப்புகழ் 176 புலையனான 135
திருப்புகழ் 177 வலிவாத பித்தமொடு 135
திருப்புகழ் 178 விதி அதாகவே 136
திருப்புகழ் 179 வீறு புழுகான பனி 137
திருப்புகழ் 180 சரக்கு ஏறி இத்த 138
திருப்புகழ் 181 சிரத்தானத்தி 139
திருப்புகழ் 182 பங்கயனார் 139
திருப்புகழ் 183 கனகசபை மேவும் 140
திருப்புகழ் 184 கைத்தருண சோதி 141
திருப்புகழ் 185 இருவினையின் மதி 141
திருப்புகழ் 186 குகனே குருபரனே 142
திருப்புகழ் 187 வந்து வந்துவித்தூறி 143
திருப்புகழ் 188 சிரித்துச் சங்கொளி 144
திருப்புகழ் 189 பருவம் பணை 145
திருப்புகழ் 190 மதவெம் கரி 145
திருப்புகழ் 191 காய மாய வீடு 146
திருப்புகழ் 192 அவகுண விரகனை 147
திருப்புகழ் 193 கட்டி முண்டக 148
திருப்புகழ் 194 நஞ்சினைப் போலுமன 149
திருப்புகழ் 195 செம் கலச 149
திருப்புகழ் 196 அத்தன் அன்னை 150
திருப்புகழ் 197 இருள் காட்டு 150
திருப்புகழ் 198 அக்குப் பீளை 151
திருப்புகழ் 199 தாது மாமலர் 152
திருப்புகழ் 200 எலுப்புத் தோல் 153
திருப்புகழ் 201 வாத பித்தமொடு 154
திருப்புகழ் 202 சுரும்பு உற்ற 155
திருப்புகழ் 203 விடுங்கைக்கு ஒத்த 155
திருப்புகழ் 204 எழுகடல் மணலை 156
திருப்புகழ் 205 தறுகணன் மறலி 157
திருப்புகழ் 206 இருளும் ஓர்கதிரணு 158
திருப்புகழ் 207 காவி உடுத்தும் 158
திருப்புகழ் 208 கோதிக் கோதி 159
திருப்புகழ் 209 சுடரனைய திருமேனி 160
திருப்புகழ் 210 துத்தி பொற்றன 161
திருப்புகழ் 211 நாடா பிறப்பு 162
திருப்புகழ் 212 நாலு சதுரத்த பஞ்ச 162
திருப்புகழ் 213 பனி போலத் துளி 163
திருப்புகழ் 214 மச்ச மெச்சு 164

திருப்புகழ் 215 மனமே உனக்குறுதி 164
திருப்புகழ் 216 பரமகுரு நாத. 165
திருப்புகழ் 217 உம்பர் தரு (விநாயகர்). 166
திருப்புகழ் 218 விடமடைசு வேலை (விநாயகர்) 166
திருப்புகழ் 219 கன்றிலுறு மானை (திருச்செந்தூர்) 167
திருப்புகழ் 220 கொலை மதகரி (திருச்செந்தூர்) 167
திருப்புகழ் 221 துன்பங்கொண்டு அங்கம் 168
திருப்புகழ் 222 கருகி அகன்று (பழநி). 169
திருப்புகழ் 223 குழல் அடவி (பழநி) 169
திருப்புகழ் 224 இராவினிருள் போலும் (சுவாமிமலை) 170
திருப்புகழ் 225 காமியத் தழுந்தி (சுவாமிமலை) 171
திருப்புகழ் 226 முடித்த குழலினர் (திருத்தணிகை) 171
திருப்புகழ் 227 மலை முலைச்சியர் (திருத்தணிகை) 172
திருப்புகழ் 228 அதிரும் கழல் (குன்றுதோறாடல்) 172
திருப்புகழ் 229 ஈனமிகுத்துள பிறவி (ஆறு திருப்பதி). 173
திருப்புகழ் 230 அற்றைக் கற்றை (காஞ்சீபுரம்). 173
திருப்புகழ் 231 முட்டுப் பட்டு (காஞ்சீபுரம்) 174
திருப்புகழ் 232 அற்றைக்கு இரைதேடி (காஞ்சீபுரம்) 174
திருப்புகழ் 233 நச்சு அரவம் என்று (காஞ்சீபுரம்) 175
திருப்புகழ் 234 வம்பறாச்சில (காஞ்சீபுரம்) 175
திருப்புகழ் 235 நாடித் தேடி (திருவானைக்கா). 176
திருப்புகழ் 236 கயல் விழித்தேன் (திருவருணை) 176
திருப்புகழ் 237 இரவியும் மதியும் 177
திருப்புகழ் 238 இடம் அடு சுறவை 178
திருப்புகழ் 239 கடல்பரவு தரங்க 178
திருப்புகழ் 240 கீத விநோத மெச்சு 179
திருப்புகழ் 241 பாண மலரது. 179
திருப்புகழ் 242 விதி அதாகவே 180
திருப்புகழ் 243 சிரத்தானத்தி (திருக்காளத்தி). 180
திருப்புகழ் 244 கனகசபை மேவும் (சிதம்பரம்) 181
திருப்புகழ் 245 கைத்தருண சோதி 181
திருப்புகழ் 246 இருவினையின் மதி 182
திருப்புகழ் 247 நஞ்சினைப் போலுமன. 182
திருப்புகழ் 248 செம் கலச 183
திருப்புகழ் 249 எழுகடல் மணலை 184
திருப்புகழ் 250 இருளும் ஓர்கதிரணு. 184
திருப்புகழ் 251 காவி உடுத்தும் 185
திருப்புகழ் 252 நாடா பிறப்பு 186
திருப்புகழ் 253 மனமே உனக்குறுதி 186
திருப்புகழ் 254 பரமகுரு நாத 187
திருப்புகழ் 255 புமி அதனில் (கயிலைமலை) 188
திருப்புகழ் 256 அல்லி விழியாலும் (வள்ளிமலை) 188
திருப்புகழ் 257 ககனமும் அநிலமும் 189
திருப்புகழ் 258 எழுகு நிறை நாபி (திருக்கழுக்குன்றம்) 189

திருப்புகழ் 259 வேத வெற்பிலே (திருக்கழுக்குன்றம்) 190
திருப்புகழ் 260 பகலிரவினில் (சென்னிமலை) 191
திருப்புகழ் 261 பத்தியால் யானுனை (இரத்னகிரி) 191
திருப்புகழ் 262 மாலாசை கோபம் (விராலிமலை) 191
திருப்புகழ் 263 அன்பாக வந்து (திருச்செங்கோடு) 192
திருப்புகழ் 264 கரை அற உருகுதல் (திருச்செங்கோடு) 193
திருப்புகழ் 265 காலனிடத்து (திருச்செங்கோடு) 193
திருப்புகழ் 266 தாமா தாம ஆலாபா (திருச்செங்கோடு) 194
திருப்புகழ் 267 தவள மதியம் (குன்றக்குடி) 194
திருப்புகழ் 268 அல்லில் நேரும் (வள்ளியூர்) 195
திருப்புகழ் 269 எதிரிலாத பத்தி (கதிர்காமம்) 195
திருப்புகழ் 270 மாதர் கொங்கையில் (உத்தரமேரூர்) 196
திருப்புகழ் 271 வேழம் உண்ட (காசி) 197
திருப்புகழ் 272 சிகரம் அருந்த (மாயாபுரி) 197
திருப்புகழ் 273 மருமல்லி யார் (திருவலிதாயம்) 197
திருப்புகழ் 274 அயில் ஒத்து எழும் (திருமயிலை) 198
திருப்புகழ் 275 அறமிலா அதி (திருமயிலை) 198
திருப்புகழ் 276 ஞால மெங்கும் (கோடைநகர்) 199
திருப்புகழ் 277 அண்டர்பதி குடியேற (சிறுவை) 199
திருப்புகழ் 278 சீத மதியம் (திருவாமூர்) 200
திருப்புகழ் 279 நாட்டம் தங்கி (வேப்பஞ்சந்தி) 200
திருப்புகழ் 280 கழைமுத்து மாலை (ஸ்ரீ முஷ்டம்) 200
திருப்புகழ் 281 சிந்து உற்று எழு (சீகாழி) 201
திருப்புகழ் 282 உரத்துறை போத (வைத்தீசுரன் கோயில்) 201
திருப்புகழ் 283 ஈளை சுரங்குளிர் (பாகை) 202
திருப்புகழ் 284 மருக்குலாவிய (திருவிடைக்கழி) 202
திருப்புகழ் 285 இறையத்தனையோ (திலதைப்பதி) 203
திருப்புகழ் 286 கூர்வாய் நாராய் (திருவாரூர்) 203
திருப்புகழ் 287 நீதானெத்தனை (திருவாரூர்) 204
திருப்புகழ் 288 ஓங்கும் ஐம்புல (எட்டிகுடி) 204
திருப்புகழ் 289 விழுதாதெனவே (நாகப்பட்டினம்) 204
திருப்புகழ் 290 அயிலார் மைக்கடு (திருக்குடவாயில்) 205
திருப்புகழ் 291 சூழும்வினை (வேதாரணியம்) 206
திருப்புகழ் 292 எருவாய் கருவாய் (திருவீழிமிழலை) 206
திருப்புகழ் 293 இருவினை ஊண் (திருவருணை) 207
திருப்புகழ் 294 கொந்தார் மைக்குழல் (திருப்பனந்தாள்) 207
திருப்புகழ் 295 பஞ்சுசேர் நிர்த்த (கும்பகோணம்) 208
திருப்புகழ் 296 மாலையில் வந்து (இலஞ்சி) 208
திருப்புகழ் 297 அஞ்சன வேல்விழி மடமாதர் (குஞ்சை) 209
திருப்புகழ் 298 இருகனக மாமேரு (பழநி) 210
திருப்புகழ் 299 அணிபட்டு அணுகி (பழநி) 211
திருப்புகழ் 300 ஆரம் முலை காட்டி (வயலூர்) 211
திருப்புகழ் 301 என்னால் பிறக்கவும் (வயலூர்) 212
திருப்புகழ் 302 தாமரையின் மட்டு (வயலூர்) 213

திருப்புகழ் 303 மதியால் வித்தகன் (கருவூர்) 213
திருப்புகழ் 304 வண்டுபோற் சார (திருவெஞ்சமாக்கூடல்). 214
திருப்புகழ் 305 இருவினைப் பிறவி (திருப்பாண்டிக்கொடுமுடி) 214
திருப்புகழ் 306 பரிவுறு நாரற்று (சேலம்) 214
திருப்புகழ் 307 அவசியமுன் வேண்டி (திருமுருகன்பூண்டி) 215
திருப்புகழ் 308 இறவாமற் பிறவாமல் (அவிநாசி) 215
திருப்புகழ் 309 தீராப் பிணிதீர (பேரூர்) 216
திருப்புகழ் 310 தரங்க வார்குழல் (குளந்தைநகர்) 216
திருப்புகழ் 311 ஆனைமுகவற்கு (மதுரை) 216
திருப்புகழ் 312 கலைமேவு ஞான (பவானி) 217
திருப்புகழ் 313 நீதத்துவமாகி (மதுரை) 217
திருப்புகழ் 314 கரம் கமலம் மின் (இலஞ்சி) 218
திருப்புகழ் 315 வானோர் வழுத்துனது (இராமேசுரம்) 218
திருப்புகழ் 316 விரகற நோக்கியும் (எழுகரைநாடு). 219
திருப்புகழ் 317 ஆகத்தே தப்பாமல் (காமத்தூர்) 220
திருப்புகழ் 318 சீதமலம் வெப்பு. 220
திருப்புகழ் 319 காதி மோதி 221
திருப்புகழ் 320 கூறும் மார வேள் 221
திருப்புகழ் 321 பேரவா அறா 222
திருப்புகழ் 322 ஊனே தானாய் (குன்றக்குடி) 222
திருப்புகழ் 323 அதல சேடனாராட 223
திருப்புகழ் 324 இருந்த வீடும் 223
திருப்புகழ் 325 கலந்த மாதும் 224
திருப்புகழ் 326 இசைந்த ஏறும். 224
திருப்புகழ் 327 திரிபுரம் அதனை 224
திருப்புகழ் 328 குடம் என ஒத்த 225
திருப்புகழ் 329 மடவியர் எச்சில் 226
திருப்புகழ் 330 கொலையிலே மெத்த 226
திருப்புகழ் 331 நகரம் இரு பாதமாகி. 227
திருப்புகழ் 332 புவிக்குன் பாதம் 227
திருப்புகழ் 333 மாறுபொரு காலன். 228
திருப்புகழ் 334 அடியார் மனம் 229
திருப்புகழ் 335 அயில் விலோசனம் 229
திருப்புகழ் 336 ஆசைசூர் பத்தன் 230
திருப்புகழ் 337 இடை இத்தனை. 231
திருப்புகழ் 338 ஊனே தானாய் 231
திருப்புகழ் 339 ஏட்டிலே வரை 232
திருப்புகழ் 340 கண்டு போல்மொழி 233
திருப்புகழ் 341 சிவஞான புண்டரிக 233
திருப்புகழ் 342 தத் தனமும் 234
திருப்புகழ் 343 தவநெறி 235
திருப்புகழ் 344 தீ ஊதை தாத்ரி. 235
திருப்புகழ் 345 தோரண கனக 236
திருப்புகழ் 346 பார நறுங்குழல் 236

திருப்புகழ் 347 பூத கலாதிகள் 237
திருப்புகழ் 348 மதன் இக்கு அது 238
திருப்புகழ் 349 மூலா நிலமதின் 238
திருப்புகழ் 350 வீணை இசை 239
திருப்புகழ் 351 இத்தரணி மீதில் 240
திருப்புகழ் 352 என்பந்த வினை 240
திருப்புகழ் 353 கருப்பற்று ஊறி 241
திருப்புகழ் 354 கருப்பையில் 241
திருப்புகழ் 355 கொடிய மதவேள் 241
திருப்புகழ் 356 கோடான மேருமலை 242
திருப்புகழ் 357 சமய பத்தி 242
திருப்புகழ் 358 சருவிய சாத்திர 243
திருப்புகழ் 359 தீது உற்றே எழு 243
திருப்புகழ் 360 துள்ளு மதவேள் 243
திருப்புகழ் 361 தேன் இயல் சொற் 244
திருப்புகழ் 362 நாரியர்கள் ஆசை 244
திருப்புகழ் 363 நாளு மிகுத்த 244
திருப்புகழ் 364 நித்தம் உற்றுனை 245
திருப்புகழ் 365 நீலங்கொள் 245
திருப்புகழ் 366 பட்டுப் படாத 246
திருப்புகழ் 367 பரவைக்கு எத்தனை 246
திருப்புகழ் 368 பிறவியலை 246
திருப்புகழ் 369 புத்தகத்து ஏட்டில் 247
திருப்புகழ் 370 பொன்னை விரும்பிய 247
திருப்புகழ் 371 மனைமக்கள் சுற்றம் 247
திருப்புகழ் 372 வாரி மீதே 248
திருப்புகழ் 373 வார்குழையை (பழமுதிர்ச்சோலை) 248
திருப்புகழ் 374 சீர் சிறக்கும் மேனி (பழமுதிர்ச்சோலை) 249
திருப்புகழ் 375 தலைமயிர் கொக்கு (பழமுதிர்ச்சோலை) 250
திருப்புகழ் 376 பாசத்தால் விலை (பழமுதிர்ச்சோலை) 250
திருப்புகழ் 377 துடிகொள் நோய் (பழமுதிர்ச்சோலை) 251
திருப்புகழ் 378 வாதினை அடர்ந்த (பழமுதிர்ச்சோலை) 252
திருப்புகழ் 379 கருவெனு மாயை (புதிய பாடல்கள்) 253
திருப்புகழ் 380 வம்புங் கோபமும் (செங்குன்றாபுரம்) 253
திருப்புகழ் 381 காதின்மணி ஓலை 254
திருப்புகழ் 382 போத நிர்க்குண 254
திருப்புகழ் 383 வேத வித்தகா 255
திருப்புகழ் 384 போதகம் தரு (பழநி) 256
திருப்புகழ் 385 சரவண ஜாதா(விநாயகமலை ... பிள்ளையார்பட்டி) . . . 257
திருப்புகழ் 386 சத்தி பாணீ (திருசிராப்பள்ளி) 258
திருப்புகழ் 387 சீதள வாரிஜ (சிறுவை) 259
திருப்புகழ் 380 ஓது முத்தமிழ் 260
திருப்புகழ் 381 அங்கை மென்குழல் (திருச்செந்தூர்) 261
திருப்புகழ் 382 அம்பொத்த விழி 262

திருப்புகழ் 383 முலை முகம் 263
திருப்புகழ் 384 சாந்தமில் மோகவெரி (திருவேங்கடம்) 263
திருப்புகழ் 385 சங்குபோல் மென் (திருச்செந்தூர்) 264
திருப்புகழ் 386 சொரியும் முகிலை (திருத்தணிகை) 264
திருப்புகழ் 387 அருணமணி மேவு (திருச்செந்தூர்) 265
திருப்புகழ் 388 துன்பங்கொண்டு அங்கம் 266
திருப்புகழ் 389 இருகுழை யெறிந்த 266
திருப்புகழ் 390 தந்த பசிதனை 267
திருப்புகழ் 391 நிலையாப் பொருளை 268
திருப்புகழ் 392 பங்கம் மேவும் பிறப்பு 268
திருப்புகழ் 393 மூப்புற்றுச் செவி 269
திருப்புகழ் 394 வஞ்சத்துடன் ஒரு 270
திருப்புகழ் 395 மங்கை சிறுவர் (திருச்செந்தூர்) 270
திருப்புகழ் 396 மருக்குல மேவும் (திருத்தணிகை) 271
திருப்புகழ் 397 முத்துத் தெறிக்க (திருத்தணிகை) 272
திருப்புகழ் 398 வினைக்கு இனமாகும் (திருத்தணிகை) 272
திருப்புகழ் 399 அமரும் அமரர் (திருமயிலை) 273
திருப்புகழ் 400 சிவணிதா வியமனது (பழநி) 274
திருப்புகழ் 401 சீ உதிரம் எங்கும் 274
திருப்புகழ் 402 சுருதி முடி மோனம் 275
திருப்புகழ் 403 சுருளளக பார 276
திருப்புகழ் 404 ஞானங்கொள் 277
திருப்புகழ் 405 தகர நறுமலர் 278
திருப்புகழ் 406 தகைமைத் தனியில் 279
திருப்புகழ் 407 தலைவலி மருத்தீடு 279
திருப்புகழ் 408 பாரியான கொடை 280
திருப்புகழ் 409 தோகைமயிலே கமல 281
திருப்புகழ் 410 நிகமம் எனில் 282
திருப்புகழ் 411 நெற்றி வெயர்த்துளி 283
திருப்புகழ் 412 பகர்தற்கு அரிதான 284
திருப்புகழ் 413 பஞ்ச பாதகன் 285
திருப்புகழ் 414 புடவிக்கு அணி 286
திருப்புகழ் 415 புடைசெப் பென 287
திருப்புகழ் 416 பெரியதோர் கரி 287
திருப்புகழ் 417 மந்தரமதெனவே 288
திருப்புகழ் 418 மனக்கவலை ஏதும் 289
திருப்புகழ் 419 மருமலரினன் 290
திருப்புகழ் 420 மலரணி கொண்டை 291
திருப்புகழ் 421 முகிலளகத்தில் 292
திருப்புகழ் 422 முகை முளரி 293